# கால ஆராய்ச்சி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

அலமு பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கால ஆராய்ச்சி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

# கால ஆராய்ச்சி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

அலமு பதிப்பகம்

9, அய்யா முதலி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

கால ஆராய்ச்சி * ஆராய்ச்சி நூல் * மா. இராசமாணிக்கனார்
உரிமை: மா.ரா. அரசு
அலமு பதிப்பகம், 9 அய்யா முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

முதற் பதிப்பு: டிசம்பர், 2003

அச்சிட்டோர்: அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ், 9 அய்யா முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

vi+165 பக்கங்கள், டெமி 1/8, 18.1kg N.S. maplitho , 11 புள்ளி நூல்

**விலை: ரூ. 60**

# முன்னுரை

தொல்காப்பியம், திருக்குறள் போன்ற தமிழ் நூல்களின் காலத்தைப் பற்றி அவ்வப்போது தமிழறிஞர் பலர் ஆராய்ந்து தத்தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். கல்வெட்டுக்களும் மேனாட்டு ஆராய்ச்சி முறையும் நன்முறையில் வெளிப்பட்டு வரும் இக்காலத்தில் கிடைக்கும் புதிய சான்றுகளைக் கொண்டு முன்னோர் முடிவுகளை ஆராய்தல் முறையாகும். இம்முறை பற்றி ஆராய்ந்த பெருமக்கள் முடிவுகளையும் எனது ஆராய்ச்சியிற்பட்ட முடிவுகளையும் தொகுத்துக் கூறுவதே இந்நூற் கருத்தாகும். காலம் செல்லச் செல்ல - புதிய சான்றுகள் வெளிப்பட வெளிப்பட - இம்முடிவுகளும் மாற்றம் பெறலாம். ஆராய்ச்சி முடிவற்றதன்றோ? இளம் புலவர்கள் ஆராய்ச்சித் துறையில் ஆர்வமும் உழைப்பும் கொண்டு பல உண்மைகளை ஆராய வேண்டும் என்னும் கருத்தாற்றான் இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

**மா. இராசமாணிக்கம்**

# முன்னுரை

தொல்காப்பியம், திருக்குறள் போன்ற தமிழ் நூல்களின் காலத்தைப் பற்றி அவ்வப்போது தமிழறிஞர் பலர் ஆராய்ந்து தத்தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். கல்வெட்டுக்களும் மேனாட்டு ஆராய்ச்சி முறையும் நன்முறையில் வெளிப்பட்டு வரும் இக்காலத்தில் கிடைக்கும் புதிய சான்றுகளைக் கொண்டு முன்னோர் முடிவுகளை ஆராய்தல் முறையாகும். இம்முறை பற்றி ஆராய்ந்த பெருமக்கள் முடிவுகளையும் எனது ஆராய்ச்சியிற்பட்ட முடிவுகளையும் தொகுத்துக் கூறுவதே இந்நூற் கருத்தாகும். காலம் செல்லச் செல்ல - புதிய சான்றுகள் வெளிப்பட வெளிப்பட - இம்முடிவுகளும் மாற்றம் பெறலாம். ஆராய்ச்சி முடிவற்றதன்றோ? இளம் புலவர்கள் ஆராய்ச்சித் துறையில் ஆர்வமும் உழைப்பும் கொண்டு பல உண்மைகளை ஆராய வேண்டும் என்னும் கருத்தாற்றான் இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

**மா. இராசமாணிக்கம்**

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | புறநானூற்றின் காலம் | 1 |
| 2. | தொல்காப்பியர் காலம் | 14 |
| 3. | திருவள்ளுவர் காலம் | 32 |
| 4. | பத்துப்பாட்டின் காலம் | 49 |
| 5. | சிலப்பதிகார காலம் | 65 |
| 6. | கலித்தொகையின் காலம் | 77 |
| 7. | பரிபாடலின் காலம் | 85 |
| 8. | கோச்செங்கணான் காலம் | 95 |
| 9. | சுந்தரர் காலம் | 101 |
| 10. | மாணிக்கவாசகர் காலம் | 112 |
| 11. | சேக்கிழார் காலம் | 135 |
| 12. | கம்பர் காலம் | 158 |

# 1. புறநானூற்றின் காலம்

## முன்னுரை

வரலாறு (History) என்பது எல்லா நாடுகளிலும் முதன்முதல் பாக்கள், கதைகள் வாயிலாகவே தோன்றியது. அப் பாக்களும் கதைகளும் காலஞ்சென்ற வீரர், அரசர், நல்லோர், தீயோர் இவர்தம் வரலாறுகளையோ, வரலாறுகளிற் காணத்தக்க சிறப்பான நிகழ்ச்சிகளையோ பற்றியனவாக இருந்தன. இங்ஙனம் முதன் முதலில் வரையப்பட்ட பாடல்களும் கதைகளும் பிற்கால அறிஞர்க்கு வரலாறு காட்டும் அடிப்படையாக விளங்கலாயின. மேல்நாட்டில் முதல் முதல் இனிய முறையில் வரலாறு எழுதத் தொடங்கிய ஆசிரியர் **எரடோட்டஸ்** (Herodotus) என்பவர். அவர் காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டாகும்.[1]

பின்னர்ப் படிப்பினை பயக்கத்தக்க முறையில் வரலாறுகள் எழுந்தன. அங்ஙனம் வரைந்தாருள் முதல்வர் **தூசிடிடீஸ்** என்பவர். இம்முறையில் எழுதப்பட்ட வரலாறே சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காவியம். ஆயின், முற்கூறியவை அரசர், அலுவலாளர், தலைவர் முதலியோரைப் பற்றிய அரிய நிகழ்ச்சிகளைக் கொண்ட வரலாறுகள் ஆகும்; அவை இனிய செய்யுள் நடையிலும், உரைநடையிலும் யாக்கப் பெற்றவை. அத்தகைய வரலாற்று நூல்களை ஓரளவு ஒத்துக்காண்பன புறநானூற்றுப் பாக்கள் என்னலாம். என்னை? சேர, சோழ, பாண்டியர் ஆகிய நெடுநில மன்னர், பாரி போன்ற குறுநில மன்னர், கோவூர்கிழார் போன்ற புலவர் என்பவர் வரலாறுகளைப் புறநானூற்றுப் பாடல்களைக் கொண்டே ஏறத்தாழ வரைந்து முடிக்கலாம் ஆதலின் என்க.

## புறநானூறு

புறநானூற்றுப் பாடல்கள், பழங்கால நிகழ்ச்சிகளைப் பிற்காலத்தார் பாடி வைத்தவை போன்றவை அல்ல. அவை புலவர்

பலரால் தத்தம் கால அரசர், வள்ளல்கள் முதலியோரைப் பற்றிப் பாடப்பெற்றவை; அக்காலப் போர்களைப் பற்றியவை; அறம், பொருள், வீடு என்னும் மூன்றையும் பற்றியவை. ஆதலின், அவற்றுள் 'நம்பத்தகாதன' என்று ஒதுக்கித் தள்ளத்தக்க செய்திகள் இருத்தல் அருமையினும் அருமை.

சுருங்கக் கூறின், புறநானூறு, மிகப்பழைய காலத் தமிழ் மக்கள்-சிற்றரசர்-பேரரசர்-கொடையாளிகள்-புலவர் இவர்தம் வாழ்க்கைகளையும் நாகரிகப் பண்புகளையும் நன்கு விளக்கும் **வரலாற்று நூலாகும்**. அதனை நன்கு ஆராய்ந்து முறைப்பட வைத்து எழுதப்புகின், 'பண்டைத் தமிழக வரலாறு' என்னும் ஒப்புயர்வற்ற, 'வரலாற்று நூலை' ஒருவாறு எழுதி முடிக்கலாம் என்பதை அழுத்தமாக அறையலாம். இது நிற்க.

அறம், பொருள், வீடு என்னும் புற ஒழுக்கம் பற்றிய நானூறு பாக்களின் தொகுதியே **புறநானூறு** என்பது. இதில் உள்ள பாடல்களைப் பாடிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் முதலிய புலவர், பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர் ஆவர். இந்நூல் தொகுக்கப்பெற்ற காலத்தில் இப்புலவர் சிலருடைய பெயர்கள் புலனாகவில்லை. ஆதலின் தொகுத்தவர்கள், பாவடிகளிற் பயின்றுவரும் தொடர்களையும் பாக்களிற் காணப்படும் சிறப்பியல்புகளையும் கொண்டு தம் மனம்போனவாறு அடிக்குறிப்பில் புலவர் பெயர்களை ஆக்கியிருத்தல் அறிவுடையார் அறிந்ததே ஆகும். சான்றாக, ஒரூஉத்தனார், ஒரு சிறைப் பெயரியனார், ஓரேர் உழவர், கூகைக் கோழியார், தொடித்தலை விழுத்தண்டினார், தும்பி சொகினனார், வெள்ளெருக்கிலையார், வெள்ளைமாளர் முதலிய பெயர்களைக் காண்க. மொழி ஆராய்ச்சியிற் புகினும், சில பாக்களின் நடை வேறுபட்டிருப்பதை நன்குணரலாம். செய்யுட்களிற் கூறப்பட்டுள்ள செய்திகளை நோக்கினும் இஃது உண்மையாகிறது.

**தமிழர்க்கே உரிய தனிப்பட்ட நாகரிகப் பண்புகளும் அவருடன் பிற்காலத்தே கலந்த வடமொழியாளர்க்கே உரிய பண்புகளும் இந்நூற்கண் இடம் பெற்றுள்ளன** வேள்வி அந்தணர் முத்தீ, இதிகாசக் கதைகள், இந்திரன் பிரமன் பலராமன் முதலியோர் வழிபாடுகள் முதலியன புதியனவாய்த் தமிழகத்தில் நுழைந்தனவாகும். இராயசூயம் (இராஜசூய யாகம்) வேட்டபெருநற்கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னர்களைப் பற்றிய பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. எனவே, தமிழ் மன்னர்கள் வேதவேள்விகளைச் செய்யத் தலைப்பட்டுவிட்டனர் என்பது இத்தொடர்களினால் நன்கு

புலனாகிறது. இதனால் தமிழகத்தில் வேத ஒழுக்கம் சிறிது சிறிதாகப் பரவத்தொடங்கியது என்பது தெளிவாகிறது. ஆகவே, **சமயத் தொடர்பான வடசொற்கள் தமிழில் நுழையலாயின** என்பது வெளிப்படை.

**புறநானூற்றின் காலம்**

கி. பி. 4ஆம் நூற்றாண்டில் தமிழகத்துக்கே புதிய வரும் பிராகிருத-வடமொழி வல்லுநருமாகிய பல்லவர் காஞ்சியைக் கைப்பற்றித் தொண்டைநாட்டை ஆளலாயினர் என்பது ஆராய்ச்சியாற்போந்த உண்மையாகும்.[2] பல்லவரால் தெற்கு நோக்கி உந்தப்பட்ட களப்பிரர் முறையே தொண்டை, சோழ, பாண்டிய நாடுகளைக் கைப்பற்றி ஆளலாயினர். அவர்கள் கி. பி. 575 வரை சோழ, பாண்டிய நாடுகளை ஆண்டனர். பின்னர் முறையே பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் அடங்கிய குறுநில மன்னராயினர் என்பனவும் வரலாறு கண்ட உண்மைகளாகும்.[3] ஏறத்தாழக் கி.பி. 575 முதல் பாண்டிய நாடு பாண்டியராலும், கிருஷ்ணையாறு முதல் காவிரியாறு வரையிலுள்ள பெருநாடு சிம்மவிஷ்ணு முதலிய பல்லவராலும் ஆளப்பட்டு வந்ததும் ஆராய்ச்சியாற்போந்த செய்தியாகும். தமிழகத்திற் பன்னெடுங் காலமாக இருந்து ஆண்டு வந்த சோழ, பாண்டியர் இங்ஙனம் தம் நாட்டைக் களப்பிரர்க்கும் பல்லவர்க்கும் விடவேண்டிய துன்பநிலை உண்டான காலம் கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டுகள் ஆகும்.

ஏறத்தாழக் கி. பி. 300 முதல் கி. பி. 550 வரை பாண்டிய நாடு களப்பிரர் ஆட்சியில் இருந்ததென்னலாம். புறநானூற்றிற் காணப்படும் 'தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்' செயலே களப்பிரர் ஆக்ரமிப்புக்கு முற்பட்ட செயலாகச் **சின்னமனூர்ச் செப்பேடு** செப்புகிறது.

தலையாலங் கானத்தில் தன்னொக்கும் இருவேந்தரைக்
கொலைவாளில் தலைதுமித்துக் குறைத்தலையின்
கூத்தொழித்தும்
மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்
வைத்தும்
மகாராசரும் சார்வபௌமரும் மகிமண்டலம்
காத்திகந்தபின் ...

ஆயின், **வேள்விக்குடிச் செப்பேடு**, "பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி 'வேள்விக்குடி' என்னும் ஊரைக் கொற்கைகிழான் நற்கொற்றன் என்பாற்கு நீரோடு அட்டுத் தந்தான். நற்கொற்றன் அதை நீடு புக்குத்துய்த்தபின் 'அளவரிய அதிராசரை அகல நீக்கி'

அகலிடத்தைக் களப்பிரன் என்னும் கலியரசன் கைக்கொண்டான்,” என்பதை அறிவிக்கிறது.

இவ்விரு செப்பேட்டுச் செய்திகளால், (1) களப்பிரர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றுமுன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் பாண்டி மன்னராக இருந்தனர்; (2) மதுரையிற் சங்கம் இருந்தது; (3) மகாபாரதம் தமிழ்ப் படுத்தப் பட்டது என்பன நன்கு புலனாகின்றன.

இதுகாறும் கண்ட முடிவுகளை நோக்க, கி. பி. 300 முதல் கி.பி. 550 வரை மதுரை களப்பிரர் ஆட்சியில் இருந்தமையால், தமிழ்ச் சங்கம் இருந்து செயலாற்றியிருந்தல் இயலாதென்பதை நன்குணரலாம். இனிக் கி. பி. 575 முதல் பாண்டி நாட்டை ஆளத் தொடங்கிய கடுங்கோன் முதலிய பாண்டி மன்னருடைய செப்பேடுகளையும் கல்வெட்டுக்களையும் நோக்கும்பொழுது, அவர் தாமும் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தமை தெரியவில்லை. மேலும் கி.பி. 7ஆம் நூற்றாண்டினரான சைவசமய குரவரும் தமக்கு முற்பட்ட காலத்தில் சங்கம் இருந்ததாகவே தெரிவித்துள்ளனர். இவை அனைத்தையும் நோக்கி, வரலாற்றுக் கண் கொண்டு காணின் இன்றுள்ள தொல்காப்பியம் முதல் சிலப்பதிகாரம் ஈறாகவுள்ள பழைய நூல்கள் கி. பி. 300க்கு முற்பட்டவை எனத் துணிந்து கூறலாம். சங்க நூல்களின் இறுதிக் காலம் கி.பி. 300 எனின், அவற்றுள் ஒன்றாகிய புறநானூற்றின் இறுதிக்காலமும் அஃதே எனல் பொருந்துமன்றோ? இனி அப் புறப்பாடல்களின் காலப்பேரெல்லையைக் காண முயல்வது நமது கடமையாகும்.

இந்திய வரலாற்றோடு தொடர்பு கொண்ட சில நிகழ்ச்சிகளும் பெயர்களும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பாரதப்போரில் உணவு கொடுத்தது, வான்மீகியார் என்பவரின் பாடல் புறநானூற்றில் காணப்படுவது, மோரியர் படையெடுப்பு, (இரண்டாம்) கரிகாலன் இமயப் படையெடுப்பு என்பவை குறிக்கத்தக்கவை. இவற்றுள் ஒவ்வொன்றையும் பற்றி இங்கு ஆராய்வோம்.

### பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் (கி.மு. 1000)

அலங்குளைப் புரவி **ஐவரொடு** சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
**ஈரைம் பதின்மரும்** பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்.

என்று புறப்பாடல் ஒன்றில் (செ.2) பாராட்டப்பட்டுள்ளான் உதியஞ்சேரலாதன் என்னும் சேரமன்னன். இச்சேரர் பெருந்தகை பாரத காலத்தவன் என்று பொருள்படும்படி இப்பாடலுக்கு உரைகண்ட பழைய புலவர் எழுதியுள்ளார்.

தம் செய்யுட்களில் வரலாற்றுச் செய்திகளைப் புகுத்திப்பாடும் இயல்புடைய மாமூலனார் என்ற சங்ககாலப் புலவர்,

துறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
கூளிச் சுற்றங் குழீஇயிருந் தாங்கு,

என்று உதியன் சேரலாதன் பெருஞ்சோறு கொடுத்த திறத்தை அகநானூற்றுச் செய்யுள் ஒன்றில் (233) பாராட்டியுள்ளார்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சிலப்பதிகாரத்தைச் செய்த இளங்கோ அடிகள்,

**ஒரைவர் ஈரைம் பதின்மர்** உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்,

என்று (காதை 29, செ. 24) புறநானூற்றில் கூறப் பெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இளங்கோவடிகள் தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து செயற்கரும் செயலைச் செய்த தமது முன்னோனை உளமாரப் பாராட்டியுள்ளார் எனின், பாரதப் போர் நிகழ்ந்த காலத்தில் உதியன் சேரலாதன் செய்த செயற்கரும் செயல் (பெருஞ்சோறு வழங்கியமை) சேர மரபினராலும் சேரநாட்டுக் குடிமக்களாலும் வழி வழியாகப் போற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

பாரத நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம் ஏறத்தாழக் கி.மு. 1400-800 என்பர் பேராசிரியர் ஆர். சி. டட்.[4] வேறு சில வரலாற்று ஆசிரியர் ஏறத்தாழக் கி. மு. 1000 என்பர்.[5] எனவே, **பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் காலமும் ஏறத்தாழக் கி.மு. 1000** என்று கூறலாம். அவனை மேலே கண்டவாறு பாராட்டிப் பாடிய **முரஞ்சியூர் முடிநாகராயர்**[6] முதற் சங்கப் புலவர் என்று களவியலுரை கூறுகின்றது. இடைச் சங்கத்தின் இறுதிக்காலம் தொல்காப்பியர் காலம் (கி.மு. 4ஆம் நூற்றாண்டு) ஆகும். எனவே, தலைச்சங்கப் புலவராகிய முடிநாகராயர் காலம் ஏறத்தாழக் கி. மு. 1000 என்று

கோடல் பொருத்தமாகும். இச்சேரலாதனும் முடிநாகராயரும் பாரதகாலத்தவரே என்பதை மகாவித்துவான் இரா. இராகவையங்கார் அவர்கள் தெளிவாக விளக்கி எழுதியிருத்தல் இன்புறத்தக்கது.[7]

வரலாற்றுப் பேராசிரியராகிய **திரு பி.டி. சீநிவாச அய்யங்கார்,** 'உதியன்சேரல் பாரத வரலாற்றைக் கதகளி போன்ற நடிப்பு நாடகமாக நடத்தி அதன் இறுதியில் நடித்தவர்க்கும் பொதுமக்களுக்கும் பெருஞ் சோறு வழங்கியிருத்தல் வேண்டும்" என்று கூறியுள்ளார்.[8] இக்கருத்துத் தவறு என்பதை மகாவித்துவான் அவர்கள் 'தமிழ் வரலாறு' என்னும் தமது நூலில் தக்க காரணம் காட்டி மறுத்துள்ளார்.[9]

உதியன் சேரலின் முன்னோன் ஒருவன் பெருஞ் சோறு கொடுத்த செயலை முடிநாகராயர், பின்னோனாகிய உதியன் சேரல்மீது ஏற்றிக் கூறினார் என்று கூறுவாரும் உளர்.[10] இங்ஙனம் கருதுவதும் தவறு என்பதை மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்.[11] உதியன் சேரல் சேர மன்னருள் காலத்தால் மிகவும் முற்பட்டவன் என்பதை நினைவூட்டவே புறநானூற்றில் அவனைப் பற்றிய பாடல் கடவுள் வாழ்த்தையடுத்து முதற் பாடலாக வைக்கப் பெற்றுள்ளது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகிய இருவருக்கும் தந்தையான உதியஞ்சேரல் என்பவன் வேறாவான்.[12]

### தருமபுத்திரன் (கி. மு. 1000)

'அறவோன் மகனே, மறவோர் செம்மால்' என்று புறப்பாட்டில் (366) **கோதமனார்** என்பவரால் பாடப் பெற்ற தருமபுத்திரன் தமிழ்நாட்டு அரசனாகக் காண்கிலன். இவன், யமதருமன் மகன், பாண்டவருள் மூத்தவன் என்பதே பொருத்தமாகத் தெரிகிறது. பாரத வரலாறு ஏறத் தாழக் கி.மு. 1000-த்தில் நடைபெற்றதாக முன்பு கொள்ளப்பெற்றது. இங்ஙனம் கொள்ளின், இப்புறப்பாட்டிற்கண்ட தருமபுத்திரன், அவனைப்பாடிய கோதமனார்[13] ஆகிய இவர்தம் காலம் ஏறத்தாழக் கி.மு. 1000 என்னல் தவறாகாது. ".......இவற்றால் வடநாட்டுப் பாண்டவர் ஐவர்க்கும் தமிழரசர்க்கும் பல்வகையினும் தொடர்புண்மை நன்கு தெளியலாம். இத்தொடர்புண்மையால், கோதமனார் தருமபுத்திரர்க்கு அறிவுறுத்தியதென்று நந்தமிழ்ப் பெருமக்கள் துணிந்த இச் செய்யுளின் பழமை நன்கு துணியலாம்"[14] என்று பெரும் புலவர் ரா. இராகவையங்கார் குறித்திருத்தல் காண்க.

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் "அருச் சுனனும் பாண்டிய மரபும்" என்னும் ஆராய்ச்சிமிக்க கட்டுரையில், வியாசபாரதம், மெகஸ்தனீஸ் வரைந்த 'இண்டிகா' இவற்றைக் கொண்டு பாண்டவர்க்கும் பாண்டியர்க்கும் இருந்த நட்புறவை மெய்ப்பித்து, "தென்னாட்டுப் பாரதப் பிரதிகளில் கண்ட செய்திகள் இடைச் செருகல் என்று சிலராற் கூறப்படுவது எவ்வாற்றானும் பொருந்தாதென்பது கண்டுகொள்க" என்றும் கூறியுள்ளனர். மேலும் அப்பெரியார், தருமபுத்திரனைக் கோதமனார் பாடினார் எனவரும் செய்யுளைப்பற்றிப் பேசுகையில், "இச் செய்தியை மேற்குறித்த விஷயங்களோடு சேர்த்து நோக்கும்போது, அசுவமேதயாகம் போன்ற சந்தர்ப்பம் ஒன்றில், தமிழரசருடன் சென்ற தமிழ்ப்புலவர் ஒருவர் பாண்டவரின் முன்தோன்றலையே அவ்வாறு பாடினரோ என்று சங்கிக்க இடம் தருகின்றது. அப்புறப்பாட்டில் '**அறவோன் மகனே** எனத் தருமபுத்திரர் அக்கோதமரால் அழைக்கப்படுதலும், தலைச்சங்கத்தவர்களிலே **கோதமனார்** என்றபெயருடைய புலவர் ஒருவர் காணப்படுதலும் இங்கு அறியத்தக்கன"[15] என்று எழுதியிருத்தல் கவனிக்கத் தக்கது.

**வான்மீகியார் (கி. மு. 600)**

பாரத நிகழ்ச்சிகட்குப் பிற்பட்டது இராமகாதை என்பது அறிஞர் கருத்து.[16] இராமகாதையை வடமொழியில் பாடியவர் வான்மீகியார் என்பவர். புறநானூற்றில் 358 ஆம் பாடலைப் பாடியவர் வான்மீகியார் என்ற புலவர். அவர் இப்பாட்டில் துறவறத்தின் சிறப்பினைப் புகன்றுள்ளார். இராமகாதை செய்த வான்மீகியாரும் இப்பாடலைப்பாடிய வான்மீகியாரும் ஒருவராகலாம் என்று 'செந்தமிழ்' இதழ் ஆசிரியராகிய பெரும்புலவர் **திரு நாராயணையங்கார்** ஏறத்தாழ எண்பது பக்கங்களில் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார்[17] இம்முடிவு கொள்ளற்பாலதாயின், புறப்பாட்டிற் கண்ட வான்மீகியார் காலம் ஏறக்குறையக் கி. மு. 600 எனலாம்.[18].

**நெடியோன் (கி.மு. 350 - 300)**

எங்கோ வாழிய குடுமி, தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி[19] மணலினும் பலவே

எனவரும் புறநானூற்று (9) அடிகளிற் குறிக்கப்பெறும் நெடியோனைப் பற்றிச் சிலப்பதிகாரம்[20], முல்லைக்கலி (4), மதுரை

காஞ்சி (வரிகள் 75 – 78; 763 — 781) முதலிய நூல்களிலும் குறிப்புக்கள் பலவாகக் காண்கின்றன. இவனே சமயக்கீர்த்தி எனப்பட்டவன். இவ்ன் பாக்கள் நற்றிணையில் (105, 228) இரண்டுண்டு. இவன் 'கவியரங்கேறிய பாண்டியன்' எனக் களவியல் உரை கூறல் காண்க. சயமாகீர்த்தி அல்லது ஜயமாகீர்த்தி என்பதில் உள்ள 'ஜய'[21] என்பது யவத் (ஜாவா) தீவத்தின் பெயரால் கல்வெட்டு வல்லார் அறிந்தது. அங்குள்ள பிற்காலத்துக் கல்வெட்டு ஒன்று மீன் இலச்சினையுடன் கிடைத்துள்ளது. இதனால் 'சயமாகீர்த்தி' என்பது 'ஜயஸ்தானத்து மகாகீர்த்தியன்' என்னும் பொருளுடையதேயாகும்... இவன் "அடியில் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி" எனச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறல் — நெடுந்தூரம் கடலிற் சென்று நிலங்கண்டு, அந்நிலத்துத் தன் அடிகளை வைத்து, ஆண்டுள்ள கடல் அலம்பும்படி நின்றதேயாம்... பேரரசன் தன் அடிகளைப் பாறைகளிற் பொறித்து அவற்றை நீர் அலம்பும்படி வைக்கும் செய்தி ஜாவாவில் ஸ்ரீபூர்ணவர்மன் கல்வெட்டுக்களிற் கேட்கப்படுகிறது.

"ஸ்ரீமானும் பூர்ணவர்மனும் அவனிக்குப் பதியும் அடிவைத்தவனுமாகிய தருமா நகரத்தலைவனுடைய விஷ்ணு (அடிகளை) ஒத்த இணை அடிகள்" (Ind. Ant. III, *335 — 358*). இது யவத்வீபத்துச் சீர் அருடன் யாற்று நடுவிலுள்ள பெரும்பாறையில் நீர் அலம்பு நிலையில் உள்ளது... இங்ஙனம் அடிபொறிக்கும் வழக்கம் நெடியோன் காலமுதல் அங்கு உண்டாயிற்று என்று உய்த்து உணரலாகும்.

"இங்ஙனம் நெடியோன் பெருங்கடலகத்து நிலங்கொண்ட செய்தி மதுரைக் காஞ்சியுள்,

வானியைந்த இருமுந்நீர்ப்
பேஎநிலைஇய இரும்பவ்வத்துக்
கொடும்புணரி விலங்குபோழ
..........................................
சீர்சான்ற வுயர்நெல்லின்
ஊர்கொண்ட உயர்கொற்றவ

என்று (வரி 75 — 88) குறிக்கப்படல் காண்க. நெல் — சாலி; நெல்லின் ஊர் —சாலியூர், இன்றைய சாரியூர் (Sarhi). இது ஜாவாத் தீவில் மதுரை என்ற தலைநகர்க்கு நான்கு கல் தொலைவில் உள்ள கடற்றுறைப் பட்டினம்.

"ஈண்டு மிகப் பிற்பட்ட காலத்தும் இந்நாட்டை வென்று கொண்ட மாறன் பெயரும், அவன் மதுரையும் (சுமதுரா), பாண்டியர்

நூலிற் குறித்த சாலியூரும் சேரவருதலான், இந்நாடு முதலில் தென்னாட்டுப் பாண்டியராலே கொள்ளப்பட்டதாக நன்கு தெளியலாம்... இவன் பொன்படு தீவங் கொண்ட சிறப்பையே போற்றி இவன் 'சயமா கீர்த்தி' எனவும், 'நெடியோன்' எனவும் புகழ் பெற்றனன்.... இவன் வென்று கொண்ட பிற நாடு மலயம் என இன்று வரை வழங்குதலும் இவனுடைய பொதியப் பொருப்பாகிய 'மலயம்' பற்றியதாகும். மதுரை என்பது, கீழ்க்கடலகத்து யவத்தீவத்தை அடுத்து இப்போதுள்ள தீவாகும். இது முன்னர் ஒன்றாக இருந்ததென்ப. இச்சாவகத்தீவுடன் சங்ககாலத்தில் வாணிகம் சிறக்க நடந்தது என்பதை மணிமேகலையால் அறியலாம்... சாவகத் தீவில் பலபடியாகப் பகுப்புண்ட பெருநிலப்பெயர்கள் இன்றைக்கும் **'பாண்டியன், மதியன், புசார், பாண்டிய வாசம், மலையன்சோ, சுந்தளி, செம்பூட்சேளய்'** என வழங்குதல் காணலாம். **'குறிஞ்சி, செங்கரை'** என்பன ஆண்டுள்ள குளங்களின் பெயர்கள்... "நெடியோன் எனப்பட்ட பாண்டியன், அக்கரையிலுள்ள ஆழி, தன்பாதத்தை அலம்பும்படி நின்றவன்" என உணர்தலே பொருந்தியதென்க. இக்கார்ணத்தாலே மூவுலகும் ஈரடியால் அளந்தவனாகிய நெடியோனை ஒப்பநின்றான் என்பது பற்றி, 'நெடியோன்' என்றார். இத்தகைய சிறந்த நெடியோன் வழித்தோன்றலாதல் பற்றியே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளின் தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்

எனக் குடபுலவியனாரால் புறப்பாட்டில் (18) ஏத்தெடுக்கப்பெற்றான் என்க.[22]

இந்நெடியோன் தொல்காப்பியர் காலத்தவன் என்று மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் ஆராய்ந்து முடிவு கூறியுள்ளனர்.[23] தொல்காப்பியர் காலம் கி.மு. 4 - ஆம் நூற்றாண்டு ஆகும். எனவே, இவன் காலமும் அதுவே எனல் பொருத்தமாகும்.

### மோரியர் படையெடுப்பு (கி.மு. 300 — 272)

சந்திர குப்த மோரியனது அமைச்சன் வரைந்த பொருள் நூலில் பாண்டியநாட்டு முத்துக்களும், மெல்லிய ஆடைகளும், சேரநாட்டுப் பொருள்களும் குறிக்கப் பெற்றுள. சந்திரகுப்தன் மகனான பிந்துசாரன் 28 ஆண்டுகள் பேரரசனாக இருந்தான். அவன் தமிழகம் ஒழிந்த தென் இந்தியப்பகுதி முழுமையும் கைப்பற்றி ஆண்டான். அவன் காலத்திற்றான் (கி.மு 300 —272) மோரியப்

படைவீரர், வடுகர்படை, கோசர்படை என்றவற்றுடன் தமிழகத்தினுள் நுழைந்து, பலவாறு திரிந்து பல இடங்களில் தோல்வியும் வெற்றியும் பெற்று, இறுதியில் 'செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி' என்பவனால் முற்றிலும் முறியடிக்கப்பட்டுத் திரும்பினர் என்பது புறப்பாட்டுக்களாலும் (175, 378) அகப்பாக்களாலும் (69, 251, 281) அறியப்படும் செய்தியாகும்.[24]

## முதற் கரிகாலன் (கி.மு. 120- கி.மு. 90)

இவனைப் பற்றிய புறப்பாட்டுகள் 65, 66 ஆம் எண் பெற்றனவாகும்; அகத்தில் 55, 125, 141, 246, 376 முதலிய எண்ணுடைய பாடல்களாகும். இவன் கரிகால் பெருவளத்தானுக்குப் பாட்டனாகலாம். இவனைப்பற்றிய விரிவான ஆராய்ச்சியை அறிஞர் சிவராசபிள்ளை அவர்கள் நூல் கொண்டு உணர்க.[25] இக்கரிகாலன் பெருஞ்சேரலாதனுடன் வெண்ணிப்பறந்தலையில் பொருதான்; புறப்புண்பட்ட சேரலாதன் நாணி வடக்கிருந்தான்.

## இரண்டாம் கரிகாலன் (கி.பி. 75 —115)

இவனே சிலப்பதிகாரம் கூறுமாறு, இமயம் சென்று மீண்ட பேரரசன். இவனே தொண்டைநாட்டை வளப்படுத்திச் சோணாட்டைப் பெருக்கிய பெருவீரன். இவன் மரபினர் என்று பிற்காலக் கருநாடக - ஆந்திர அரசர்களும் தாம் விடுத்த செப்புப் பட்டயங்களிலும் கல்வெட்டுக்களிலும் கூறிக்கொன்டனர்[26] எனின், இவன் பெருமையை என்னென்பது. இவன் காலத்திற் சோழப் பெருநாடு வடபெண்ணையாறு முதல் குமரிமுனை வரை பரவியிருந்ததென்னலாம். இவன் காலத்தில் பூம்புகார் சிறந்த துறைமுகப்பட்டினமாய் விளங்கியது.

வங்க நாசிக திஸ்ஸன் (கி.பி. 111 – 114) காலத்தில் சோழ நாட்டை விரிவாக்கிய சோழன் ஒருவன் படையெடுப்பு இலங்கைமீது நடைபெற்றது. அச்சோழன் பன்னீராயிரம் சிங்களவரைச் சிறைசெய்து சோழ நாட்டிற்குக் கொண்டு சென்றான். அந்த அவமானத்தை நீக்கக் கயவாகு வேந்தன் (கி.பி. 114 – 136) சோழநாட்டின் மீது படையெடுத்துப் பன்னீராயிரம் தமிழரைச் சிறைசெய்து இலங்கைக்குக் கொண்டு வந்தான் என்று இலங்கை வரலாறு கூறுகிறது.[27]

சங்க காலத்தில் நாட்டை விரிவாக்கியவன் கரிகாலனே என்பது சங்கப் பாடல்களால் தெரிகிறது. இப்பொழுது கடப்பை என்று பெயர் பெற்றுள்ள மாவட்டமும் அதைச் சூழவுள்ள பகுதியும் கரிகாலனால் செம்மைப் படுத்தப்பட்டது போலும். அப்பகுதி கி.பி. 7ஆம் நூற்றாண்டில் 'ரேநாடு' எனப்பட்டது. அதனை ஆண்டவர் தம்மைச் 'சோழர்' என்றும், 'கரிகாலன் மரபினர்'

என்றும் பட்டயங்களில் கூறிப் பெருமைப் படுத்திக் கொண்டனர். அந்த நாட்டைச் 'சூழிய' (சோழ நாடு) என்று 7 ஆம் நூற்றாண்டில் யுவான் சுவாங்கு என்ற சீனவழிப்போக்கன் குறித்துள்ளான். இவர்கள் வழிவந்த தெலுங்குச் சோழர் (சோடர்) பின் நூற்றாண்டுகளிற் சோழப் பேரரசர்க்கடங்கிக் குண்டூர், நெல்லூர், வடஆர்க்காடு, செங்கற்பட்டு, கடப்பை மாவட்டங்களை ஆண்டுவந்தனர் என்பதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. விசயநகர வேந்தர்க்கு அடங்கிய சிற்றரசர் சிலரும் இச்சோழர் மரபினரேயாவர். இவர் அனைவரும் தம்மைக் கரிகாலனின் மரபினர் என்று கூறிக் கொண்டதை நோக்க, கரிகாலன் மிகச் சிறந்த போர்வீரன் - பலநாடுகளை உண்டாக்கியவன் என்பது தெளிவாகிறதன்றோ?

கரிகாலன் காவிரியின் கரைகளை உயர்த்தியவன் என்று தெலுங்குச் சோழர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற கலிங்கத்துப் பரணியும் (197) இச்செய்தியைக் குறித்துள்ளது. சோழன் ஒருவன் பன்னீராயிரம் சிங்களவரைச் சிறைசெய்து சோணாடு கொண்டு சென்று காவிரிக்குக் கரையிடுவித்தான் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. பராந்தகன் முதலிய சோழப் பேரரசர் காலக் கல்வெட்டுக்களில் காவிரியின் கரை **'கரிகாலக் கரை'** என்று குறிக்கப்பட்டுள்ளது.

கரிகாலனே இமயம் வரையில் சென்று மீண்டதாகச் சிலப்பதிகாரம் செப்புகிறது. அவனது காலத்தில் கடல் வாணிகம் சிறந்திருந்தது என்பது பட்டினப்பாலையால் தெரிகிறது. எனவே, ப்டை வலிமை மிகுந்த அவனே இலங்கைமீது படையெடுத்திருக்கலாம். அங்ஙனமாயின், (அவன் படையெடுத்த காலம் கி. பி. 111-114 என்று இலங்கை வரலாறு கூறுவதால்) கரிகாலன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாக (கி. பி. 115 வரையில்) இருக்கலாம்.

### நெடுமுடிக்கிள்ளி (கி. பி. 115 - 136)

இவன் மணிமேகலை காலத்தவன். மணிமேகலை செய்த சாத்தனார் செங்குட்டுவன் காலத்தவர். செங்குட்டுவன் கயவாகுவின் (கி.பி. 114-136) காலத்தவன். எனவே, இந்நெடுமுடிக்கிள்ளியும் அக்காலத்தவனே யாவன். அக்காலத்தில்தான் பாண்டியநாட்டை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆண்டுவந்தான். அவனுக்குப் பின்பு மதுரையின் ஒருபகுதி அழிந்தது. இந்நெடுமுடிக்கிள்ளியோடு பூம்புகாரின் ஒரு பகுதி அழிவுற்றது என்று மணிமேகலை கூறுகின்றது.

**பிற சோழ வேந்தர் (கி. பி. 136 - 300)**

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான், கிள்ளிவளவன். இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, போர்வைக்கோப் பெருநற்கிள்ளி, வேல் பல்தடக்கைப் பெருவிரல் கிள்ளி, முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, கோப்பெருஞ்சோழன், சோழன் நல் உருத்திரன் முதலியோர் சோணாட்டை ஆண்டனர் என்று புறநானூற்றுப் பாடல்கள் புகல்கின்றன. இவருட் சிலரேனும் கரிகாலனுக்கு முற்பட்டவர் ஆகலாம்; பலர் பிற்பட்டவர் ஆகலாம்.

பிளைநி, பெரிப்பளூஸ் ஆசிரியர், தாலமி போன்றோர் குறித்துள்ள வாணிகச் செய்திகள் யாவும் உண்மை என்பதைப் புறநானூற்றுப் பாக்களும், கரிகாலனைப் பற்றிய பொருநர் ஆற்றுப்படை, பட்டினப்பாலை என்னும் நெடும் பாடல்களும் உறுதிப்படுத்துகின்றன.

**புறநானூற்றின் கால எல்லைகள்**

கி. பி. 300க்குப் பின்பு காஞ்சியில் பல்லவர் ஆட்சி புரியத் தொடங்கினர். ஏறத்தாழக் கி. பி. 450இல் அச்சுதவிக்கந்தன் என்ற களப்பிரகுல காவலன் காவிரிப் பூம்பட்டினத்தில் பேரரசனாய் விளங்கினான் என்று புத்த தத்தர் புகன்றுள்ளார். எனவே, புறநானூற்றின் இறுதிக்கால எல்லை ஏறக்குறையக் கி. பி. 300 என்று கூறலாம்; அதன்மேல் எல்லை ஏறத்தாழக் கி. மு. 1000 என்னலாம்.[28]

**குறிப்புகள்**

1. H.F.G. Teggart, Theory of History, pp. 18-22.
2. R. Gopalan's 'Pallavas of Kanchi,' Chapter 3.
3. M.S. Ramaswamy Iyangar's 'Studies in S. I. Jainism,' pp. 52-54 and Dr. S. K. Aiyangar's valuable Int. to the 'Pallavas of Kanchi' by R. Gopalan.
4. Ancient India, pp. 15-20.
5. R. Sathyanatha Iyer, History of India, Vol. I. p. 45.
6. முடியில் நாகவுரு தரித்த நாகர்குல அரசர் என்பது தோன்ற 'முடிநாகராயர்' எனப்பட்டார். சேரர் மரபினரான கொச்சி அரசர் கிளைகள் ஐந்தனுள் ஒன்றற்கு 'முரிஞியூர் தாய்வழி' என்பது பெயர். உதியஞ்சேரனைப் பாடிய இப்புலவர் பெருமானது ஊர் அம்முரிஞியூர் போலும்|- மு. இராகவையங்கார், சேரவேந்தர் செய்யுட்கோவை I, பக் 2-3.
7. தமிழ் வரலாறு, பக். 236 - 238.
8. History of the Tamils, pp. 491-494.
9. பக். 233.
10. K.A.N. Sastry, History of S. India, p. 113: முன்னோன் செய்த செயல் என்று இவரே ஒப்புக்கொள்வதால், பாரதகாலத்தில் சேரர் இருந்தனர் என்பதை ஒப்புக்கொள்ளுகிறார் என்பது இங்கு அறியத்தகும். எனவே சேர-சோழ-

பாண்டியர் பாரதகாலத்துப் பழமையுடையவர் என்பது கூறாமற் கூறியவாறாகும்.

11. தமிழ் வரலாறு, பக். 228- 230.
12. மு. இராகவையங்கார், சேரவேந்தர் செய்யுட்கோவை I, முன்னுரை பக். 9.
13. இக்கோதமனார் வேறு, பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தைப் பாடிய பாலைக் கோதமனார் வேறு என்பது, முன்னவர்க்குப் பாலை என்ற அடை இன்மையால் அறியப்படும்.
14. தமிழ் வரலாறு பக். 239 245.
15. ஆராய்ச்சித் தொகுதி, பக். 70- 78.
16. Dr. S. K. Aiyangar, Ancient India, pp. 1-5.
17. செந்தமிழ், 1939 –40.
18. T.R. Sesha Iyangar, Dravidian India, p. 13.
19. முதற் கடற்கோளில் மதுரை அழிந்தது. அதன் நினைவாக இன்றைய மதுரை ஏற்பட்டது. அதுபோலவே பஃறுளியாறும் நிலமும் கடலில் அழுந்திய பின்பு, நெடியோன், பஃறுளி என்னும் பெயர் கொண்ட புதிய ஆற்றைத் தோற்றுவித்தான். அப்பெயர் காலப்போக்கில் 'பறளியாறு' என மருவி நாஞ்சில் நாட்டில் பாய்கிறது. அவ்யாறே இப்பாட்டிற் குறிக்கப்பட்டது எனல் பொருந்தும்.
20. சிலப். காதை 11, வரி 17 – 22; அழற்படுகாதை எனல் பொருந்தும்.
21. G.E. Gerini, Further India, p. 646.
22. இப்புதிய அரிய செய்தியை விளக்கிய பெருமை பெரும் புலவர் ரா. இராகவையங்கார் அவர்கட்கே உரியது. தமிழ் வரலாறு, பக். 322 - 343.
23. தமிழ் வரலாறு, பக், 322 —343.
24. இதை விளக்கமாக அறிய விரும்புவோர் 'செந்தமிழ்ச் செல்வி' 16-ஆம் சிலம்பில் மோரியர் படையெடுப்பு' என்ற கட்டுரை காண்க. See also Dr. S. K. Aiyangar's Beginnings of S.I. History and Banerji's 'Prehistoric Hindu India'.
25. Chronology of Early Tamils.
26. K.A. N. Sastry, 'Chlolas', Vol I, pp. 121–122.
27. History of Ceylon, vol. I. part I, pp. 175 –195.
28. வேதத்தில் சொல்லப்பட்ட செய்திகளையும் புராணச் செய்திகளையும் கொண்டு வரலாறு எழுதிவரும் வரலாற்று ஆசிரியர்கள் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன், நெடியோன், வான்மீகியார், கோதமனார், கரிகாலன் இமயப் படையெடுப்புப் பற்றிய பாடல்களைக் கட்டுக்கதை என்று தள்ளுதல் ஆராய்ச்சி அறமன்று. இவைபற்றி ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார் போன்ற புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகளைத் தம் நூலில் குறிப்பிடாமல் விட்டதும் அறமாகாது. இங்ஙனம் கூற வேண்டுவனவற்றைக் கூறாது, சங்ககாலம் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தது என்பதை மட்டும் பல இடங்களில் விடாமல் எழுதுதலும் அறமாகாது.

# 2. தொல்காப்பியர் காலம்

**சங்க நூல்கள்**

தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐயங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன சங்க நூல்கள் எனப்படும். சங்ககாலம் என்பது ஏறத்தாழக் கி.பி. 300 உடன் முடிவு பெற்றது. அதன் தொடக்கம் கூறற்கியலாப் பழைமை வாய்ந்தது. இப் பரந்துபட்ட காலத்தில் பல இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் தோன்றின. அழியக் கூடிய பனையோலை ஏடுகளில் எழுதப்பட்ட காரணத்தாலும் கடல் கோள்கள் போன்ற பேரழிவுகளினாலும் பல அழிந்து போயின; போனவை போக, மேலே கூறப்பெற்ற நூல்கள் இன்று 'சங்கநூல்கள்' என்னும் பெயரில் உயிர் வாழ்கின்றன. காலப்போக்கில் மறைந்தொழிந்த நூல்களின் பெயர்கள் சில தொல்காப்பிய உரை, சிலப்பதிகார உரை, யாப்பருங்கல உரை முதலிய உரைகளிற் காணக் கிடைக்கின்றன.

**சங்க காலத் தமிழ்**

தொல்காப்பியர் தமக்கு முற்பட்ட இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்பதை, 'என்ப', 'என்மனார் புலவர்' எனத் தம் நூலில் பல இடங்களில் குறித்துள்ளார்; 'யாப்பென மொழிப யாப்பறி புலவர்' என்றாற் போலவும் பல இடங்களில் கூறியுள்ளார்; ஆயின், வட சொற்கள் தமிழில் வழங்குவதற்கு விதி கூறும் இரண்டு இடங்களிலும், 'என்ப', 'என்மனார்' என்னும் சொற்களை ஆளாததை நோக்க, அவர்க்கு முன்பு இருந்த இலக்கண ஆசிரியர்கள் காலத்தில் பிறமொழிச் சொற்கள் தமிழிற் புகவில்லை என்பது தெரிகிறது; தெரியவே, தமிழ் தனித்தியங்கிய காலம் இருந்தது என்பது தெளிவாகிறதன்றே?

சங்க காலம் மிகப் பரந்துபட்டது என்பது முன்பே கூறப்பெற்றது. இதன் முற்பகுதியில் (தொல்காப்பியத்திற்கு முன்பு) வடவர் கூட்டுறவு தமிழகத்தில் இல்லை. எனவே, அக்காலத்திற்குப் பின்பு பாடப்பெற்ற தொல்காப்பியத்திலும் பிற சங்க நூல்களிலுமே வடசொற்கள் தமிழிற் கலந்தன. பெரும்பாலும் சமயத் தொடர்பான சொற்கள் இப்பிறமொழிச் சொற்களாகவே காணப்படுகின்றன. எனவே, பிறமொழிச் சொற்களைச் சிலவாகக் கொண்ட செய்யுட்களும் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன என்பதை இங்கு அறிதல் நலம். வடநாட்டுப் புராணக் கதைகளும், புத்த சாதகக் கதைகளும் சில தொகை நூற்பாக்களிலும், மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பரந்துபட்ட சங்ககாலத்தின் இறுதியில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டவை. இந்த உண்மைகளை உளங்கொள்ளின், சங்க காலத்தின் முற்பகுதி தமிழ்மட்டும் வழங்கிய பகுதி என்பதும், பிற்பகுதி தமிழோடு பிறமொழிகளும் கலந்து வழங்கிய பகுதி என்பதும் நன்கு அறியப்படும். இவ்வுண்மையைத் தொல்காப்பியத்திலேயே காணலாம்.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியம், இன்றுள்ள சங்க நூல்களுள் காலத்தால் முற்பட்டது என்பது பலர் கருத்து. முற்காலத்திலிருந்த தமிழ்நூல் வகைகளையும் செய்யுள் வகைகளையும் உலக வழக்காகிய நெறிமுறைகளையும் அறிவதற்குச் சிறந்த கருவியாக உள்ளது இந்நூலே என்பது அறிஞர் கருத்து. இந்நூல் **எழுத்து சொல், பொருள்** என்னும் மூன்றையும் பற்றி எடுத்துக் கூறுவது. இதன்கண் உள்ள விதிகளைக் கூர்ந்து நோக்கின், 'அவற்றுக்கெல்லாம் அடிப்படையாகத் தொல்காப்பியர்க்கு முன்னரே மிகப்பல இலக்கியங்களும், இலக்கணநூல்களும் தமிழ்மொழியில் நிலைபெற்று இருத்தல் வேண்டும் என்பது அறிவுடையோருக்கு நன்கு புலனாகும். தொல்காப்பியர் தம் காலத்தனவும் தமக்கு முன்னர் எழுந்தனவும் ஆகிய இலக்கண இலக்கிய நூல்களை நன்கு ஆராய்ந்தே அவற்றின் இயல்புகள் அனைத்தும் விளங்கத் தம் நூலை இயற்றினார் என்பது தெளிவாகும்.

தொல்காப்பியச் சூத்திரங்களுள் ஏறத்தாழ இரு நூற்று அறுபது இடங்களில் தொல்காப்பியர், தமக்கு முன்பு இருந்தவரும் தம் காலத்தவருமான இலக்கண ஆசிரியர் பலரைப் பலபடியாகக் குறிப்பிட்டுள்ளார் :

(1) 'என்ப' 'மொழிப' என்னும் முறைமை தொல்காப்பியம் முழுதும் ஏறத்தாழ 147 இடங்களில் வந்துள்ளது.

(2) 'என்மனார் புலவர்' என்பது சுமார் 68 இடங்களில் வந்துள்ளது.

(3) 'வரையார்' என்பது 15 இடங்களில் வந்துள்ளது.

(4) பிற சிறப்புடன் வந்துள்ள தொடர்கள் ஏறத்தாழ முப்பதாகும். இச்சொடர்கள்தாம் சுவையுடையவை. ஆதலின், அவற்றை அதிகார முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக இங்குக் காண்போம்:

I. எழுத்ததிகாரத்தில்

| | | | |
|---|---|---|---|
| 1. | **நுண்ணிதின் உணர்ந்தோர்** கண்டவாறே | நூற்பா | 7 |
| 2. | ஒத்த தென்ப **உணரு மோரே** | " | 193 |
| 3. | செவ்வி தென்ப **சிறந்தி சினோரே** | " | 295 |
| 4. | புகரின்று என்மனார் **புலமை யோரே** | " | 369 |

II சொல்லதிகாரத்தில்

| | | | |
|---|---|---|---|
| 1. | உளவென மொழிப **உணர்ந்திசினோரே** | நூற்பா | 116 |
| 2. | வழக்கின் றென்மனார் **வயங்கி யோரே** | " | 139 |
| 3. | விளியொடு கொள்ப **தெளியு மோரே** | " | 153 |
| 4. | ஆயிரண் டென்ப **அறிந்திசி னோரே** | " | 158 |

III. பொருளதிகாரத்தில்

| | | | |
|---|---|---|---|
| 1. | இயல்பென மொழிப **இயல்புணர்ந் தோரே** | நூற்பா | 4 |
| 2. | புலன் நன் குணர்ந்த **புலமை யோரே** | " | 14 |
| 3. | கொள்ளும் என்ப **குறியறிந் தோரே** | " | 50 |
| 4. | **நல்லிசைப் புலவர்** செய்யுள் உறுப்பென வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே | " | 310 |
| 5. | இடையும் வரையார் **தொடையுணர்ந் தோரே** | " | 375 |
| 6. | வரைவின் றென்ப **வாய்மொழிப் புலவர்** | " | 380 |
| 7. | யாப்பென மொழிப **யாப்பறி புலவர்** | " | 383 |
| 8. | வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும் யாப்பின் வழியது என்மனார் **புலவர்** | " | 384 |
| 9. | பொழிப்பென மொழிதல் **புலவர் ஆறே** | " | 403 |
| 10. | ஒன்பஃ தென்ப **உணர்ந்திசி னோரே** | " | 406 |
| 11. | **தெரிந்தனர்** விரிப்பின் வரம்பில ஆகும் | " | 407 |
| 12. | **நூல்நவில் புலவர்** நுவன்றறைந் தனரே | நூற்பா | 457 |

| | | | |
|---|---|---|---|
| 13. | ஒத்தென மொழிப **உயர்மொழிப் புலவர்** | " | 472 |
| 14. | **தொன்று மொழிப் புலவரது** பிண்டம் என்ப | " | 474 |
| 15. | ஆங்கென மொழிப **அறிந்திசி னோரே** | " | 514 |
| 16. | தோவென மொழிப **தொன்னெறிப் புலவர்** | " | 539 |
| 17. | புலனென மொழிப **புலனுணர்ந்தோரே** | நூற்பா | 542 |
| 18. | "**நேரிதின் உணர்ந்தோர்** நெறிப்படுத் தினரே | " | 571 |
| 19. | நூலென மொழிப **நுணங்குமொழிப் புலவர்** | " | 644 |
| 20. | சூத்திரத் தியல்பென **யாத்தனர் புலவர்** | " | 646 |

சுவை பயக்கும் இத்தொடர்களை, அவையுள்ள இயல்களையும், நூற்பாக்களையும் கொண்டு ஆராய்ந்து முடிபு கூறல் அழகியதாகும். இத்தொடர்கள் பல துறைப் புலவர்களைச் சுட்டுதல் தெற்றென விளங்குதல் காண்க. இவற்றை நோக்கும் அறிஞர் சிறப்பாகப் பொருளதிகாரத்தில் வரும் 4, 5, 7, 8, 9, 11, 12, 14, 15, 16, 20 ஆம் எண்கள் சுட்டும் தொடர்களைக் காண்கையில், மேற் கூறப்பெற்ற உண்மையை எளிதில் உணர்வர்.

## தொல்காப்பியத்தின் பழமை

தொல்காப்பியம் -எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, திருக்குறள் என்பவற்றிற்குக் காலத்தால் முற்பட்டது என்பது பலர் கொள்கை. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள், தொல்காப்பியம், மேற் சொல்லப் பெற்ற நூல்களுக்குக் காலத்தால் பிந்தியது என்று கூறியுள்ளார். இவர் கூறியுள்ளகாரணம் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்ந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் வித்துவான் **க.வெள்ளை வாரணனார்** தமது "தொல்காப்பியம்" என்னும் ஆராய்ச்சி நூலில் மறுத்துள்ளார்.[1]

இலக்கண நூல் செய்யும் ஆசிரியன் தன் காலத்தில் உள்ள எல்லா இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்களையும் நன்கு ஆராய்ந்த பின்பே, இலக்கண விதிகளை அமைப்பது இயல்பு; உலக வழக்கில் உள்ள சொற்கள், செய்யுள் வழக்கிலுள்ள சொற்கள் ஆகிய இவற்றை ஆராய்ந்து விதி கூறுதல் இயல்பாகும். தொல்காப்பியர் புறநானூறு முதலிய நூல்களுக்குப் பிற்பட்டவராயின், அவற்றின்கண் காணப்படும் வழக்காறுகளை உள்ளத்துள் வைத்தே நூல் செய்திருப்பார். அவர் மேற்கூறப் பெற்ற நூல்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் ஆயின், பின் நூல்களிலுள்ள மாறுதல்களுக்கு அவர்

பொறுப்பாளியாகார். இந்த உண்மையை நினைவிற் கொண்டு கீழ்வரும் செய்திகளைக் காண்போம்:

**அகச் சான்றுகள்**

(1) சகர மெய், அ ஐ ஔ என்னும் மூன்று உயிரோடும் கூடி மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பிய விதி.

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐ ஔவெனும் மூன்றலங் கடையே.

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில், 'சடை', 'சமம்', 'சகடம்' என்னும் சொற்கள் வந்துள்ளன;[3] பத்துப்பாட்டில் 'சவட்டி', 'சலம்', 'சந்து' என்பவை இடம் பெற்றுள்ளன;[4] பதிற்றுப்பத்தில், சவட்டும் என்பது வந்துள்ளது;[5] திருக்குறளில், 'சமம்', 'சமன்' என்பன வந்துள்ளன.[6]

(2) ஞகர மெய் ஆ, எ, ஒ என்னும் மூன்று உயிரோடு மட்டுமே கூடி மொழிக்கு முதலில் வரும் என்பது தொல்காப்பிய விதி.

ஆ எ ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய[7]

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில், 'ஞமன்', 'ஞமலி', 'ஞிமிறு' என ஞகர மெய் அகர இகரத்துடன் கூடி முதலில் வந்துள்ளது;[8] அகநானூற்றில் 'ஞிமிறு', 'ஞமலி' என்பன இடம் பெற்றுள்ளன;[9] பதிற்றுப்பத்தில், 'ஞரல' என்பது வந்துள்ளது.[10] பட்டினப்பாலையில், 'ஞமலி' என்பது காணப்படுகின்றது.[11]

(3) யகர மெய் ஆ என்னும் உயிரோடு மட்டும் மொழிக்கு முதலில் வரும். ஏனைய பதினோரு உயிர்களோடும் மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பிய விதி. **ஆவோ டல்லது யகர முதலாது**[12]

**இவ்விதிக்கு மாறாக** 'யவனர்' என்னும் சொல் சங்க இலக்கியங்களில் வழக்குப் பெற்றுள்ளது.[13]

(4) தொல்காப்பியத்தில் கூறப்பட்டுப் பிற்காலத்தில் வழக்கொழிந்த சொற்கள் சில. அவை 'சுட்டு முதலாகிய இகர இறுதியும்' என்று தொடங்கும் நூற்பாவில்[14] குறிக்கப்பட்ட 'அதோளி' (அவ்விடம்) 'இதோளி', 'உதோளி', 'எதோளி' என்னும் சொற்கள். அவை, இன்றுள்ள சங்க நூற்பாடல்களில் இடம் பெற்றில என்பது கவனிக்கத் தக்கது.

(5) 'நான்கு' என்னும் எண்ணுப் பெயர் பிற சொற்களோடு சேரும்போது எவ்வாறு புணரும், எவ்வெவ்வாறு திரியும் என்பன பல நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன.[15] ஆயின், அகநானூற்றில்,

'நன்**னால்கு** பூண்ட கடும்பரி நெடுந்தேர்'[16] என்னும் வரியில் 'நான்கு' - '**நால்கு**' என்று திரிந்துள்ள மைக்குத் தொல்காப்பியத்துள் விதி கூறப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

(6) தொல்காப்பியர் ஒன்று முதல் பத்து, நூறு, ஆயிரம், நூறாயிரம் வரையில் உள்ள எண்களுக்குப் புணர்ச்சி விதி கூறியுள்ளார்.[17] நூறு நூறாயிரமாகிய கோடி என்னும் எண்ணினைப் பற்றி அவர் யாண்டும் கூறவில்லை. இதனால் அவர் காலத்தில் 'கோடி' என்னும் எண் வழக்கில் இல்லை என்பது தெரிகிறதன்றே? ஆயின், கோடி என்னும் எண் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

> ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
> பெருமைத் தாகநின் ஆயுள் தானே.[18]

திருக்குறளில்,

> கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.[19]

என வந்துள்ளமை காண்க.

(7) '**கள்**' என்னும் பன்மை விகுதி அஃறிணையில் வரும் என்பது தொல்காப்பிய விதி.

> கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
> கொள்வழி உடைய பலவறி சொற்கே.[20]

இவ்விதிக்கு மாறாகத் திருக்குறளில், 'மற்றையவர்கள்', 'பூரியர்கள்' என உயர்திணைப் பன்மையில், 'கள்' வந்துள்ளது.[21] கலித்தொகையில், 'ஐயர்கள்' எனக் 'கள்'[22] விகுதி உயர்திணையில் வந்துள்ளது.

(8) 'அன்' விகுதி ஆண்பால் படர்க்கைக்கே உரியது என்பது தொல்காப்பிய விதி.

> அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்
> ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.[23]

**இவ்விதிக்கு மாறாகப்** புறநானூற்றில், "உறைத்தனன் யானாக", "அந்தணன் புலவன் கொண்டுவந்தனனே"[24] என 'அன்' விகுதி தன்மை ஒருமையில் இடம் பெற்றுள்ளது; அகநானூற்றில் "நினக்கியான் இளைஞன் அல்லனே", "யான் வாழலனே", "மிகுதி கண்டன்றோ இலனே", "நனி அறிந்தன்றே இலனே"[25] என வழங்கப் பெற்றுள்ளது; நற்றிணையில் "கூறுவன் வாழி தோழி". "உள்ளினன் அல்லனே யானே",[26] என வந்துள்ளது; குறுந்தொகையில், "அளியன் யானே", "நீயலன் யான் என்",

"யானிழந்தனனே", "யான் கண்டனனே விலனே"[27] என வழங்கப்பெற்றுள்ளது.

(9) பலர்பால் படர்க்கையில் வழங்கும் **'மார்'** ஈற்று முற்றுச் சொல் பெயர் கொள்ளாது வினை கொண்டு முடியும் என்பது தொல்காப்பிய விதி.

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப.

**இவ்விதிக்கு மாறாகப்** புறநானூற்றில், "உடம் பொடும் சென்மார் உயர்ந்தோர் நாட்டென"[29] என 'மார்' ஈறு பெயர் கொண்டு முடிந்துள்ளமை காணத்தகும். இதுவன்றிப் "பாடன்மார் எமர்"[30] எனப் புறநானூற்றிலும், "காணன்மார் எமர்"[31] என நற்றிணையிலும் எதிர்மறையாய் நின்று பெயர்கொண்டு முடிந்துள்ளமையும் காண்க.

(10) வியங்கோள் வினை, முன்னிலை தன்மை ஆகிய இரண்டு இடங்களிலும் வாராது என்பது தொல்காப்பிய விதி.

முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோள் கிளவி.[32]

**இவ்விதிக்கு மாறாகப்** புறநானூற்றில், "நடுக்கின்றி நிலீஇயரோ"[33] என முன்னிலையில் வியங்கோள் வினை இடம் பெற்றுள்ளது.

(11) **'மோ'** என்னும் அசை முன்னிலைக்கு உரியது என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

மியாயிக மோமதி யிகுஞ்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச் சொல்.[34]

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில், "சென்மோ பெரும எம் விழவுடை நாட்டென"[35] என 'மோ' என்னும் அசை தன்மைக்கண் ஆட்சி பெற்றுள்ளது.

(12) கைக்கிளை முதல் பெருந்திணை இறுதியாகக் கூறப்பட்ட அகப்பொருள் செய்திகள் **கலிப்பாவிலும் பரிபாட**லிலும் பாடுதற்குச் சிறப்பு உரிமை உடையன என்பது தொல்காப்பியத்தில்.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்.[36]

எனக் கூறப்பட்டுள்ளது.

**இவ்விதிக்கு** மாறாகச் சங்கத் தொகை நூல்களில் அகப்பொருள் செய்திகள் பெரும்பாலும் **அகவற்பா**விலேயே அமைந்துள்ளன என்பது கவனிக்கத்தகும். தொல்காப்பியர் சங்கத்தொகை நூல்களுக்குப் பிற்பட்டவராயின், இங்ஙனம் நூற்பா செய்திருப்பாரோ என்பது எண்ணத்தகுவதாகும்.

(13) தொல்காப்பியத்தில் சேயோன், மாயோன், வருணன், வேந்தன் என்னும் நானிலத் தெய்வங்களையும் கொற்றவையையும் எல்லா நிலத்திற்கும் உரியதாகிய கடவுளையும் குறித்துள்ளார்.[37] ஆயின், தொகை நூல்களில் முருகன், சிவன், கண்ணன், பலதேவன் ஆகிய நால்வரும் சிறப்புடைக் கடவுளராகப் போற்றப் பெற்றனர்.[38] ஞாயிறும் திங்களும் மழையும் தெய்வங்களாகச் சிலப்பதிகாரத்தில் போற்றப்பெற்றன. காமன் வழிபாடும் இருந்தது.[39]

(14) பரிபாடல் அகப்பொருள் பற்றி வரும் என்றே தொல்காப்பியர் கூறியுள்ளார்.

கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.[39 a]

**இவ்விதிக்கு மாறாக** இன்றுள்ள பரிபாடல்கள் கடவுள் வாழ்த்துப் பற்றி அமைந்துள்ளமை நோக்கத் தகும்.

"இதனால், கடவுள் வாழ்த்துக் கூறிய கடைச் சங்க காலப் பரிபாடற் செய்யுட் டொகை நூலுக்கு **இவர்** (தொல்காப்பியர்) **இலக்கணம் முந்தியதாதல் ஒருதலை**....... உரைகாரர்கள் கடவுள் வாழ்த்தைக் கடைச் சங்கப் பரிபாடலுட் கண்டு அதற் கிலக்கணம் தொல்காப்பியத்துள் அமைத்தற்குப் பல்வகையானும் முயன்று இடர்ப்படுதல் இதனால் உணரலாகும் ......... தொல்காப்பியனார் இப்பரிபாடற்குப் பிற்பட்டவராயின், தம் இலக்கணத்து இங்ஙனம் காமங் கண்ணாத கடவுள் வாழ்த்து வருதற்கும் இலக்கணம் கூறியே செல்வர் என்க."[39 b]

(15) அதோளி, இதோளி, உதோளி என்னும் சுட்டு முதலாகிய இகர இறுதிச் சொற்கள் கடைச் சங்க காலத்திலேயே வழக்கு வீழ்ந்தன என்பதைப் பேராசிரியர் கீழ்வருமாறு கூறியுள்ளார்:

"ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து வாராதாகப் பொருள் வேறுபடுதலுமுடைய; அதோளி, இதோளி, உதோளி எனவும், குயினெனவும் நின்ற இவை ஒரு காலத்துளவாகி இக் காலத்திலவாயின; இவை முற்காலத்துள வென்பதே கொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா. **அவை ஆசிரியர் நூல்**

**செய்த காலத்துளவாயினும் கடைச் சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற்** பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக் கொண்டு செய்யுள் செய்திலர், அவற்றுக்கு இது மரபிலக்கண மாகலி னென்பது."[39 c]

இங்ஙனம் தொல்காப்பியத்திற்கும், தொகை நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் இவற்றிக்கும் உள்ள வேறுபாடுகள் மேலும் பலவாகும். அவற்றை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் வெளியிட்டுள்ள, "தமிழ் வரலாறு", "தொல்காப்பியம்" என்னும் நூல்களில் கண்டு தெளியலாம்.[40]

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் இவ்வேறுபாடுகளைக் குறிப்பிட்டு,

"இவர் செய்யுள் பற்றியும், வழக்குப் பற்றியும் கூறியுள்ள இலக்கண - இலக்கியங்களிற் பலவற்றிற்கு இலக்கியம் காட்டுதல் இப்பொழுது வழங்கும் நூல்களைக்கொண்டு இயலாமையாலும், இவர் கூறிய இலக்கணங்களின் வேறாய்ச் சில சொற்களும் கொள்கைகளும் இந்நூல்களிற் காண்டலானும், **இவர் இந்நூற்கெல்லாம்** முந்தியவர் என்று துணிதல் ஒருதலையாவது,"[40a] என்று கூறியிருத்தல் தொல்காப்பியத்தின் பழைமையை நன்கு வலியுறுத்துவதாகும்.

பன்மொழிப் புலவர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள் தமது, "பரணர்" என்ற ஆராய்ச்சி நூலில்,

"இலக்கண ஆசிரியர்கள், தம் காலத்தனவும் முந்தியனவுமான செய்யுட்களைக் கொண்டு இலக்கணம் செய்தல் மரபு. பரணர், கபிலர், நக்கீரர் இவர்கட்குப் பிற்பட்டவர் தொல்காப்பியராயின், அவர்தம் பாடல்களுக்கு முரணாக விதிகள் செய்திரார் அல்லவா? தொல்காப்பிய சூத்திர விதி கட்கும், அப்புலவர்களின் செய்யுட்களில் காணப்படும். சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் சிறந்த இலக்கண மாறுபாடுகள் இருத்தல் ஒன்றே, **தொல்காப்பியர், கடைச் சங்கப் புலவராய பரணர் முதலியோர்க்கும் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவராவர் என்பது திண்ணம்**[40b] என்று வரைந்திருத்தல் கவனத்திற்குரியது.

தொல்காப்பியர் இன்றுள்ள சங்க நூல்கட்குக் காலத்தால் முற்பட்டவர் என்பதைப் **பேராசிரியர் மு.இராகவையங்கார்** அவர்கள் பல சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார்கள். அவற்றைப் படித்து உண்மையுணர்தல் நல்லது.[40 c]

இதுகாறும் காட்டப்பட்ட அகச் சான்றுகள் அனைத்தும் **தொல்காப்பியர், புறநானூறு போன்ற சங்க நூல்களுக்குக் காலத்தால் முற்பட்டவர்** என்னும் உண்மையை ஐயமற விளக்கி நிற்கின்றன என்பதை நன்குணரலாம். இம்முடிவினையோ வேறு சில புறச் சான்றுகளும் ஆதரித்து நிற்றலைக் கீழே காண்க.

**புறச் சான்றுகள்**

(1) பனம்பாரனார் எழுதிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் தமிழக எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து.

இவ் வரிகளுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள். குமரி என்பதைக் குமரியாறு எனவே கொண்டனர்.

"கடல் கொள்வதன் முன்பு **பிற நாடும் உண்மையின்** தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிற நாடு இன்மையின் கூறப்படாவாயின, " என்பது **இளம்பூரணர்** தரும் விளக்கமாகும்.

அதுதானும் (தொல்காப்பியமும்) பனம்பாரனார், "வடவேங்கடம் தென்குமரி" எனக் **குமரியாற்றினை எல்லையாகக்** கூறிப் பாயிரம் செய்தமை கடலகத்துப் பட்டுக் குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையது[41] என்று பேராசிரியர் குறித்துள்ளார்.

வடக்கு தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென் (று)
இந்நான் கெல்லை அகவையிற் கிடந்த
நூலதின் உண்மை வாலிதின் விரிப்பின்

என்று **(பெருங்) காக்கைபாடினியார்** தெற்கே குமரியாற்றை எல்லை கூறினர். எனவே, அவர் தொல்காப்பிய ரோடு ஒரு சாலை மாணவர் என்று பேராசியர் கருதுவர்.

பின் வந்த **(சிறு) காக்கைபாடினியார்** வடதிசை ஒழிந்த மற்ற மூன்றிற்கும் கடலையே எல்லையாகக் குறித்தமை,

வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்கம்

என்னும் அடிகளால் உணரலாம். இங்ஙனம் கூறியதால், அவர் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டவர் என்று பேராசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.[42] **நச்சினார்க்கினியர்** இவரைப் "**பின் தோன்றிய காக்கை பாடினியார்**" என்பர். சிறு காக்கைபாடினியார் கூறிய எல்லைகளையே கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் செய்யப் பெற்ற சிலப்பதிகாரமும்,

> நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும் தமிழ்வரம்
> பறுத்த தண்புனல் நாடு[42]

என்று கூறுகிறது.

தொல்காப்பியருக்குப் பின்பு, குமரியாற்றுக்குத் தென்பாற்பட்ட நிலப்பரப்புக்கும்,[44] இன்றுள்ள குமரி முனைக்கும் இடைப்பட்ட நிலப் பகுதி அழிந்துபட்டதால், தென்திசையும் கடல் எல்லையெனச் சிறு காக்கைபாடினியாராலும், இளங்கோவடிகளாலும் கூறப்பட்டதெனக் கொள்வதே பொருத்தமாகும். ஆகவே, தொல்காப்பியர், சிறு காக்கைபாடினியார் இளங்கோவடிகள் ஆகியோருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்பது காண்க.

(2) தொல்காப்பியர், "எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி"த் தொல்காப்பியம் செய்தார் என்று பனம்பாரனார் தமது பாயிரத்தில் கூறியுள்ளார். அவர் கூறியதற்கு ஏற்பவே தொல்காப்பியம் **எழுத்து சொல், பொருள்** என மூன்று பகுதிகளாகவே வகுத்துரைக்கப் பட்டது. சிறு காக்கைபாடினியார் வாழ்ந்த பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றின்வேறாக **யாப்பு** என்னும் இலக்கணம் **நான்காவதாக** வகுக்கப் பெற்று வழங்கியது என்பது,

> நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண் யாப்பின
> திலக்கணம் அறைகுவன் முறையே,

என்று கூறியதிலிருந்து தெளிவாகும். இதற்கு ஏற்றாற் போலவே, பிற்காலத்தவராகிய களவியலுரை ஆசிரியரும், "தமிழ்தான் **நான்கு** வகைப்படும்: எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்புமெனழு, என்று தமிழ் இலக்கணத்தை நான்கு வகையாகப் பகுத்தமை காண்க.

குமரியாறு[45] தமிழகத்தின் தென் எல்லையாக இருந்த பொழுது தொல்காப்பியம் இயற்றப்பட்டது என்பதும், குமரியாற்றுக்கும் இன்றுள்ள குமரி முனைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி அழிந்து கடலே தென் எல்லையாக அமைந்த பின்பு

சிறுகாக்கைபாடினியார் வாழ்ந்தனர் என்பதும் இதுகாறும் கூறியவற்றால் நன்கறியலாம்.

**தொல்காப்பியர் காலம்**

வட மொழியில் வல்ல வட நாட்டார் தமிழகத்தில் நுழைந்து, இங்கேயே தங்கி வாழலாயினர். அதனால், அவர்தம் சொற்கள் தமிழ் மொழியில் இடம் பெறலாயின. இக் காரணத்தால்தான்,

வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே,

எனவும்

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்[47]

எனவும் **தொல்காப்பியர், வட சொற்கள் தமிழிற் கலத்திற்கு இலக்கணம் கூறினார்**; மேலும், சூத்திரம், படலம், பிண்டம். அம்போதரங்கம், காண்டிகை முதலியவற்றுக்கு இலக்கணம் கூறியுள்ளார். அவருக்கும் முற்பட்ட காலத்தில் பிற மொழிச் சொற்கள் தமிழில் எடுத்தாளப்படுவதற்கு இலக்கண ஆசிரியர் விதி கூறி இருப்பரேல், தொல்காப்பியர் அவ் விதியைச் சுட்டிக்காட்டி, 'என்ப', என்றோ 'என்மனார் புலவர்' என்றோ கூறியிருப்பார். அங்ஙனம் அவர் கூறாமையால், அவரே இப் புது விதிகளை வகுத்தவர் என்று சொல்லலாம் (இது முன்பே கூறப்பெற்றது). அவர் காலத்தில் தள்ள முடியாத அளவிற்கு வட சொற்கள் தமிழில் இடம் பெற்று விட்டதனால், அவர் அவற்றிற்கு விதி கூறும் நிலைமை ஏற்பட்டது என்று கூறலாம்.

ஆரியர் (வட மொழியாளர்) தமிழகத்திற்கு வந்த காலம் கி.மு. 7 நூற்றாண்டாக இருக்கலாம் எனப் பேராசிரியர் வி. அரங்காச்சாரியார் குறித்துள்ளார்.[48] தமிழகத்தில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் இசுலாம் பரவத் தொடங்கியது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபர அடிகள் தம் செய்யுட்களில், 'சலாம்', 'சொக்காய்' என்னும் இந்துஸ்தானிச் சொற்களைப் பயன்படுத்தினார். இதனை நோக்க, வட மொழியாளர் தமிழகத்தில் தங்கித் தமிழரோடு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் பழகிய பின்பு தான் அவர்தம் சொற்கள் தமிழில் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதுதல் தவறாகாது. இதனை நோக்கத் **தொல்காப்பியர் ஏறத்தாழக் கி.மு** 4 - ஆம் நூற்றாண்டினர் எனக் கொள்ளலாம்.

சந்திரகுப்தன் (கி.மு. 325—301 காலத்துச் சமண சமய குரவரான பத்திரபாகு முனிவரின் மாணவரான விசாக முனிவர் தமிழ் நாட்டில் சமண சமயப் பிரசாரம் செய்தார் என்பது சமண நூல் செய்தி. மதுரை மாவட்டத்திற் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் சமணரால் வெட்டப் பெற்றவை - அவற்றின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்பது கல்வெட்டறிஞர் கருத்து. எனவே, சமணம் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் நுழைந்து பரவத் தொடங்கியதென்னலாம்.[49] சமணம் பற்றிய குறிப்புக்கள் தொல் காப்பியத்தில் இல்லை.[50]

அசோகன் தனது இரண்டாம் பாறைக் கல்வெட்டில் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் மனிதர்க்கும், விலங்குகட்கும் மருத்துவ வசதி செய்ததாகக் கூறியிள்ளான்; 13ஆம் பாறைக் கல்வெட்டில், தமிழகத்தில் பௌத்த தருமம் பரவ ஏற்பாடு செய்தமையைக் குறிப்பிட்டுள்ளான். இவற்றால் அசோகன் காலத்திற்றான் (கி.மு. 273 — 232) முதன் முதலாகத் தமிழகத்தில் பௌத்த சமயம் நுழைந்து பரவத் தொடங்கியது என்னும் உண்மை வெளியாகிறது.

தமிழகத்தில் கழுகுமலை முதலிய இடங்களிற் காணப்படும் பௌத்தருடைய பிராமிக் கல்வெட்டுகள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவை என்பது ஆராய்ச்சி அறிஞர் முடிவாகும். பௌத்தம் பற்றிய குறிப்புத் தொல்காப்பியத்திற் சிறிதும் இல்லை.[51] எனவே, தொல்காப்பியம் தமிழகத்தில் பௌத்தம் நுழைவதற்கு முன்பு செய்யப்பட்டதென்னலாம்.

பனம்பாரனார் பாயிரம்,

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்

என்று கூறுகிறது. ஐந்திரம் என்பது வடமொழியில் சிறந்த விளங்கும் **பாணினீயம்** என்னும் இலக்கணத்திற்கு முற்பட்டது என்பது வடநூற் புலவர் கருத்து. தொல்காப்பியர் அப் பழைய வடமொழி இலக்கணத்தை நன்கு படித்தவர் என்று பனம்பாரனார் தம் பாயிரத்தில் பாராட்டியுள்ளார். பாணினீயம் வந்த பிறகு ஐந்திரம் மறைந்துவிட்டது. தொல்காப்பியர் பாணினிக்குப் பின்பு வந்தவராயின், அந்நூலையே கற்றுச் சிறப்படைந்திருப்பார்; 'பாணினீயம் நிறைந்த தொல்காப்பியன்' என்றும் பெயர் பெற்றிருப்பார். அவர் அங்ஙனம் குறிக்கப்பெறாமையால், பாணினி காலத்திற்கு முற்பட்டவர் என்னலாம்;[52] அல்லது பாணினீயம் வட நாட்டில் தோன்றிய பொழுது அதனை அறியாது அதே காலத்தில்

தமிழகத்தில் வாழ்ந்தவராகலாம். எனவே, தொல்காப்பியர் பாணினிக்கு முன்பு அல்லது அவரது காலத்தில் (அவரது நூல் தமிழகத்தில் பரவாத காலத்தில்) வாழ்ந்தவர் என்று கூறலாம். பாணினியின் காலம் கி.மு. 4 - நூற்றாண்டு என்று மேனாட்டு அறிஞர் கூறியுள்ளார்.[53]

தொல்காப்பியம் செய்யப்பட்ட பின்பே பாண்டியர் தலைநகரான கபாடபுரம் கடலாற் கொள்ளப்பட்டது என்று இறையனார் களவியலுரை கூறுகின்றது. பாண்டியரது கபாடபுரம் பற்றிய குறிப்பு வால்மீகி இராமாயணத்திலும், வியாச பாரதத்திலும் வருகின்றது. வியாச பாரதம் பல இடைச் செருகல் பெற்று, இன்றுள்ள நிலையை அடைந்த காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்படாது என்று விண்டர் நிட்ஸ் கூறியுள்ளார். எனவே, பாரதத்திற் குறிக்கப் பெற்ற கபாடபுரம் கி.மு. 4, 3 - ஆம் நூற்றாண்டுகளில் நல்ல நிலையில் இருந்திருத்தல் கூடியதே எனக் கொள்ளலாம்.

இதற்கு அரண் செய்வது போலக் கி.மு. 4 ஆம் நூற்றாண்டினனான சந்திரகுப்தன் (Q.î. 325 – 301) அமைச்சனான சாணக்கியன் தனது பொருள் நூலில் முத்துக்களின் பெயர்களைக் கூறும் இடத்தில். 'பாண்டிய **கவாடம்**' என்று ஒரு முத்தின் வகையைக் குறிப்பிட்டுள்ளான். அது பாண்டியரது கபாடபுரத்துக் கடல் முத்தே என்பது தெளிவு. கபாடபுரம் அழிந்த பிறகு அந்நகரின் பெயரைக் கூட்டி அக்கடற் பகுதியில் கிடைக்கும் முத்திற்குப் பெயர் வழங்கினர் என்று கூறுதல் ஏற்புடையது ஆகாது. கபாடபுர அழிவிற்குப் பின்பு **கொற்கை முத்தே** தொகை நூல்களிற் பேசப்படுகின்றது காண்க[54] எனவே, கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் கபாடபுரம் இருந்தது என்று கொள்வதே பொருத்தமாகும்.

'இலங்கையில் தோன்றிய மூன்று கடல்கோள்களுள் முதற் கடல்கோள் கி. மு. 2387 இல் இலங்கையை இந்தியாவினின்றும் பிரித்தது; இரண்டாம் கடல்கோள் கி.மு.504 இல் நிகழ்ந்தது; ஆயின், குறிப்பிடத்தக்க பேரிழப்பு இல்லை. மூன்றாம் கடல்கோள், அசோகன் காலத்தில் வாழ்ந்த தேவனாம்பிரிய திஸ்ஸன் காலத்தில் கி.மு 306 இல் உண்டானது. அதனால் ஒரு லட்சம் ஊர்களும் மீன் பிடிப்பவர் வாழ்ந்த சிற்றூர்கள் 910 -ம் (தொள்ளாயிரத்துப் பத்தும்) முத்தெடுப்பவர் வாழ்ந்த நானூறு சிற்றூர்களும் அழிந்தன,'[55] என்று இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

முதற் கடல்கோள் இலங்கையைத் தமிழகத்திலிருந்து வேறு பிரித்தது என்பதால், அடுத்து நிகழ்ந்த கடல்கோள்களும்

இலங்கையைப் போலவே தமிழகத்தையும் பாதித்திருத்தல் இயற்கையேயாகும். அதனாற்றான் தென்மதுரை அழிய ஒரு கடல்கோளும், கபாடபுரம் அழிய மற்றொரு கடல்கோளும் காரணமாயிருந்தன என்று இறையனார் களவியலுரை இயம்புகின்றது போலும்!

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

என்னும் சிலப்பதிகார அடிகள்[56] ஒரு கடல்கோளைக் குறிக்கின்றன. இது பேரழிவைக் குறிப்பது. தமிழகத்திலிருந்து இலங்கையைப் பிரித்த பெருங் கடல்கோளே சிலம்பு கூறும் இப் பேரழிவை உண்டாக்கியிருக்கலாம். அதனால் பாண்டிய நாட்டின் தென் எல்லை குமரியாறாயிற்று என்று கொள்ளலாம்.

கபாடபுரம் அழியக் காரணமாயிருந்த கடல்கோள் இலங்கையில் நிகழ்ந்த இரண்டாம் அல்லது மூன்றாம் கடல்கோளாயிருத்தல் வேண்டும். இரண்டாம் கடல்கோள் குறிப்பிடத் தக்க இழப்பை உண்டாக்கவில்லை என்று இலங்கை வரலாறு இயம்புகின்றது.

எனவே, இலங்கையில் தோன்றிய மூன்றாம் கடல் கோளே கபாடபுரத்தை அழித்தது என்று கொள்வது, மேலே காட்டப்பெற்ற பல காரணங்களை நோக்கப் பொருத்தமாகும். ஆகவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், **தொல்காப்பியர் கி.மு. 4 ஆம் நூற்றாண்டினர்** என்று கருதுதல் தகும்.[57]

## பெயர் முதலியன

மதுரைப் பேராலவாயர், மதுரைக் குமரன் என வரும் பெயர்களில், மதுரை என்பது ஊர்ப் பெயர்; பேராலவாயர், குமரன் என்பன இயற்பெயர்கள். இவ்வாறே வெள்ளூர்க் **காப்பியன்**, காப்பியாற்றுக் **காப்பியன்** என வரும் பெயர்களில் 'காப்பியன்' என்பது இயற்பெயர். நக்கீரன், நப்பாலத்தான் என்றாற் போல வரும் பெயர்களில் '**ந**' என்னும் சிறப்பு அடுத்து நிற்றல் போலப் **பல்**காயனார், **தொல்**காப்பியர் என்பவற்றிலும், பிற பெயர்களிலிருந்து பிரித்துக் காட்டப் 'பல்', 'தொல்' என்னும் அடைமொழிகள் சேர்க்கப்பெற்றன என்று கொள்வதே பொருத்தமுடையது. தமது பெயரையே தாம் செய்த நூலுக்குத் தோற்றுவித்தர்ர் என்னும் கருத்திற்றான் பனம்பாரனார்,

"தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றி"

எனக் கூறினார். எனவே தொல்காப்பியன் என்பது ஒரு சொல் தன்மையில் வழங்கப் பெற்ற இயற்பெயர் என்று கோடலே தக்கது.

தொல்காப்பியர் தமிழகத்து நல்லாசிரியருடைய வழக்கையும் செய்யுளையும் அடியாகக் கொண்டு, செந்தமிழ் நாட்டுக்கு இயைந்த **முன்னை** இலக்கணங்களை முற்றக் கண்டு, எழுத்து — சொல் — பொருள் இலக்கணங்களை முறைப்பட ஆராய்ந்து தமது நூலைத் தொகுத்துச் செய்தார் என்பது பனம்பாரனார் பாயிரத்தால் தெரிகிறது.

தொல்காப்பியர் நிலந்தரு திருவிற் பாண்டியன் தலைநகரான கபாடபுரத்தில், அதங் கோட்டாசான் தலைமையிற் பனம்பாரனார் போன்ற புலவர் பெருமக்கள் கூடிய பேரவையில் தொல்காப்பியத்தை அரங்கேற்றினார் என்பது சிறப்புப் பாயிரத்தால் புலனாகிறது.

தொல்காப்பியர் கடவுள் நம்பிக்கை உடையவர்; எல்லாத் தெய்வங்களையும் ஒப்ப மதிப்பவர். அவர் இன்ன சமயத்தவர் என்று அறுதியிட்டுக் கூற இயலாது.[58]

## குறிப்புகள்

1. பக். 86-127.
2. எழுத்ததிகாரம், நூற்பா 62.
3. செ. 1, 14, 102.
4. பெரும்பாணாற்றுப்படை, வரி 217; மதுரைக்காஞ்சி, வரி 112; மலைபடுகடாம், வரி 392.
5. செ. 84.
6. குறள் 99, 112.
7. எழுத்ததிகாரம் 64.
8. செ. 6, 74, 93.
9. செ. 59, 140, 388.
10. செ. 30.
11. வரி 140.
12. எழுத்ததிகாரம் 65.
13. புறநானூறு 56; பெரும்பாணாற்றுப்படை, வரி 316; முல்லைப் பாட்டு, வரி 61; நெடுநல்வாடை, வரி 101; சிலப்பதிகாரம், காதை 5, வரி 10; காதை 14, வரி 67; காதை 29, வரி 25; மணிமேகலை, காதை 19, வரி 108 முதலியன.
14. எழுத்ததிகாரம் 159.
15. நூற்பா 442, 453, 462, 467, 475.
16. செ. 104.
17. எழுத்ததிகாரம் 438-471.
18. செ. 18.
19. குறள் 377.
20. சொல்லதிகாரம் 169.
21. குறள் 263, 919.
22. செ. 26.
23. சொல். 205
24. செ. 136, 201.

25. செ. 343, 362, 379, 384.
26. செ. 233, 326.
27. செ. 30, 36, 43, 311.
28. சொல். 207.
29. செ. 362.
30. செ. 375.
31. செ. 64.
32. சொல். 226.
33. செ. 2.
34. சொல். 274.
35. செ. 381.
36. பொருளதிகாரம் 56.
37. பொருளதிகாரம் 5, 85.
38. புறநானூறு 56, 58 முதலியன.
39. சிலப்பதிகாரம், காதை 9, வரி 60.
39 a. செய்யுளியல் 121.
39 b. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 306-307.
39 c. செய்யுளியல் 80.
40. மகாவித்துவான் ரா. இராகவையங்கார் எழுதியுள்ள தமிழ் வரலாற்றில் தொல்காப்பியர் கடைச்சங்கப் புலவர்கட்கு முற்பட்டவர் என்பதைப் பல சான்றுகள் காட்டி (பக். 268-273, 308- 309) நிறுவியுள்ளார்.
க. வெள்ளை வாரணனார், தொல்காப்பியம், பக். 90-94, 213.
**டி. ஆர். சேஷ ஐயங்கார்** தமது "**திராவிட இந்தியா**" **என்**னும் பெயர் கொண்ட ஆங்கிலநூலில் இதே முடிபைக் (பக். 175-178) குறித்துள்ளமை கவனிக்கத் தக்கது.
40 a. தமிழ் வரலாறு. ப. 268.
40 b. பக். 172 – 173.
40 c. ஆராய்ச்சித் தொகுதி, பக் 101 – 120.
41. தொல்காப்பியம், மரபியல், நூற்பா 94 உரை.
42. தொல்காப்பியம், செய்யுளியல், நூற்பா 1, பேராசிரியர் உரை.
43. காதை 8, வரி 1 - 2.
44. இங்ஙனம் ஒரு நாட்டின் எல்லைகளுள் ஒன்றோ, பலவோ யாறுகளாக அமைதல் இயல்பு என்பதனை 'வட வெள்ளாற்றுக்கும், தென் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்டது சோழ நாடு' என்னும் கூற்றால் உணர்க.

45. "தொல்காப்பியர் காலத்தே குமரியாற்றின் தெற்கே இருந்த தமிழ் வழங்கிய நிலத்தை அடுத்துத் தமிழ் திரிநிலமாகிய குறும்பனைநாடு அமைந்திருந்தமையால், தமிழ் நாட்டின் தென்' எல்லையாகக் குமரியாற்றினைக் கூறவேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது."
—வெள்ளைவாரணர், தொல்காப்பியம், ப. 32.

46. சொல்லதிகாரம் 401.
47. சொல்லதிகாரம் 402.
48 Educational Review, October, 1928.
49. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 34 - 36.

50. M. Srinivasa Ayyangar, Tamil Studies, P. 8.
T.R. Sesha Ayyangar, Ancient Dravidians, p. 109.

51. "The famous Tamil grammatical work, the Tolkappiyam, may be assigned to the period (B.C 325 - B.C 188) under survey, it is said to exhibit the influence of Aindra Vyakarna, a pre_panini system system of Sanskrit grammar, but it is free from Buddhist influence."

R. Sathyanatha Ayyar, History of India Vol. I, pp. 170, 171.

52. தொல்காப்பியச் சூத்திரங்கள் சில பாணினீய சூத்திரங்களை ஒத்துள்ளன என்றும், சில பரத முனிவருடைய நாட்டிய சாத்திரச் சூத்திரங்களை ஒத்துள்ளன என்றும் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது இலக்கிய வரலாற்றில் (பக். 68 ) கூறியுள்ளனர். வித்துவான் க. வெள்ளைவாரணார் தாம் இயற்றிய "தொல்காப்பியம்" என்னும் அரிய ஆராய்ச்சி நூலில் (பக் 106 - 127)பிள்ளையவர்களின் கூற்றுக்களுக்கு மறுப்பு வழங்கியுள்ளார். இரண்டையும் படித்துணர்வது நல்லது.

53. History of Ceylon, vol I, Part 1, p. 208.

54. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக் 37 - 38.

55. Sir James Emerson Tnnent, Ceylon, vol I, p. - 7, foot note.

56. காதை 11, வரி 19 - 20; காதை 8, வரி 1, அடியார்க்கு நல்லார் விளக்கவுரை.

57. வடமொழியில் வேதங்களையும் பிரமாணங்களையும் எழுதிய ஆரியர் ஏறத்தாழக் கி.மு. 2300 அல்லது கி.மு 2000 - இல் இந்தியாவிற் புகுந்தனர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. (N. K. Dutt, Aryanisation of India, pp. 39 — 58) ஆரியர் ஏறத்தாழக் கி.மு. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்திருக்கலாம் என்று பேராசிரியர் வி. அரங்காச்சாரியார் கூறியுள்ளார் (இது முன்பே கூறப்பட்டுள்ளது). எனவே, Q. ĭ. 7 - ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழில் வட சொற்கள் கலக்கத் தொடங்கியிருத்தல் வேண்டும் என்று நினைப்பது பொருத்தமாகும். இங்ஙனம் காலப்போக்கில் நீக்கமுடியாத அளவு வட சொற்கள் தமிழிற் கலந்தமையாற்றான் தொல்காப்பியர் வட சொற்கள் தமிழிற் கலைத்தலைப் பற்றி இரண்டு சூத்திரங்கள் கூறினார்; பிராமணர் தொழில்களையும் கூறினார். எனவே, தொல்காப்பியர் ஆரியர் தமிழகம் வந்து தங்கிச் சில நூற்றாண்டுகளேனும் கழிந்த பின்னரே தோன்றியவராதல் வேண்டும் என்பது தெளிவாதல் காண்க. இந்த வரலாற்று உண்மையை நினைவிற்கொள்ளின் தொல்காப்பியர் காலம் கி.மு. 2000 அல்லது கி.மு. 3000 என்று கூற இடந்தராது.

58. தொல்காப்பியர் சமணர் என்றுரைப்போர் வாதத்தையும் அதற்குரிய மறுப்பையும் வித்துவான் க. வெள்ளைவாரணனார் எழுதியுள்ள "தொல்காப்பியம்" என்னும் ஆராய்ச்சி நூல் (பக். 159 - 172 )நோக்கி உணர்க.

# 3. திருவள்ளுவர் காலம்

**சங்க நூல்களின் இறுதிக் காலம்**

புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களும் பத்துப்பாட்டும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காவிய நூல்களும் **சங்க நூல்கள்** என்று ஒருசார் அறிஞர் கூறுவர். எட்டுத்தொகை நூல்களும் பத்துப்பாட்டும் 'சங்க நூல்கள்' என்றும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அடுத்துச் செய்யப்பட்ட **சங்கம் மருவிய நூல்கள்** என்றும் பிறிதொருசார் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

கால ஆராய்ச்சியைப் புரிவோர் மறுக்க முடியாத வரலாற்று உண்மைகட்கு முதலிடம் தருதல் வேண்டும். அடுத்து, நூலிற் கூறப்படும் சமய உண்மைகட்கும், அகச் சான்றுகட்கும் புறச் சான்றுகட்கும் மதிப்பளித்தல் வேண்டும். இவ்வுண்மைகளை உளங்கொண்டு மேற்சொன்ன இருசார் அறிஞர் கூறும் நூல்களின் 'இறுதிக் கால எல்லை' எதுவாக இருத்தல் கூடும் என்பதை ஈண்டு ஆராய்தல் நலமாகும்.

வட இந்தியாவில் கி.பி. நான்காம் நூற்றாண்டின் முற்பாதியில் பேரரசனாக இருந்த சமுத்திரகுப்தன் விந்திய மலைக்குத் தென்பால் படையெடுத்து வந்து அரசர் பலரை வென்றனன் என்றும், அவருள் காஞ்சியை ஆண்ட விஷ்ணுகோபன் என்ற பல்லவன் ஒருவன் என்றும், சமுத்திர குப்தனின் அலகாபாத் தூண் கல்வெட்டுக் கூறுகின்றது.[1] அக்காலம் ஏறத்தாழக் கி.பி. 340—350 என்னலாம்.[2] இதனால் கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தின் வட பகுதியாகிய தொண்டை மண்டலம் பல்லவர் என்ற அரச மரபினர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது திட்டமாகத் தெரிகிறது.[3]

காஞ்சியிலிருந்து முதன்முதல் பட்டயம் விடுத்த சிவஸ்கந்தவர்மன் என்ற முதற்பல்லவன் ஏறத்தாழக் கி.பி. 3ஆம் நூற்றாண்டினன் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கூறுவர்;[4] பிறிதொருசார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டிச்

'சிவஸ்கந்தவர்மனே காஞ்சியைக் கைப்பற்றிய குமாரவிஷ்ணு; அவன் காலம் ஏறத்தாழக் கி.பி. 325 — 350' என்பர்.[5] வேறொருசார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டிச் சிவஸ்கந்தவர்மன் காலம் ஏறக்குறையக் கி.பி. 300—325 என்பர்.[6] இவையனைத்தையும் காண, தொண்டை நாட்டில் பல்லவராட்சி ஏறத்தாழ கி.பி. 300 இல் தொடங்கியிருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும்.

சுமார் கி. பி. 300 இல் தொண்டை நாட்டைக் கைப்பற்றி ஆளத்தொடங்கிய பல்லவர் கி. பி. 900 வரையில் தென்னிந்தியாவில் பேரரசராக இருந்தனர். அடிக்கடி சேர, சோழ, பாண்டியரோடு போரிட்டனர் என்பன வரலாறு கண்ட உண்மைகள் ஆகும். ஏறத்தாழக் கி. பி. 575 முதல் 900 வரை அப்பல்லவர் பேரரசு கிருஷ்ணை முதல் காவிரி வரையிலும் பரவியிருந்தது.[7] இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இருந்த பல்லவரைப்பற்றி மிகப் பழைய தமிழ் நூல்கள் என்று கருதப்படும் மேற்சொன்ன தொகை நூல்களிலும் காவியங்களிலும் ஒரு குறிப்பும் காணப்படவில்லை.[8] சிலப்பதி காரம், மணிமேகலை என்னும் இரண்டு காவியங்களும் காஞ்சியைப்பற்றிப் பல இடங்களில் குறித்தாலும், பல்லவ அரசருள் ஒருவரைப் பற்றியேனும் குறிப்பிடாதது கவனிக்கத்தக்கது. இஃது ஒன்றே, **இக்காவியங்கள் பல்லவர்க்கு முற்பட்டவை** என்பதை நன்கு விளக்குவதாகும்.[9]

"கி. பி. 300 முதல் 350 வரையில் தென்னாட்டு வரலாற்றின் இருண்ட காலம் என்று கூறலாம். இது சங்க காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட இருண்ட காலம். இவ்விருண்ட காலத்தில் அளப்பரிய அதிராஜர்களை முடிதுறக்கச் செய்து **களப்பிரர்** என்னும் இனத்தார் தமிழகத்தை ஆண்டதாகத் தெரிகிறது."[10] அவருள் அச்சுதவிக்கந்தன் என்னும் அரசன் சோழ நாட்டை ஆண்டு, பௌத்த சமயத்தை நன்கு ஆதரித்ததாக ஏறத்தாழக் கி. பி. 450 இல் வாழ்ந்த புத்த தத்தர் என்ற பௌத்த நூலாசிரியர் தம் நூல்களில் குறித்துள்ளார்.[11] இவ்வாறு தமிழரசரை முடிதுறக்கச்செய்த களப்பிரர் ஆட்சி வடக்கே சிம்மவிஷ்ணு பல்லவனாலும், தெற்கே கடுங்கோன் என்ற பாண்டியனாலும் கி. பி. 6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொலைக்கப்பட்டு, வடக்கே பல்லவர் ஆட்சியும், தெற்கே பாண்டியர் ஆட்சியும் ஏற்படுத்தப்பட்டன.[12]

இக்களப்பிரரைப் பற்றிய குறிப்புச் சிறிதேனும் மேற்சொன்ன சங்ககால நூல்களில் இல்லை என்பது கவனிக்கத் தக்கது. இங்ஙனம் கி.பி. 300-க்குப் பிறகு தமிழகத்தில் நுழைந்து ஆதிக்கம்கொண்ட

பல்லவரைப் பற்றியோ, களப்பிரரைப் பற்றியோ மேற்சொன்ன தொகை நூல்களிலும் காவியங்களிலும் ஒரு குறிப்பேனும் காணப்படாமை கொண்டே, அவை யாவும் கி. பி. 300க்கு முற்பட்டன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ள தெளிவாக புலனாகும். சங்க காலம் எதுவாயினும் ஆகுக; சங்கம் மருவிய காலம் எதுவாயினும் ஆகுக. இவ்விரு காலங்களும் மேற்சொன்ன வரலாற்று உண்மைகளால் கி. பி. 300 க்கு முற்பட்டவை என்பது தெளிவு.

## திருக்குறளும் மணிமேகலையும்

மேற்கூறிய சங்க நூல்களில் காலத்தால் பிற்பட்டவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. எனவே, மணிமேகலையும் சிலப்பதிகாரமும் சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் செய்யப்பட்ட பெரு நூல்கள் என்று கருதுதல் பொருந்தும். இவற்றுள் ஒன்றான மணிமேகலையில் திருவள்ளுவரால் செய்யப்பட்ட திருக்குறள் பாக்களுள் ஒன்று அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது காண்க :

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. (குறள் - 55)

இக்குறட்பா மணிமேகலையில்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்[13]

என்று மணிமேகலையைப் பாடிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரால் எடுத்தாளப்பட்டது. பரசுராமன் காலத்தில் வாழ்ந்த காந்தன் என்ற பழைய சோழன் மகன் ஒருவன் 'மருதி' என்ற பார்ப்பன மங்கையைக் காவிரிக்கரையில் கண்டு காம உணர்ச்சியால் அழைத்தான். அவள் மனங்கலங்கி, "உலகில் மழைவளந்தரும் பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார். நான் இவன் உள்ளம் புகுந்தேன். இதற்குக் காரணம் யாது?" என்று சதுக்கப்பூதத்தை அணுகித் தன் மனக் கவலையை வெளியிட்டாள். அதற்கு அப்பூதம் மேற்சொன்ன மூன்று வரிகளையும் கூறியது என்பது வரலாறு. இது நிற்க.

இவ்வாறு திருக்குறள் ஒன்றை வெளிப்படையாகத் தம் நூலில் கூறி அதனைச் செய்த ஆசிரியரைப் 'பொய்யில் புலவன்' என்று வியந்து பாராட்டிய மணிமேகலை ஆசிரியர் காலம் யாது என்பதை முதற்கண் ஆராய்வோம்.

**மணிமேகலையின் காலம் யாது?**

1. மணிமேகலை ஆசிரியரான சாத்தனாரும், சிலப் பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகளும் நணபர்கள் என்பதும், செங்கட்டுவன் காலத்தவர் என்பதும் இவ்விருநூல் பாயிரங்களாலும் சிலப்பதிகார அகச்சான்றுகளாலும் அறியலாம். இச்சாத்தனார் வாய்மொழியால் கண்ணகியின் சிறப்பறிந்த செங்குட்டுவன், கண்ணகிக்குக் கோவில் கட்டி வழிபட்டதற்கும் அதற்கு இலங்கை அரசனான கஜபாகு (கயவாகு) மன்னன் வந்திருந்தான் என்பதற்கும் சிலப்பதிகாரமே சான்று பகர்கின்றது. கயவாகு என்னும் பெயருடைய அரசர் இருவர் முறையே கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும், கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலும் ஆண்டனர் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. இவருள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆண்ட கயவாகுவே ( கி. பி. 114- 136)[14] செங்குட்டுவன் காலத்து அரசனாதல் வேண்டும் என்பதை ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புகின்றனர். அவனே பத்தினி விழாவில் கலந்துகொண்டு தன் நாட்டிலும் பத்தினிக்குக் கோவில் கட்டியவன் ஆவான். இன்றைக்கும் சிங்களவர் 'பத்தினி தெய்யோ' என்று கண்ணகியைக் கொண்டாடுகின்றனர். இலங்கையில் இருந்துதான் பத்தினியின் உருவச்சிலை இலண்டன் பொருட்காட்சிச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

2. மணிமேகலை 27 ஆம் காதையில் 'கிருதகோடி' என்னும் பெயர், வேதவியாசருடனும் சைமினி என்னும் ஆசிரியருடனும் பிரமாணங்கள் கூறுமிடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. 'கிருத கோடி' என்பது மீமாம்சை சாத்திரமாகிய வேதாந்த சூத்திரத்திற்குப் போதாயனர் இயற்றிய உரை ஆகும் என்பது 'பிரபஞ்ச ஹிருதயம்' என்னும் வடமொழி நூலில் கூறப்பட்டுள்ளது. அந்நூலில் இவ்வுரை மிக விரிவாக இருந்தது பற்றி உபவர்ஷர் என்பவர் அதனைச் சுருக்கி அமைத்தனர் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. இந்த உபவர்ஷர் கி.பி. 3 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. எனவே, அவருக்கு முற்பட்ட 'கிருத கோடி' உரை எழுதிய போதாயனர் அவருக்கும் முற்பட்டவர்; ஏறத்தாழக் கி. பி. முதல் நூற்றாண்டின் அல்லது இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் ஆவர் என்று அறிஞர் கருதுகின்றனர்.[15] இதனால், கிருதகோடி ஆசிரியரைக் குறிப்பிடுகின்ற மணிமேகலை, அவ்வுரை பெரிதும் வழக்கிலிருந்த கி. பி. **முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருத இடம் தருகிறது**[16]

3. மணிமேகலை 29 ஆம் காதையிலும், பிற காதைகளிலும் குறிக்கப்பட்டுள்ள பௌத்த சமயக்கொள்கைகள் ஏறத்தாழக் கி. பி. 200-250 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராக ஆராய்ச்சியாளரால் துணியப்படும் **நாகார்ச்சுனர்** என்பவரால் உண்டாக்கப்பட்ட மகாயான பௌத்த மதக் கொள்கைகள் அல்ல. அவை ஹீனயான பௌத்த மதக்கொள்கைகள். எனவே, மணிமேகலை காலத்தில் இருந்த தமிழகத்துப் பௌத்தமும், ஹீனயானத்தைச் சேர்ந்த சௌத்ராந்திகப் பிரிவினது என்பது தெளிவாகும்.[17] எனவே, **நாகார்ச்சுனர் கொள்கைகள் தமிழகத்தில் பரவுவதற்கு முற்பட்ட காலத்தது மணிமேகலை** என்று கருதுதல் பொருந்தும்.

4. பௌத்த சமயத்துச் 'சாத்திய சித்தி' பிரிவினரான **அரிவர்மர்** ஏறக்குறையக் கி. பி. 250இல் வெளிப்படுத்திய அநாத்மவாதக் கொள்கை மணிமேகலையில் இல்லை.[18] இதனாலும் மணிமேகலை கி. பி. 250க்கு முற்பட்டது என்பது தெளிவாகும்.

5. மணிமேகலை ஆசிரியரான சாத்தனார்க்கு நண்பனான செங்குட்டுவன், பத்தினிச் சிலைக்குக் கல் எடுக்க வடநாடு சென்றான் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. அவன் எவ்வித எதிர்ப்புமின்றிக் கங்கையைக் கடந்து உத்தரகோசலத்தில் மட்டும் ஆரிய அரசரை வென்றான் என்று அந்நூல் கூறுகின்றது. இங்ஙனம் தமிழரசன் ஒருவன் வடக்கே படையெடுத்துச் செல்லத்தக்க வசதி கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் இருந்ததா எனின், ஆம். ஆந்திர அரசர் கங்கை வரையில் செல்வாக்குப் பெற்றிருந்தனர்; செங்குட்டுவன் கங்கையைக் கடக்க உதவி செய்தனர். கயவாகுவின் காலம் கி. பி. 114-136. ஆதலால், செங்குட்டுவன் படையெடுப்பும் இக் காலத்திலேயே நிகழ்ந்ததாதல் வேண்டும்.

இப்படையெடுப்பில் செங்குட்டுவன் நண்பரான நூற்றுவர் கன்னர் அவன் கங்கையைக் கடக்க உதவி புரிந்தனர் என்று சிலபதிகாரம் கூறுகின்றது. 'நூற்றுவர் கன்னர்' என்பது '**சதகர்ணி**' என்னும் வடமொழித் தொடரின் மொழிபெயர்ப்பு என்பதை எளிதில் உணரலாம். உணரவே, அக்காலத்து ஆந்திரப் பெருநாட்டை ஆண்ட சதகர்ணி அரசன் செங்குட்டுவனுக்கு நண்பன் என்பது பெறப்படும். அக்கால ஆந்திர அரசன் கௌதமீ புத்திர சதகர்ணி என்பவன். இவன் காலம் கி. பி. 106-130.[19] எனவே, சிலப் பதிகாரத்தில் குறிக்கப்பட்ட நூற்றவர் கன்னர், வரலாற்றுப் புகழ் பெற்ற 'சதகர்ணி அரசர் என்பது அறியத்தக்கது. இங்ஙனம் வரலாறு கொண்டும்,

சமய உண்மைகள் கொண்டும் அறிஞர் கூறியுள்ள முடிவுகளைக் காணின், **சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செய்யப்பட்டனவாதல் வேண்டும்** என்பது நன்கு தெளிவாகும்.

**திருக்குறளின் பழைமை**

கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செய்யப்பெற்றதாகத் துணியப்படும் மணிமேகலையில் திருக்குறள் ஆட்சி பெற்றது எனின், திருக்குறள் நூல் சாத்தனார் போன்ற புலவர்கள் படித்தறியத்தக்க நிலையில் நாட்டில் பெருமை பெற்றிருந்தது என்பது தெளிவாகும். ஆசிரியர் இக்குறளை ஆண்டுள்ள இடம் நன்கு கவனித்தற்குரியது. சோழ அரசருள் மிகப் பழையவனான (கரிகாலனுக்கும் முற்பட்ட) ககந்தன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த சதுக்கப்பூதம் மருதி என்னும் பார்ப்பனியை நோக்கி,

> தெய்வந் தொழாஅள்.............
>
> .......................
>
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்

என்று கூறியதாகச் சாத்தனார் கூறியுள்ளார். ஒரு சாதாரண பார்ப்பனப் பெண்ணான மருதி இத் திருக்குறளின் கருத்தை அறிந்திருத்தல் வேண்டும் என்று சதுக்கப் பூதம் எதிர்பார்த்தது என்பது சாத்தனார் கருத்தாதல் தெளியலாம். இவ்வாறு ககந்தன் காலத்திலேயே திருக்குறள் அனைவராலும் அறியத்தகும் நிலையிலிருந்தது (அஃதாவது, மணிமேகலையின் காலத்துக்கு மிக முற்பட்டது திருக்குறள்) என்பதைச் சாத்தனார் சதுக்கப்பூதத்தின் வாயிலாக நமக்கு உணர்த்தும் திறன் வியந்து பாராட்டுதற்குரியது அன்றே? சாத்தனார் உணர்த்துவது உண்மை என்பதை மணிமேகலைக்கு முற்பட்டனவாகக் கருதப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய நூல்கள் திருக்குறள் சொற்களையும் தொடர்களையும் கருத்துக்களையும் எடுத்து ஆளுவதிலிருந்தும் நன்கறியலாம்.

**திருக்குறளும் சங்க நூல்களும்**

தமிழகத்தில் கி. பி. 300க்கு முற்பட்ட பல்வேறு காலங்களில் பல்வேறு ஊர்களில் வாழ்ந்த புலவர் பலர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய பாக்களின் தொகுதியே எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவை கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குள்ளேயோ, அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்திலேயோ தொகுக்கப் பெற்றவை. இவற்றின்

'மேல் எல்லை' இது என அறுதியிட்டுக் கூறத்தக்க சான்றில்லை. இப்பாடல்களைப் பாடிய புலவர் பலர் தம் பாக்களில் திருக்குறள் கருத்துக்களையும் சொற்களையும் சொற்றொடர்களையும் ஆண்டுள்ள உண்மை சங்கநூற் பயிற்சியுடையார்க்கு நன்கு விளங்கும்.

இடச்சுருக்கம் கருதி, ஒவ்வொரு நூலுக்கும் சில எடுத்துக்காட்டுக்களைக் காட்டிச் செல்லுதலே சாலும்.

**நற்றிணை**

1. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(குறள் 20)

நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி.....

(நற்றிணை 1)

2. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் (குறள் -791)
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

....................பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே.

(நற்றிணை 32)

3. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(குறள் 580)

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்

(நற்றிணை 355)

**குறுந்தொகை**

1. மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். (குறள் 1289)

நுதே காமம் "காமநோய் நுண்ணியது;"
மெல்லியது. (குறுந்தொகை 217)

2. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். (குறள் 805)

பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ (குறுந்தொகை 230)

3. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். (குறள் 261)

வீங்கிழை நெகிழ விம்மி யீங்கே
எறிகட் பேதுற லாய்கோ டிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்...... (குறுந்தொகை 358)

**பதிற்றுப்பத்து**

1. நின் மறங்கூறு குழாத்தர் (நான்காம் பத்து. 9)

வீரர், தம் தலைவரது வீரத்தையே எடுத்தோதி மேம்படுதல் இயல்பு. இதனை,

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர்.

என்று வீரர் தம் தலைவனது சிறப்பைக் கூறும் குறளில் (771) காண்க.

2. தொலையாக் கொள்கைச் சுற்றத்தார் (ஏழாம் பத்து. 10)

தம்மால் சுற்றப்பட்ட தலைவன் செல்வம், வலிமை முதலியன அற்றபோதும் அவனை நீங்காது பழைமை பாராட்டும் பண்பினர் ஆதலின் சுற்றத்தார் இங்ஙனம் சிறப்பிக்கப்பட்டனர். இக்கருத்தை.

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

என்னும் குறளில் (521) காண்க.

3. நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலி னுண்டென் னுயிர். (குறள் 1213)

கனவினும் பிரியா வுறையுளொடு.........
மீனொடு புரையுங் கற்பின்
வாணுதல் அரிவை.......... (ஒன்பதாம் பத்து, 9)

**பரிபாடல்**

1. காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (குறள் 1251)

காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச் சென்றமளி சேர்குவோர்
(பரிபாடல் 10, வரிகள் 33-34)

2. இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. (குறள் 223)

இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்
அல்லது வெஃகி வினைசெய்வார்

(*பரிபாடல்* 10, *வரிகள்* 87- 88)

3. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (குறள் 581)

புடைவரு சூழல் புலமாண் வழுதி
மடமயி லோரும் அனையவ ரோடுங்
கடனறி காரியக் கண்ணவ ரோடுநின்
சூருறை குன்றிற் றடவரை யேறி (*பரிபாடல்* 19, *வரிகள்* 20- 23)

**கலித்தொகை**

1. காமமும் நாணு முயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து. (குறள் 1163)

நலிதரும் காமமுங் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு (கலித்தொகை 142)

2. காம முழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி. (குறள் 1131)

காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேமம்
எழினுத லீத்தவிம் மா (கலித்தொகை 139)

3. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். (குறள் 549)

குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங்குஅவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே

(கலித்தொகை 130)

4. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. (குறள் 1218)

தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமையெடுத்துப்
பற்றுவேன் என்றியான் விழிக்குங்கால் மற்றுமென் நெஞ்சத்துள்
ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யும் அறனில் அவன் (கலித்தொகை 144)

**அகநானூறு**

1. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (குறள் 60)

கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின் (அகநானூறு 184)
நன்ன ராட்டி..........

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. (குறள் 1103)

செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்பு
எய்திய கனைதுயில் ஏற்றொறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றோ இலனே (அகநானூறு 379)

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. (குறள் 1151)

வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ
.................................
நின்றாங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே

(அகநானூறு 387)

**புறநானூறு**

1. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (குறள் 39)

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் (புறம் 31)
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல

2. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (குறள் 110)

நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ. (புறம் 34)

3. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். (குறள் 528)

வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே. (புறம் 121)

4. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (குறள் 69)

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்

..............................

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. *(புறம் 278)*

**பத்துப் பாட்டு**

1. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் அதுநோக்கி
   வாழ்வார் பலர். *(குறள் 528)*

   வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
   பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த.
   *(சிறுபாணாற்றுப்படை, வரிகள் 217 – 218)*

2. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
   ஊதியம் இல்லை உயிர்க்கு. *(குறள் 231)*

   உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
   றீவார்மேல் நிற்கும் புகழ். *(குறள் 232)*

   ........................................ விழுநிதி
   யீதல் உள்ளமொ டிசைவேட் குவையே
   *(மதுரைக் காஞ்சி, வரிகள் 204 –205)*

3. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
   மிச்சில் மிசைவான் புலம். *(குறள் 85)*

   விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
   நின்னோ டுண்டலும் புரைவதென் றாங்கு"
   *(குறிஞ்சிப் பாட்டு, வரிகள் 206 — 207)*

இங்ஙனம் குறட்பாக்களையும் அவற்றின் தொடர்களையும் கருத்துக்களையும் தம் பாக்களில் எடுத் தாண்டவர்கள் பல்வேறிடத்தவர் — பல்வேறு காலத்தவர். ஆதலின், அவர்தம் காலத்திற்கும் **முன்னரே** திருக்குறள் அறப்பெரு நூலாக நாட்டில் வழக்குப் பெற்றிருந்தது என்னும் உண்மை தெற்றென விளங்கும்.

**சிலப்பதிகாரமும் திருக்குறளும்**

சிலப்பதிகாரத்திலும் பல இடங்களில் திருக்குறட் சொற்களும் கருத்துக்களும் பயின்று வருகின்றன. அவற்றுள் இரண்டினைக் காண்க:

1. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
   பிற்பகல் தாமே வரும். *(குறள் 319)*

   முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
   பிற்பகல் காண்குறூஉம் பெற்றிகாண்.
   *(சிலம்பு, காதை 21, வரிகள் 3 –4)*

2. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. *(குறள் 55)*

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்.

*(சிலம்பு, காதை 23)*

இங்ஙனமே சங்க காலத்திற்குப் பிற்பட்ட பெருங்கதை,[20] சைவத் திருமுறைகள், ஆழ்வார்களின் அருட் பாடல்கள் முதலிய அனைத்திலும் குறட்பாக்களும் அவற்றின் தொடர்களும் கருத்துகளும் மிகப் பலவாகக் கையாளப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் நோக்க, இன்றுள்ள சங்க நூற் பாடல்கள் முதல், பின் நூல்கள் அனைத்திற்குமே திருக்குறள் போற்றத்தக்க அறநூலாக விளங்கி வந்தது என்பது எளிதில் புலனாகும்.

**திருவள்ளுவர் காலம்**

ஆயினும், திருவள்ளுவர் ஏறக்குறைய எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்னும் கேள்வி எழுதல் இயல்பு. அதற்கு ஒருவாறு விடை காணல் நமது கடமையாகும்.

1. திருவள்ளுவர் காலம் சங்ககாலத்தின் முற்பகுதியைச் சேர்ந்தது என்று கூறுவோரும், சங்ககாலத்திற்குப் பிற்பட்ட காலத்தது என்று கூறுவோரும், இன்றுள்ள சங்கப் பாடல்களிற் பல ஏறத்தாழக் கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்பதை ஒப்புகின்றனர். இதை நோக்க, நாம் இதுகாறும் கண்ட சான்றுகளைக்கொண்டு, **திருவள்ளுவர் காலம் இம்முதலிரண்டு நூற்றாண்டுகட்கும் முற்பட்டதெனக் கருதலாம்.**

2. **ககந்தன்**[21] என்ற பழைய சோழ அரசன் காலத்திலேயே திருக்குறள் அறிவைப் பொதுமக்களிடம் சதுக்கப்பூதம் எதிர்பார்த்தது என்று கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாத்தனார் கூறுவதால்,[22] திருக்குறளின் பழைமை நன்கு புலனாகும். ஆகவே, வரலாற்றின் துணைகொண்டு காலம் கூறமுடியாத ககந்தனுக்கும் முற்பட்டது திருக்குறள் எனக் கருத இடமுண்டாகிறது.

3. திருக்குறளைப் பாராட்டிச் சங்கப் புலவர்கள் பாடியனவாகக் கருதப்படும் **'திருவள்ளுவ மாலை'** ஆராய்ச்சிக்குரியது; அப்புலவர்கள் பாடிய தொகை நூற்பாக்களை ஆராயின், அவர்கள் பல்வேறு காலத்தவர் என்பது அறியக் கிடக்கின்றது. எனவே, பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பாடிய பாக்கள், பிற்காலத்தில் புறநானூறு போன்ற தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டாற்போல, பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்

பலர் திருக்குறளைப் பாராட்டிப் பாடிய பாக்களையும் பிற்காலத்தவர் 'திருவள்ளுவ மாலை' என்னும் தலைப்பில் தொகுத்தனர் என்றே கருதுதல் பொருந்தும். அத் திருவள்ளுவ மாலையில் காணப்படும் பழம் புலவர்க்கு, வள்ளுவர் சம காலத்தவர் என்று கொள்ளுதலினும், அவர்க்கு முற்பட்டவராகக் கொள்வதே சால்புடையதாம். "புலவர் எவரும் தம் காலத்தவரால் தலைநின்ற தேவநாவலராய் மதிக்கப்படும் வழக்கம் யாண்டும் இல்லை. பெரும்பாலும் சமகாலத்தவரால் அவமதிப்பும், தாமியற்றிய நூலின் மெய்ப்பெரு வலியால் பிற்காலத்தவரால் மேம்பாடும் அடைவதே புலவர் உலகியல்பு. தெய்வப் பாவலராக வள்ளுவரைச் சங்கப் பழம் புலவர்கள் கூறுவதால், அவர்தமக்கு வள்ளுவர் நீண்ட காலத்துக்கு முற்பட்டவராகவும் அவர் அறநூலின் இறவாச் சிறப்பு அங்கீகரிக்கப்படுவதற்குப் போதிய அவகாசம் அக்குறளுக்கும் அதன் அடிகளைப் பாராட்டி எடுத்தாளும் சங்கப் பனுவல்களுக்கும் இடையே ஏற்பட்டிருத்தல் வேண்டும்."[23]

4. கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌடில்யர் இயற்றிய பொருள் நூலில் கண்ட சில செய்திகளும் திருக்குறள் பொருட்பால் பகுதிகள் சிலவும் கருத்தில் ஒன்றுபட்டிருத்தலால், திருவள்ளுவர் கௌடில்யரது பொருள் நூலைப் படித்திருக்கலாம் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இங்ஙனம் கொண்டு, **திருவள்ளுவர் காலம் கி.மு. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உட்பட்டதாகலாம் எனக் கூறுகின்றனர்.**[24]

5. திருவள்ளுவர் தொல்காப்பியத்தை வரம்பாகக் கொண்டே திருக்குறளை இயற்றினார் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க:

1. தொல்காப்பியர், 'அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று முதற் பொருள்கள்' என்று கூறியுள்ளார்.

> அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
> மும்முதற் பொருட்கும் உரிய வென்ப[25]

திருவள்ளுவர் இம்மூன்று முதற் பொருள்களை விளக்கவே திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று முப்பாலாக வகுத்தமைத்தார்.

அறத்தினால் பொருளை ஈட்டி, அப்பொருளால் இன்பம் நுகர்தலே இவ்வுலக வாழ்வின் பயன் என்பது பழந் தமிழ்ச் சான்றோர் கொள்கை. தொல்காப்பியர் இக் கொள்கையையே தம் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவர் அதனையே பின்பற்றினார்.

2. தொல்காப்பியர்,

எழுத்தெனப் படுப
அகரமுதல னகர இறுவாய்

என்று தமது நூலைத் தொடங்கினார். திருவள்ளுவர் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று தொடங்கி, "கூடி முயங்கப் பெறின்" என்று னகர ஒற்றோடு திருக்குறளை முடித்தார்.

3. தொல்காப்பியர்,

அருள்முந் துறுத்த அன்புபொழி கிளவி பொருள்பட
மொழிதல் கிழவோட் குரித்தே[27]

என்று நூற்பா ஒன்று செய்தார். திருவள்ளுவர் இந்நூற்பாவின் முதலடிப் பொருளை 'அருளென்னும் அன்பீன் குழவி' என ஒரு குறளிற் குறித்திருத்தல் கவனிக்கத்தகும்.

1. தொல்காப்பியர்,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப,[28]

என்று செய்யுளியலில் கூறியுள்ளார்.

திருவள்ளுவர்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

எனப் பாடியுள்ளார்.

இத்தகைய ஒருமைப்பாடுகளைக் கண்டே நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள், **திருக்குறள் தொல்காப்பியத்தை அடுத்துச் செய்யப்பட்டதாதல் வேண்டும்** என்று கூறியுள்ளார்.

6. சிறந்த கடல் வாணிகத்தில் ஈடுபட்ட ஏலேல சிங்கர் என்பவர் திருவள்ளுவர் நண்பர் என்று செவிவழிச் செய்தி கூறுகிறது. அந்த ஏலேலசிங்கர் இலங்கையை வென்று அரசாண்ட தமிழனான ஏழாரனாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். அஃது உண்மையாயின், **திருவள்ளுவர் காலம் ஏழாரன் காலமான கி.மு. இரண்டாம் நூற்றாண்டாக இருத்தல் கூடும்.**[30]

இவை அனைத்தையும் நோக்க, திருவள்ளுவர் இன்ன நூற்றாண்டினர் என்று உறுதியாகக் கூறத்தக்க சான்றுகள் கிடைக்கும்வரை, அவர் தொல்காப்பியரை அடுத்துக் **கிறிஸ்துப் பெருமானுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்** என்று கூறுதலே பொருத்தம் என்பது தெரிகிறது.

### திருக்குறளுக்கு மூல நூல்கள்

'திருக்குறள் இன்றுள்ள சங்கப் பாக்கட்கு முற்பட்டதாயின், அதற்குரிய மூல நூல்கள் யாவை?' என்னும் கேள்வி அடுத்து எழுவதாகும்.

தொல்காப்பியர் காலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என்பதும், தொல்காப்பியத்திற்கு முன்னரும் சம காலத்திலும் இன்றுள்ள சங்கப் பாக்களுக்கும் முன்னரே இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்பதும், இலக்கிய நூல்கள் பல இருந்தன என்பதும் சென்ற பகுதியிற் கூறப்பட்டன. "இவற்றால் தொல்காப்பியனார் தம் இலக்கணத்திற்குக் கருதிய இலக்கியங்கள் எத்துணையோ பல, அவர்க்கு முன்பே இந்தத் தமிழ்நாட்டுள் வழங்கின என்றே ஒருதலையாகத் துணியலாம்."[31]

எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுதல்போல இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவது இலக்கணம். ஆதலால், தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கண நூல்களுக்குக் கருவூலங்களாகப் பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தேற்றமன்றோ? அவை பரந்துபட்ட காலத்தனவாதல் வேண்டும். அவற்றுள் சிலவே இறையனார் களவியலுரை முதலியவற்றில் பெயரளவில் காட்டப்படும் நூல்கள். அப்பழைய இலக்கிய நூல்களே அறம், பொருள், இன்பம் பற்றிய பல குறிப்புகளைத் திருக்குறளுக்கு உதவி இருக்கலாம்.

மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்து தமிழகத்தை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டியருடைய ஆட்சி முறைகளைக் கொண்டும், சான்றோர் வரைந்த மேற்சொன்ன பண்டை இலக்கியங்களைக் கொண்டும் உலகத்தார் அனைவரும் மனவந்து ஏற்றுக் கொள்ளும் முறையில் திருவள்ளுவர் தம் அறநூலைச் செய்து முடித்தனர் எனக் கொள்ளுதலே இதுகாறும் கண்ட உண்மைகளை நோக்கப் பொருத்தமாகக் காணப்படுகிறது.

### முடிவுரை

இதுகாறும் பேசப்பட்ட உண்மைகளால், 1. தொல்காப்பியத்துக்குப் பின்பு எழுந்த நூல் திருக்குறள் என்பதும், 2. தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என அறிஞர் கருதுவதால் திருக்குறள் கி.மு. 4ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பதும் 3. கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவாகச் சிலரால் கருதப்படும் பெரும்பாலான தொகை நூற்பாக்களிலும் சிலப்பதிகாரம் மணிமேகலை எனப்படும்

காவியங்களிலும் குறட்பாக்களின் சொற்களும் தொடர்களும் கருத்துக்களும் ஆளப்பட்டிருத்தலின், அப்பாக்களுக்கு முற்பட்டது திருக்குறள் என்பதும் தெளியலாம். தெளியவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், **திருவள்ளுவர் காலம் ஏறத்தாழக் கி.மு. 1 முதல் 300க்கு உட்பட்டது** என்று கோடலே அமைவுடையதாகும்.

## குறிப்புகள்


1. Pallavas of Kanchi by R. Gopalan, Appendix No. 7.
2. Pallavas of Kanchi by R. Gopalan, p. 33.
3. Ibid, pp. 35 - 36.
4. Ibid, p. 36.
5. Studies in Pallava History by F. H. Heras, pp. 9. - 14, 23.
6. Successors of the Satavahanas by D. Sircar, pp. 164 - 166, 247 - 248.
7. Pallavas of kanchi, pp. 83 - 84, 142.
8. Pandyan kingdom by K.A.N. Sastry, p.19.
9. V.R.R. Dihshitar's int. to Silappadikaram by R.K.S., p. 13.
10. History of India by K.A.N. Sastry, Part I, p. 147.
11. History of Pali Literature by B.C.Law,. Vol. II, pp. 384, 385 & 389.
12. History of India by K.A.N. Sastry, Part 1. p. 148.
13. மணிமேகலை, சிறைசெய் காதை, வரி 59- 61.
14. History of Ceylon, Vol. I, Part I, pp. 183- 185.
15. Vedanta Comentators before Sankaracharya by P. V. Kane, Proceedings, Fifth Oriental Conference, Vol. II.
16. 'Manimekali in its Historical Setting' by Dr. S. K. Ayyangar, pp. 61-67.
17. 'Buddhistic Studies' Compiled by B. C. Law, pp. 11-17: K. A. N. Sastry, Cholas (2nd ed.), pp. 55-56.
18. 'Manimekalai in its Historical Setting,' pp. 79- 95.
19. R. Sathyanatha Ayyar, History of India, Vol. I, p. 207.


*திருக்குறட் கருத்துக்களையும் தொடர்களையும் சொற்களையும் சங்கப் புலவர்கள் ஆண்டனர் என்பதற்கு மாறாக, சங்கப் புலவர்தம் பாக்களை நன்றாகப் பயின்று அக் கருத்துக்களைத் திருவள்ளுவர் தமது அறநூலில் பெய்து வைத்தார் என்று ஏன் கொள்ளலாகாது? அங்ஙனம் கொள்ளின், திருவள்ளுவர் சாத்தனார் காலத்திற்கு முன்னும், சங்கப் புலவர்க்குப் பின்னும் வாழ்ந்தவராகக் கொள்ளலாமே என்று சிலர் கருதலாம்.

புலவர் பலர் ஓர் அறநூலிலிருந்து கருத்துக்களை எடுத்துத் தம் பாக்களில் பயன்படுத்தலே பெருவழக்குடையது. அங்ஙனம் பயன்படுத்துவோர், அறநூல் மேற்கோளை அப்படியே கையாளலும் அதனைப் பல அடிகளால் விரித்துக் கூறலுமே இயல்பு. தொகை நூல்களில் இந்த முறையினைக் காணலாம். திருக்குறள் இரண்டு அடிகளால் இயன்றது. சங்க காலப் புலவர்களோ, இரண்டடிக் (குறட்) கருத்துக்களைப் பல அடிகளில் விளக்கிக் கூறியுள்ளனர். இந்த உண்மையை நன்கு உளங்கொள்ளின், திருக்குறட் கருத்துக்களையே பின் வந்த சங்க காலப் புலவர் கையாண்டனர் என்பதைத் தெளியலாம்.

மேலும், **அறம் பாடிற்றே** என்று தெளிவாகச் சங்க காலப் புலவர் தம் பாடலுள் சுட்டியிருத்தல் கவனிக்கத்தக்கது. வடமொழியிலுள்ள தர்ம சூத்திரங்கள் **உரை நடையில்** இயன்றவையே தவிரப் பாட்டால் இயன்றவையல்ல. பாட்டாலியன்ற பழைமையும் பெருமையும் உடைய அறநூல் திருக்குறள் ஒன்றேயாதலின், அதனையே புலவர் சுட்டினாரெனக் கொள்ளுதல் ஏற்புடையது. எனவே, சங்க காலத்திலேயே திருக்குறள் சங்கப் புலவர் பாராட்டுக்கு உரியதாக இருந்தது எனக் கோடலே ஏற்புடைத்து.

20. குணாட்டியர் பைசாச மொழியில் செய்த **பிருகத் கதை**யைக் கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் இடையில் கங்க நாட்டு அரசனாக இருந்த துர்விநீதன் வட மொழியில் இயற்றினான். அதனைப் பின்பற்றியே கொங்குவேளிர் என்பவர் தமிழில் **பெருங்கதை**யைப் பாடியுள்ளார். எனவே, அந் நூலின் மேல் எல்லை ஏறத்தாழக் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு என்னலாம்.

21. இப்பெயர் அப்பண்டைக் காலச் சோழனுக்கு வழங்கியதென்பது ஐயத்திற்குற்குரியது.

22. சாத்தனார் தாமறிந்த குறட்பாவைச் சதுக்கப்பூதத்தின் வாயிலாகத் தெரிவித்தாரேயன்றி வேறன்று எனக் கருதுவோரும் உளர். அங்ஙனம் சாத்தனார் கூறியிருப்பாரேல் அது காலவழு (Anachronism) எனப்படும். மணிமேகலைக்கு முற்பட்ட சங்கப் பாடல்களிலேயே குறட் கருத்துக்களும் சொற்களும் ஆளப்பட்டிருத்தலின், சாத்தனார் கூறியிருத்தல் காலவழு என்னும் குற்றத்தின்பாற்படாது எனக் கொள்ளலாம்.

23. நாவலர் சோமசுந்தர பாரதியார், "திருவள்ளுவர்", ப.4.

24. (1) திருக்குறளில் காணப்படும் ஒருசில சொற்களையும், வடமொழிச் சொற்களையும் தொடர்களையும் கொண்டும், குறளில் காணப்படும் கருத்துக்கள் சில வடமொழி நூல்களில் காணப்படுதல் கொண்டும், குறள் மேலே கூறப்பெற்ற சங்க காலத்திற்கும் பிந்தியது என்று கூறும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் கூற்றும், அதனைப் பேராசிரியரும் பெருநாவலருமாகிய டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்களும், அறிஞர் பழநியப்ப பிள்ளை அவர்களும், மறுத்து எழுதியுள்ள கட்டுரைகளும் எனது "திருவள்ளுவர் காலம்" என்னும் தனி நூலில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்தல் நலம்.

(2) Studies in Tamil Literature and History by V.R.R. Dikshitar, pp. 133., 150 — 176.

25. செய்யுளியல் 102.

26. எழுத்ததிகாரம் 1.

27. கற்பியல் 20.

28. நூற்பா 171.

29. திருவள்ளுவர் (ஆங்கில நூல்), பக். 5 - 18.

30. History of Ceylon, vol. I, Part I, p. 207.

31. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, ப. 273.

# 4. பத்துப்பாட்டின் காலம்

## முன்னுரை

ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய தொகைநூல்கள் அகவற்பாவில் அமைந்தவை. அவ்வாறே, புறநானூற்றுப் பாடல்களும் அகவற்பாவில் அமைந்தவையே. அகநானூற்றுப் பாடல்கள் 13 அடிச்சிறுமையும் 31 அடிப் பெருமையும் உடையவை. புறநானூற்றில் 40 அடிப் பெருமையுள்ள பாடலும் (395) இடம் பெற்றுள்ளது. பதிற்றுப்பத்தில் 57 அடிகளைக் கொண்ட பாடலும் (90) இடம் பெற்றுள்ளது. ஆயின், நூற்றுக்கு மேற்பட்ட அடிகளைக் கொண்ட அகவற்பாக்களும் உண்டு. அத்தகைய நீண்ட பாடல்கள் பத்தின் தொகுதியே **பத்துப்பாட்டு** எனப்படும்.

பத்துப்பாட்டு என்பவை — திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகும். இப்பத்தும் முறையே 317, 248, 269, 500, 103, 782, 188, 261, 301, 583 அடிகளைக் கொண்டவை. இவற்றுள் மிகச் சிறியது முல்லைப்பாட்டு (103 அடி); மிகப் பெரியது மதுரைக்காஞ்சி (782 அடி).

## பத்துப்பாட்டு என்னும் பெயர்

இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் உரை கண்டார் என்பது இறையனார் அகப்பொருள் உரையிற் கூறப்பட்டுள்ளது. அவ்வுரையில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியன் நெடுமாறன் மீது பாடப்பட்ட **பாண்டிக்கோவை**யின் செய்யுட்கள் காணப்படுகின்றன; **நாலடியார், சீவகசிந்தாமணி** முதலிய நூல்களின் கருத்தும் சொற்றொடரும் காணப்படுகின்றன. எனவே, அவ்வுரை கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது என்னலாம்.[1]

அக்களவியல் உரையில் கடைச்சங்க நூல்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அப்பட்டியலில் **பத்துப் பாட்டு இடம் பெறவில்லை** என்பது கவனிக்கத்தக்கது. அக்காலத்தில் பத்துப் பாக்களும் தொகுக்கப்பட்டிருக்குமாயின், அத்தொகுப்பின் பெயர் அவ்வுரையில் இடம் பெற்றிருக்குமன்றோ?

இளம்பூரணர் என்பவர் தொல்காப்பிய உரையாசிரியருள் காலத்தால் முற்பட்டவர். அவர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்னலாம்.[2] அவர் பத்துப்பாட்டு ஒவ்வொன்றையும் அதனதன் தனிப் பெயர் கொண்டே கூறியுள்ளார்.[3] கி.பி. 13 ஆம் நூற்றாண்டினரான பவணந்தி முனிவர்க்குப் பிற்பட்டவரான (கி.பி. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டினரான) **பேராசிரியர்**[4] இத்தொகுதியைப் 'பாட்டு' (செய்யுளியல் நூற்பா 50, 80 உரை) என்றே குறித்துள்ளார். இதனை நோக்க, இப்பாடல்கள் இளம் பூரணர்க்குப் பின்பும் பேராசிரியருக்கு முன்பும் தொகுக்கப் பட்டன என்பது தெரிகிறது. ஆயின், **அப்பொழுதும் இத்தொகுதிக்குப்** 'பத்துப்பாட்டு' என்னும் பெயர் அமையவில்லை என்பது கவனிக்கத்தகும்.

மயிலைநாதர் என்பவர் நன்னூலுக்கு உரை வரைந்தவர். இவர் கி.பி. 14 ஆம் அல்லது 15 ஆம் நூற்றாண்டினர் என்னலாம்.[5] இவரே நன்னூல் நூற்பா 387 இன் உரையில் **பத்துப்பாட்டு** என்று **முதன்முதலாகக்** கூறியுள்ளார். ஆதலின், **பேராசிரியர்க்குப்** (கி.பி. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டிற்குப்) **பின்பே இந்தத் தொகுதிக்குப் பத்துப்பாட்டு** என்று பெயர் வழங்கலாயிற்று என்று கொள்வது பொருத்தமாகும்.[6]

### பத்துப்பாட்டின் காலம்

**முடத்தாமக்கண்ணியார்** என்ற புலவர் கரிகாலன் மீது **பொருநர் ஆற்றுப்படை**யைப் பாடியுள்ளார். **கடியலூர் உருத்திரன் கண்ணனார்** என்ற புலவரும் கரிகாற்சோழன் மீது **பட்டினப்பாலை**யைப் பாடியுள்ளார். இப்புலவரே தொண்டைமான் இளந்திரையன்மீது, **பெரும்பாணாற்றுப்படை**யைப் பாடியுள்ளார். ஆதலால், **கரிகாலனும் இளந்திரையனும் ஏறக்குறைய ஒரு காலத்தவர்** என்பது தெளிவாகத் தெரிகிறதன்றோ? கரிகாற்சோழன் காலம் ஏறத்தாழக் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாக இருக்கலாம் (கி.பி. 75—115) என்பது முன்பே குறிக்கப்பட்டது.

**மாங்குடி மருதனார்** என்ற புலவர் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்மீது **மதுரைக்காஞ்சி**யைப்

பாடியுள்ளார். **நக்கீரர்** என்ற புலவரும் அதே அரசன்மீது **நெடுநல்வாடையைப் பாடியுள்ளார். நக்கீரர் அகநானூற்று** 141 ஆம் செய்யுளில்,

செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன்

என்று குறித்துள்ளார். இவர் கரிகாலன் காலத்தவர் என்பதற்குச் சான்றில்லை. எனவே, இவர் கரிகாலனுக்குப் பிற்பட்டவர் என்பதே பொருந்தும். ஆகவே, நக்கீரரால் பாடப்பட்ட நெடுஞ்செழியனும் கரிகாலற்குப் பிற்பட்டவன் என்று கொள்வதே பொருத்தமாகும். கரிகாலனைப் பாடிய புலவருள் ஒருவரேனும் இந்நெடுஞ்செழியனைப் பாடாமையும் இவ்வுண்மையை உறுதிப் படுத்துகிறது என்னலாம்.[7]

பெருங்கௌசிகனார் என்ற புலவர் நன்னன் சேய் நன்னனைப்பற்றி மலைபடுகடாம் பாடியுள்ளார். இந்நன்னன் சிறந்த கொடைவள்ளல் என்று மலைபடுகடாம் (வரி 71-72) புகழுதலை நோக்க, மதுரைக்காஞ்சியில் வரும்,

பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு

என்னும் அடிகள் (318-319) இந்நன்னனைப் பற்றியன என்று கருதுதல் பொருத்தமாகும்.[8] இங்ஙனம் கொள்ளின், மாங்குடி மருதனார் காலத்திலோ சிறிது முற்பட்டோ மலைபடுகடாம் பாடப்பட்டது என்று கருதலாம்.

**பதிற்றுப்பத்து** என்னும் நூலில் உள்ள எட்டுப் பத்துக்களும் கால முறைப்படி அமைந்து உள்ளன. அவற்றுள் ஐந்தாம் பத்தைப் பரணர் பாடியுள்ளார். ஏழாம் பத்தைக் கபிலர் பாடியுள்ளார். இவ்விருவரும் பேகனைப் பாடியுள்ளனர்.[9] ஆதலின், கபிலர் பரணரது முதுமைக் காலத்தில் இளைஞராய் இருந்தவர் என்று கருதுதல் தகும். பரணர், கரிகாலன் தந்தையாகிய **உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னியைப்** பாடியுள்ளார் (புறநானூறு 4). எனவே, கபிலர் **ஏறத்தாழக் கரிகாலன் காலத்தில் குறிஞ்சிப் பாட்டைப் பாடினார்** என்று சொல்லுதல் பொருத்தம் ஆகும்.

மேலும், யானைக்கட்சேய் **மாந்தரஞ்சேரல் இரும்பொறை** என்னும் சேரவேந்தன் மதுரைக்காஞ்சிக்குஉரிய பாண்டியன் நெடுஞ்செழியனிடம் தோற்றவன். அவன் தனது பாட்டில் (புறம் —53), "கபிலன் இன்றுள னாயின் நன்றுமன்" என்று கூறியுள்ளான்.

இதனால் அவன் காலத்தில்—மதுரைக்காஞ்சி பாடப்பட்ட காலத்தில்—கபிலர் இல்லை என்பது வெளிப்படை.

ஆகவே, **பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு —ஆகிய நான்கும் ஏறத்தாழ ஒரு காலத்தன** என்று கூறலாம். **மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை என்ற மூன்றும் ஏறக்குறைய ஒரு காலத்தன** என்று கூறலாம்.

முல்லைப்பாட்டில் யவனரைப் பற்றியும் மிலேச்சரைப் பற்றியும் குறிப்புக்கள் வருகின்றன (வரி 60—66). நெடுநல்வாடையிலும் இவ்விருவரைப் பற்றியும் குறிப்புக்கள் வருகின்றன (வரி 31—35, 101). ஆதலால், "இவ்வகைக் குறிப்புக்கள் காணும் நூல்கள் கால முறையில் அடுத்தடுத்துத் தோன்றின என்று கொள்ளுதல் பொருத்தமாகும். எனவே, **நெடுநல்வாடையை அடுத்து முல்லைப்பாட்டுத் தோன்றியிருத்தல் கூடும்**."[10]

பதிற்றுப்பத்தில் 10 ஆம் பத்து யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பற்றியதாய் இருத்தல் கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர்.[11] அவன் ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன் ஆதலால் அவன்மீது புலவர் ஒரு பத்தைப் பாடியிருக்கலாம். அவன் இறுதிப் பத்துக்கு உரியவனாயின், ஐந்தாம் பத்துக்குரிய செங்குட்டுவனுக்கு மிகவும் பிற்பட்டவனாவன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் போரில் வென்றதாகப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று (17) கூறுவதால், இப்பாண்டியன் நெடுஞ்செழியன் செங்குட்டுவனுக்குப் பிற்பட்டவன் என்னலாம்; பதிற்றுப்பத்தின் வைப்பு முறையை நோக்க, சேரனை வென்ற இவன் காலம் ஏறத்தாழக் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு என்று கூறலாம்.[12] இங்ஙனம் கொள்ளின், இப்பாண்டியனைப் பற்றிய **நெடுநல்வாடையும், மதுரைக்காஞ்சியும்,** நெடுநல்வாடையை ஒத்துள்ள **முல்லைப்பாட்டும்** கி. பி. மூன்றாம் நூற்றாண்டு நூல்கள் என்னலாம்.

சிறுபாணாற்றுப்படையில் பாரி முதலிய வள்ளல்கள் எழுவர் வரலாறுகள் இறந்த காலச் செய்தியாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வள்ளல்கள் **கபிலர், பரணர், முடமோசியார், ஔவையார்** முதலிய புலவர்களால் பாடப்பட்டவர்கள். எனவே, இப் புலவர்களுக்கும் பிற்பட்ட காலத்தில் நல்லூர் **நத்தத்தனார்** என்ற புலவர் சிறுபாணாற்றுப்படையைப் பாடினார் என்று கொள்வது

பொருத்தமாகும். எனவே, **சிறுபாணாற்றுப்படை ஏறத்தாழக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டதெனக்** கொள்ளலாம்.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளைக் கொண்டு, (1) குறிஞ்சிப் பாட்டு, பொருநர் ஆற்றுப்படை, பட்டினப் பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நான்கு பாடல்களும் ஏறத்தாழக் கரிகாலன் காலத்தவை (கி.பி. 75-115) ஆகலாம் என்றும், (2) மலைபடுகடாம், நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு ஆகிய நான்கும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகலாம் என்றும், அனைத்திற்கும் இறுதியில் பாடப் பெற்ற சிறுபாணாற்றுப்படை கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் செய்யப்பட்டதாகலாம் என்றும் கொள்வது பொருத்தமாகும். வேறுதக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் இம்முடிபைக் கொள்ளுதல்தகும்.

பத்துப் பாட்டுள் எஞ்சியிருப்பது திருமுருகாற்றுப் படை ஒன்றேயாம். இனி இதன் காலத்தை ஆராய்வோம்.

## திருமுருகாற்றுப்படையின் காலம்

தொல்காப்பியர், '**கூத்தர், பாணர், பொருநர், விறலியர்** ஆகிய நால்வரையும் பொருளுதவி புரியும் வள்ளல்பால் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படை' எனக்கூறினார். பாணனை ஆற்றுப்படுத்துவது **பாணாற்றுப்படை** எனவும், பொருநரை ஆற்றுப்படுத்துவது **பொருநர் ஆற்றுப்படை** எனவும், கூத்தரை ஆற்றுப்படுத்துவது **கூத்தர் ஆற்றுப்படை** எனவும், விறலியை ஆற்றுப்படுத்துவது **விறலி ஆற்றுப்படை**' எனவும் பெயர் பெறும். இதனால், **புலவரை ஆற்றுப்படுத்துதல் தொல்காப்பியர்க்கு முன்பும் அவர் காலத்திலும் வழக்கில் இல்லை** என்பது தெளிவாகிறது. இந்நிலையில் மனிதனைத் தெய்வத்தினிடம் ஆற்றுப்படுத்தும் வழக்கம் அக்காலத்தில் அறவே இல்லை என்பது தெளிவாகும்.

புலவராற்றுப் படையின் இலக்கணம் பின் வந்த நூல்களிற் கூறப்பட்டுள்ளது.

(1) புறப்பொருள் வெண்பாமாலை ஏறத்தாழக் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு நூலாகும்.[12 a] அந்நூலுள் புலவராற்றுப்படை என்ற பிரபந்தத்தின் இலக்கணம் முதன்முதலில் கூறப்பட்டுள்ளது.

புலவராற் றுப்படை புத்தேட்கும் உரித்தே (204)

(2) பன்னிரு பாட்டியல் கி. பி. 14 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்பது முன்பு கூறப்பட்டதன்றே?

அதிலும் புலவராற்றுப்படை இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

இருங்கண்வானத் திமையோருழைப்
பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று (பாடாண்படலம் 42)

(3) கி. பி. 17 ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட இலக்கண விளக்கம் என்னும் நூலிலும் இது கூறப்பட்டுள்ளது.[12b]

விரும்பிய தருஉம் விண்ணவர் தம்முழை
அரும்பெறற் புலவரை ஆற்றுப் படுத்தலும் (**நூற்பா** 245)[12 c]

திருமுருகாற்றுப்படை பக்தி நூல். முருகன் அருளைப் பெற்ற புலவர் ஒருவர், பத்தி மிகுந்த மற்றொரு புலவரை அம்முருகன்பால் ஆற்றுப்படுத்துதல் முருகாற்றுப்படையின் பொருளாகும். "பிற ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப்படுபவர்களது பெயரோடு சார்த்தி வழங்கப்படும்; ஆனால், திருமுருகாற்றுப்படை பாட்டுடைத் தலைவன் பெயரோடு சார்ந்து வழங்கும். பிறவற்றில் காணப்படுவனவாகிய ஆற்றுப்படுத்துவானை விளித்தலும், தனது நிலையை விளக்கலும், ஆற்றுப்படுத்துவான் தனது பழைய நிலை, பரிசில் பெற்ற முறை என்பவற்றைக் கூறுதலும் இதில் விளக்கப்படாமல் உய்த்துணர வைக்கப்பட்டிருக்கின்றன."[13]

பத்துப்பாட்டைப் பதிப்பித்த டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுக்குக் கிடைத்த பெரும்பான்மையான ஏடுகளுள் திருமுருகாற்றுப்படை சேர்க்கப்பட்டிருக்கவில்லை.[14] மேலும், நெடுநல்வாடை பாடிய நக்கிரர் பேரரசர்களையும், சிற்றரசர்களையும் பாடியவர்; திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர், கடவுள் பத்தியிற் சிறந்து விளங்கியவர். இவர் பாடிய திருமுருகாற்றுப்படை 11 ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருப்பதும் இவர் பிற்காலத்தினர் என்பதையே ஆதரிக்கின்றது. இதன் ஆசிரியரை **நக்கீரதேவ நாயனார்'** என்று 11 ஆம் திருமுறை கூறுகின்றது.[15]

இனி இப் பாடற் செய்தியைக் கொண்டு இதன் காலத்தை இங்கு ஆராய்வோம்.

**பரிபாடலில் முருகன் பிறப்பு**

சிவபெருமான் உமையம்மையுடன் நெடுங்காலம் தொடர்ந்து இன்புற்றிருந்தமையால், இந்திரன் சென்று இறைவனிடம் ஒரு வரம் தருமாறு வேண்டினான். இறைவன் இசைவு தந்தவுடன், உமையைக் கூடாதிருக்கும்படி சிவனை வேண்டினான்; அசுரரை அழிக்கத்தகும் சிவசக்தி பொருந்திய பிள்ளையை அருளும்படி

வேண்டினான். சிவன் அவ்வேண்டுகோளுக்கு இசைந்து, தனது வீரியத்தை வெளிப்படுத்தி, அதைச் சேதப்படுத்தி, ஒரு கூறு மட்டும் இந்திரனிடம் கொடுத்தான்.

அது தேவசேனாபதியாகும் தகுதி உடையதென்று முனிவர் எழுவர் தமது யோக சக்தியால் உணர்ந்து, அதனை இந்திரனிடமிருந்து பெற்றுச் சென்று, வேள்வித் தீயிலிட்டு அதன் வேகத்தைக் குறைத்து, அதனைத் தம் மனைவியரை உட்கொள்ளச் சொல்லினர். அருந்ததி ஒழிந்த **அறுவர் அதனை உண்டு சரவணப் பொய்கையில்** ஆறு குழந்தைகளைப் பெற்றனர்.

இந்திரன் பொறாமை கொண்டு அக் குழந்தைகளின் மீது தன் வச்சிராயுதத்தை எறிய, குழந்தைகள் ஆறும் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் உடைய **ஒரே குழந்தையாய் மாறிவிட்டன. கடுவன் இளவெயினனார்** என்ற புலவர் இச்செய்தியினை 5 ஆம் பரிபாடலில் (வரி 26–55) கூறியுள்ளார்.

இக்கதையை ஒப்புக்கொண்டாற்போலவே ஆசிரியர் **நல்லந்துவனார்** எட்டாம் பரிபாடலில் (வரி 127, 128),

> மறுமிடற் றண்ணற்கு மாசிலோன் தந்த
> நெறிநீர் அருவி அசும்புறு செல்வம்

என்று பாடியுள்ளார்.

முருகன் பிறந்தவுடன் இந்திரன் பொறாமை கொண்டு அக் குழந்தையைத் தன் வச்சிராயுதத்தால் தாக்கினான் என்று கடுவன் இளவெயினனார் பாடியதற்கேற்பவே, **கேசவனார்** தம் பாடலில் (பரிபாடல் 14, வரி 25–26),

> பிறந்த ஞான்றே நின்னை யுட்கிச்
> சிறந்தோர் அஞ்சிய சீருடை யோயே

என்று பாடியுள்ளது நோக்கற்பாலது.

### திருமுருகாற்றுப்படையில் முருகன் பிறப்பு

திருமுருகாற்றுப்படையில் (வரி 254–255),

> ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
> அறுவர் பயந்த ஆறமர் செல்வ

என்னும் அடிகள் முருகனது பிறப்பைக் குறிக்கின்றன. நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகிய **ஐவருள் ஒருவன்** தன் உள்ளங்கையில் (சிவன் தந்ததைப்) பெற்றான். சிவன் எதைத் தந்தான் என்பது, மூலத்தில் இல்லை. இப்பகுதிக்கு உரையும் விளக்கமும் வரைந்துள்ள நச்சினார்க்கினியர், "ஐவருள் ஒருவன் தீ. அவன்

அங்கையேற்ப' என்றது, இறைவனிடத்தினின்றும் இந்திரன் வாங்கிய கருப்பத்தினை. முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின், இறைவன் கூறாகிய முத்தீக்குண்டத்து இட்டதனைக் கூறிற்று", என்று விளக்கம் தந்துள்ளார். நச்சினார்க்கினியர் பரிபாடல் 5 ஆம் பாடலின் கருத்தை இங்குள்ள முதலடிக்கு ஏற்றிக் கூறியுள்ளார். இதே கருத்தினை 50 ஆம் அடியின் உரை அடியிலும் எழுதி, "இதனை, '**பா யிரும் பனிக்கடல்**' என்னும் பரிபாட்டான் உணர்க, **இவ்வாறன்றி, வேறு வேறு புராணம் கூறுவாறும் உளர்**", என்றும் எழுதியுள்ளமை நோக்கற் பாலது.

இதனை நோக்க, நச்சினார்க்கினியர் காலத்திலேயே முருகன் பிறப்புப் பற்றிப் பரிபாடற் செய்தியினும் வேறுபட்ட வரலாறு கூறப்பட்டமை தெளிவாம். அவ்வேறுபட்ட செய்தி யாது?

## கந்தபுராணத்தில் முருகன் பிறப்பு

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்த புராணம் திருவவதாரப் படலத்தில் முருகன் பிறப்புப் பற்றிக் கூறும் செய்தி பின்வருமாறு:

பிரமன் திருமால் இந்திரன் முதலியோர் சிவனைக் கண்டு, சூரன் முதலிய அசுரரை அழிக்கத்தக்க மைந்தனை உதவும்படி வேண்டினர் (செ. 42). அப் பெருமான் உடனே தன்கண் ஆறு முகங்களைத் தோற்றுவித்தான் (செ 43). அவற்றிலுள்ள ஆறு நெற்றிக்கண்களிலிருந்தும் ஆறு தீப் பொறிகள் வெளிப்பட்டன (செ. 45). "இப்பொறிகள் ஒரு மைந்தன் உருவத்தைப் பெறும். அம்மைந்தன் அசுரரை வெல்வான். நீங்கள் இப்பொறிகளைக் கங்கையில் விடுங்கள். கங்கை சரவணப் பொய்கையில் இவற்றை உய்க்கும்" என்றனன் (55); காற்றுத் தேவனையும் தீத் தேவனையும் நோக்கி, "நீவிர் இருவீரும் இப்பொறிகளைக் கங்கையில் விடுமின்", என்று பணித்தான் (66–67). **காற்றுத் தேவன்** சிவனை வணங்கி, அத்தீப்பொறிகளைத் தன் தலைமீது தாங்கிக் கொண்டு தீக் கடவுளுடன் சென்றான் (77); வழியில் அவற்றைத் தீக் கடவுள் தலைமீது வைத்தான் (84). தீக் கடவுள் அவற்றைக் கொண்டு சென்று கங்கையில் இட்டான் (85). கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையில் உய்த்தது (87).

இறைவன் அருளால் அப்பொறிகள் ஆறுமுகங்களையும் பன்னிரண்டு கைகளையும் கொண்ட **ஒரு குழந்தையாய்** விளங்க, அக்குழந்தை தாமரை மலர்மீது வீற்றிருந்தது (92–96). அதனைக் கண்ட அரி முதலிய அமரர் குழந்தையைப் பாலூட்டி

வளர்க்கும்படிக் **கார்த்திகை மாதர்கள் அறுவரை ஏவினர்** (114–115). அவ்வறுவரும் தன்னை நோக்கி அன்புடன் வருதலைக் கண்ட 'அறுமுக ஒருவன் வேறாய் **அச்சிறார் உருவம் கொண்டான்**' (செ. 116).

## திருமுருகாற்றுப்படை குறிக்கும் முருகன் பிறப்பும் வளர்ப்பும்

சிவபிரானிடமிருந்து வெளிப்பட்ட தீப்பொறிகளை முதலில் ஏற்றவன் காற்றுக் கடவுள் (ஐவருள் ஒருவன்) என்பது கந்த புராண வரலாற்றால் தெரிகிறது. அவன் அவற்றை முதலில் தன் அங்கையில் ஏற்ற பின்னரே தலைமீது வைத்திருத்தல் இயல்பாகும். முருகன் கார்த்திகைப் பெண்கள் தன்னை அடைவதற்கு முன்பு ஆறுமுகங்களைக் கொண்ட ஒரே குழந்தையாய் இருந்தான். பின்னரே தாய்மார் அறுவர்க்கு ஏற்ப ஆறு குழந்தைகளாய் மாறினான் என்பது கந்தபுராண வரலாறு. ஆயினும் முனிவர் மனைவியர் அறுவரே ஆறுபிள்ளைகளைப் பெற்றனர் என்பது பரிபாடற் செய்தியாகும்.

அறுவர் பயந்த ஆறமர் செல்வ

என்று திருமுருகாற்றுப்படையில் குறித்தமை, ஆறு தீப்பொறிகளிலிருந்து பிறந்த முருகனை அறுவர் பாலூட்டி வளர்த்தமை பற்றி உபசார வழக்காய் அமைந்ததாகும்.

கண்ணனைப் பெற்றவள் தேவகி; வளர்த்தவள் யசோதை. ஆயினும், யசோதை கண்ணனை நோக்கி, 'பெற்ற எனக் கருளி' (1 : 5 : 8) என்று கூறியதாகப் பெரியாழ்வார் பாடியுள்ளார்.

என்ன நோன்பு நோற்றாள் கொலோ
இவனைப் பெற்ற வயிறுடையாள்
என்னும் வார்த்தை எய்துவித்த
இருடீ கேசா முலையுணாயே (2 : 2 : 6)

என்று யசோதை கண்ணனைப் பாலருந்த அழைத்ததாகப் பெரியாழ்வார் பாடியுள்ளமை காணத் தக்கது. '**உன்னைப் பெற்ற குற்றமல்லால்**' (3 : 1 : 7) என்று பிறிதோரிடத்திலும் யசோதை கூறுவதாகப் பெரியாழ்வார் பாடியுள்ளார். '**இவ்வுபசார வழக்குப்** பற்றியே' '**வளர்த்த**' கார்த்திகை மகளிர் அறுவரும் முருகனைப் '**பயந்தவர்**' என்று நக்கீரர் பாடியதாகக் கொள்வதே இங்குப் பொருத்தமாகும்.

முருகன் சிவனது வீரியத்திலிருந்து பிறந்ததை விளக்கமாகக் கூறும் (வரி 26–55) பரிபாடல் (செ 5), 81 அடிகளை உடையது. நக்கீரர் இக்கதையையே கூற விரும்பியிருப்பின் 317 அடிகளைக்

கொண்ட திருமுருகாற்றுப்படையில் பரிபாடலைப் போலவே இந்நிகழ்ச்சியை விரித்துக் கூறியிருக்கலாம். அவர் அங்ஙனம் கூறாது,

ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ

என இரண்டே அடிகளிற் கூறியிருத்தல், முருகன் பிறப்புப் பற்றிய பரிபாடற் செய்தி அவர்க்கு உடன்பாடின்மையை உய்த்துணர வைப்பதாகும்.

'ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப' என்பது, சிவனிடமிருந்து **முதன் முறையாக** வீரியத்தையோ அல்லது தீப் பொறிகளையோ தன் கைகளிற் பெற்றுக் கொண்ட ஐவருள் ஒருவனையே உணர்த்தும். பரிபாடற் கதைப்படி சிவனிடமிருந்து வீரியத்தை முதலிற் பெற்றவன் இந்திரன். இந்திரன் ஐவருள் ஒருவனாகான். அவனிடமிருந்து முனிவர் அதனைப் பெற்றனர். அவர்கள் அதனை வேள்வித் தீயில் இட்டார்கள். இங்ஙனம் இரண்டு கைமாறிய செய்தியை நக்கீரர் குறிக்க விரும்பியிருப்பின், அதனைத் தெளிவாகக் குறித்திருக்கலாம். இவர் அங்ஙனம் குறிக்கவில்லை. கந்தபுராணச் செய்திப்படி சிவனுடைய பொறிகள் ஆறினையும் தன் தலைமீது வைத்துக் கொண்டவன் காற்றுக் கடவுளாவான். அவன் அவற்றைக் கையில் வாங்கித் தானே தன் தலைமீது வைத்திருத்தல் கூடும்! எனவே, கந்தபுராணச் செய்தியே இவ்வடிகளுக்குப் பொருத்தமென்பது தெரிகிறது என்று கூறலாம்.

பரிபாடலில் முருகனைப்பற்றி **எட்டுப் பாடல்கள்** உள்ளன. அவற்றைப் புலவர் எழுவர் பாடியுள்ளனர்; 5 ஆம் பாடலைப் பாடிய கடுவன் இளவெயினனார் போலவே, ஆசிரியர் நல்லந்துவனார் 8 ஆம் பாடலில், முருகன் சிவனுக்கும் உமையம்மைக்கும் பிறந்தவன் (வரி 127–128) என்று கூறியுள்ளார். **சிவனுடைய தீப்பொறிகளிலிருந்து முருகன் பிறந்தான் என்று கந்தபுராணம் கூறும் செய்தி முருகனைப் பற்றிய எட்டுப் பரிபாடல்களிலும் இல்லாமை** கவனிக்கத்தகும். இந்தப் பிற்செய்தி சங்க காலத் தமிழகத்தில் வழக்குப் பெற்றிருப்பின், மேலே சொல்லப்பட்ட புலவர் எழுவருள் ஒருவரேனும் இதனைக் கூறியிருப்பர் அல்லரோ? அங்ஙனம் ஒருவரும் குறிப்பிடாமையை நோக்க முருகன் சிவனுக்கும் உமைக்கும் பிறந்தவன் என்ற கதை ஒன்றே சங்க காலத் தமிழகத்தில் வழக்குப் பெற்றிருந்தது என்பதே பொருந்துவதாகும்.

அடுத்து நக்கீரர் முருகனை, 'மலைமகள் மகனே', 'கொற்றவை சிறுவ', 'பழையோள் குழவி' என்று கூறியுள்ளமை,

அப்பெருமான் சிவபெருமானுக்கு மகனாதலின் என்க. கணவனான சிவபிரான் அருளாற் பிறந்த முருகன், அச் சிவபிரான் மனைவியான உமாதேவிக்கும் மகன் என்று உபசார வழக்காய்க் கூறுதல் பொருத்தமேயாகும்.

## முருகனும் கடவுளர் பிறரும்

புறநானூற்றில் (செ. 56) இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடிய **நக்கீரர்,** அவனை நோக்கி, "நீ பகைவரை அழித்தலில் சிவனை யொப்பாய்; வலிமையில் பலராமனை யொப்பாய்; புகழில் திருமாலை யொப்பாய்; முன்னியது முடிப்பதில் முருகனை யொப்பாய். இந்நால்வரும் **ஞாலம் காக்கும் கால முன்பினை உடையவர்; தோலா நல்லிசை யுடையவர்**, என்று கூறியுள்ளார். இந்நக்கீரர் பாடலில் சிவன், பலராமன், திருமால், முருகன் ஆகிய **நால்வரையும் சமப்படுத்தியுள்ளமை தெளிவு**. திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரர், "மும்மூர்த்திகளும் தத்தம் தொழில் புரியும் தலைவராகும்படி முருகன் தோன்றினான்" (வரி 162, 172–176) என்று பாடியுள்ளார். இதனால், முருகன் மும்மூர்த்திகளினும் மேலானவன் என்பது இந் நக்கீரர் கருத்தென்பது தெரிய வருகிறது.

புறநானூற்றுப் பாடலில் (56),

ஞாலம் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வர்

என்று நால்வரையும் சமநிலையினராகவே நக்கீரர் கூறியுள்ளார். அஃதாவது ஞாலங் காக்கும் கால முன்பும் தோலா நல்லிசையும் இந்நால்வர்க்கும் **இயற்கையாகவே** அமைந்துள்ளன என்பதை இப்பாடலில் நக்கீரர் குறித்துள்ளார். ஆயினும், திருமுருகாற்றுப் படையில் நக்கீரர், 'முருகன் தோன்றிய காரணத்தால் மும்மூர்த்திகள் தங்கள் தொழில் புரியும் தலைவர்களானார்கள்', என்று கூறியுள்ளார். இங்ஙனம் முருகன் பிறந்த காரணத்தால் மும்மூர்த்திகள் தொழில் புரியும் தலைவர்களானார்கள் என்பதனால், அம் மும்மூர்த்திகளின் தலைமை **செயற்கையாய்** அமைந்தது என்பது தெரிகின்றது.

'பலரும் புகழ்கின்ற அயன், அரி, அரன் என்னும் மூவரும் தத்தமக்குரிய தொழில்களை முன்பு போல நிகழ்த்தித் தலைவராக வேண்டித் தம்முடைய சீரிய படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களைப் பண்டு போலப் பெறுமுறையினைக் குறை வேண்டிச் சேர வந்து காணும்படி முருகன் தெய்வயானையாருடன் திருவாவிநன்குடியில் இருத்தலு முரியன்',

என்பது நச்சினார்க்கினியர் உரை. இங்ஙனம் பொருள் கொள்ளினும் முருகன் மும்மூர்த்திகளிலும் மேலானவன் என்னும் பொருளே பெறப்படுதல் காணலாம்.

புறநானூற்றுப் பாடலில் அந்நால்வர்க்கும் அத்தொழில்கள் இயற்கையாய் அமைந்தன என்று கூறிய நக்கீரர் (அவரே திருமுருகாற்றுப்படை ஆசிரியராயின்) தம் கூற்றுக்கு மாறுபடத் தமது திருமுருகாற்றுப்படையில் கூறியிருப்பாரா?

சங்க காலப் புலவர், நன்மாறனைப் பாடிய நக்கீரர் போலவே கடவுளர் பலரையும் சிறப்பித்தே பாடுவர். சான்றாகக் கடுவன் இளவெயினனார் பரிபாடலில் திருமாலை யும் முருகனையும் தனித்தனிப்பாடலில் பாராட்டியுள்ளார். சங்க காலப் புலவர் பெருமக்கள் பிற்காலத்தார் போல ஒரு தெய்வத்தை உயர்த்துவதற்குப் பிற தெய்வங்களைத் தாழ்த்திப் பாடினமைக்குச் சான்றில்லை.

திருமாலையும் பலதேவனையும் '**இரு பெருந் தெய்வம்**' என்று புறநானூற்றுப் பாடலொன்று (செ. 58) காரிக் கண்ணனாரால் பாடப்பட்டது. திருமாலையும் சிவனையும் 'இரு பெருந் தெய்வம்' என்று அகநானூற்றுப் பாடல் ஒன்று (செ. 360) மதுரைக் கண்ணத்தனாராற் பாடப்பட்டது. சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ அடிகள் சிவனையும் முருகனையும் திருமாலையும் வாயாரப் பாராட்டிப் பாடியுள்ளமையே ஏற்ற சான்றாகும்.

'பரிபாடலில் (8) முருகனைக் காண மும்மூர்த்திகளும் மற்ற தேவரும் திருப்பரங்குன்றம் வந்தனர் என்பது கூறப்பட்டுள்ளதே?' எனின் அங்கு அம்மூவரும் அவரைக் குறையிரக்க வந்தனர் என்று அப்பாடல் ஆசிரியர் கூறவில்லை; 'நின்னைக் காண்பது காரணமாக வந்தனர்' என்றே கூறியுள்ளார். வள்ளித்திருமணம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றதை 19 ஆம் பாடலைக் கொண்டு அறியலாம்.

மேலும், சிவபிரான் பிள்ளையாகிய முருகனை முழு முதற் கடவுளாக்கிச் சிவபெருமானே அவனிடம் சென்று வரம் வாங்கியதாகப் பிற்காலத்தார் பாடியதுபோலச் சங்க காலப் புலவர் யாண்டும் சிவபிரானை முருகனுக்குத் தாழ்ந்தவனாகக் கூறாமையும் அறிற்பாலது.

மும்மூர்த்திகளுக்குத் தலைமை தரும் நிலையில் முருகன் பிறந்தான் என்பது, முருகன் மும்மூர்த்திகட்கும் உயர்ந்தவன் என்று பொருள்படுவதாகும். இங்ஙனம் சங்க காலப் புலவர் யாண்டும் பாடவில்லை. முருகனை முழுமுதற் கடவுளாகக் கருதும் நிலை

(கௌமார சமயம்) சங்க காலத்திற்குப் பிற்பட்டதாகும். ஆகவே, முருகனை முழுமுதற் கடவுளாகப் பாடியுள்ள திருமுருகாற்றுப் படையாசிரியரான நக்கீரர், **சங்க கால நக்கீரரின் வேறாவர்** என்று கொள்வதே பொருத்தமாகும்.

## ஆவிநன்குடி

சங்க கால வேளிருள் **ஆவி** என்பவனும், அவன் குடியினரும் ஒருவகையாளர். அவர்கள் பழநிமலை நாட்டையாண்டார்கள். **வேள் ஆவி** என்பவன் அவருள் முதல்வன். வேளாவியின் மரபில் வந்தவனே வையாவிக் கோப்பெரும் பேகன் என்பவன். இவன் 'ஆவியர்கோ' (புறம். 147) எனப்பட்டான். **ஆவிநன்குடி** என்பதற்கு (வேள்) ஆவி (க்கோவின்) நல்ல குடியிருப்பு என்பது பொருள். ஆயின், திருமுறுகாற்றுப்படை பதிப்புகளில் **ஆவினன்குடி'** என்பதே காணப்படுகிறது. ஆ (பசு), இனன் (சூரியன்) வழிப்பாட்டுப் பேறுபெற்ற குடியிருப்பு என்ற புராண வரலாற்றைத் தழுவி (ஆ – இனன் – குடி) **ஆவினன்குடி** எனப் பிற்காலத்தவர் ஏடுகளில் எழுதி இருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும். அது திருத்தம் பெறாமல் அச்சிடப்பட்டுள்ளது. **ஆவினன்குடி** என்று திருமுருகாற்றுப்படையில் கூறப்படும் இடப்பெயர் சங்க கால நூல்களில் இல்லை.

செந்தில், முருகனுக்கு உரியதாக மதுரை மருதன் இளநாகனார் புறநானூற்றில் (செ.55) பாடியுள்ளார். பரங்குன்றத்தில் முருகன் எழுந்தருளியிருப்பதாக மதுரை மருதன் இளநாகனாரும் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரும் அகநானூற்றில் (செ . 59, 149) பாடியுள்ளனர்.

**அலைவாய்** என்பது முருகனுக்குரியதெனப் பரணர் அகநானூற்றிற் (செ.266) பாடியுள்ளார். திருமுருகாற்றுப்படையிலும் 'அலைவாய்' கூறப்பட்டுள்ளது. இது, **நாமனூர் அலைவாய்** என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். இதுவே **செந்தில்** என்பது அறிஞர் கருத்து.

செந்தில், செங்கோடு, வெண் குன்றம், ஏரகம் என்பவை முருகற்குரிய இடங்கள் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. இங்கு ஏரகம் குறிப்பிடப்பட்டுள்ளது. நவிரமலையில் **காரியுண்டிக்கடவுள்** கோவில் இருந்தது என்று மலைபடுகடாம் பகர்கின்றது. அக்காலத்தில் ஆவிநன்குடியில் முருகன் கோவில் இருந்திருக்குமாயின், அச்செய்தி ஐநூற்றுவர்க்கும் மேற்பட்ட சங்க காலப் புலவருள் ஒருவராலேனும் குறிக்கப்பட்டிருக்குமன்றோ!

மேலும், 'ஆவி நன்குடி' என்னும் பெயரே சங்க காலப் பாக்களில் இடம் பெறவில்லை என்பதும் இங்குக் கவனிக்கத்தகும்.

**அயிரை** மலையைப் பாடும்போது, அம்மலை கொற்றவைக்குரிய மலையெனச் சங்க காலப் புலவராற் பாடப் பட்டுள்ளது (பதிற்றுப்பத்து 79). இவ்வாறே பரங்குன்றமும், செந்திலும் முருகனுக்குரியனவாகப் பாடப் பட்டுள்ளன. பரணர் வரலாற்றுக் குறிப்பை அமைத்தே செய்யுள் பாடும் இயல்புடையவர். அவர் பேகனைப் பாடியுள்ளார். அப்பாட்டில் ஆவிநன்குடி பற்றிய பேச்சே இல்லை. அவர் காலத்தில் செந்திலைப்போலவும் பரங்குன்றம் போலவும் **ஆவிநன்குடி** முருகன் தலமாகச் சிறப்புற்றிருக்குமாயின், அவர் கூறாதிரார் என்பது உறுதி. இவை அனைத்தையும் நோக்கி, சங்க காலத்தில் ஆவிநன்குடி முருகனுக்குரிய ஒரு தலமாய் இருந்திருத்தல் இயலாது. என்று கருதுதல் பொருத்தமாகும்.

## முடிவுரை

இவை அனைத்தையும் நடுவுநிலையிலிருந்து ஆராய்ந்தால், **திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரர் சங்க கால நக்கீரரின் வேறாவர்; காலத்தாற் பிற்பட்டவர்** என்பது தெளிவாகும்.

'திருமுருகாற்றுப்படை சங்க காலத்திற் பாடப்பட்டதாயினும், சைவ சமயத் தொடர்பு கருதிப் பதினோராம் திருமுறையிற் சேர்க்கப்பட்டது', என்று சிலர் கூறுவர். அங்ஙனமாயின், சங்க காலத்திலேயே முருகன்மீது பாடப் பட்டவை என்பது தெளிவாகத் தெரியும் எட்டுப் பரிபாடல்களும் அப்பதினோராந் திருமுறையிற் சேர்க்கப் படாமைக்குக் காரணம் யாது? திருமுருகாற்றுப்படை மட்டும் அத் திருமுறையில் சேர்க்கப்பட்டமைக்குக் காரணம் யாது?

நெடுநல்வாடையில் உள்ள சொற்கள் சிலவும் சொற்றொடர்கள் சிலவும் திருமுருகாற்றுப்படையிலும் வருவதால், இப்பாடல்களையும் சங்க கால நக்கீரரே பாடியிருக்கலாம் என்பது சிலர் கருத்து. சிலப்பதிகாரச் சொற்களும் தொடர்களும் மணிமேகலையில் வருவதை அறிஞர் நன்கு அறிவர். எனவே, அவ்விருநூல்களையும் பாடியவர் ஒருவரே என்று சொல்லக்கூடுமோ? காலத்தால் முற்பட்டவருடைய சொற்களையும் தொடர்களையும் சிறந்த கருத்துக்களையும் பிற்காலப் புலவர் தம் பாக்களிற்கையாளுதல் இயல்பென்பதை அறிஞர் அறிவர். இவை அனைத்தையும் நோக்கத் **திருமுருகாற்றுப்படை சங்க கால நக்கீரராற் பாடப்பட்டதன்று** என்று கொள்வதே பொருத்தமாகும்.

திருமுருகாற்றுப்படையின் நடை சங்கச் செய்யுள்களின் நடையை ஏறத்தாழ ஒத்துள்ளது; சங்க காலக் குறிஞ்சி நில மக்களது முருக வழிபாட்டை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது; கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய திருமுறைப் பாடல்களிற் குறிப்பிடப்பட்ட 'திரு' என்னும் அடைமொழியைத் திருமுருகாற்றுப் படையில் கூறப்பட்டுள்ள தலங்கள் பெறவில்லை.

முருக வணக்கம் சங்க காலத்திற் சிறப்புற்றிருந்தது. பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கி.பி.6 ஆம் நூற்றாண்டு முதல் உண்டான நூற்றாண்டுகளில் சிவ வணக்கமே சிறப்புறலாயிற்று என்பதற்குப் பன்னிரு திருமுறைகளே ஏற்ற சான்றாகும். இவை அனைத்தையும் நோக்க, **திருமுருகாற்றுப்படை சங்ககாலத்திற்குப் பின்பும்** *(கி.பி. 300க்குப் பின்பு)* **அப்பர் சம்பந்தர்க்கு முன்பும்** *(கி.பி. 600க்கு முன்பு)* **பாடப்பட்டிருக்கலாம்** என்று கூறுதல் பொருத்தமாகும்.[16]

சங்ககால நூல்களுள் தொல்காப்பியத்திலும் மணிமேகலையிலும் கடவுள் வாழ்த்து இல்லை. சிலப்பதிகாரத்தில் திங்கள், ஞாயிறு, மழை என்னும் மூன்றையும் போற்றும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருக்குறளில் கடவுள் வாழ்த்து இடம் பெற்றுள்ளது. அஃது இடைச் செருகல் என்று கூறுவாரும் உளர். தொகை நூல்கள் பின் தொகுக்கப்பட்டவையாதலின் கடவுள் வாழ்த்துச் சேர்க்கப்பட்டது. பின்னர்த் தோன்றிய நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடுதல் புலவர் மரபாயிற்று.

பத்துப்பாட்டுள் 9 பாடல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில், பின்தோன்றிய திருமுருகாற்றுப்படையை அது கடவுள் பற்றிய பாடலாதலாலும் அதன் நடை சங்க கால நடையை ஒத்திருத்தலாலும், முன்வைத்துப் 'பத்துப்பாட்டு' என நூலுக்குப் பெயரிடப்பட்டது, எனக் கோடல் பொருத்தமாகும்.

## குறிப்புகள்

1. எஸ். வையாபுரிப் பிள்ளை, இலக்கிய தீபம், பக். 29.
2. கலைக்களஞ்சியம், தொகுதி 2, பக். 141.
3. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் இளம்பூரணர் உரையை ஏடுகளிற் கண்டு, இளம்பூரணர் 'பத்துப் பாட்டு' என்று கூறவில்லை என்று குறித்துள்ளார்கள். ஆயின் அச்சிடப் பட்ட நூல்களில் செய்யுளியல் நூற்பா 150 இன் உரையில் 'பத்துப் பாட்டு' என்பது காணப்படுகிறது. இவருக்குப் பின்வந்த பேராசிரியர் 'பாட்டு' என்றே பல இடங்களில் குறித்துள்ளார். தமக்கு முற்பட்ட இளம்பூரணர் 'பத்துப் பாட்டு' என்று குறித்திருப்பாராயின், பின்வந்த பேராசிரியர் அதனையே குறித்திருத்தல் இயற்கையன்றே? எனவே, இளம்பூரணர் 'பத்துப் பாட்டு' என்று குறிக்கவில்லை என்பதே உண்மையாகும்.

4. கலைக்களஞ்சியம், தொகுதி 7, பக். 631.
5. மேலது. தொகுதி 8, பக். 106.
6. இலக்கிய தீபம், பக். 40; பத்துப் பாட்டிற்கு இலக்கணம் கூறும் பன்னிரு பாட்டியல் கி. பி. 14- ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட தென்னலாம்.
7. S. Vaiyapuri pillai, History of Tamil Language and Literature, pp. 33-34.
8. கொண்கானங்கிழானாகிய நன்னன் பெண் கொலை புரிந்தவனாதலின் அவனையும் அவன் மரபினரையும் புலவர் பாடாதொழிந்தனர். (புறம் 151) ஆதலின், இந்த நன்னன் அந்த நன்னன் மரபினரினும் வேறானவன் எனக்கொள்வது, பொருத்தமாகும். இவன் செங்கண்மா (செங்கம்) நகரை ஆண்டவன் என்னலாம்.
9. புறநானூறு 143, 144.
10. எஸ் வையாபுரிப் பிள்ளை, இலக்கிய தீபம் பக். 8-9.
11. S.V. Pillai, History of Tamil Language and Literature p. 37.
12. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் இப் பாண்டியன் காலம் ஏறத்தாழக் கி.பி. 250 என்று குறித்துள்ளனர். Vide his History of Tamil Language and Literature, pp. 35-36. பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியர் அவர்கள் இவன் காலம் கி.பி. 210ஐச் சுற்றியிருக்கலாம் என்று வரைந்துள்ளார்கள் - History of S. India, P. 121.
12a. Ibid 55.
12b. Tamil Lexicon Vol. I, p. 338.
12c. இந்நூற்பாவின் இடையில் தொல்காப்பியர் ஆற்றுப்படைபற்றிக் கூறிய (கூத்தரும் பாணரும்... தெரிந்த என வரும்) அடிகள் அங்ஙனமே தரப்பட்டுள்ளன. இருபது அடிகளுக்குப் பின்னர்ப் புலவராற்றுப் படைக்குரிய (மேலே காட்டப்பட்ட) இரண்டு அடிகள் தரப்பட்டுள்ளன. இங்ஙனம் வேறு பிரித்துக் கூறலே புலவராற்றுப்படை தொல்காப்பியர்க்குப் பிற்பட்டது என்பதை நன்கு உணர்த்துவதாகும்.
13. பத்துப்பாட்டு, மூன்றாம் பதிப்பின் முன்னுரை, பக். 12.
14. History of Tamil Language and Literature, S. Viayapuri Pillai, P. 34.
15. இலக்கிய தீபம், எஸ். வையாபுரிப் பிள்ளை, பக். 32–39.
16. The Poem on all sides is admitted to be anterior to Tevaram and other Saivite Works. –Professor T.P. Minakshisundaram's 61st Birth day Commemoration Volume, P.70.

# 5. சிலப்பதிகார காலம்

## சோழன் கரிகாலன்

கோவலன் - கண்ணகி திருமணத்தின் இறுதியில் "இமயத்தில் புலிப்பொறி பொறித்த சோழன் தன் திகிரியை உருட்டுவோனாகுக", என்று சொல்லித் திருமணத்திற்கு வந்திருந்தோர் வாழ்த்தினர் என்னும் பகுதியில், அடியார்க்குநல்லார், அச்சோழனைக் **கரிகாலன்** என்று குறித்துள்ளார். கரிகாலனது வடநாட்டு வெற்றி, இந்திர விழவூர் எடுத்த காதையில் (வரி 87–104) விரிவாய்க் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்துக் கானல் வரியில், சோழன் கங்கை வரையில் சென்று மீண்டமை குறிப்பாய் உணர்த்தப்பட்டுள்ளது. "கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி" — இங்ஙனம் கங்கை வரையில் சென்று மீண்ட சங்ககால சோழன் **கரிகாலன் ஒருவனே** ஆவான். இவை அனைத்தையும் நோக்க, **கோவலன் — கண்ணகி திருமணம் நடைபெற்றபோது கரிகாலனே சோழப் பேரரசனாய் இருந்தான்** என்பது தெளிவாகிறது.

சோழ வேந்தன் ஒருவன் முதல் கயவாகு வேந்தனுக்கு முற்பட இருந்த வங்க நாஸிக திஸ்ஸன் (கி.பி. 111–114) காலத்தில் இலங்கைமீது படையெடுத்துப் பன்னீராயிரம் சிங்களவரைச் சிறை செய்து சோழ நாட்டுக்குக் கொண்டு சென்றான்; அவர்களைக் கொண்டு காவிரிக்குக் கரை இடுவித்தான் என்று இலங்கை வரலாறு கூறுகிறது.[1] இங்ஙனம் செய்தவன் கரிகாலனே என்பது 'புறநானூற்றின் காலம்' என்னும் பகுதியில் முன்பே கூறப்பட்டதன்றோ? எனவே, சிலப்பதிகார வரலாற்றுத் தொடக்கத்தில் கரிகாலன் வாழ்ந்திருந்தான் என்று கொள்வது பொருத்தமாகும்.

## இலங்கைக் கயவாகு

சேரன் செங்குட்டுவன் பத்தினிக்குக் கோவில் கட்டி வழிபட்டபோது வந்திருந்த அரசருள், "கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' ஒருவன் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது

(காதை 30, வரி 160). இவன் முதலாம் கஜபாகு என்று இலங்கை வரலாறு கூறும். இவன் ஆட்சிக் காலம் கி.பி. 114–136. இக்கயவாகு இலங்கையில் பத்தினி வணக்கத்தை ஏற்படுத்தினான் என்று இலங்கைக் கதைகளும் நாட்டுப்பாடல்களும் கூறுகின்றன. இன்றும் பத்தினி வணக்கம் இலங்கை மக்கள் சமயத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது.[2]

"கயவாகு வேந்தன் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது யாழ்ப்பாண வழியே சென்றனன்; போரின் பின் திரும்பும்போது போர் வீரரைச் சிறைப் பிடித்து வந்தான்; அவர்களுடன் **பத்தினிக் கடவுளின் காற்சிலம்பும்** வேறு சில அணிகளும் கொண்டு வந்தான் என்று 'இராச வழி' என்னும் சிங்களக் காவியம் கூறுகிறது. கயவாகு வேந்தனே இலங்கையில் பத்தினி வணக்கத்தைத் தோற்றுவித்தவன் என்று கூறும் சிலப்பதிகாரச் செய்தி இதனால் உறுதி பெறல் காணத்தகும். இலங்கையில் உள்ள கண்ணகியம்மன் கோவில்களில் சிலம்பைத் தவிர வேறு உருவங்கள் வழிபாட்டிற்காக அமையவில்லை.

"தமிழகத்தில் கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்த வைபவத்தில் பிரசன்னமாயிருந்து திரும்பியதும் **முதன் முதலாக அங்கணாக் கடவில் கண்ணகிக்கு ஆலயமும் விழாவும் எடுப்பித்துத் தனது உருவச் சிலையை ஆலய முற்றத்தில் நிறுவினன்**" என்று 'புராதன யாழ்ப்பாணம்' என்னும் நூலில் முதலியார் சி. இராசநாயகம் அவர்கள் கூறிப் போந்தனர்.

"இங்குக் குறிப்பிட்ட **கயவாகுவின் உருவச்சிலை** யாழ்ப்பாணத்தில் சர் போல் ஈபீறிஸ் அவர்கள் நடத்திய புதை பொருள் ஆராய்ச்சியில் தலை வேறாகவும் உடல் வேறாகவும் உடைந்து காணப்பட்டமையின், யாழ்ப்பாணம் அரும்பொருட்சாலைக்கு அனுப்பப்பட்டது. **கயவாகு மன்னன் நாடெங்கும் பத்தினிக்குக் கோயிலும் விழாவும் செய்தல் வேண்டுமெனக் கட்டளையிட்டதையிட்டு,** யாழ்ப்பாணத்திலும் ஆலயங்கள் எழுந்தனவென்றும் வேலம்பரவையிலுள்ள கண்ணகிக் கோயில் அக்காலத்தில் முதலில் அமைக்கப்பட்டதென்றும் அதற்குப் பின்பு கட்டப்பட்டவைகளே களையோடை, அங்கணாக்கடவு முதலிய இடங்களில் உள்ளவை என்றும் 'யாழ்ப்பாண சரித்திரம்' என்னும் நூலில் **ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை** கூறியுள்ளார்".[3]

## நூற்றுவர் கன்னர்

செங்குட்டுவன் வட நாடு சென்றபொழுது **நூற்றுவர் கன்னர்** என்னும் பெயர் கொண்ட மன்னனும் அவன் படைகளும் கங்கையாற்றைக் கடக்க உதவி புரிந்தனர் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. **சாதகர்ணி** என்னும் வடமொழிப் பெயரின் மொழிபெயர்ப்பே **நூற்றுவர் கன்னர்** என்பது. **சாதகர்ணிகள்** என்று அழைக்கப்பட்டவர் '**சாதவாகனர்**' என்ற ஆந்திரப் பேரரசரேயாவர். அவர்கள் ஏறத்தாழக் கி.மு. 235 முதல் கி.பி.220 வரையில் நடு இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்டவராவர்.[4] அவருட் சிலர் காலங்களில் ஆந்திரர் ஆட்சி கங்கை வரையிற் பரவியிருந்தது. அச்சிலருள் ஒருவனான **கௌதமி புத்திர சாதகர்ணி** என்ற ஆதிரப் பேரரசன் பெரும் புகழுடன் வாழ்ந்திருந்த காலம்தான் (கி.பி. 106–130) கயவாகுவின் காலத்தோடு (கி.பி.. 114–136) பொருந்துகிறது. அக்காலத்தில் கங்கைக்கு வடபால் சிறுசிறு நாடுகள் அரசர் பலரால் ஆளப்பட்டு வந்தன என்பதும் வரலாறு கண்ட உண்மை.

## ஒரே காலத்தவர்

சிலப்பதிகார ஆசிரியரான **இளங்கோவடிகள் செங்குட்டுவனுக்குத்** தம்பியாவார் என்று சிலப்பதிகாரம் வரந்தருகாதை (வரி 117–183) தெளிவாகத் தெரிவிக்கின்றது. செங்குட்டுவன், இளங்கோ ஆகிய இருவர் காலத்திலும் **மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்** வாழ்ந்தனர் என்று சிலப்பதிகாரமே (காட்சிக் காதை) செப்புகின்றது. மேலும்,

> உரைசால் அடிகள் அருள மதுரைக்
> கூல வாணிகன் சாத்தான் கேட்டனன்

என்று சிலப்பதிகாரப் பதிகமும்,

> இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
> வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
> மாவண் தமிழ்த்திற மணிமே கலைதுறவு
> ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்

என்று மணிமேகலை பதிகமும் **அவ்விருவரும் ஒரே காலத்தவர்** என்பதை உறுதிப்படுத்துகின்றன. எனவே. கயவாகுவின் காலம் என்று துணியப்பட்ட **கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியே சிலப்பதிகாரம் செய்யப்பட்ட காலம்** என்று கொள்வது பொருத்தமாகும்.

## பேராசிரியர் கூறும் தடைகள்

சிலப்பதிகாரம் கி.பி. 500க்குப் பிற்பட்டதாகும் என்று கூறிய **பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை** அவர்கள் கீழ்வரும் காரணங்களைக் கூறியுள்ளார்:

1. இளங்கோவடிகள் செங்குட்டுவன் தம்பி என்று கூறப்படுகிறது. அதற்கு மணிமேகலையிலோ பதிற்றுப்பத்திலோ சான்றில்லை.

2. பத்தினி விழாவின்போது இலங்கைக் கயவாகு வேந்தன் சேர நாடு வந்திருந்தான் என்பதற்குச் சிலப்பதிகாரம் தவிர மணிமேகலை முதலிய வேறு நூல்களில் சான்றில்லை; இலங்கை வரலாறு கூறும் மகாவம்சத்திலும் கூறப்படவில்லை; கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற 'இராச வழி' என்னும் நூலில்தான் கூறப்பட்டுள்ளது.

3. இளங்கோவடிகள் செங்குட்டுவன் தம்பியாயிருப்பின் அவர் காலம் சங்க காலமாகும். அவர் பாடிய பாடல் ஒன்றேனும் தொகை நூல்களில் இல்லை. அவர் மணிமேகலை பாடிய சாத்தனார் தவிர வேறு சங்கப் புலவர்களை அறிந்தவர் என்பதற்குச் சான்றில்லை.

4. மணிமேகலை ஆசிரியரான சாத்தனார் சீத்தலைச் சாத்தனாரல்லர். அவர் அரசு கட்டில் துஞ்சிய நெடுஞ்செழியன் காலத்தவர். இந் நெடுஞ்செழியன்மீது ஒரு சங்கப் புலவரும் பாடவில்லை. எனவே, இந் நெடுஞ்செழியனை உண்மை அரசன் என்று கொள்வதற்கில்லை.

5. பத்தினி வணக்கம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதே தவிரப் பிற தொகை நூல்களில் கூறப்படவில்லை.

6. கண்ணகியால் குறிக்கப்பட்ட கற்புடை மகளிருள் ஒருத்தி கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பதற்குச் சான்றில்லை. ஏனைய பத்தினிப்பெண்களும் பிற தொகை நூல்களில் குறிக்கப்படவில்லை.

7. சிலப்பதிகாரத்தில் வேங்கடமலையில் திருமால் நின்ற கோலத்தில் இருப்பதாகச் சிலப்பதிகாரம் செப்புகிறது. ஆயின், தொகை நூல்களில் வேங்கடமலை சமயத்துறையில் சிறந்ததாகக் கூறப்படவில்லை. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கூறப்பட்டுள்ள சமய வளர்ச்சியைத் தொகை நூல்களில் காணுமாறு இல்லை. ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் தொகை நூல்களில் கூறப்படவில்லை.

8. 'காவிரி' என்னும் பெயரே 'காவேரி' என்று சிலப்பதிகாரத்தில் மாறி வழங்கப்பட்டமையே சிலப்பதிகாரம் பிற்பட்டது என்பதை உணர்த்துகிறது. காவிரி பற்றிய புராண கதையும் மணிமேகலையில் காணப்படுகிறது.

9. அகநானூற்றில் காணப்படும் திருமண முறைக்கும் கோவலன்-கண்ணகி திருமண முறைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

10. தொகை நூல்களில் கூத்தர், விறலியர் நடனங்களே கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் வந்துள்ள மாதவியின் நடன அரங்கேற்றம் பரத நாட்டியத்தைப் பின்பற்றியது.

11. வரிப்பாட்டு முதலிய பாடல்கள், சிலப்பதிகாரம் தொகை நூல்களுக்குப் பிற்பட்ட வளர்ச்சியை உணர்த்துவனவாகும்.

12. பார்ப்பனி கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை பஞ்ச தந்திரத்தைச் சேர்ந்தது. அதனைக் கூறும் சிலப்பதிகாரம் மிகவும் பிற்பட்டதாகும்.[5]

## தடைக்குரிய விடைகள்

இனி இத் தடைகள் பொருந்துவனவா என்பதை ஒவ்வொன்றாக எடுத்து இங்கு ஆராய்வோம்:

1. இளங்கோவடிகள் செங்குட்டுவனுக்கு இளவல் என்பதை, இளங்கோ துறவு பூண்ட வரலாற்றை எடுத்துக் கூறித் தெய்வம் விளக்கியதாக இளங்கோவடிகளே மிகத் தெளிவாக வரந்தரு காதையில் பன்னிரண்டு வரிகளில் (171-183) கூறியுள்ளார். இந்நிலையில் மணிமேகலையின் சான்றோ பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தின் சான்றோ இதற்குத் தேவையில்லையே! மணிமேகலையிலோ ஐந்தாம் பத்திலோ இந்த உறவு முறையைக் கூறத்தக்க வாய்ப்பும் இல்லையே!

2. செங்குட்டுவன் இயற்றிய பத்தினி விழாவை முதன்முதல் எடுத்துக் கூறிய இளங்கோவடிகள் அதற்கு வந்திருந்த மாளுவ வேந்தரையும் கயவாகுவையும் குறிப்பிட்டார். இம்மாதிரியே மணிமேகலையிலும் குறிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தல் உண்டா? அங்ஙனம் குறிக்கப்படாமையால் இஃது ஏற்றுக்கொள்ளத் தக்கது அன்று என்று கூறுவது பொருத்தமாகுமா? இலங்கை வரலாற்று நூல்களுள் காலத்தால் முற்பட்ட மகாவம்சத்தில் கயவாகு பத்தினி விழாவிற்கு வந்திருந்தது குறிக்கப்படவில்லை என்பது உண்மையே. ஆயின், பின் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட

இராச வழியில் அச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது. கயவாகு வந்தமை சிலப்பதிகாரத்தில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

"அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்துறுத்து, 'ஆங்கு அரந்தை கெடுத்து வரந்தரும் இவள்' என **ஆடித்திங்கள்** அகவயின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று", என்று இளங்கோவடிகள் உரைபெறு கட்டுரையில் உரைத்துள்ளார்.

கயவாகுவின் தலைநகர் **அநுராதபுரம்**. அவன் அதனில் ஆடி மாதத்தில் (சூலை - ஆகஸ்டு) பத்தினி விழாக் கொண்டாடியிருத்தல் வேண்டும்.[6]

இலங்கையில் கயவாகு வேந்தன் கட்டிய கண்ணகி கோவிலிலிருந்து அவனது உடைந்த சிலை கண்டெடுக்கப்பட்டது. கண்ணகியின் சிலை இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்டு இங்கிலாந்து பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் கண்ணகிக்குக் கோவிலோ விழாக்களோ இன்று இல்லை. ஆயின், இலங்கைத் தமிழரும் சிங்களவரும் ஆண்டுதோறும் பத்தினிக்கு இன்றும் விழா எடுக்கின்றனர். இச்செய்திகள் அனைத்தும் கயவாகுவுக்கும் பத்தினி வணக்கத்திற்குமுள்ள தொடர்பை ஐயமற விளக்குகின்றன அல்லவா?

3. இளங்கோவின் தனிப்பாடல் எதுவும் தொகை நூல்களில் இல்லை என்பது உண்மையே. இதனால் அவர் சங்ககாலத்திற்குப் பிற்பட்டவர் என்பது எங்ஙனம் பொருந்தும்? காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் முல்லைப்பாட்டைப் பாடியவர். அவர் எட்டுத் தொகை நூல்களில் ஒரு பாடலையேனும் பாடினார் என்பதற்குச் சான்றில்லை. இது கொண்டு அவர் காலம் பிற்பட்டதென்று கூறலாமா? அடிகள் சேர நாட்டுச் சமணத் துறவியார், அவருடன் நெருங்கிப் பழகியவர் சாத்தனார் ஒருவரே போலும்! அதனாற்றான் சாத்தனார் முன்னிலையில் சிலப்பதிகாரம் அரங்கேற்றப் பெற்றது; அடிகள் முன்னிலையில் மணிமேகலை அரங்கேற்றப் பெற்றது.

4. மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் நெடுஞ்செழியன் காலத்தவர் என்பது உண்மையே. அவர் பாடிய பாடல் எதுவும் தொகை நூல்களில் இல்லை. எனினும், அது கொண்டு அவர் காலத்தால் பிற்பட்டவர் என்பது எங்ஙனம் பொருந்தும்?

சாத்தனார் காலத்தவன் நெடுஞ்செழியன் என்ற பாண்டியன். அவன் பேராசிரியர் குறிப்பிட்டபடி 'அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் மட்டும் அல்லன், வட ஆரியர் படை கடந்த நெடுஞ்செழியன் என்றும் பெயர் பெற்றவன்' என்று இளங்கோவடிகளே மதுரைக் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் தெளிவாய்க் கூறியுள்ளார். இந்த ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் "உற்றுழி உதவியும்" என்று தொடங்கும் கல்வியின் மேம்பாடு பற்றிய செய்யுளொன்றைப் பாடியுள்ளான். அப்பாடல் புறநானூற்றில் (183) இடம் பெற்றுள்ளது. உண்மை இங்ஙனம் இருப்ப, இவன் கற்பனை அரசன் என்று பேராசிரியர் அவர்கள் எங்ஙனம் கூறத் துணிந்தார்களோ தெரியவில்லை.

5. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் பத்தினி வணக்கம் வேறு தொகை நூல்களில் கூறப்படவில்லை என்பது உண்மையே. சங்க நூற் பாடல்கள் முழுமையும் நமக்குக் கிடைக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அழிந்துபட்ட பாடல்களுள் பத்தினி வணக்கம் பற்றிய பாடல்கள் இடம் பெற்றிருக்கலாம். இன்றுள்ள தொகை நூல்களில் பத்தினி வணக்கம் இல்லை என்பது கொண்டு, சிலப்பதிகார காலம் பிற்பட்டது என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? சிலப்பதிகாரத்திற்குப் பின்பு செய்யப்பட்ட நூல்களிலும் இப்பத்தினி வணக்கம் குறிக்கப்படவில்லையே! அதனால் சிலப்பதிகாரம் தமிழ் நூல்கள் அனைத்திற்கும் காலத்தாற் பிற்பட்டது என்று கூறுதல் பொருந்துமா?

6. கண்ணகியால் குறிக்கப்பட்ட பத்தினிப் பெண்கள் பிற தொகை நூல்களில் இடம் பெறவில்லை என்பது உண்மையே. இன்னும் நம் நாட்டில் அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்தவர் பலர் உளர். எவரேனும் ஒருவர் அவர்களைப் பற்றிக் கூறினால் அல்லது எழுதினால் மட்டுமே அவர்களைப் பற்றி பிறர் அறிய வாய்ப்பு உண்டாகும். அவர்களை நேரில் அறியாதவர்கள் அவர்களைப் பற்றிப் பேசவோ, பாடவோ வாய்ப்பு உண்டாவதில்லை. இங்ஙனமே கண்ணகியால் அறியப்பட்ட பத்தினிப் பெண்டிர் பிறர்க்குத் தெரியாதிருக்கலாம். அவள் குறித்த அறுவருள் ஆதிமந்தி பற்றிய செய்தி பரணராலும் வெள்ளி வீதியாராலும் (அகம் 45) பல பாடல்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதிமந்தி பரணர் ஒருவராலேயே பல செய்யுட்களில் (அகம்-76, 222, 236, 376, 396) பேசப்பட்டுள்ளாள். கரிகாலன் முன்னிலையில் கழாஅர்த்துறையில் நடனமாடியபோது அவள் கணவன் ஆற்று நீரால் இழுத்துச் செல்லப்பெற்றான் என்று பரணர் குறித்துள்ளார். அந்த ஆதிமந்தி

வரலாற்றையே அவளது பெயர் கூறாமல் செயலைமட்டும் கூறி அவள் கரிகாலன் மகள் என்று இளங்கோவடிகள் வஞ்சினமாலையில் (வரி 11- 15) கூறியுள்ளார்.

புலவர் சிலர் கூறாதுவிட்ட உறவு முறையை அவர் காலத்துப் புலவரோ பிற்காலப் புலவரோ குறிப்பது தவறன்றோ! மேலும் கரிகாலனை அடுத்து வாழ்ந்தவர் இளங்கோ அடிகள். அவர் சேர அரச மரபினர். அவரே, 'சேர அரச மகன் (வஞ்சிக்கோன்) ஒருவன் மனைவியே கரிகாலன் மகள்' என்று கூறித் தொகை நூற்பாடல்களில் கூறப்பட்டுள்ள ஆதிமந்தியின் கற்பின் திறத்தைக் கூறியுள்ளார். எனவே, அவரால் குறிக்கப்பட்டது ஆதிமந்தி வரலாறு என்று கோடலே பொருத்தமுடையது.

7. சங்க காலத்தில் வேங்கடம் மாமூலனாரால், "விழவுடை விழுச்சீர் வேங்கடம்" (அகம் 61) என்று கூறப்பட்டுள்ளது. எனவே, வேங்கடமலையில் விழாக்கள் நடைபெற்று வந்தன என்பது இதனால் தெரிகின்றதன்றோ! மலைமீது விழாக்கள் நடைபெற்றன என்பது கொண்டு, அங்குக் கோவில் இருந்தது என்பதை எளிதில் அறியலாமன்றோ? உண்மை இங்ஙனமாக இருப்ப, சங்க கால வேங்கடம் சமயச் சிறப்புப் பெற்றிருக்கவில்லை என்று பிள்ளையவர்கள் கூறியிருப்பது உண்மைக்கு மாறுபட்டதாகும். மாமூலனார் அகப்பொருள் பற்றிய பாடலில் ஓர் எடுத்துக் காட்டுக்காக இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் வேங்கடத்தில் எத்தகைய கோவில் இருந்தது என்று அவர் கூறவில்லை. அதனால் வேங்கடத்தில் கோவில் இல்லை என்று முடிவு கட்டுதல் தவறு. கோவிலைப் பற்றிப் பேசவேண்டிய இடம் அதுவன்று; ஆதலின் அவர் பேசவில்லை. கோவிலைப் பற்றிக் கூற வேண்டிய இடத்தில் மாங்காட்டு மறையவன், தன் கண்ணாற் கண்டு வழிபட்ட வேங்கடத்தானது நின்ற கோலத்தைத் தான் கண்டவாறு கூறியதாக அடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பித்து மகிழ்ந்தனர் என்று கோடலே அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் சிறப்பாக இந்திர விழவு நடைபெற்றதைச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் விரிவாகக் கூறியுள்ளன. இதே இந்திர விழவு சிற்றூரிலும் அக்காலத்தில் நடைபெற்றுள்ளது என்பதை ஐங்குறு நூற்றுச் செய்யுள் ஒன்று (62) குறித்துள்ளது. ஆயின், அதுபற்றிய பிற விவரங்கள் அச்செய்யுளில் இல்லை. ஏன்? அப்பாடல், குறிப்பிட்ட ஓர் அகப்பொருள் கருத்தைக் கூறவந்ததே தவிர இந்திர விழவினை விளக்கப் பாடப்பட்டதன்று.

இவ்வாறே ஒவ்வொரு தொகை நூற்பாடலும் குறிப்பிடப்பட்ட அகப்பொருள் அல்லது புறப்பொருள் கருத்துக்காகப் பாடப்பட்டது. சிலப்பதிகாரம் கோவலன் - கண்ணகி வரலாறு கூறும் பெரிய காப்பியம். ஆதலின் தலைவன்- தலைவியர் காலச் சமயச் செய்திகளையும் பிறவற்றையும் விரிவாக எடுத்துக் கூற ஆசிரியருக்கு வாய்ப்பு மிகுதியாகக் கிடைத்துள்ளது. மணிமேகலை பௌத்த சமயத்தைப் பற்றிய காவியம் ஆதலின் அதன்கண் பௌத்த சமயச் செய்திகள் நிரம்பப் பேசப்பட்டுள்ளன. காவியப் பாத்திரங்கட்கேற்ப-நிகழ்ச்சிகட்கும் ஏற்பச் சமயச் செய்திகளோ பிறவோ காவியத்தில் விரித்துப் பேசப்படல் இயல்பு. இந்த வேறுபாட்டை உளங்கொள்ளுதல் வேண்டும். இதனாற்றான் தொகைநூற் பாடல்களில் சமயச் செய்திகள் விரிவாகப் பேசப்படவில்லை; காப்பியத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

8. 'சிலப்பதிகாரத்தில் **காவிரி-காவேரி** என்று சொல்லப்பட்டது. இதனாலும் சிலப்பதிகார காலம் பிற்பட்டது என்பது தெளிவு', என்று பிள்ளையவர்கள் கூறியுள்ளனர். சிலப்பதிகாரம் கானல் வரியில், பாட்டைப் பாடுவோர் 'காவேரி' என்று காவிரியை அழைத்ததாக இளங்கோவடி கள் குறித்துள்ளாரே தவிர, பிற எல்லா இடங்களிலும் 'காவிரி' என்றே குறித்துள்ளமை நோக்கற்பாலது. சிலப்பதி காரம் நாடகக் காப்பியம். ஆதலின், அவரவர் கையாளுகிற சொற்களை அவரவர் பேச்சில் அல்லது பாடலில் வைத்து வழங்குதல் உண்மைப் புலவர் இயல்பாகும். இளங்கோவடிகள் இம் முறையைத்தான் பின்பற்றியுள்ளார். கோவலன் யாழை வாங்கிக் 'காவேரி' என்று அழைத்துப் பாடத் தொடங்கினான் என்பதைக் கூறும் இடத்திலும் இளங்கோவடிகள்,

காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப்பாணியும்
மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்.

என்று கூறியிருத்தல் கவனிக்கத்தகும்.

முருகன் கனவிற் கூறியபடி அரசன் ஓர் ஊரின் கிணற்றிலிருந்து வேலை எடுத்துத் தன் பகைவனை வென்றான். வேல் எடுக்கப்பட்ட கிணற்றைக் கொண்ட ஊர் "வேலூர்" எனப் பெயர் பெற்றது என்று சங்க நூலான சிறுபாணாற்றுப்படையிலேயே (வரி 172-173) புராணக் கதை இடம் பெற்றுள்ளதைப் புலவர் அனைவரும் அறிவர். சமயத் தொடர்பான இத்தகைய கதைகள் சங்க காலத்திற்குப் புதியவை அல்ல என்பதைப் புறநானூற்றுப் பாடல்களாலும் (174 முதலியன)

அறியலாம். இங்ஙனமே காவிரி பற்றிய புராணக் கதையும் எனக் கோடலே ஏற்புடையது.

9. நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நகரத்துப் பழக்க வழக்கங்களுக்கும், சிற்றூர்ப் பழக்க வழக்கங்களுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நம்மிடையே புரோகித மணம் வழக்கிற்கு வந்து பல நூற்றாண்டுகள் ஆயினும், இன்றும் புரோகிதர் இன்றியே திருமணம் செய்யும் தமிழர் பலர் இத் தமிழ் நாட்டில் உண்டு. நகரத்தில் நடைபெறும் புரோகித மணமும், சிற்றூர்களில் நடைபெறும் புரோகிதன் அற்ற மணமும் இந்த நூற்றாண்டுப் புலவர் இருவரால் பாடப்படுகின்றன என்று கொள்வோம்; 21 ஆம் நூற்றாண்டில் இப்பாடல்களைக் காணும் அறிஞர் ஒருவர், 'இவ்விரண்டிற்கும் வேறுபாடு காணப்படலால் இவ்விரண்டும் வெவ்வேறு காலத்தன' என்று கூறுதல் எங்ஙனம் பொருத்தமற்றதோ, அங்ஙனமே பிள்ளையவர்கள் முடிவும் பொருத்தமற்றதாகும். மேலும், கோவலன் திருமணச் செய்திகள் சமண முறைப்படி அமைந்தவை என்பது அறிஞர் சிலர் கருத்தாகும்.

10. மேலே திருமணம் பற்றிக் கூறப்பெற்ற மறுப்பே இதற்கும் பொருத்தமாகும். 'பரத சாஸ்திரம் கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்ட காலத்தில் இப்பொழுது காணப்படும் உருவை அடைந்திருக்கலாம்' என்று அறிஞர் கூறுகின்றனர்.[8]

எனவே, கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செய்யப்பெற்ற சிலப்பதிகாரத்தில் பரத நாட்டியம் பற்றிய செய்திகள் இருத்தலில் வியப்பில்லை அன்றோ?

11. சிலப்பதிகாரம் பொதுமக்கள் காப்பியம் - நாடகக் காப்பியம். ஆதலால் அதன்கண் ஆற்றுவரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, ஊசல் வரி, அம்மானை முதலிய பலவகைப் பாடல்கள், பொது மக்கள் சொற்கள் என்பன இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியம்-செய்யுளியலையும் அதன் உரைகளையும் காண்போர் இப்பாடல்கள் செய்யுளியற் செய்திகட்கு உட்பட்டவையே என்பதை எளிதில் உணர்தல் கூடும்.

12. பார்ப்பனி கீரிப்பிள்ளையைக் கொன்றது பஞ்ச தந்திரக் கதையில் சொல்லப்பட்டுள்ளது என்பது ஒரு வாதம். 'பஞ்சதந்திர நூலைப் பற்றிய **உண்மை வரலாறு கிடைக்கவில்லை.** அதன் உருவம் காலப்போக்கில் மாறுதல் அடைந்ததா இல்லையா என்பதும் விளங்கவில்லை. அது பாரசீக அரசன் கொச்ரௌ அனோர்வர்ன்

(கி.பி. 531-579) என்பவனால் பஹ்லவி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிற நாட்டினரின் மதிப்பைப் பெறும் பெருமையை இந்நூல் அடைவதற்கு இந்நிலையில் நூறு ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டுமாதலின் இது கி.பி. 5 ஆம் நுற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். உப கதைகள் பல பௌத்த மத நூல்களில் காணப்படுகின்றன. **புத்தரின் ஜாதகக் கதைகளைக் கூறும் நூல்களில் உள்ள உப கதைகளைத் தழுவி எழுந்த கதை நூல்களில் பஞ்சதந்திரம் சிறப்பானது**[9]

பிள்ளையவர்கள் கூறும் பஞ்சதந்திரக் கதைகளே புத்த சாதகக் கதைகள் முதலிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை. எனவே, ஒவ்வொரு கதையின் காலம் இன்னது என்று எவராலும் கூறுதல் இயலாது. கீரிப்பிள்ளையின் கதை பஞ்சதந்திர நூல் உண்டாவதற்கு முன்னரே நாட்டில் வழங்கப்பட்ட கதையாய் இருக்கலாம். அது கோவலனோடு தொடர்புண்ட கதையாயிருந்து வட நாட்டுக் கதைகளில் உருமாறியும் இருக்கலாம்.

மிகத் தெளிவாகத் தெரியும் கயவாகு வேந்தன் காலத்தைக் காற்றில் பறக்கவிட்டுக் காலமே ஐயத்திற்கு இடமாகக் கூறத்தகும் பரிதாப நிலையிலுள்ள சான்றுகளைக் காட்டிச் சிலப்பதிகாரம் பிற்பட்டது எனக் கூறுதல் சிறிதும் பொருந்தாததாகும்.

## குறிப்புகள்

1. History of Ceylon, vol I, Part I, pp. 175 – 182.
2. History of Ceylon, Vol I, pp. 183 – 185.

   சிலப்பதிகார நிகழ்ச்சிகள், கி.பி. இரண்டாம் நூற்றாண்டின ஆகலாம்; ஆயின், அந்நூல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு செய்யப்பட்டதென்று கூற இயலாது என்று வரலாற்றாசிரியர் திரு. K. A. நீலகண்ட சாஸ்திரியர் கூறியுள்ளார்; ஆயின் அதற்குரிய காரணங்களைக் காட்டவில்லை.

   — A History of S. India, p. 112.
3. 'தினகரன்', 13-7-62 திரு. ம.பொ. செல்வரத்தினம் எழுதிய கட்டுரை, இலங்கையில் கண்ணகி வழிபாடு பற்றிய விவரங்களை எனக்கு உதவியவர் **வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம்** அவர்கள். அவருக்கு எனது உளமார் நன்றி உரியது.
4. R. Sathyanatha Ayyar, History of India, Vol.I, pp. 206 – 207.
5. S. Vaiyapuri Pillai, History of Tamil Language and Literature, pp. 143-152.
6. According to Silappatikaram, King Gajabahu on his return to Ceylon raised temples and altars to make daily offerings to PATTINI–DEVI and instituted the conduct of grand and gorgeous Processions along the streets of his capital city Anuradhapura in the month of Adi (July–August). The annual Perahera now conducted at Kandy is obviously a continuance of the festival procession instituted by king Gajabahu in honour of Pattini–Devi. It would be interesting to

note that the present Kandy Perahena always begins in the month of ADI (July–August) as stated in the Tamil classical poem Silappatikaram.

This common worship of Pattini–Devi by both the Sinhalese and the Tamils appears to have engendered a certain amount of religious and cultural fellow - feeling between the two communities. The classical name Pattini–Devi is largely in use among the Sinhalese and the Tamil name Kannaki or Kannaki Amman among the Tamils.

T. Sadasiva Ayyar, Vasantan Kavi-t- tirattu, Int. pp. 16-17.

7. Ceylon traditions agree that king Gajabahu returning from South India with the insignia of the goddess, dedicated temples to the goddess and thus inaugurated the cult of Pattini in Ceylon. Gajabahu has ever since become a national hero.

–M.D. Raghavan, The Pattini cult as a Socio—Religious Institution, Ethnological Survey of Ceylon, No.3, p.1.

8. கலைக்களஞ்சியம், தொகுதி 6, ப. 746.

9. கலைக்களஞ்சியம், தொகுதி 6, ப. 643.

# 6. கலித்தொகையின் காலம்

## கலித்தொகையின் புதுமைகள்

1. ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய நான்கு நூல்களும் அகவற்பாவில் அமைந்த அகப்பொருள் செய்யுட்களைக் கொண்டவை. மேலும் அவையனைத்தும் அகனைந்திணை பற்றிய செய்திகளையே கொண்டவை; தொல்காப்பியருடைய களவியலுக்கும் கற்பியலுக்கும் பெரும்பாலும் இலக்கியமாக அமைந்தவை. கலித்தொகைப் பாடல்கள் கலிப்பாவில் அமைந்தவை. இவற்றுள் சில 80 அடி நீளமும் உடையவை; தொல்காப்பியர் **பொருளியலில்** கூறியுள்ள விதிகட்கு இலக்கியமாக அமைந்தவை; அதனால் கைக்கிளை, பெருந்திணை பற்றிய பாடல்களும் மடலேறுதல் பற்றிய பாடல்களும் இழிந்தோர் காதல் பற்றிய பாடல்களும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

2. நற்றிணை முதலிய அகநூல்களில் தலைவியின் முகம், கூந்தல், உடல்வளம், அவளது நலம் முதலியவற்றிற்குத் தமிழ் நாட்டுப் பகுதிகள், நகரங்கள் முதலியனவே உவமைகளாய் வந்துள்ளன. கலித்தொகையில் வந்துள்ள உவமைகளுள் பெரும்பாலன, நற்றிணைமுதலிய நூல்களில் காணப் பெறாத இதிகாச புராணக் கதைகளாகவே அமைந்துள்ளன.

3. நற்றிணை முதலிய பாடல்களின் நடை மிடுக்குடையது; கலித்தொகைப் பாடல்களின் நடைமிடுக்குத் தளர்ந்தது.

4. நற்றிணை முதலிய நூற்பாக்களில் பேரரசர், சிற்றரசர் நாடுகளும் நகரங்களும் மலைகளும் ஆறுகளும் இடம் பெற்றுள்ளன. ஆயின், கலித்தொகைப் பாக்களிற் பாண்டியன் (57), கூடல் (66, 91, 92), வையை (97). பொதியில் (57) மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டியர்களோ அவர்தம் ஊர்களோ பிறவோ குறிக்கப்படவில்லை. இது கவனிக்கத்தகும் செய்தியாகும்.

5. ஒவ்வொரு கலியிலும் ஒரே துறை அமைந்த பல பாடல்கள் சுவையற்ற நிலையில் பாடப்பட்டுள்ள. சான்றாகத் தலைவன் மடலூர்தல் பற்றி நான்கு பாடல்களும் (138-141), காமவெறி கொண்ட தலைவி பிதற்றல் பற்றிய ஆறு பாடல்களும் (143-148) வந்துள்ளன.

6. சில செய்யுட்கள் தோழி-தலைவி உரையாடல் (60), தலைவி-தலைவன் உரையாடல் (64) முறையில் அமைந்துள்ளன.

7. பிற அக நூல்களில் காணப்பெறாத 'நின்றீத்தை' (93), 'போசீத்தை' (93), 'பாடித்தை' (130), இஃதொத்தன் (84) போன்ற சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

8. நற்றிணை முதலிய நூல்களில் காமக்கிழத்தி பேசுவதாகச் செய்யுட்கள் இடம் பெறவில்லை. ஆயின், இந்நூலில் சில செய்யுட்கள் (69, 72, 73) இடம் பெற்றுள்ளன.

9. கலிப்பாக்களில் வரும் பெரும்பாலரான தலைவர் தலைவியர் வினைவல பாங்கர். ஆதலால் தலைவி, தலைவனை 'ஏடா' என்றும், தலைவன் தலைவியை 'ஏடி' என்றும் அழைப்பதைக் காண்கிறோம் (87, 80).

10. மருதக்கலியில் வந்துள்ன கூனி-குறளன் காதல் உரையாடல் (94) நற்றிணை முதலிய நூல்களில் காணுமாறு இல்லை.

11. வியாழனும் வெள்ளியும் வட மொழியில் அற நூல்கள் எழுதியுள்ளனர். 'அந்நூல்களின்படி நாடாண்டவனே' என்று தலைவன் ஒரு செய்யுளில் (99) அழைக்கப் படுகிறான். இத்தகைய செய்தி வேறு தொகை நூல்களில் இல்லை என்பது கவனிக்கத்தகும்.

## புராணக் கதைகள்

சிவபெருமான் முப்புரம் எரித்தது (1, 150), துரியோதனன் பாண்டவரை அரக்கு மாளிகையில் கொல்ல முயன்றமை (25), முருகன்-சூரபதுமன் போர் (27), இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தது (38), வீமன் துரியோதனனைத் துடையில் அடித்தது (52), கண்ணன் கம்சனால் ஏவப்பட்ட மல்லரை அழித்தது (52, 134), வீமன் துச்சாதனன் நெஞ்சைப் பிளந்தது (101), சிவன் எமனை உதைத்தமை (101), அசுவத்தாமன் தன் தந்தையைக் கொன்ற சிகண்டியைக் கொன்றமை (101), கண்ணன் கம்சனால் ஏவப்பட்ட குதிரை உருவத்தில் வந்த அசுரனைக் கொன்றமை (103), கண்ணன் ஆழியால் மறைத்த சூரியனை மீட்டமை (104), கண்ணன் றுக்கு மகன் (108), ஊர்வசி, திலோத்தமை பற்றிய செய்தி யயாதி அரசன் கதை (139), சிவன் தன் சடையில் கங்கையை

மறைத்தமை (150). இவற்றுள் சிவன் முப்புரம் எரித்தமையும், முருகன் சூரபதுமனை அழித்தமையும் பிற நூல்களில் இடம் பெற்றுள்ளன. **ஏனையவை முதன் முதலாக இந்நூலில்தான் கூறப் பட்டு உள்ளன** என்பது கவனிக்கத்தாகும். இவை அனைத்தும் இந்நூலிற்கே உரிய புதுமைகளாகும்.

## கலித்தொகை ஆசிரியர்

கலித்தொகை என்பது கடவுள் வாழ்த்து உட்பட 150 கலிப்பாக்களைக் கொண்டதாகும். இவை பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஒழுக்க வகையில் அமைந்துள்ளன; பாலைத்திணை பற்றி 35 செய்யுட்களும், குறிஞ்சித் திணை பற்றி 29 செய்யுட்களும், மருதத்திணை பற்றி 35 பாக்களும், முல்லைத்திணை பற்றி 17 பாடல்களும், நெய்தல்திணை பற்றி 37 பாடல்களும் இதன்கண் அமைந்துள்ளன.

ஏறத்தாழக் கி.பி. 14ஆம் நூற்றாண்டினர் எனக் கருதத்தகும் நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர் இந்நூலுக்கு அழகிய உரை எழுதியுள்ளார். அவர் கடவுள் வாழ்த்துப் பகுதியில், “ஆதலால் ஈண்டுப் பாலைத்திணையையும் திணையாக **ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தார்** என்று கூறுக,” என்றும், நூலின் இறுதியில், “முல்லை, குறிஞ்சி, மருதம் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே என்புழிச் சொல்லாத முறையால் சொல்லவும் படும் என்றலின் இத்தொகையைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்”, என்றும் கூறியுள்ளார். அவரே நெய்தற்கலி 25 ஆம் செய்யுள் உரையில், “சொல்லெச்சமும் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுள் செய்தார்”, என்பதையும் குறித்துள்ளார்.

இக்கூற்றுக்களை நோக்க, நல்லந்துவனார் நெய்தற்கலியை மட்டும் பாடினவர் என்பதும், அத்துடன் தம் காலத்தில் இருந்த பிற கலிப்பாக்களையே **கோத்து முறைப்படுத்தியவர்** என்பதும் நச்சினார்க்கினியர் கருத்தாதல் தெளிவாகும். ஆயின், நச்சினார்க்கினியர் தமது உரையில் பிற கலிகளை இயற்றிய ஆசிரியர் பெயர்களைச் சுட்டவில்லை. இதனால் அவர் காலத்திலேயே பிற கலிகளைப் பாடிய ஆசிரியர்களைப் பற்றி ஒன்றும் தெரிய வில்லை என்பது தெளிவாகும்.

கலித்தொகையை முதலில் வெளியிட்ட திரு.சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இந்நூல் இயற்றியோர் ஒருவரே எனக் கருதினர். அதன்பின்,

பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்-அருஞ்சோழன்
நல்லுருத்தி ரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

என்னும் வெண்பா வெளிப்பட்டது. அது முதல், ஐந்து கலியும் புலவர் ஐவரால் பாடப்பட்டவை எனத் தமிழறிஞர் கருதலாயினர். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைப் புலவராக இருந்த திரு. K.N. சிவராசப் பிள்ளை அவர்கள் 'கலித்தொகை ஆசிரியர் ஒருவரே' என முடிவு கட்டினர்.

**ஐவர் அல்லர்: காரணங்கள்**

(1) கலித்தொகை ஆசிரியர் ஐவரே என்பதற்கு மேற்காட்டிய வெண்பாவைத் தவிர வேறு சான்று இல்லை. எனவே, அவ்வெண்பா நம்பத்தக்கதா என்பதை முதற்கண் ஆராய்தல் வேண்டும்.

1. பாலைக் கலியைப் பாடியவர் - பெருங்கடுங்கோன்
2. குறிஞ்சிக் கலியைப் பாடியவர் - கபிலர்
3. மருதக் கலியைப் பாடியவர் - மருதன் இளநாகனார்
4. முல்லைக் கலியைப் பாடியவர் - சோழன் நல்லுருத்திரன்
5. நெய்தற் கலியைப் பாடியவர் - நல்லந்துவனார்

என்பது அவ்வெண்பாவில் உள்ள செய்தி. ஏனைய தொகை நூல்களில் பாலைத்திணை பற்றிப் பல செய்யுட்களைக் கடுங்கோன் பாடியிருத்தலாலும், குறிஞ்சித்திணை பற்றிப் பல செய்யுட்களைக் கபிலர் பாடியிருத்தலாலும், முதலிரண்டு கலிகளை இவர்கள் பாடினார்கள் எனக் கொள்ளினும், ஏனைய மூன்றையும் பிற புலவர் மூவரும் பாடத் தகுதி வாய்ந்தவர் என்பதற்குரிய சான்று ஏனைத் தொகை நூல்களிற் காணக்கூடவில்லை. மருதன் இளநாகனார் பிற நூல்களில் பாடியனவாகக் காணப்படும் 39 செய்யுட்களில் பாலை பற்றி 17 ஆம் குறிஞ்சி பற்றி 9 ஆம், முல்லைபற்றி 5 ஆம் நெய்தல்பற்றி 5 ஆம் மருதம்பற்றி மூன்றுமே உள்ளன. இவர் மருதக் கலியைப் பாடினார் என்பது பொருந்துவதாக உள்ளதா? சோழன் நல்லுருத்திரன் புறநானூற்றில் ஒரு செய்யுளே (190) பாடியதாகத் தெரிகிறது. அவன் பாடிய பா ஒன்றும் வேறு தொகை நூல்களில் இல்லை. அவன் முல்லைக் கலியைப் பாடினான் என அவ்வெண்பா கூறுகிறது. நல்லந்துவனார் நெய்தற்றிணையில் ஒரு செய்யுளும் செய்திலர். அவர் நெய்தற் கலியைப் பாடியதாக வெண்பா விளம்புகிறது.[1]

2. முல்லைக் கலியில் கூறப்படும் முல்லை நில மக்கள் பாண்டிய நாட்டவராகக் காணப்படுகின்றனர். அவர்கள்

பாண்டியனை வாழ்த்துவதாகச் செய்யுள் கூறுகிறது. சோழ வேந்தன் தனது நாட்டு முல்லை நில மக்களைப் பாடாதது வியப்பே அன்றோ? சோழ அரசன் தனது நாட்டு மக்களைப் பற்றிப் பாடாமல், பாண்டிய நாட்டு முல்லை நில மக்களைப் பற்றி மட்டும் தனது முல்லைக்கலியில் பாடினான் என்னல் சற்றும் பொருந்தாது. முல்லை நிலம் பாண்டியர்க்கே உரிமையுடையதுமன்று. பாண்டியனை வாழ்த்திப் பரவும் ஒரு குறிப்பிட்ட முல்லை நிலத்தாரைப் பற்றிச் சோழ வேந்தன் நூல் பாடினான் என்பது அறிவிற்கும் அநுபவத்திற்கும் சற்றும் பொருந்தாததாகும்.

3. நெய்தற்கலியைப் பற்றி ஒரு சிறு செய்யுளும் ஏனைய தொகை நூல்களுட் பாடியிராத ஒருவர், நெய்தற்கலியைப் பாடினார் என்பது, கருக்கொள்ளாது மகப்பேறு தோன்றினாற் போலாகும் அன்றோ?

4. "கலித்தொகை முழுமையும் நன்கு ஆராயின் செய்யுட்கள் ஒரே ஆசிரியர் இயற்றியன என்பது புலனாம். இதனை ஒப்புக் கொள்ள மனமற்றவர் இவ்வெண்பாவினை வெளிக்கிளம்ப விட்டனர். இவ்வெண்பா எந்தக் கலித்தொகை ஏட்டிலும் இல்லை; வேறு நூல் ஏட்டுப் படிகளிலும் இல்லை; மாயமாய் வந்ததாகும். இதனை நன்கு யோசியாது, புலவர்கள், கலித்தொகையை ஐவர் பாடியதாகக் கொண்டுவிட்டனர்".[2] இது முற்றும் ஆதாரமற்ற இக்காலப் புலவர் எவரோ கட்டிவிட்ட வெண்பா ஆகும் என்பதே பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு. வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் முதலியோர் கருத்தாகும்.

5. திருநெல்வேலி - சுவர்ணம் பிள்ளை அவர்கள் தமக்குத் கிடைத்ததாகக் கூறிய 'ஊசிமுறி' என்னும் நூலைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. கா. நமசிவாய முதலியார் அவர்கள் பொருள் கொடுத்து வாங்கி ஆராய்ந்தார்கள்; அது போலி நூல் - பொருளுக்காக இக்காலப் புலவர் பாடிய பொய்ந்நூல் என்பதை அறிந்து கிழித்தெறிந்தார்கள். இங்ஙனம் பொருளுக்காகவும் விளையாட்டாகவும் பலர் தாமே கட்டிய பாக்களைப் 'பழம் பாடல்கள்' எனக் கூறி ஏமாற்றல் உண்டு. அத்தகையோருள் ஒருவர் செயலாக இருக்கலாம் இவ்வெண்பாவின் படைப்பு எனக் கோடலே பொருந்தும்.

கலித்தொகைப் பாக்களின் நடை, மொழி அமைப்பு, சொல் அமைப்பு, நூல் முழுமையும் புராண இதிகாசக் கதைகள் விரவிக் கிடத்தல், பிற அகப்பொருள் நூல்களில் குறிக்கப்பெற்ற சிற்றரசர் பேரரசர் பெயர்களுள் ஒன்றேனும் குறிக்கப்படாமை முதலியவை, இந்நூல் கபிலர், பரணர் முதலிய புலவர்களுக்குப் பிற்பட்ட

ஒருவரால் பிற்காலத்தில் (பெரும்பாலும் சங்க இறுதிக் காலத்தில்) பாடப்பட்ட நூலாக இருத்தல் கூடும் என்று நினைக்க இடம் தருகின்றன. இப்பாடல்களை ஐவரோ பலரோ பாடினர் என்பதை உணர்த்தும் சான்று இப்பாக்களின் நடையில் இல்லை.[3]

**கலித்தொகையின் காலம்**

1. கலித்தொகைச் செய்யுட்கள் பெரும்பாலும் பொருளியல் சூத்திரங்களுக்கு இலக்கியமாய் அமைந்தவை; கைக்கிளை, பெருந்திணைச் செய்யுட்களை உடையவை.

2. மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வவ்விக் கொளலும் அறனெனக் கண்டன்று

(குறிஞ்சிக்கலி-26)

பெண்டிரை வெளவிக் கோடல் 'இராக்கத மணம்' எனப்படும். இராக்கத மணத்தைத் தொல்காப்பியர் கூறிலர். 'பெருந்திணை-ஒவ்வாத காமம்' எனத் தொல்காப்பியர் கூறினரே அன்றி, இராக்கத மணமுறையாகிய வெளவிக் கோடலைத் தமிழ் மக்கள் கையாண்டனர் என்று கூறிலர். 'இராக்கத மணம் அறன்' எனத் தொல்காப்பியரோ சங்க நூற் புலவரோ யாண்டும் கூறிலர். ஆரியருடைய எண்வகை மணங்களுள் 'இராக்கத மணம்' ஒன்றாகும். தமிழர்க்கு இம்மணம் உண்டெனக் கூறச் சங்க இலக்கியச் சான்றில்லை. அடியோர் தலைவராக் கொள்ளினும், தமிழகத்துள் அப்படிப்பட்ட பழக்கத்துக்கு மாறாகச் சங்கத்துச் சான்றோர் செய்யுள் செய்யார். ஆகவே, 'இராக்கத மணம் அறன்' எனக் கூறும் இச் செய்யுளும் இது போன்ற கலிச் செய்யுட்களும் **கடைச் சங்கப் புலவர்க்குப் பிற்பட்ட இராக்கத மணம் அறம் எனக் கருதப்பட்ட காலத்தனவாகும்** என்பதைக் கூறவும் வேண்டுமா?

3. குறிஞ்சிக்கலிச் செய்யுள் ஒன்றில் தலைவி, "தோழி, நீ தெருவில் போவார்க்கெல்லாம் இரங்குதல் வாரணவாசியில் (காசியில்) பிறர் வருத்தம் தம் வருத்தமாகக் கருதும் அருளுடையார் செயலை ஒத்துள்ளதே," (24) எனக் கூறியுள்ளது கருதற்பாலது. ஏனைய தொகை நூல்களுள் இச்செய்தி காணப்பட்டிலது. வாரணவாசி (காசி) நகர மாந்தர் செய்தி எந்த அளவில் தமிழகத்தில் பரவி இருந்தால், அதனைத் தலைமகள் சொல்வதாகப் புலவர் பாடியிருப்பார் என்பது சிந்திக்கத் தக்கது. ஏனைய பழம்பாடல்களில் காணப் பெறாத இவ்வடநாட்டுச் செய்தி சங்க காலத்தின் இறுதியில் அல்லது பிற்பட்ட காலத்தில் தமிழகத்தாரால் அறியப்பட்டதாதல் வேண்டும்.

4. ஏனைய தொகைச் செய்யுட்களில் காணப்படாத முன்னிலைப் பன்மைச் சொல்லாகிய 'நீர்', பலர்பாற் சொல்லோடு

'கள்' விகுதி சேர்த்துக் கூறப்படுதல், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுப் 'பலர்பாலில் வரல்' போன்றவை கலித்தொகைச் செய்யுட்களில் காணப்படுகின்றன. மேலும், 'நின்றீத்தை, போசீத்தை' (மருதக்கலி 29) எனவும், 'பாடித்தை, இஃதொத்தன்' (குறிஞ்சிக்கலி 22, 24, 25), எனவும் சில சொற்கள் மாறுபட்டுச் செய்யுட்களில் இடம் பெற்றுள்ளன. இவை இத்திணைகளைப் பற்றியே பாடப் பட்ட சங்க காலப் புலவர் பழம்பாடல்களில் பயின்றில என்பதை நோக்க, இச் செய்யுட்கள் பிற்காலத்தன எனல் கூறாதே விளங்கும்.

5. குறிஞ்சிக் கலியுள் ஐந்திணை பற்றிக் கூறற்குரிய அரிய செய்திகளை, ஏனைச் சான்றோரைப் பின்பற்றிக் கூறுதலை ஒழித்து, அவரால் கனவிலும் கருதப்படாதவையும் சொல்லப்படாதவையுமான கைக்கிளை பெருந்திணைத் செய்திகளையும், இழிந்தோர் களவினையும் மருதக் கலியுள் கூனும் குறளும் உறழ்ந்து கூறலும் புணர்தலும் (29) போன்ற செய்திகளையும், "தேள் கொட்டி ஏறும் விஷம் போலக் காமம் தலைக்கேறுகிறதோ?" என்றாற் போலக் கூறப்படும் முல்லைக்கலிச் செய்திகளையும், இவை போன்ற ஏனைய கலிகளிலும் வெறுக்கத் தக்க - பண்டைப் புலவர் நெறிக்கு மாறாகக் கூறப்படும் செய்திகளையும் அச் சங்க காலப் புலவரோடு இருந்த சான்றோர் பாடியிரார் என்பது அறிவும் நடுவுநிலைமையும் உடையார் நன்கறிதல் கூடுமன்றே? இவற்றுக்கு இலக்கணம் தொல்காப்பியத்துள் காணப்படினும், இவற்றைப் பிற்காலத்துப் புலவர் பாடினர் எனக் கோடலே அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாகத் தெரிகிறது. அறிஞர் மேலும் ஆய்வாராக!

6. காமன் ஆரியக் கடவுள். அவன் 'காமனார்' எனவும், 'சாமனார்க்கு மூத்த காமனார்' எனவும் மருதக் கலியுள் (செ. 29) கூறப்பட்டாற் போலப் பிற தொகை நூல்களுட் கூறப்பட்டிலன்.

7. கலித்தொகை முழுமையிலும் எந்த அரசன் பெயரும் சுட்டப்படவில்லை. மூவேந்தருள் பாண்டியனே சுட்டப்படுகின்றான்; வையை, கூடல் இவையே சுட்டப்படுகின்றன. ஏனைய தொகை நூல்களிற் கூறப்படும் வள்ளல்களோ புலவர்களோ சுட்டப் படவில்லை. மேற்கோள் காட்டத்தகும் இடங்களில் 'வாரணவாசிப் பதம்' போன்ற வடநாட்டுச் செய்திகளும், உவமைகள் கூறப்பட்டுள்ள இடங்கள் பலவற்றில் புராண கதைகளும் தெய்வங்களுமே குறிக்கப்பட்டுள்ளன. ஏனைய அகப் பாட்டுக்களில் பெரும்பாலான செய்யுட்களில் வந்துள்ள தமிழ்ப்புவவர் பெயர்கள், வள்ளல்களின் பெயர்கள், அரசர்கள் பெயர்கள், போர்கள் முதலியவை போன்ற தமிழகச் செய்திகளுள் ஒன்றேனும் 149 செய்யுட்களைக் கொண்ட

கலித்தொகையில் 'பயின்று வராமை கொண்டே கலித்தொகைச் செய்யுட்கள் பிற அகப்பொருள் நூல்கட்குப் பின்னரே செய்யப்பட்டவை எனக் கூறலாம்.

ஏறத்தாழக் கி.பி. 300 இல் பல்லவர் காஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டனர் என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. ஏறத்தாழ அதே காலத்தில் சேர, சோழ, பாண்டிய அரசுகள் களப்பிரரால் தடுமாற்றம் கொண்டன. அதுமுதல் ஏறத்தாழக் கி.பி.575 வரையில் தமிழகத்தில் அமைதியான அரசு இல்லை. ஏறத்தாழக் கி.பி.575இல் காஞ்சியில் பல்லவர் நிலைத்து ஆளத் தொடங்கினர். அதே காலத்தில் கடுங்கோன் என்ற பாண்டியன் பாண்டிய நாட்டில் நிலைத்து ஆளத் தொடங்கினான். இவை யாவும் முன்னரே கூறப்பட்டவை.

கலித்தொகையில் பாண்டியன், அவன் தலைநகரான மதுரை, வையை ஆறு, பொதியில் மலை, அவனது நேர்மையான ஆட்சி என்பன இடம் பெற்றுள்ளன. இவற்றுடன் பாண்டியர் வளர்த்த தமிழ்ச் சங்கம் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. முன் குறிப்பிட்டது போல் சேர, சோழர் பற்றியோ புகழ் பெற்ற குறுநில மன்னரைப் பற்றியோ ஒரு சிறு குறிப்பும் இந்நூலில் இடம் பெறவில்லை. இவை அனைத்தையும் நடுவு நிலையிலிருந்து நோக்க, இக் கலித்தொகை என்னும் நூல், சங்க காலத்தின் இறுதியில் களப்பிரர் படையெடுப்புக்குச் சிறிது முற்பட்ட காலத்தில் பாண்டியன் மீதும் அவனது நாட்டின் மீதும் அளவற்ற பற்றுக் கொண்ட பாண்டிய நாட்டுப் புலவர் ஒருவரால் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்று கொள்வது மிகவும் பொருத்த மாகும். இப்புலவர், நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிட்ட ஆசிரியர் நல்லந்துவனார் ஆயின், இந்நல்லந்துவனார் பிற நூல்களிலுள்ள பாடல்களைப் பாடிய நல்லந்துவனாரினும் வேறுபட்டவர் எனக் கொள்ளலே பொருத்தமுடையது. எனவே, கலித்தொகையின் காலம் ஏறத்தாழக் கி.பி. 300 என்னலாம்.

## குறிப்புகள்

1. K.N. Sivaraja Pillai, The Chronology of the Early Tamils, p. 35.
2. K.N. Sivaraja Pillai, The Chronology of the Early Tamils, P. 225.
3. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழ் மொழி இலக்கிய வரலாறு, பக்.27, 52, 57.

   ஐவர் பாடியவராயின், அவர்தம் பெயர்கள் ஏடுகளில் இடம் பெற்றிருக்கும்; பாடியவர் பலராயினும், பிற நூற் பாடல்களில் உள்ளவாறு புலவர் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கும்.
4. இங்ஙனம் கொள்வதே மிக்க பொருத்தமாகும். இங்ஙனம் கொள்ளின், 'கலித் தொகை' என்னும் பெயர் தவறாகும்; தொகை நூல்கள் ஏழாகும்.

# 7. பரிபாடலின் காலம்

## முன்னுரை

**பரிபாடல்** என்னும் இசைப் பாக்களால் தொகுக்கப் பெற்றமையால் இப்பாக்களின் தொகுதி பரிபாடல் எனப் பெயர் பெற்றது. இப்பாக்களுக்குப் பண்கள் வகுக்கப் பெற்றுள்ளதைக் காண, இவை சங்க காலத்தில் இசையுடன் பாடப்பட்டன என்பது தெளிவு.

'இது, தொகைநிலை வகையால் பா என்று சொல்லப்படும் இலக்கணம் இன்றி, எல்லாப் பாவிற்கும் பொதுவாக நிற்றற்கு உரிதாய், இன்பப் பொருளைப் பற்றிக் கூறும். இது சிறுமை இருபத்தைந்து அடியும், பெருமை நானூறு அடியும் எல்லையாகக் கொண்டுவரும்', என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.[1]

பரிபாடற்கண் மலையும், யாறும், ஊரும் வருணிக்கப்படும் என்று இளம்பூரணர் கூறியுள்ளார்.[2] அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றில் இப்பாடல் வருமென்று பேராசிரியர் கூறியுள்ளார்.[3] தெய்வ வாழ்த்து உட்படக் காமப் பொருள் குறித்து உலகியலே பற்றி வரும் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.[4]

## பரிபாடல் நூல்

இன்றுள்ள பரிபாடல்களிற் பல திருமாலையும் முருகனையும் பற்றியவை; பத்தி நெறிபற்றியவை; தொல்காப்பியர் விதிக்கு மாறுபட்டவை. வையை பற்றிய பாடல்களும் முருகன் பற்றிய

இன்றுள்ள பரிபாடல் என்னும் நூலில் இடம் பெற்றுள்ள பாக்கள் அகம் புறம் ஆகிய இரண்டையும் பற்றியவை. எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் நூல்கள் என்பதும், ஏனைய ஐந்தும் அகப்பொருள் பற்றிய நூல்கள் என்பதும் முன்பே கூறப்பட்டன. அகப்பொருள் நூல்கள் ஐந்து திணைகளையும் பேசும்; ஆனால், பரிபாடல்கள் ஐந்து திணைகளையும் நிலைக்களனாகக் கொண்டு அகப்பொருள் செய்திகளைக் கூறவில்லை. பிற அகப்பொருள் நூல்களில் பேரரசர் சிற்றரசர் முதலியோர் பற்றிய குறிப்புக்களே இருக்கும். ஆனால், பரிபாடலில் அவற்றைப் பற்றிய குறிப்புக்களே இல்லை; கலித்தொகையில் இருத்தல்போலவே பொதுவாகப் பாண்டியர்களைப் பற்றியும் அவர்களது நாட்டைப் பற்றியுமே குறிப்புக்கள் உள்ளன. பரிபாடலிலுள்ள புறப்பொருட் பகுதியிலும் பிற அரசர்களைப் பற்றிப் பேச்சே இல்லை. திருமாலிருஞ்சோலையில் உள்ள திருமால், திருப்பரங்குன்றத்து முருகன் ஆகிய தெய்வங்கள் பற்றிய தோத்திரப் பாக்களாகவே பல அமைந்துள்ளன. வையை பற்றிய பாக்களும், அதற்குத் தெய்வத்தன்மை கூறி அதனை வழிபடும் பாடல்களாகவே அமைந்துள்ளன.

பிற தொகை நூல்களில் ஐந்திணைக் கடவுளர் ஆங்காங்குக் குறிக்கப்பட்டுள்ளனர்; ஆயின், பரிபாடலில் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனும் முல்லை நிலக் கடவுளாகிய திருமாலுமே விரிவாகப் பாடப்பெற்றுள்ளனர். இத்தகைய பாக்களை வேறு தொகை நூல்களில் காணல் இயலாது. இந் நூற்பாக்களின் நடை எளிமை வாய்ந்தது. இப்பாக்கள் வருணனை மிகுந்தவை. ஒவ்வொரு பாவிற்கும் இசை கூறப்பட்டிருப்பதால் இவை இசையோடு பாடுவதற்கு அமைந்தவை என்பது தெரிகிறது. ஆதலால் இவை மக்களுடைய பேச்சு வழக்குச் சொற்களையும் ஆங்காங்குப் பெற்றுள்ளன. இங்ஙனம் இப்பாடல்கள் 'பா' வகையிலும் செய்யுள் நடையிலும் வருணனையிலும் எண்ணத்திலும் முறை வைப்பிலும் பிறவற்றிலும் மாறுபட்டுள்ளமை அறியத்தகும்.

அழிந்தன போக இன்று இந்நூலில் இருப்பவை 22 பாடல்களாகும். (தொல்காப்பிய உரையிலும், புறத்திரட்டிலும் வேறு மூன்று பாடல்கள் கிடைத்துள.) இவற்றுள் திருமாலைப் பற்றியவை ஆறு; முருகனைப் பற்றியவை எட்டு; வையை பற்றியவை எட்டு. மதுரை, வையையாறு, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலைமலை ஆகியவை பற்றிய செய்திகளே இப்பாடல்களிற் காணப்படுகின்றன. இவற்றை நோக்க, இந் நூற்பாக்கள் பாண்டிய

நாட்டைச் சிறப்பிக்கவே பாடப்பெற்றன என்று கருத இடந்தருகின்றன.

ஆசிரியர் நல்லந்துவனார்,, இளம்பெருவழுதியார், கடுவன் இள எயினனார், கரும்பிள்ளைப்பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், நல்லழுசியார், நல்லெழுனியார், நல்வழுதியார், மையோடக்கோவனார் என்னும் பதின் மூன்று பேர் இந்நூற் பாடல்களைப் பாடியுள்ளனர். ஒவ்வொரு பாடலுக்கும் இசை வகுத்த புலவர் வேறாவர்.

இந் நூற் பாடல்களுக்குப் பரிமேலழகர் இயற்றிய உரை கிடைத்துள்ளது. இவ்வுரை பல இடங்களில் பொழிப்புரையாயும், சில இடங்களில் பதவுரையாயும், வேறு சில இடங்களில் கருத்துரையாயும் அமைந்துள்ளது; இலக்கணக் குறிப்புக்களை ஆங்காங்குப் பெற்றுள்ளது. விளங்காத பகுதிகள் சில தமிழ் நூல் மேற்கோள்களாலும் வடநூல் கருத்துக்களாலும் விளக்கப்பட்டுள்ளன.

டாக்டர் **உ.வே. சாமிநாதய்யர்** அவர்கள் இந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பித்தனர். **சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்** புதிய உரையுடன் கூடிய பதிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

### பரிபாடலின் காலம்

பரிபாடல் சங்க காலத்திற்குப் பிற்பட்டது என்று கூறும் அறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்கள் அதற்குரிய காரணங்களைக் கீழ்வருமாறு மொழிகின்றனர்:

1. பரிபாடல்களைப் பாடிய புலவருள் ஒருவரேனும் பிற தொகை நூற் பாடல்களைப் பாடியவராகத் தெரிந்திலர். சில பரிபாடல்களைப் பாடிய ஆசிரியன் நல்லந்துவனார், அந்துவனார், மதுரை ஆசிரியன் நல்ல துவனார் என்னும் புலவர்களின் வேறானவர். இங்ஙனமே பதினைந்தாம் பரிபாடலைப் பாடிய இளம்பெருவழுதியார் புறநானூற்றில் 182ஆம் செய்யுளைப் பாடிய கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதியின் வேறானவர். ஏனெனில், பின்னவர் தமது புறப்பாட்டில் 'இந்திரர்' என்று பன்மையில் சுட்டலால் சமணர் எனக் கருதற்பாலர் ஆதலின் என்க.[5]

2. பிற தொகை நூல்களில் காணப்படும் வட சொற்களையும், புராண இதிகாசக் கதைகளையும் விடப் பரிபாடல்களில் இவ்விரு வகையும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. கவிதை, ஆராதனை (பாடல் 6), மேகலை, வாகுவலயம் (பாடல் 7), புங்கவம், நாதர், குடாரி, அருச்சிப்போர், அமிர்தபானம் (பாடல் 8), மிதுனம், புன்னாகம், சண்பகம், குந்தம், மல்லிகா மாலை (பாடல் 11), யாத்திரை, பிரமம், இரதி, சோபனம் (பாடல் 19), வந்திக்க, சிந்திக்க

(பாடல் 20) முதலிய வட சொற்கள் பரிபாடல்களின் பிற்காலத்தை உணர்த்துகின்றன.[6]

3. சங்க காலத்திற்குப் பின்பே திருவேங்கடம், திருவரங்கம், திருமாலிருஞ்சோலைமலை, திருவனந்தபுரம் என்பன வைணவத் தளிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. பின் வந்த ஆழ்வார்கள் இத்தளிகளைப் பாடியுள்ளனர். சிலப்பதிகாலத்திலும் இவை குறிக்கப்பட்டுள்ளன. திருமாலிருஞ்சோலைமலை பரிபாடலில் குறிக்கப்படலால் பரிபாடலின் காலம் கி.பி. 600 என்னலாம்.[7]

4. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் திருப்பரங்குன்றத்துச் சிவபெருமானைப் பாடியுள்ளார்; ஆயின், முருகனைப் பற்றிப் பாடவில்லை. எனவே, சம்பந்தருக்குப் பின்பே முருகன் கோவில் உண்டாயிற்று என்று கூறலாம். பரிபாடலில் அம்முருகனைப் பற்றிய பாடல்கள் இருத்தலால் அப்பாடல்களின் காலம் ஏறத்தாழக் கி.பி. 700 என்னலாம்.[8]

5. கி.பி. 300க்கு முற்பட்ட தமிழிலக்கியத்தில் அகத்தியரைப் பற்றிய பேச்சே இல்லை. ஆனால் பரிபாடலில் அகத்தியர் 'பொதியில் முனிவன்' (பாடல் 11, வரி 11) என்று குறிக்கப்பட்டுள்ளார்.[9]

6. கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட அபிஷேக பாண்டியன் காலத்தில் மதுரை நான்மாடக் கூடலென்று பெயர் பெற்றது. எனவே, கூடலைப் புகழும் பரிபாடல் கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம்.[10]

7. பதினோராம் பரிபாடலில் காணப்படும் வானிலை பற்றிய குறிப்புக்களை ஆராய்ந்து திரு. சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் அப்பாடலின் காலம் கி.பி. 634 என்று கூறியுள்ளார்.[11]

8. நான் (பாடல் 20, வரி 82), ஆயும் (பாடல் 6, வரி 71) என்னும் பிற்காலச் சொல்லுருவங்கள் பரிபாடல்களில் பயின்றுள்ளன.[12]

இனி இவற்றை ஒவ்வொன்றாக இங்கு ஆராய்வோம்.

1. பரிபாடல்களுக்கு இசை வகுத்த புலவர்களுள் கண்ணகனார் ஒருவர். புறநானூற்றில் 218ஆம் செய்யுளையும் நற்றிணையில் 79ஆம் செய்யுளையும் **கண்ணகனார்** என்ற புலவர் பாடியுள்ளார். இவ்விருவரும் ஒருவரே என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் கருதுகிறார்கள்.[13] இக்கருத்தை மறுப்பதற்கு எவ்விதச் சான்றும் இல்லை.

நன்னாகனார் என்ற புலவர், புறநானூற்றில் 381ஆம் செய்யுளைப் பாடியுள்ளார். கீரந்தையாரது பரிபாடலுக்கு இசை வகுத்த நன்னாகனார் என்ற புலவரும் முன் கூறப்பெற்ற நன்னாகனாரும் ஒருவரே என்று கருதுவதில் தவறில்லை. இசைப் புலவர்கள் இயற்றமிழ்ப் புலவராயும் இருத்தல் இயல்பாகும்.

இங்ஙனமே இயற்றமிழ்ப் புலவர் இசைத் தமிழிலும் வல்லராதலைச் சிலப்பதிகாரம் கொண்டு அறியலாம். எனவே, மேலே காட்டப்பெற்ற இசைப் புலவர் இருவரும் சங்க காலப் புலவர் அல்லர் என்று உறுதியாகக் கூற இயலாமை காண்க.

2. பிற தொகை நூல்களிலும் உருத்திரன், உலோச்சனார், பவுத்திரன், பிரமதத்தன், காசிபன் கீரனார், சத்திநாதனார், பிரமசாரி, கௌசிகனார், தாமோதரனார், மார்க்கண்டேயனார், வான்மீகியார் போன்ற வட மொழிப் பெயர்கள் புலவர் பெயர்களாக வந்துள்ளன. பிற தொகை நூல்களில் முருகன் சூரபதுமனைக் கொன்றமை, சிவன் முப்புரம் எரித்தமை, திருமால் பிரமனைப் படைத்தமை போன்ற புராண இதிகாசக் கதைகள் ஆங்காங்கு இடம் பெற்றுற்றன. கண்ணபிரான் நப்பின்னையை மணந்தமை, கண்ணன் குருந்து ஒசித்தது போன்ற பாகவத நிகழ்ச்சிகள் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையுள் கூறப்பட்டுள. கண்ணனும் பலதேவனும் நப்பின்னையை நடுவிற் கொண்டு ஆடிய அற்புதக் குரவை ஆயர்பாடியில் ஆடப்பட்டது என்றும் ஆய்ச்சியர் குரவை அறிவிக்கிறது. கண்ணன் நீராடிக் கொண்டிருந்த ஆயர் மகளிர் ஆடைகளைக் கவர்ந்தமையும், அப்பொழுது பலராமன் வருதலை அறிந்து, ஆயர் மகளிரது மானங் காக்க வேண்டிக் கண்ணன் குருந்து ஒசித்துத் தன் செயலைத் தமையன் அறியாமற் செய்தமையும் அகநானூற்றில் (செ. 59) மருதன் இளநாகனார்,

............................வடா அது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல்

என்று குறித்துள்ளார்.

இனிக் கண்ணன் ஆடிய குடக்கூத்தும், அவன் மகனான பிரத்தியும்நன் ஆடிய பேடு என்னும் கூத்தும், கண்ணன் மல்லன் வேடம் பூண்டு வாணனைக் கொன்றாடிய மல்லாடல் கூத்தும், அல்லியத் தொகுதி என்று கூத்தும் சிலப்பதிகாரம் - அரங்கேற்று காதையில் இடம் பெற்றுள. சிலப்பதிகார காலத்திற்கு முன்னரே இக்கதைகள் தமிழகத்தில் வழக்குப் பெற்றுவிட்டன என்பதையே இவை உணர்த்துகின்றன. இவைபோன்ற சிலவே பரிபாடலில்

திருமால் பற்றிக் கூறும் இடங்களில் இடம் பெற்றுள்ளன. எனவே, இவை கொண்டு நூலின் காலம் காணல் அருமையினும் அருமை!

பரிபாடல்களுள் பல, திருமால் முருகன் ஆகிய கடவுளரைப் பற்றியவை. ஆதலால், அக்கடவுளரைப் பற்றி வடமொழிப் புராணங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. சுங்க மரபினர் காலத்தில் - கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் - வட இந்தியாவில் தோன்றிய பத்திநெறி தமிழகத்திலும் நன்கு பரவிவிட்ட காரணத்தாலும், கடவுளர் பற்றிய செய்திகள் வடமொழி நூல்களிலேயே முதலில் இடம் பெற்றிருந்த காரணத்தாலும் கடவுளர் பற்றிய பரிபாடல்களில் வடமொழிச் சொற்களும் புராணக் கதைகளும் ஓரளவு மிகுதியாக இடம் பெற்றிருத்தல் இயல்புதானே! இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை பௌத்த சமயத்தைப் பற்றியே பேச எழுந்தது. ஆதலால், அதன்கண் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவ்வொரு காரணம் பற்றியே மணிமேகலை சிலப்பதிகார காலத்திற்குப் பிற்பட்டது என்று கூறுவது பொருந்தாது அன்றோ?

3. சிலப்பதிகாரத்தின் காலம் கயவாகுவின் காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி (கி.பி. 114-136) என்பது முன்பு பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் வேங்கடம், திருவரங்கம், அழகர்மலை ஆகிய மூன்றும் திருமாலுக்கு உரியனவாகக் கூறப்பட்டுள்ளன. பத்துப் பாட்டுள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை, அக்காலக் காஞ்சிக்கு அருகில் பள்ளிகொண்ட திருமால் கோவில் இருந்ததாக இயம்புகிறது.

> காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
> பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன் ஆங்கண்.[14]

4. திருப்பரங்குன்றத்தில் சிவனைப்பாடிய சம்பந்தர் அங்குள்ள முருகனைப் பாடவில்லை என்பது இன்றுள்ள திருப்பதிகத்தைக் கொண்டு தெரிகிறது. அவர் பரங்குன்றத்தைப் பற்றிப் பாடிய ஒரே பதிகம்தான் கிடைத்துள்ளது. சம்பந்தர் பாடவில்லை என்பது கொண்டு, அவர் காலத்தில் திருப்பரங்குன்றத்தில் முருகன் கோவில் இல்லையென்று கூறுவது பொருந்தாது. ஏனெனில், அகநானூற்று 59ஆம் பாடலில்,

> சூர்மருங்கு அறுத்த சுடரிலை நெடுவேல்
> சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
> அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை

என்று மதுரை மருதன் இளநாகனார் பாடியுள்ளார். இம் மருதன் இளநாகனார்க்கு முன்பே அந்துவன் என்ற புலவர் திருப்பரங்குன்றத்து முருகனைப் பாடியுள்ளார் என்பது இவ்வடிகளால் தெளிவாகிறதன்றோ?

நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
ஓடியா விழவின் நெடியோன் குன்றம்

என்றும் அகநானூற்று 149ஆம் பாடல் அடிகளும் சங்க காலத்திலேயே திருப்பரங்குன்றத்தில் முருகன் கோவில் இருந்ததை மெய்ப்பிக்கின்றன; அன்றியும் அக்கோவிலில் அக்காலத்தில் ஓய்வின்றி விழாக்கள் நடைபெற்றமையையும் இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. இவ்வரிகளைக் கொண்ட பாடலைப் பாடியவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்பவர்.

எனவே, திருப்பரங்குன்றத்தில் முருகன் கோவில் சங்க காலத்திலேயே இருந்தது என்பது தெளிவாதல் காண்க.

5. தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுள்

என வரும் மதுரைக்காஞ்சி அடிகட்கு (வரி 40-41),

"இராவணனைத் தமிழ் நாட்டையாளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த **அகத்தியன்**" என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். இந்நச்சினார்க்கினியரே தொல்காப்பியப் பாயிரவுரையில், "**அகத்தியர்** பொதியின் கண் இருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி", என்று கூறியுள்ளார்.

மேலே கூறப்பெற்ற மதுரைக்காஞ்சி அடிகளுக்கு நச்சினார்க்கினியர் உரையைத் தந்த பத்துப்பாட்டின் பதிப்பாசிரியராகிய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் அடிக் குறிப்பில், "தென்னாட்டை ஆண்டு குடிகளைத் துன்புறுத்தி வந்த இராவணனை **அகத்தியர்** பொதியின்மலை உருகும்படி இசை பாடி இலங்கைக்குப் போக்கினர் என்பது பண்டை வரலாறு", என்று கூறி, அகத்தியர் இசையில் வல்லுநர் என்பதற்கும், அகத்தியர் யாழ் வாசித்துப் பொதியினை உருகச் செய்தனர் என்பதற்கும், இராவணனை இசை பாடி அடக்கினர் என்பதற்கும் திருக்கயிலாய ஞானவுலா, தக்கயாகப் பரணி, கோணசயில மாலை, வெங்கையுலா, தஞ்சைவாணன் கோவை என்னும் இலக்கியங்களிலிருந்து

மேற்கோள் காட்டியுள்ளனர். இவை மதுரைக்காஞ்சிக்கு மிகப் பிற்பட்ட நூல்களாயினும் அகத்தியர் இசை பாடி இராவணனை விரட்டினார் என்ற வரலாறு இந்நாட்டில் நெடுக வழங்கிவந்தது என்னும் உண்மையை உணர்த்துகின்றன அல்லவா? எனவே, அகத்தியர் தொகை நூல்களிற் குறிக்கப் பெறவில்லை என்பது பொருந்தாமை காண்க.

பதினோராம் பரிபாடலில் "பொதியின் முனிவன்" என்று அகத்தியர் குறிக்கப்பட்டுள்ளார். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பாடப்பெற்ற சிலப்பதிகாரம் எட்டாம் காதையில் (வரி 8) "பொதியின் மாமுனி" என்னும் தொடர் அகத்தியரைச் சுட்டுதலைக் காணலாம்.

6. "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" என வரும் மதுரைக் காஞ்சி அடியும் (வரி 429), "பெரிய நான் மாடத்தாலே மலிந்த புகழைக் கூடுதலையுடைய மதுரை" என வரும் நச்சினார்க்கினியர் உரையும் காணத்தக்கவை. இவை சங்க காலத்திலேயே கூடலில் (நான்) மாடம் இருந்ததை மெய்ப்பிக்கின்றன.

கலித்தொகை 92ஆம் பாடலில் "நான்மாடக் கூடல்" என்பது வந்துள்ளது. கலித்தொகையின் காலம் கி.பி. 300 எனக் கொண்டாலும் அது சங்க நூலாதல் உறுதியே. எனவே, 'நான்மாடக் கூடல்' என்பது கொண்டு பரிபாடல் சங்ககாலத்திற்குப் பிற்பட்டது எனக் கூறல் இயலாது.

7. அறிஞர் சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் பரிபாடலில் வரும் வானிலை பற்றிய செய்தி கொண்டு கூறிய காலம் பொருந்தாது என்பதைத் தக்க காரணம் காட்டிப் பேராசிரியர் பி.டி. சீநிவாச அய்யங்கார் மறுத்துள்ளார் என்பது இங்கு அறியத்தகும்.[15]

8. 'நான்', 'ஆமாம்' முதலிய சொற்கள் பொதுமக்களால் பேசப்பட்ட வழக்குச் சொற்கள் என்னலாம். அவை சமுதாயத்தில் பெற்றுள்ள செல்வாக்கினால் சில சமயங்களில் புலவர் பாக்களில் இடம் பெறுதல் இயற்கை. நாம் வாழும் இக்காலத்தில் புலவர் சிலர் இலக்கியச் சொற்களையே பயன்படுத்தி நூல் எழுதுவதும், புலவர் பலர் எளிமை கருதிப் பேச்சு வழக்குச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தலும் இயல்பாக இருக்கின்றன. பரிபாடல்களுள் பல வழிபாட்டுப் பாடல்கள் பொது மக்களுக்கு உரியவை. எனவே, அவற்றிற்கு இசையும் வகுக்கப்பட்டது. ஆதலால் மக்கள் பேச்சு வழக்கிலிருந்த 'நான்', 'ஆமாம்' போன்ற சொற்கள் இடம் பெற்றன என்று கொள்வது பொருத்தமாகும்.

9. கண்ணன் தமையனான பலதேவனுக்குப் பனைக்கொடியும் நாஞ்சிற்படையும் உரியவை. அவை இரண்டும் திருமாலுக்கும் உரியவையாகப் பரிபாடல்கள் (4, 13) கூறுகின்றன. மேலும், பலதேவனை வாசுதேவனுடன் (கண்ணனுடன்) இணைத்து வழிபட்டமை பரிபாடலில் (13) கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் இருவரையும் இணைத்து வழிபடும் முறை மிகத் தொன்மையானது.

வட இந்தியாவில் கோசுண்டி, நானாகாட் என்னும் இடங்களிற் கிடைத்த கல்வெட்டுக்களில் வாசுதேவன்-பலதேவன் வணக்கம் இணைந்தே காணப்படுகிறது. இக்கல்வெட்டுக்கள் முறையே கி.மு. 3, 1 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. எனவே, வாசுதேவன் - பலதேவன் வணக்கம் வட இந்தியாவில் கி.மு.3ஆம் நூற்றாண்டில் இருந்தமை நன்கு தெளிவாகும்.[16]

இவ்வணக்கம் சங்ககாலத் தமிழகத்திலும் இருந்தது; கண்ணனுக்கும் பலதேவனுக்கும் கோவில்கள் இருந்தன. புலவர்கள், "நீ பகைவரைக் கொல்வதில் கண்ணனையும் வலிமையில் பலதேவனையும் ஒப்பை",[17] எனத் தமிழரசரை வாழ்த்தினர். "இருபெருந் தெய்வமும் ஒருங்கிருந் தாங்கு"[18] என்று அவர்களை இரண்டு பெருந் தெய்வங்களாகவே கருதி வழிபட்டனர் என்பன புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களால் அறியப்படும். பலதேவனுக்குப் பனைக்கொடி உரியது. தொல்காப்பியர் 'பனை' என்னும் பெயர் முன் 'கொடி' என்பது வருவதற்குத் தனிவிதி கூறியுள்ளதை நோக்க, அவர் காலத்திலேயே இவ்வணக்கம் தமிழகத்தில் இருந்தது என்று நினைத்தல் தகும்.

"கி.மு. முதல் நூற்றாண்டிலேயே சங்கருடன் வாசுதேவர்கள் (பலதேவரும் வாசுதேவரும்) மராத்தியரால் வழிபடப் பட்டனர். இதே காலத்தில் இம்மதம் தெற்கிலும் பரவியிருத்தல் வேண்டும். பரிபாடல் முதலிய நூல்கள் அக்காலத்தில் எழுந்தன ஆகலாம்".[19]

சங்ககாலம் என்பது முன்பு கூறியாங்கு மிகப் பரந்துபட்ட கால எல்லையை உடையது. அப் பரந்துபட்ட கால எல்லையில் கி.மு. நான்காம் நூற்றாண்டில் தொல்காப்பியம் செய்யப்பட்டது – அதற்கு முன்பு சிலவும் பின்பு பலவுமாகத் தொகைநூற் பாடல்கள் பல காலங்களில் பாடப்பெற்றன என்பதும், பிற்பட்ட சொல்லுருவங்களையும் வழக்குகளையும் புராணக் கதைகளையும் மிகுதியாகக் கொண்ட கலித்தொகை, பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன கி.பி. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் செய்யப் பெற்றிருக்கலாம் எனக் கொள்வதும் பொருத்தமாகும்.

பரிபாடல்களைப் பாடிய புலவர் இன்றுள்ள பிற தொகை நூற்பாக்களைப் பாடிய புலவரே எனக் கொள்ளினும், அப்புலவரின் வேறானவர் எனக் கொள்ளினும், அவர்கள் காலம் சங்க காலத்தின் இறுதிக் காலமாகிய **கி.பி. மூன்றாம் நூற்றாண்டு** என்று கொள்வது தக்கதாகும். கலித்தொகையில் நற்றிணை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள மூவேந்தர் போர்ச் செயல்களும், சிற்றரசர் போர்ச் செயல்களும் இவ்விரு தரத்தாரைப் பற்றிய பிற விவரங்களும் இடம் பெறவில்லை. பாண்டியர், அவர்தம் தலைநகராகிய கூடல், வையையாறு என்பவையே இடம் பெற்றுள்ளன. ஆதலால் கலித்தொகைப்பாக்கள் நக்கீரர், கபிலர், பரணர் போன்ற புலவர் பெருமக்களுக்குப் பின்பே பாடப் பெற்றனவாதல் வேண்டும் என்பன முன்பே கூறப்பட்டவை அல்லவா? பரிபாடலிலும் இதே நிலைமை காணப்படுவதால், இதன் காலமும் கலித்தொகையின் காலமென்றே கூறுதல் பொருத்தமாகும்.

## குறிப்புகள்

1. செய்யுளியல், நூற்பா 116, 155.
2. ஷை நூற்பா 117 உரை.
3. ஷை நூற்பா 1372, 1373, 1411 உரை.
4. தொல்காப்பியம், அகத்திணையியல், நூற்பா 53 உரை.
5. History of Tamil Language and Literature, S. Vaiyapuri Pillai, P.29.
6. S. Vaiyapuri Pillai, History of Tamil Language and Literature, p.56.
7. காவிய காலம், எஸ். வையாபுரிப் பிள்ளை, ப. 121.
8. S. V. Pillai, History of Tamil Language and Literature, p.113.
9. இலக்கியத் தோற்றம், எஸ். வையாபுரிப் பிள்ளை, பக். 58-59.
10. இலக்கியத் தோற்றம், எஸ். வையாபுரிப் பிள்ளை, பக். 60-61.
11. L.D. Swamikkannu Pillai, Indian Ephemeries, Vol.I, Part I, pp. 98-109.
12. History. of Tamil Language and Literature, p. 56.
13. பரிபாடல் ப. 18.
14. வரி 272-273.
15. A description of the sky during an eclipse in poem II has been used in an attempt to fix the date of the composition of the poem by astronaical calculations, but it has proved a failure because the information in the text is not enough for calculating the date without adventitions unwarranted assumption and the informations supplied by the annotator has made confusion worse confounded. —History of the Tamils, p. 584.
16. Sir R.G. Bhandarkar, Vaishnavism, Saivism & Minor Religions, pp. 3-4.
17. புறநானூறு, செ. 56.
18. புறநானூறு, செ. 58.
19. ஈ.எஸ். வரதராச அய்யர், தமிழிலக்கிய வரலாறு, ப. 236.

# 8. கோச்செங்கணான் காலம்

## கோச்செங்கணான் சங்ககாலத்தவனா?

நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவனும் அப்பர்க்கு முற்பட்டவனுமான கோச்செங்கணான் சங்க இறுதிக் காலத்தவன் என்று பலர் கூறியுள்ளனர். இதற்கு அவர் சான்றாகக் காட்டத்தக்கவை இரண்டு: (1) 74 ஆம் புறநானூற்றுப் பாட்டின் அடிக்குறிப்பில், "சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானோடு போர்ப்புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து 'தண்ணீர் தா' என்று, பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு", என வரும் செய்தி. (2) பொய்கையார் சோழன்மீது களவழிபாடிச் சிறைப்பட்ட அரசனை மீட்டார் எனக் களவழி ஏடுகளின் ஈற்றில் எழுதப் பட்டுள்ள செய்தி. இவ்விரண்டு கூற்றுக்களையும் ஆராய்வோம்.

1. (1) மேற்சொன்ன 74ஆம் செய்யுளில் கோச்செங்கணான் என்ற பெயர் இல்லை. அடிக்குறிப்பு, பாடிய புலவன் எழுதியதும் அன்று என்பது, 'உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு' என்பதால் அறியப்படும், புறநானூற்றுப் பாடல்களின் கீழ் உள்ள (பிற்காலத்தார் எழுதிய) அடிக்குறிப்புக்கள் பல இடங்களில் பொருத்தமற்றவை என்பது அறிஞர் நன்கறிந்ததே. சான்றாக ஓர் இடம் குறித்துக்காட்டுவம். புறம் 389 ஆம் செய்யுளில் 'ஆதனுங்கனைப்போல நீ கொடுப்பாயாக' என வரும் தொடரைக் கண்டதும், அஃது உவமையாகக் கூறப்பட்டதென்பதையும் கவயாமல், 'இஃது ஆதனுங்கனைப் பாடிய பாட்டு' என்று அடிக் குறிப்பு வரையப்பட்டுள்ளது. இங்ஙனம் பிழைபட்ட இடங்கள் பல; பொருத்தமற்ற அடிக்குறிப்புக்கள் பல. இத்தகைய அடிக்குறிப்புக்களில் செங்கணானைக் குறிக்கும் அடிக்குறிப்பும் ஒன்றாகலாம். களவழிப் பாக்களைக் காண, கோச்செங்கணான் பேரரசன் என்பதும் வீரம்

வாய்ந்த பகையரசரைக் கொன்றவன்[1] என்பதும், போரில் கொங்கரையும் வஞ்சிக்கோவையும் கொன்றவன்[2] என்பதும் தெரிகின்றன. இவற்றால், இச் சோழனை எதிர்த்த வஞ்சிக்கோ (சேர அரசன்) போரில் கொல்லப்பட்டான் என்பது விளக்கமாகிறது. கணைக்கால் இரும்பொறை பற்றிய பேச்சே களவழியிற் காணப்படவில்லை.

(2) முன்சொன்ன 74ஆம் செய்யுள் தமிழ் நாவலர் சரிதையில், "சேரமான் கணைக்கால் இரும்பொறை செங்கணானாற் குடவாயிற் கோட்டத்துத் தளைப்பட்டபோது பொய்கையாருக்கு எழுதிவிடுத்த பாட்டு" என்ற தலைப்பின் கீழ்க் காணப்படுகிறது. புறநானூற்று அடிக்குறிப்பும் இதுவும் வேறுபடக் காரணம் என்ன?

(3) புறநானூற்று 74ஆம் செய்யுள் அடிக்குறிப்பு, கணைக்கால் இரும்பொறை சிறைக்கண்ணே இறந்தான் என்பதைக் குறிக்கிறது. ஆயின், தமிழ் நாவலர் சரிதையில் உள்ள செய்யுளின் அடியில், "இது கேட்டுப் பொய்கையார் களவழி நாற்பது பாடச் செங்கணான் சிறைவிட்டரசளித்தான்" என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவ்விரு கூற்றுக்களும் தம்முள் மாறுபடுதலைக் கண்ட பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், "துஞ்சினான் கணைக்கால் இரும்பொறையாக, சிறை வீடு செய்து அரசளிக்கப்பட்டான் பிறனொரு சேரன் ஆவன் என்று கொள்ளவேண்டும்",[3] என்று கூறி அமைந்தனர். இங்ஙனம் பேரறிஞரையும் குழப்பத்திற்குட்படுத்தும் பொருத்தமற்ற அடிக்குறிப்புக்களைக் கொண்டு கோச்செங்கணான் போன்ற பேரரசர் காலத்தை வரையறுத்தல் வலியுடைத்தாகாது.

2. கோச்செங்கணான் 70 சிவன் கோவில்கள் கட்டினான் என்று திருமங்கையாழ்வார் குறித்துள்ளார்.[4] சங்க காலத்தில் எந்த அரசனும் சிவன் கோவிலோ-திருமால் கோவிலோ கட்டியதற்குச் சான்றில்லை. சிவன் கோவில்கள் பலவாக ஒரே அரசனால் கட்டப்பெற்ற காலம் சைவஉணர்ச்சி வேகம் மிகுதிப்பட்ட காலமாதல் வேண்டும். சங்ககாலத்தில் அத்தகைய உணர்ச்சி வேகம் மிக்கிருந்ததாகக் கூறச் சான்றில்லை. சங்க காலத் தமிழ் உலகில் பிறசமயங்களும் அமைதியாக இருந்தன என்பதே அறியக்கிடக்கிறது. அவ்வமைதியான நிலையில் ஓர் அரசன் 70 கோவில்கள் கட்டினான் என்றல் நம்பத்தக்கதன்று. ஆயின், சங்க காலத்திற்குப் பின்னும் அப்பர்க்கு முன்னும் களப்பிரர், பல்லவர் போன்ற வேற்றரசர் இடையீட்டால் பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் மிகுதியாகப் பரவலாயின. சங்ககாலப் பாண்டியன் அளித்த பிரம்மதேய உரிமையையே அழிக்கக்கூடிய நிலையில் களப்பிரர் சமயக்

கொடுமை இருந்தது என்பது வேள்விக்குடிப் பட்டயத்தால் தெரிகிறது. அக்களப்பிரர் காலத்திற்றான் மதுரையில் மூர்த்தி நாயனார் துன்பப்பட்டார். சோழ நாட்டில் தண்டியடிகள், நமிநந்தி அடிகள் போன்ற சிவனடியார்க்கும் சமணர்க்கும் வாதங்களும் பூசல்களும் நடந்தன. இத்தகைய சமயக்கொடுமைகள் நடந்து, சைவ சமயவுணர்ச்சி மிக்குத்தோன்றிய பிற்காலத்தேதான் கோச்செங்கணான் போன்ற அரசர் பல கோவில்கள் கட்டிச் சைவத்தை வளர்க்க முற்பட்டிருத்தல் வேண்டும்.

1. கோச்செங்கணானைப் பற்றித் திருமங்கையாழ்வார் வெளியிடும் கருத்துக்கள் இவையாகும்:[5]
2. உலகமாண்ட தென்னாடன்[6] குடகொங்கன் சோழன்.
3. தென் தமிழன் வடபுலக்கோன்.
4. கழல் மன்னர் மணிமுடிமேல் காகமேறத் தெய்வ வாள் வலங்கொண்ட சோழன்.
5. விறல் மன்னர் திறல் அழிய வெம்மாவுய்த்த செங்கணான் கோச்சோழன்.

படை மன்னர் உடல் துணியப் பரிமாவுய்த்த தேராளன் கோச்சோழன்.

இக்குறிப்புக்களால் இவன், (1) வலிபொருந்திய அரசர் பலரைப் போரில் கொன்றவன் - வென்றவன் என்பதும், (2) கொங்கு நாடு வென்றவன் என்பதும், (3) சோணாட்டுக்கு வடக்கிருந்த நிலப்பகுதியை (தொண்டை நாட்டை) வென்றவன் என்பதும், (4) சிறந்த யானைப் படை குதிரைப் படைகளை உடையவன் என்பதும் தெரிகின்றன.

'கழல் மன்னர், விறல் மன்னர், படை மன்னர்' என்றதால் சோழனை எதிர்த்தவர் மிக்க வலிமையுடைய பகையரசர் என்பது பெறப்படும். அவர்களைச் செங்கணான் 'தெய்வ வாள்' கொண்டு வென்றான் என்பதாலும் பகையரசரது பெருவலிமை உய்த்துணரப்படும். சங்க காலத்தில் இத்தகைய மன்னர் பலருடன் செங்கணான் போரிட்டது உண்மையாயின், இப்போரைப்பற்றிச் சில செய்யுட்களேனும் அக்கால நூல்களில் இருந்திருக்கும் அல்லவா? சங்க காலத்தில் தொண்டை நாடும் சோழர் ஆட்சியில் இருந்தமை மணிமேகலையால் அறியலாம். அதற்கும் அப்பாற்பட்ட வடபுலத்தை இவன் வென்றான் எனக் கொள்ளின், அப்பகையரசர் யாவர் எனக் கூறுவது? சுருங்கக்கூறின், (1) இப்போர்களைப் பற்றிய பாக்கள் சங்க நூல்களில் இல்லை; (2) இவன் அரசர் பலரை வென்றவனாகக் காண்கிறான்; (3) சங்க

இறுதிக் காலத்தில் இங்ஙனம் ஒரு சோழன் பேரரசனாக இருந்தான் என்று கூறத்தக்க சான்றுகள் இல்லை; (4) இவன் சிவன் கோவில்கள் பல கட்டினவன். இந்நான்கு காரணங்களையும் நடுவுநிலையினின்று ஆராயின், **கோச்செங்கணான் சங்க காலத்திற்குப் பிற்பட்டவனாக இருத்தல்கூடும்** என்ற எண்ணமே புலப்படும்.

4. கோச்செங்கணான் தில்லையில் சமயத் தொண்டு செய்தவன் என்பது சேக்கிழார் கூற்று. தில்லை, ஒரு சிவத்தலமாகச் சங்கச் செய்யுட்களிற் கூறப்படாமை நோக்கத் தக்கது. அது கோச்செங்கணான் காலத்திற் சிறப்புப் பெற்றது. அவன் அங்கு மறையவரைக் குடியேற்றி மாளிகைகள் பல சமைத்தான்.[7] இங்ஙனம் தில்லை சிவத்தலமாகச் சிறப்புற்றமை சங்ககாலத்திற்குப் பிறகே என்பது தவறாகாது.

5. கோச்செங்கணானுடைய தந்தை பெயர் **சுபதேவன்;** தாயின் பெயர் **கமலவதி** என்பன என்று சேக்கிழார் கூறியுள்ளார்.[8] இப்பெயர்களைச் சோழப் பேரரசின் முதல் அமைச்சரான சேக்கிழார் தக்க சான்றுகொண்டே கூறினாராதல் வேண்டும். இப்பெயர்கள் தூய வட மொழிப் பெயர்கள். இங்ஙனம் சங்க காலத்து அரச குடும்பத்தினர் வடமொழிப் பெயர்களை வைத்துக் கொண்டனர் என்பதற்குப் போதிய சான்றில்லை. சம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட சுமார் 6 அல்லது 5 ஆம் நூற்றாண்டினர் என்று கருதத்தக்க காரைக்கால் அம்மையார்க்குப் **புனிதவதி** என்பது பெயர். அப்பெயருடன் மேற்சொன்ன கமலவதி என்ற பெயர் ஒப்புநோக்கத்தக்கது.

இத்தகைய பல காரணங்களால் கோச்செங்கணான் சங்க காலத்தவன் ஆகான் எனக் கொள்ளலாம். ஆயின், அவன் அப்பர்,சம்பந்தராற் பாடப்பட்டவன். ஆதலின், அவன் காலம் மேற்சொன்ன சங்ககாலத்திற்குப் பிறகும், அப்பர் சம்பந்தர் காலத்திற்கு முன்னும் ஆதல் வேண்டும். அஃதாவது, **அவன் காலம் ஏறத்தாழக் கி.பி. 400-600க்கு உட்பட்டது** எனக் கூறலாம். இப்பரந்துபட்ட காலத்துள் அவன் வாழ்ந்திருக்கத்தக்க பொருத்தமான காலம் யாதெனக் காண்போம்.

**கோச்செங்கணான் காலம்**

வேள்விக்குடிப் பட்டயப்படி சங்ககாலத்திற்குப் பிறகு பாண்டியநாடு களப்பிரர் ஆட்சியில் இருந்தது; அக்களப்பிரர் கையிலிருந்தே கடுங்கோன் தன் நாட்டைக் கைப்பற்றினான் என்பது தெரிகிறது; ஆயின், 'சோழ நாடு எவ்வளவு காலம் களப்பிரர் கையில் இருந்தது? கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் புத்த தத்தர் குறித்த அச்சுதனுக்குப் பிறகு சோழ நாட்டை ஆண்ட களப்பிரர்

யார் என்பன தெரியவில்லை. 'கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் இடையில் குமாரவிஷ்ணு என்ற பல்லவன் காஞ்சியை மீளவும் கைப்பற்றினான்........ அவன் மகனான புத்தவர்மன் **கடல் போன்ற சோழர் சேனை**க்கு வடவைத் தீப் போன்றவன்' என்று வேலூர்ப் பாளையப் பட்டயம் பகர்கின்றது.[9] கி.பி. 6ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவனாகக் கருதப்படும் முதலாம் நந்திவர்மன் விஜய- காஞ்சிபுரத்திலிருந்து பட்டயம் விடுத்துள்ளான். ஏறத்தாழக் கி.பி. 575இல் சிம்மவிஷ்ணு என்ற பல்லவன் மீட்டும் காஞ்சியைக் கைப்பற்றினான்; சோழர், மழவர், களப்பிரர் முதலியோரை வென்று காவிரிக்கரை வரை பல்லவ நாட்டை விரிவாக்கினான் என்பன வேலூர்ப் பாளையப் பட்டயமும் கசாக்குடிப் பட்டயமும் குறிக்கும் செய்திகளாகும்'.[10] இக்குறிப்புக்களால், முன் சொன்ன குமார விஷ்ணுவுக்குப் பின்பும், சிம்மவிஷ்ணுவுக்கு முன்பும் காஞ்சி, பல்லவர் வசம் இல்லாது அடிக்கடி கைம்மாறியதாக நினைக்க இடமுண்டு. அச்சுத விக்கந்தற்குப் பிறகு, சிம்மவிஷ்ணு சோழ நாட்டை வெல்லும் வரையில் களப்பிரரே சோணாட்டை ஆண்டனர் என்பதற்கு உரிய சான்றும் இல்லை. மேற்குறித்த பல்லவர் செய்திகளைக் காண்கையில், சிம்ம விஷ்ணுவுக்கு முற்பட்ட பல்லவர் நிலையாகக் காஞ்சியில் தங்கித் தொண்டை மண்டலத்தை ஆண்டதாகத் தெரியவில்லை; கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இடையில் புத்தவர்மன் கடல் போன்ற சோழர் சேனையோடு போரிட வேண்டியவன் ஆனான்; 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிம்மவிஷ்ணு சோழரை வென்றான். இவற்றுள் புத்தவர்மன் செய்த போரைக் காணின் அச்சுதற்குப் பிறகு கி.பி. 5ஆம் நூற்றாண்டில், சோழர் கடல் போன்ற சேனையை வைத்திருந்தனர்; அவர் பல்லவனுடன் போரிட்டனர் என்பன தெரிகின்றன. இங்ஙனம் கடல் போன்ற சேனையை வைத்துக் கொண்டிருந்த சோழன் சங்க காலத்திற்குப் பிற்பட்டவனாகக் கருதத்தக்க கோச்சோழன் ஆகலாம். அவன் பல அரசரை முறியடித்தவன் - பெரிய யானைப் படை, குதிரைப் படைகளை உடையவன் என்பன், களவழியாலும் திருமங்கையாழ்வார் பாசுரங்களாலும் தெரிகின்றன. இச் சோழன், தனது நாட்டைப் பற்றிக் கொண்ட களப்பிரரை அடக்கிப் பின்பு வடபுலத்திருந்த புத்தவர்மனுடன் போரிட்டு வெற்றி கண்டனன் போலும்! இவனை 'வடபுலக்கோன்' என்று திருமங்கையார் குறித்தமை இதுபற்றிப்போலும்! இங்ஙனமாகக் கொள்ளின், **கோச்செங்கணான் காலம்** புத்தவர்மன் காலமாகிய **கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி** என்னலாம். கோச்செங்கணான்மீது பாடப்பெற்ற **களவழியின் காலம் ஏறத்தாழக் கி.பி. 450-500** என்ற இராவ்

சாஹிப் திரு.எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் கருத்தும்[11] இம்முடிவுக்கு அரண் செய்தல் இங்கு அறியத்தகும்.

நடுவு நிலையினின்றும் மேற்சொன்ன காரணங்கள் பலவற்றையும் ஆய்ந்து இம்முடிவு கொள்ளப்படின், இக்கோச்சோழனை அடுத்து, மேற்சொன்ன இடைக்காலத்தில் இருந்தவராக (பெரிய புராணம் கூறும்) புகழ்ச்சோழரை எடுத்துக் கொள்ளலாம். இவர் பெயர் சங்க நூல்களில் இல்லாததாலும் சிம்மவிஷ்ணுவுக்குப் பிறகு பல்லவர் காலத்தில் இத்தகைய சோழப் பேரரசர் இருக்க முடியாமையாலும், இந்த இடைக்காலமே இவர் வாழ்ந்த காலம் எனக்கோடல் பெரிதும் பொருத்தமேயாகும்.[12] அச்சுதன் போன்ற களப்பிரப் பேரரசனும், கோச்செங்கணான் புகழ்ச்சோழர் போன்ற சோழப் பேரரசரும் கி.பி. 5, 6 ஆம் நூற்றாண்டுகளில் இருந்தமையாற் போலும் பல்லவர் சோழநாட்டைக் கைப்பற்றக் கூடவில்லை!

கோச்செங்கணான், புகழ்ச் சோழர், களப்பிர அரசராகிய கூற்றுவ நாயனார்[13] இவர்களை இவ்விடைப்பட்ட காலத்தவராகக் (சுமார் கி.பி. 450-500) கொள்ளின், தென் இந்திய வரலாற்றில் 'இருண்ட பகுதி' எனப் பட்ட காலத்தின் ஒரு பகுதி வெளிச்சமாயிற்றெனக் கொள்ளலாம். 'இவ்விருண்ட காலம்-பல்லவர் காஞ்சியைத் துறந்து தெலுங்கு நாட்டில் வாழ்ந்த காலம்-சோழர் இடையீட்டுக் காலமாக இருத்தல் வேண்டும்' என்று வெங்கையா போன்ற கல்வெட்டறிஞர் கொண்ட கருத்தில்[14] ஓரளவு உண்மையுண்டு என்பதும் இதனால் உறுதிப்படும்.

## குறிப்புகள்

1. செ. 6, 16.
2. செ. 14, 39.
3. களவழி, நாட்டார் பதிப்பு, முன்னுரை, ப. 5.
4. திருநறையூர்ப் பதிகம், செ. 8.
5. திருநறையூர்ப் பதிகம், செ. 6, 5, 3, 4, 9.
6. 'தென்னவனாய் உலகாண்ட செங்கணான்' என்ற சுந்தரர் தொடர், இதனுடன் ஒப்பு நோக்கத் தக்கது.
7. கோச் செங்கட் சோழர் புராணம், செ. 15, 16.
8. கோச் செங்கட் சோழர் புராணம், செ. 7.
9. Ep. Ind. III. p.142.
10. Ibid, Fr. Heras, Studies in Pallava History, p.20.
11. Vide his Tirikadukam & Sirupanjamulam, University Publication, pp. 10-11, 75.
12. C.V.N. Iyer's 'Origin and Development of Saivism in S.India', p.183.
13. C.V.N. Iyer's 'Origin and Development of Saivism in S.India, pp. 180-181.
14. Indian Antiquarry 1908, p. 284.

# 9. சுந்தரர் காலம்

பெரியபுராணத்திற்குச் சிறப்புடைய முன்னூல்கள் இரண்டு. அவை (1) சுந்தரர் பாடிய **திருத்தொண்டத் தொகை,** (2) நம்பியாண்டார் நம்பி பாடிய **திருத்தொண்டர் திரு அந்தாதி** என்பன. இவற்றுள் சுந்தரர் தொகையே காலத்தால் முற்பட்டது என்பதை அனைவரும் அறிவர். அத்தொகையுள் 63 நாயன்மார் பெயர்களும் குறிப்பிடப் பெற்றமையாலும் அவருள் சுந்தரரும் ஒருவர் ஆதலாலும் அவர் காலத்தைக் கண்டறிவோமாயின், 63 நாயன்மாரது இறுதிக் கால எல்லையை அறிந்தவர் ஆவோம்.

இருவிதக் கருத்துக்கள்

ஆராய்ச்சியாளர் பலர் சுந்தரர் காலத்தை அறிய முயன்றுள்ளனர். அவர்கள் முடிவுகள் இருவகைப்படும். அவையாவன:

1. சுந்தரர் காலத்து அரசன் 'கழற்சிங்கன்' என்ற பல்லவன் என்பது தொகையிற் குறிக்கப்பட்டுள்ளது. 'கழற்சிங்கன்' என்ற தொடரில், 'கழல்' என்பது அடைமொழி. 'சிங்கன்' என்பது இயற்பெயர். 'சிங்கன்' என்ற இறுதிச் சொல்லுடன் இருவர் பல்லவ மன்னராக இருந்தனர். ஒருவன் நரசிங்கன் I (கி.பி.630-668); மற்றவன் நரசிங்கன் II எனப்பட்ட இராச சிங்கன் (கி.பி. 685-720). இவருள் முதல்வன் காலத்தில் அப்பர், சம்பந்தர் வாழ்ந்தனர். எனவே, சுந்தரர் **இராச சிங்கன்** காலத்தவராகவே இருத்தல் வேண்டும்.[1]

2. பல்லவருள் 'கோப்பெருஞ்சிங்கன்' முதலாகச் 'சிங்கன்' இறுதி பெற்ற பெயர்கள் உண்டு. 'கோப்பெருஞ் சிங்கன்' என்பவன் பிற்காலத்தில் ஆண்டவன். கி.பி.7, 8, 9ஆம் நூற்றாண்டுகளில் இவ்விதச் சிங்கப் பெயரும் 'கழல்' என்ற தூய தமிழ்ப் பெயரும் கொண்ட பல்லவப் பெயர்கள் கிடையா. ஆகவே, 'கழற் சிங்கன்' என்பது காரணப் பெயராக இருத்தல் வேண்டும். இங்ஙனம் கொண்டு, சுந்தரர் குறித்த பல்லவனைப் பற்றிய குறிப்புக்களை

ஆராயின், அக்குறிப்புக்கள் பொருந்தப்பெற்ற பல்லவன், **மூன்றாம் நந்திவர்மன்** (கி.பி.840 - 865) என்று கூறலாம்.[2]

இச்சந்தர்ப்பத்தில், சிம்மவிஷ்ணுவுக்குப் பின் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவப் பெருநாட்டை யாண்ட அரசர் பெயர்களை அறிதல் நலமாகுமாதலால், அவற்றைக் கால முறைப்படி தருகின்றோம்.

| | அரசர் பெயர் | காலம் | சமயம் | இருந்திருக்கக் கூடிய அடியார் |
|---|---|---|---|---|
| 1. | மகேந்திரவர்மன் I | 615- 630[3] | முதலில் சமணம்; பிறகு சைவம் | அப்பர் |
| 2. | நரசிம்மவர்மன் I | 630- 668[4] | வைணவம் | சிறுத்தொண்டரும்சம்பந்தரும் |
| 3. | மகேந்திரன் II | 668-670 | | |
| 4. | பரமேசுவரவர்மன் I | 670- 685 | சைவம் | |
| 5. | நரசிம்மவர்மன் II என்ற இராச சிங்கன் | 685-720[5] | சைவம் | பூசலார் (?)[5a] சுந்தரர் (?) |
| 6. | பரமேசுவரவர்மன் II | 720- 725 | சைவம் | |
| 7. | நந்திவர்மன் II | 725- 790[6] | வைணவம் | திருமங்கை யாழ்வார் |
| 8. | தந்திவர்மன் | 790-840 | வைணவம் | |
| 9. | நந்திவர்மன் III | 840- 865[7] | சைவம் | சுந்தரர் (?) |
| 10. | நிருபதுங்கவர்மன் | 865-890 | வைணவம் | |

இப்பட்டியலிற் கண்ட இராசசிங்கனுக்குப் பிறகு பல ஆண்டுகள் ஆண்ட பல்லவ அரசர் இருவரும் சிறந்த வைணவர் ஆவர். நந்திவர்மன் III ஒருவனே சிறந்த சிவபக்தனாகப் பட்டயங்களிற் குறிக்கப்படுபவன். எனவே, இந்த இருவருள் ஒருவர் காலத்தவராகத்தான் சுந்தரர் இருத்தல் கூடும். ஆதலின், சுந்தரர் குறித்த கழற்சிங்கனைப் பற்றியும் அவர் கால நிலைமையைப் பற்றியும் வரும் தேவாரக் குறிப்புக்களை முதற்கண் கண்டு, அவற்றுக்கு எந்த அளவு இவ்விருவர் கல்வெட்டுக் குறிப்புக்கள் ஒத்து வருகின்றன என்பதைக் காண்போம்.

சுந்தரர் கூறுவன

1. 'கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்!'[8]
2. "மண்ணுலகம் காவல் பூண்ட உரிமையால் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும் பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாம் அன்றே".[9]

இவற்றால் அறியப்படுவன

(1) கழற்சிங்கன் பேரரசன், (2) அவன் 'கழற்சிங்கன்' என்றதால் சிறந்த போர்வீரன், (3) சிறந்த சிவபக்தன், (4) அவனுக்குத் திறை கட்டா (அடங்காத) மன்னர் (போரில்-சிவனருளால்) தண்டிக்கப்பட்டனர்.

இராச சிங்கன் (கி.பி. 685-720)

இனி, இக்குறிப்புக்கள் இராச சிங்கனைப் பற்றிய குறிப்புக்களோடு ஒன்றுபடுகின்றனவா என்பதைக் காண்போம்:

1. இவன் பேரரசன் என்பது சீனத்துடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினால் நன்கு விளங்குகிறது.[10]

2. இவன் "நரசிம்ம அவதாரத்தை ஒத்தவன்; போரில் சிங்கம் போன்றவன்; போரில் மிகக் கொடியவன்; தன் பகைவரை அழிப்பவன்; பகைவர்க்கு இடியேறு போன்றவன்; கொடிய பேரரசுகளை ஒழிப்பவன்; பல இடங்களை வென்றவன்; போரில் மனவுறுதி உடையவன்; போரில் களைப்படையாதவன்; செருக்கரை அடக்குபவன்..."[11] என்று இவன் கட்டிய கயிலாசநாதர் கோவிற் கல்வெட்டுக்கள் இவனைப் பாராட்டியுள்ளன. ஆதலின் இவன் சிறந்த போர்வீரன் என்பது தெற்றெனத் தெரிகிறது. இவன் சாளுக்கிய விநயாதித்தனையும் கங்க அரசனான முதலாம் சிவமாறனையும் தாக்கிப் போரிட்டான் என்று கருதப்படுகிறது.[12]

3. இவன், "ரிஷபலாஞ்சனன், ஸ்ரீ சங்கர பக்தன், சிவசூடாமணி" என்று கல்வெட்டுக்களிற் புகழ்ப்படுபவன்; உலகப் புகழ் பெற்ற காஞ்சி கயிலாசநாதர் கோவில் கட்டியவன்; சைவசித்தாந்தத்திற் பேரறிவுடையவன்; கலியுகத்தில் வான் ஒலி (அசரீரி) கேட்ட பேறுடையவன்.[13] இக்குறிப்புக்களால் இவன் சிறந்த சிவபக்தன் என்று துணிந்து கூறலாம்.

4. இவன் காலத்தில் பல்லவர்க்கும் தமிழ் அரசர்க்கும் போர் நடந்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாகப் பாண்டிய அரசனான கோச்சடையன் இரணதீரன் இவன் மருமகனாகவும், அவன் மகனான தேர்மாறன் இராச சிம்மன் இவன் பெயரனாகவும் கருதப்படுகிறான்.[14] கோச்சடையன் இரணதீரன், நெடுமாறன் மகனாதலின், தாய்வழியிற் சோழனுமாவான். இவன் உதவியின்றிச் சோழர் பல்லவனை எதிர்க்க வழியில்லை. எனவே, இராசசிங்கன் காலத்திற் 'பல்லவர்க்குத் திறைகட்டா மன்னவர்' என்று சுந்தரராற் குறிக்கப்பட்ட பகைவர் வலிமையும் சிறப்பும் பெற்றவராதல் - அப்பகைவர் இன்னவர் என்பதாதல் இவன் வரலாற்றில்

தெரியக்கூடவில்லை. இந்த ஒன்று தவிர, சுந்தரர் குறித்த கழற்சிங்கன் குறிப்புக்கட்கும் மேற்சொன்ன இராசசிங்கன் குறிப்புக்கட்கும் நிறைந்த ஒற்றுமை காணப்படுகின்றது.

இனி, மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிய குறிப்புக்களைக் காண்போம்: இவன் வரலாற்றை அறிய, இவனைப் பற்றிய கல்வெட்டுக்களும் இவன் மகனது பாகூர்ப் பட்டயமும் இவன்மீது பாடப்பெற்ற நந்திக்கலம்பகமும் துணைபுரிகின்றன.

நந்திவர்மன் **III** *(கி.பி. 840-865)*

1. இவன் வடபுலத்தில் வாகை சூடியவன்; தமிழரசர் மூவரையும் தெள்ளாற்றில் முறியடித்துத் "தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்" எனப் பெயர் பெற்றவன். இவன் காலத்தில் கடல் வாணிகம் நன்கு நடைபெற்றது. சீகாழிக்கடுத்த நாங்கூரிலிருந்து சென்ற பெருமகன் ஒருவன், இப்பல்லவன் பெயரால் சையாமில் குளம் ஒன்று தொட்டான் எனின், இப்பல்லவனது புகழ் கடல் கடந்த நாடுகளிலும் பரவி இருந்ததென்னலாம். இவன் சிறந்த கடற்படையுடையவன் என்று கலம்பகம் குறிக்கிறது. இவற்றால் இவன் பேரரசன் என்பது எளிதில் விளங்கும்.

2. இவன் சிறந்த போர்வீரன் என்பது மேற் சொன்ன இரு போர்களால் விளக்கமாகும். இவன், "அறைகழல் முடித்த அவனி நாரணன்", எனவும் "குரைகழல் வீரநந்தி" எனவும் "பல்லவர்கோள்அரி" (பல்லவருட்சிங்கன்) எனவும் கலம்பகத்திற் பாராட்டப் பெற்றவன். இத்தொடர்கள், சுந்தரர் குறித்த 'கழற் சிங்கன்' என்ற பெயரை மெய்ப்பித்தல் காண்க.

3. இவன் "சிவனை முழுதும் மறவாத சிந்தையன்" என்று கலம்பகம் குறிக்கிறது. இவன் சிறந்த சிவபக்தன் என்பதை வேலூர்ப்பாளையப் பட்டயத்தாலும் அறியலாம்.

4.நந்திவர்மன் தெள்ளாற்றுப் போரில் தமிழரசர் மூவரையும் நன்கு முறியடித்தான் என்பது கலம்பகத்தாலும் கல்வெட்டுக்களாலும் வெளியாகின்றது. இதனைத்தான் சுந்தரரது தில்லைப் பதிகமும் குறித்ததாதல் வேண்டும். நந்திக்குத் தமிழரசர் திறைகட்டினர் (அடங்கியவர்) என்பது கலம்பகத்தால் தெரிகிறது.[15]

சுந்தரர் குறித்த குறிப்புக்கள் அனைத்தும் நந்திவர்மனைப் பற்றிய குறிப்புக்களோடு ஒன்றுபடல் காணத்தக்கது. அவற்றில் சிறப்பாகப் 'பல்லவர்க்குத் திறை கொடா மன்னவர்' (தெள்ளாற்றில் முறியடிக்கப்பட்ட) தமிழ் மூவேந்தராக இருக்கலாம் என்று நினைக்க இடமுண்டாதல் காண்க. இங்ஙனம் நினைக்கக்கூட இராசசிங்கன் வரலாற்றில் இடமின்மை முன்பே காட்டப்பட்டது.

இனிச் சேக்கிழார், சுந்தரர் குறியாத சில செய்திகளைக் கழற்சிங்கர் புராணத்திற் கூறியுள்ளார். அவற்றைக் கண்டு பின் அவற்றுக்கும் மேற்சொன்ன இருவர் பற்றிய குறிப்புக்கட்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்போம்:

சேக்கிழார் கூறுவன: கழற்சிங்கர்

1. சிவனைத் தவிர வேறு தெய்வத்தை வணங்காதவர்.
2. வடநாட்டுப் போரில் வெற்றி கொண்டவர்.
3. நாடு அறநெறியில் வைக நன்னெறி வளர்த்தவர்.
4. பல கோவில்கட்குத் தொண்டு செய்தவர்.
5. இவரது பட்டத்தரசி உரைசிறந்து உயர்ந்தவள்.
6. அரசர் திருவாரூரில் இறைவனை வணங்குகையில் இவ்வரசி பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டே கோவிலின் அழகைக் கவனித்து வந்தாள்; வந்தவள், பூத்தொடுக்கும் மண்டபத்தண்டை விழுந்திருந்த புதுப்பூ ஒன்றை எடுத்து மோந்தாள்; (அத்தவற்றுக்காகச் செருத்துணை நாயனாரால் மூக்கு அரியப்பட்டாள்).

இவற்றுள் 1, 2, 3, 5 இராச சிங்கற்கும் நந்திவர்மற்கும் ஒற்றுமையுடைய குறிப்புக்களே ஆகும். இராச சிங்கனிடம் (அவனைப் பற்றிய இன்றுள்ள சான்றுகள் கொண்டு) இருந்தவை என்று காட்டமுடியாத நிலையில் 4ம், 6ம் காண்கின்றன. ஆதலின், அவற்றை இங்கு விளக்கல் நலமாகும்.

4ஆம் குறிப்பு

இராச சிங்கன் கயிலாசநாதர் கோவில், ஐராவதேசுவரர் கோவில், மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோவில் போன்ற பல கோவில்களைக் கட்டினவன்; ஆயின், வேறு பல கோவில்கட்குத் 'தொண்டு' (திருப்பணி) செய்தனன் என்று கூறத்தக்க சான்றில்லை. பாடல் பெற்ற கோவில்களில் ஒன்றிலேனும் இராச சிங்கன் கல்வெட்டு இருந்ததாகத் தெரியவில்லை.[15a]

ஆயின், நந்திவர்மன் செய்த சிவத் தொண்டுகள் பலவாகும்:

1. இவன் பட்டம் பெற்ற 6ஆம் ஆண்டில் பொன்னேரிக்கடுத்த திருக்காட்டுப்பள்ளியில் புதிதாய்க் கட்டப்பட்ட சிவன் கோவிலுக்கு அச்சிற்றூரையே தேவதானமாக விட்டான்.[16] இதனைக் கூற எழுந்ததே வேலூர்ப் பாளையப் பட்டயம்.

2. இவன் திருவதிகை வீரட்டானேசர் முன் விளக்கெரிக்க 100 கழஞ்சு பொன் அளித்தான்.[17]

3. இவன் 'குமார மார்த்தாண்டன்' என்ற தன் பெயர் கொண்ட விளக்கு ஒன்றைத் திருவிடைமருதூர்ச் சிவனார்க்களித்தான்;[18] திருவொற்றியூர்ச் சிவன் கோவிலில் விளக்கு வைக்கப் பொன் தந்தான்;[19] திருத்தவத்துறை மகாதேவர் கோவிலில் விளக்கெரிக்கப் பொன் அளித்தான்;[20] திருக்கடைமுடி மகாதேவர்க்கு நிலதானம் செய்தான்.[21] திருப்பதிகம் கோவில்களில் ஓதப்பெற்றது என்பதை முதன் முதல் அறிவிக்கும் திருவல்லம் கல்வெட்டு[22] இப்பெருமகன் காலத்தில் எழுந்ததே ஆகும்.

6ஆம் குறிப்பு

சேக்கிழார் கூற்றிலிருந்து கழற்சிங்கனது பட்டத்தரசி செய்த தவறுகள் இரண்டு என்பது புலனாகும். அவையாவன:

1. கணவன் பூங்கோயிற் பெருமானை வணங்கும் பொழுது உடன் இருந்து வணங்காமை. கோவிலுக்குச் செல்லும் கணவனும் மனைவியும் சேர்ந்தே வணங்குதல் யாண்டும் எக்காலத்தும் உள்ள முறைமை யன்றோ? இவ்வியற்கைக்கு மாறுபட்ட செயல் இவ்வரசியிடம் காணப்படல் நோக்கத் தக்கது.

2. பூமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத்தில் இருந்த புதுமலர் இறைவனுக்கு மாலை கட்டற்குரியது என்பதனையோ, கோவிலில் உள்ள மலரை மோத்தல் ஆகாது என்பதனையோ அறியாமல் இவள் மலரை மோந்தமை பெருங்குற்றமாகும்.

இவ்விரு குற்றங்களையும் செய்தவள் இராச சிங்கன் பட்டத்தரசியாக இருத்தல் கூடுமா? நந்திவர்மன் பட்டத்தரசியாக இருத்தல் கூடுமா? என்பது இங்கு ஆராய வேண்டுவதாகும்.

1. இராசசிங்கன் பட்டத்தரசி **ரங்கபதாகை** என்பவள். அவள் சிவனுக்கு அமைந்த பார்வதிபோல இராச சிங்கனுக்கமைந்த பத்தினி. அவள் கயிலாசநாதர் கோவிலில் உள்ள பல சிறு கோவில்களில் ஒன்றைக் கட்டியவள்.[23] எனவே, அவள் சிறந்த சைவப் பெண்மணி என்பது நன்கு விளங்கும்.

2. நந்திவர்மன் பட்டத்தரசி **சங்கா** என்பவள். இவள் பேரழகி; கலைகளில் வல்லவள்; குடிகட்குத் தாய் போன்றவள்; அரசனது நற்பேறே உருவெடுத்தாற் போன்றவள்; இவள் இராஷ்டிரகூட அரசமரபினள்; இவள் மகன் 'நிருபதுங்கன்' எனப்பட்டவன்.[24] ஆதலின் இவள் இரட்டப் பேரரசனான அமோக வர்ஷ நிருபதுங்கன் I மகள் என்பது கருதப்படுகிறது.[25] அந்த இரட்ட அரசன் காலம் கி.பி. 814-880.[26] அவன் சிறந்த **சமண பக்தன்**; சமண சமய நூல் செய்தவன்;[27] 'ஸ்யாத்வாத' (Syadvada) சமணத்தைப் பின்பற்றியவன்;

திகம்பர சமணரை ஆதரித்தவன்; 'ஜினசேனர்' என்ற சிறந்த சமண குருவின் ஆசி பெற்றவன்.[28] எனவே, 'சங்கா' சிறந்த சமண பக்தன் மகள் என்பது பெறப்பட்டது; அவள் அக்கை கணவனான நீதிமார்க்கன் என்ற கங்க அரசனும் சிறந்த சமண பக்தன்.[28a] இங்ஙனம் சமண குடும்பத்தில் பிறந்தவள் ஆதலின், சங்கா, தன் கணவன் செய்தாற் போலச் சிவன் கோவில்கட்குத் தருமம் செய்திலள் போலும்! ஆயின், நந்திவர்மனது மற்றொரு மனைவியான **அடிகள் கண்டன் மாறம்பாவை** என்பவள் சிறந்த சைவப் பற்றுடையவள்; பல கோவில்கட்கும் பொன் அளித்தவள்.[29] இக்கூறியவற்றால், சங்கா என்ற சமணப் பெண்மணிதான் பட்டத்தரசியாதலின், அரசனுடன் சிவத்தலங்களைக் காணச் சென்றாள்; அரசன் சிவபக்தியில் ஈடுபட்டவன்; இவள் சிவன் கோவில் அழகில் ஈடுபட்டவள்; அதனாற்றான், அரசன் ஆரூர்ப் பெருமானை வணங்கிக் கொண்டிருந்த பொழுது, இவள் கோவில் அழகினைக் கவனித்து வந்தாள் என்பது எண்ண வேண்டுவதாக உள்ளது.

சிறந்த சிவபக்தனான நந்திவர்மன் சமண அரசன் மகளை மணந்தது என்னை? எனின், அஃது அரசியல் தந்திரம் என்க. இங்ஙனமே தமது நாட்டைக் கவர்ந்த பல்லவர்க்கு அஞ்சிச் சைவனான சோழன் சிறந்த சைவப் பற்றுடைய மங்கையர்க்கரசியாரைச் சமணச் சார்புடைய நெடுமாறனுக்கு மணம் செய்வித்ததும் அரசியல் தந்திரம் என்க.

இங்ஙனம் சுந்தரர் கூற்றுக்களைக் கொண்டு ஆராயினும், சேக்கிழார் கூற்றுக்களைக் கொண்டு ஆராயினும், மிகவும் பொருத்தமாகக் கழற்சிங்கன் என்று கருதத்தக்க நிலையில் இருப்பவன் மூன்றாம் நந்திவர்மன் என்பது புலனாகும். இவனது காலமே ஏறத்தாழச் சுந்தரர் காலமாகலாம் என்பதற்குப் பின்வரும் செய்திகளும் துணை புரியக் காணலாம்.

பிற சான்றுகள்

இராச சிம்மனைப் பற்றிய சீனக் குறிப்புக்களைக் கொண்டு அவன் ஆட்சி இறுதிக் காலம் கி.பி. 720 எனக் கொள்ளப்படுகிறது. மகாவம்சம் கொடுத்துள்ள காலக் கணக்குகள் தென் இந்தியக் கல்வெட்டுக் கணக்குகளை விட ஏறத்தாழ 25 ஆண்டுகள் மிகுதிப்படுகின்றன.[30] அதுபோலச் சீனர் குறித்துள்ள தேதிகட்கும் பல்லவ அரசர் தேதிகட்கும் உள்ள வேறுபாடு இதுகாறும் கண்டறியப்படவில்லை. ஆதலின், நந்திவர்மன் காலம் திட்டமாகக் கி.பி. 840-865 என்று கூறமுடியாது என்பது நினைவில் இருத்துதல்

நலம். இந்நினைவுடன் கீழ்வரும் செய்திகளைக் கருத்தூன்றிக் கவனிப்பது நல்லது.

1. சேரமான் பெருமாள் ஆட்சி விட்டுச் சென்ற காலம் கி.பி. 825 என்பது சேரநாட்டில் கூறப்படும் வழக்கமாகும்.[31] இவ்வாண்டு தவிர வேறு ஆண்டு குறிப்பிடாமையும் நோக்கத்தக்கது. இவ்வாண்டு கொல்லம் ஆண்டின் தொடக்கமாகும். கொல்லம் ஆண்டிற்கு வேறு காரணம் கூறப்படினும், நெடுநாள் வழக்காகிய இதுவும் ஒரு காரணமாகலாம் என்று கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை. இவ்வழக்கு உண்மை எனக் கொள்ளின், சேரமான் காலம் ஏறத்தாழக் கி.பி. 825-க்கு அண்மையது என்னலாம். எனவே, சேரமான் தோழர் ஆகிய சுந்தரர் காலமும் அதுவேயாம். இக்காலம் ஏறத்தாழ நமது நந்திவர்மன் காலத்தோடு (கி.பி. 840-865) ஒத்து வருதல் காண்க.

2. சுந்தரர் தமது வட திருமுல்லைவாயிற் பதிகத்தில், சிவபிரான், தொண்டைமான்[32] களிற்றை முல்லைக் கொடியாற் கட்டிட்டு, அச்செயலால் தொண்டைமாற்கு எல்லையில்லாத இன்பம் உண்டாக்கினான்[33] என்றொரு நிகழ்ச்சியைக் குறித்துள்ளார். இந்நிகழ்ச்சி இரண்டாம் நந்திவர்மனுடைய (கி.பி. 727-790) பட்டவர்த்தனம் என்ற மதம் பிடித்த யானையைப் பற்றியதாகலாம் என்று கல்வெட்டறிஞர் கருதுகின்றனர்.[34] இஃது உண்மையாயின், இதனைக் குறிக்கும் சுந்தரர் காலம் மூன்றாம் நந்திவர்மன் காலமாகவே இருத்தல் வேண்டும். என்னை? இரண்டாம் நந்திவர்மனை அடுத்துப் பட்டம் பெற்ற சைவன் மூன்றாம் நந்திவர்மனே ஆதலால் என்க.

3. சேரமான் சிறந்த கொடைவள்ளல் என்பது 'கார் கொண்ட கொடை' என்று சுந்தரர் குறித்ததலால் அறியப்படும். அச்சேரமானிடம் மதுரைப்பாணபத்திரர் இறைவனது பாசுரத்தைக் காட்டிப் பொருள் பெற்றார். அப்பொழுது மதுரை மன்னனாக இருந்தவன் வரகுணன் என்று திருவிளையாடல் குறிக்கிறது. கல்வெட்டுக்களில் இரண்டு வரகுணர் காண்கின்றனர். ஒருவன் காலம் கி.பி. 800-830; மற்றவன் காலம் கி.பி. 862-880. முன்னவனே தொண்டை நாட்டின் தென்பகுதியையும் பல்லவனிடமிருந்து கைப்பற்றியவன்; அவனே சிதம்பரத்தில் கூத்தப்பிரானைத் தரிசித்திருக்கலாம்; திருவிடைமருதூரில் தங்கியிருக்கலாம். இரண்டாம் வரகுணன் தோல்விகளையே தரிசித்தவன். அவன் தில்லைக்குச் சென்றிருத்தல் இயலாது. அதற்குரிய சான்றில்லை. ஆகவே, சுந்தரர் ஏறத்தாழ முதல் வரகுணன் (கி.பி. 800- 830)

காலத்தவராதல் வேண்டும்.[35] இக்காலமும் ஏறக்குறைய நந்திவர்மன் காலத்தோடு ஒத்துவருதல் காண்க.

4. அப்பர் 81 ஆண்டுகள் வாழ்ந்தவர் எனக் கொள்வதாலும், அவர் பல ஆண்டுகள் சமண சமயத்தில் ஈடுபட்டிருந்து பிறகே சைவரானார் என்பதனாலும் சம்பந்தர் அவரது முதுமை நோக்கி, **'அப்பரே'** என அழைத்தமையாலும், அவரது காலம் ஏறத்தாழக் கி.பி. 580-660 எனக் கொள்ளலாம். இக்கால எல்லைக்குள், (1) மகேந்திரன் ஆட்சி (கி.பி. 615-630), (2) நரசிம்மன் ஆட்சியின் பெரும்பகுதி (கி.பி. 630-668), (3) வாதாபிப் படையெடுப்பு (கி.பி. 642), (4) நெடுமாறன் ஆட்சிக் காலத்தின் முற்பகுதி (கி.பி. 640-680) என்பன அடங்கிவிடுகின்றன. வாதாபிப் போருக்குப் பிறகு சிறுத்தொண்டர் செங்காட்டங்குடியிற் குடியேறிச் சிவத்தொண்டில் ஈடுபட்டவர். சம்பந்தர் வயது 16 என்ற கர்ணபரம்பரைக் கூற்றை நம்பினால், சிறுத்தொண்டரைச் சம்பந்தர் சந்திக்கையில் ஏறத்தாழ 10 வயதுடையவராகலாம்; அதன் பிறகே சம்பந்தர் மதுரை சென்று நெடுமாறனைச் சைவனாக்கி மீண்டார். ஆகவே உத்தேசமாகச் சம்பந்தர் சிறுத்தொண்டரைச் சந்தித்த காலம் கி.பி. 650 எனக் கொள்ளலாம். கொள்ளின், சம்பந்தர் பிறப்பு ஏறத்தாழக் கி.பி. 640 என்றும், முக்தியடைந்த ஆண்டு ஏறத்தாழக் கி.பி. 656 என்றும் ஆகும். ஆகவே, சம்பந்தர் காலமும் (கி.பி. 640- 656)[36] முற்சொன்ன அப்பர் காலத்துள் அடங்குதல் காண்க.

இராச சிங்கன் (கி.பி. 685-720) காலத்தவர் சுந்தரர் எனக் கொள்ளின், அப்பர் இறுதிக் காலத்திற்கும் (கி.பி. 660) சுந்தரர் காலத்திற்கும் (கி.பி. 685-720) இடையில் ஏறக்குறைய 25 அல்லது 30 ஆண்டுகளே என்னலாம். இது மிகக் குறுகிய இடைக்காலம் என்பது அறியப்படும். சுந்தரர் காலத்தில் பௌத்த-சமண வாதங்கள் நாட்டில் இல்லை; ஏறத்தாழச் சமய உலகில் அமைதியும் சைவ சமய வளர்ச்சியும் இருந்த காலம் அவரது காலமென்பது அவர் பாக்களால் அறியலாம். இத்தகைய நிலைமை அப்பருக்குப்பின் 30 ஆண்டுக்குள் உண்டாகிவிட்டது என்று எண்ணுதல் இயற்கை நடைமுறைக்கு மாறுபட்டதாகும்.

5. இராச சிங்கனே கச்சியில் முதன்முதல் கற்றளி எடுத்த பல்லவன். அவன் அசரீரி கேட்டான் என்று கயிலாசநாதர் கோவில் கல்வெட்டு அவனைப் பாராட்டுகின்றது. அதனையே சேக்கிழார் பூசலார் புராணத்திற்குறிப்பிட்டனராகலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்.[37] அஃது உண்மையாயின், இராச சிங்கன் பூசலார் காலத்தவன் ஆகின்றான். அக்காலத்திலே சுந்தரரும் இருந்தனர்

நலம். இந்நினைவுடன் கீழ்வரும் செய்திகளைக் கருத்தூன்றிக் கவனிப்பது நல்லது.

1. சேரமான் பெருமாள் ஆட்சி விட்டுச் சென்ற காலம் கி.பி. 825 என்பது சேரநாட்டில் கூறப்படும் வழக்கமாகும்.[31] இவ்வாண்டு தவிர வேறு ஆண்டு குறிப்பிடாமையும் நோக்கத்தக்கது. இவ்வாண்டு கொல்லம் ஆண்டின் தொடக்கமாகும். கொல்லம் ஆண்டிற்கு வேறு காரணம் கூறப்படினும், நெடுநாள் வழக்காகிய இதுவும் ஒரு காரணமாகலாம் என்று கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை. இவ்வழக்கு உண்மை எனக் கொள்ளின், சேரமான் காலம் ஏறத்தாழக் கி.பி. 825-க்கு அண்மையது என்னலாம். எனவே, சேரமான் தோழர் ஆகிய சுந்தரர் காலமும் அதுவேயாம். இக்காலம் ஏறத்தாழ நமது நந்திவர்மன் காலத்தோடு (கி.பி. 840-865) ஒத்து வருதல் காண்க.

2. சுந்தரர் தமது வட திருமுல்லைவாயிற் பதிகத்தில், சிவபிரான், தொண்டைமான்[32] களிற்றை முல்லைக் கொடியாற் கட்டிட்டு, அச்செயலால் தொண்டைமாற்கு எல்லையில்லாத இன்பம் உண்டாக்கினான்[33] என்றொரு நிகழ்ச்சியைக் குறித்துள்ளார். இந்நிகழ்ச்சி இரண்டாம் நந்திவர்மனுடைய (கி.பி. 727-790) பட்டவர்த்தனம் என்ற மதம் பிடித்த யானையைப் பற்றியதாகலாம் என்று கல்வெட்டறிஞர் கருதுகின்றனர்.[34] இஃது உண்மையாயின், இதனைக் குறிக்கும் சுந்தரர் காலம் மூன்றாம் நந்திவர்மன் காலமாகவே இருத்தல் வேண்டும். என்னை? இரண்டாம் நந்திவர்மனை அடுத்துப் பட்டம் பெற்ற சைவன் மூன்றாம் நந்திவர்மனே ஆதலால் என்க.

3. சேரமான் சிறந்த கொடைவள்ளல் என்பது 'கார் கொண்ட கொடை' என்று சுந்தரர் குறித்ததலால் அறியப்படும். அச்சேரமானிடம் மதுரைப்பாணபத்திரர் இறைவனது பாசுரத்தைக் காட்டிப் பொருள் பெற்றார். அப்பொழுது மதுரை மன்னனாக இருந்தவன் வரகுணன் என்று திருவிளையாடல் குறிக்கிறது. கல்வெட்டுக்களில் இரண்டு வரகுணர் காண்கின்றனர். ஒருவன் காலம் கி.பி. 800-830; மற்றவன் காலம் கி.பி. 862-880. முன்னவனே தொண்டை நாட்டின் தென்பகுதியையும் பல்லவனிடமிருந்து கைப்பற்றியவன்; அவனே சிதம்பரத்தில் கூத்தப்பிரானைத் தரிசித்திருக்கலாம்; திருவிடைமருதூரில் தங்கியிருக்கலாம். இரண்டாம் வரகுணன் தோல்விகளையே தரிசித்தவன். அவன் தில்லைக்குச் சென்றிருத்தல் இயலாது. அதற்குரிய சான்றில்லை. ஆகவே, சுந்தரர் ஏறத்தாழ முதல் வரகுணன் (கி.பி. 800- 830)

காலத்தவராதல் வேண்டும்.[35] இக்காலமும் ஏறக்குறைய நந்திவர்மன் காலத்தோடு ஒத்துவருதல் காண்க.

4. அப்பர் 81 ஆண்டுகள் வாழ்ந்தவர் எனக் கொள்வதாலும், அவர் பல ஆண்டுகள் சமண சமயத்தில் ஈடுபட்டிருந்து பிறகே சைவரானார் என்பதனாலும் சம்பந்தர் அவரது முதுமை நோக்கி, **'அப்பரே'** என அழைத்தமையாலும், அவரது காலம் ஏறத்தாழக் கி.பி. 580-660 எனக் கொள்ளலாம். இக்கால எல்லைக்குள், (1) மகேந்திரன் ஆட்சி (கி.பி. 615-630), (2) நரசிம்மன் ஆட்சியின் பெரும்பகுதி (கி.பி. 630-668), (3) வாதாபிப் படையெடுப்பு (கி.பி. 642), (4) நெடுமாறன் ஆட்சிக் காலத்தின் முற்பகுதி (கி.பி. 640-680) என்பன அடங்கிவிடுகின்றன. வாதாபிப் போருக்குப் பிறகு சிறுத்தொண்டர் செங்காட்டங்குடியிற் குடியேறிச் சிவத்தொண்டில் ஈடுபட்டவர். சம்பந்தர் வயது 16 என்ற கர்ணபரம்பரைக் கூற்றை நம்பினால், சிறுத்தொண்டரைச் சம்பந்தர் சந்திக்கையில் ஏறத்தாழ 10 வயதுடையவராகலாம்; அதன் பிறகே சம்பந்தர் மதுரை சென்று நெடுமாறனைச் சைவனாக்கி மீண்டார். ஆகவே உத்தேசமாகச் சம்பந்தர் சிறுத்தொண்டரைச் சந்தித்த காலம் கி.பி. 650 எனக் கொள்ளலாம். கொள்ளின், சம்பந்தர் பிறப்பு ஏறத்தாழக் கி.பி. 640 என்றும், முக்தியடைந்த ஆண்டு ஏறத்தாழக் கி.பி. 656 என்றும் ஆகும். ஆகவே, சம்பந்தர் காலமும் (கி.பி. 640- 656)[36] முற்சொன்ன அப்பர் காலத்துள் அடங்குதல் காண்க.

இராச சிங்கன் (கி.பி. 685-720) காலத்தவர் சுந்தரர் எனக் கொள்ளின், அப்பர் இறுதிக் காலத்திற்கும் (கி.பி. 660) சுந்தரர் காலத்திற்கும் (கி.பி. 685-720) இடையில் ஏறக்குறைய 25 அல்லது 30 ஆண்டுகளே என்னலாம். இது மிகக் குறுகிய இடைக்காலம் என்பது அறியப்படும். சுந்தரர் காலத்தில் பௌத்த-சமண வாதங்கள் நாட்டில் இல்லை; ஏறத்தாழச் சமய உலகில் அமைதியும் சைவ சமய வளர்ச்சியும் இருந்த காலம் அவரது காலமென்பது அவர் பாக்களால் அறியலாம். இத்தகைய நிலைமை அப்பருக்குப்பின் 30 ஆண்டுக்குள் உண்டாகிவிட்டது என்று எண்ணுதல் இயற்கை நடைமுறைக்கு மாறுபட்டதாகும்.

5. இராச சிங்கனே கச்சியில் முதன்முதல் கற்றளி எடுத்த பல்லவன். அவன் அசரீரி கேட்டான் என்று கயிலாசநாதர் கோவில் கல்வெட்டு அவனைப் பாராட்டுகின்றது. அதனையே சேக்கிழார் பூசலார் புராணத்திற்குறிப்பிட்டன ராகலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்.[37] அஃது உண்மையாயின், இராச சிங்கன் பூசலார் காலத்தவன் ஆகின்றான். அக்காலத்திலே சுந்தரரும் இருந்தனர்

எனின், மனக்கோவில் கட்டிய இப்பெரியவரைப் பற்றிச் சுந்தரர் பாடியிருப்பார் அன்றோ? இராசசிங்கனைப் புகழ்ந்த சுந்தரர், அவனோடு தொடர்பு கொண்ட அல்லது அவன் காலத்து வாழ்ந்த வியத்தகு அடியாரான பூசலாரை விதந்து பாடாமைக்குக் காரணம் என்ன? மேலும், இராசசிங்கன் கட்டிய கயிலாசநாதர் கோவிற்கு எதிரில் மிக அண்மையில் இருப்பது 'அநேகதங்காவதம்' என்ற சிவன் கோவில். சுந்தரர் அதனைப் பாடியுள்ளார்; ஆயின், அதற்கடுத்துள்ள கயிலாசநாதர் கோவிலைப் பாடியதாகத் தெரியவில்லை. சுந்தரர் இராசசிங்கனைக் 'கழற்சிங்கன்' என்று பாராட்டியிருப்பாராயின், அவன் கட்டிய வியத்தகு கோவிலைப் பாடாமல் இருந்திருப்பாரோ? இது நன்கு கவனிக்கத்தக்க செய்தியாகும்.

முடிவுரை

இங்ஙனம் பலவகையாக ஆராய்ந்து காணின்,

(1) சுந்தரரும் சேக்கிழாரும் கழற்சிங்கனைப்பற்றிக் கூறிய குறிப்புக்கள் அனைத்திற்கும் நந்திவர்மனைப்பற்றிய குறிப்புக்களே பொருத்தமாகக் காணப்படுகின்றன.

(2) மலையாளக் கூற்றுக் குறிக்கும் காலமும் கி.பி. (825) தொண்டைமான் யானைபற்றிய செய்தி நிகழ்ந்த காலமும் ஏறத்தாழ நந்திவர்மன் காலத்திற்கு ஒத்துவருகின்றன.

(3) சுந்தரர் இராசசிங்கன் காலத்தவராகக்கொள்ளற்கு அப்பர்க்கும் இராசசிங்கனுக்கும் உள்ள குறுகிய கால இடையீடும் சுந்தரர் கயிலாசநாதர் கோவிலைப் பாடாமையும் தடைகளாகக் கருதப்படலாம்.

இவையனைத்தையும் நோக்க, 'இராச சிங்கனே கழற்சிங்கன்' என்ற முடிவுக்குரிய தக்க சான்றுகள் கிடைக்கும் வரை, சுந்தரர் குறித்த கழற்சிங்கன் மூன்றாம் நந்திவர்மனே எனக் கொள்ளலாம்.

குறிப்புகள்

1. T.V.S. Pandarathar, Tamil Polil, Vol.3. pp.205-209. K. Somasundaram, Ibid, Vol.8, pp.414-418; M. Raghava Iyengar's 'Alwargal Kalanilai' pp. 135-136.
2. Rao Bahdur C.M. Ramachandra Chettiar, Sentamil Selvi, Vol.9, pp. 201-205; Dr.C. Minakshi, 'Administration and Social Life under the Pallavas', pp.299-304.
3. Dr.N.V. Ramanayya's article on 'Mahendravarman & Pulikesin II'.
4. Same Scholar's article on Durvinita & Vikramaditya I' (Triveni).
5. Dr. C. Minakshi's Administration and Social Life under the Pallavas', p.117.

5a. R. Gopalan's Pallavas of Kanchi' p.109.

6. Dr. N.V. Ramanayya's article on 'The Date of Pallava Malla', (J.O.R.).
7. Dr. C. Minakshi's 'Ad. & S. life under the Pallava's, p.300.

8. திருத்தொண்டத் தொகை, செ.9.
9. தில்லைப் பதிகம், செ.4.
10. Dr. C. Minakshi's 'Ad. and S. Life under the Pallava's, pp.68 and 90.
11. S.I.I.I. Nos.24, 25 etc.
12. M.K. Rao's 'Gangas of Talked', pp.49- 50; Vide the author's 'Pallavas' (Tamil) pp. 135-139.
13. S.I.I.I.. p.14.
14. Dubrevil - Pallavas, p.68; Dr. Minakshi's 'Ad. and Social Life under the Pallava's, p.90.
15. Dr. Minakshi's, 'Ad. & Pallava's, pp.299-304.
15a. Pallava Ins. Vol.12.
16. S.I.I. 2.98.
17. S.I.I. 8.309.
18. 197 of 1907.
19. 162 of 1938.
20. 27 of 1931.
21. II of 1899.
22. S.I.I.3, p.93.
23. S.I.I. 1. p.23.
24. Bahur plates of Nirupatunga, Sentamil, Vol.17, pp.1-5; Ep. Ind. Vol.18, pp 5-15.
25. M.K. Rao's 'Gangas of Talkad' p.79.
26. Alekar's 'Rashttakutas and their times' p.90.
27. Ibid. p.89.
28. Bombay Gazetteer, Vol.I, Part 2, pp. 199-201.
28a. M.K. Rao's 'Gangas of Talkad', p.78.
29. 300, 303 of 1901; 16 of 1899
30. Sentamil, Vol.17, p.32.
31. Travancore State Manual.
32. 'தொண்டைமான், தொண்டை வேந்தன், தொண்டையர் கோன்' என்ற பெயர்கள் பல்லவர் ஆட்சிக் காலத்தில் பல்லவரையே குறித்தன. - நந்திக் கலம்பகம், செ.5, 45, 68.
33. செ.10.
34. S.I.I.2. 99, V.7 and foot note 6.
35. பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, ப. 58.
36. வாதாபிப் போர் நடந்த ஆண்டைக் கொண்டே சம்பந்தர் காலம் உத்தேசமாக இங்ஙனம் கூற வேண்டுவதாக இருக்கிறது என்பது நினைவில் இருத்தத்தக்கது.
37. R. Gopalan's 'Pallavas of Kanchi', p.109.

# 10. மாணிக்கவாசகர் காலம்

பல்வேறு முடிவுகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் மாணிக்கவாசகர் காலம் பற்றி எழுந்த ஆராய்ச்சி முடிவுகள் பலவாகும். திருவாளர் திருமலைக்கொழுந்து பிள்ளை, வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பொன்னம்பலப் பிள்ளை ஆகிய மூவரும் மணிவாசகர் காலம் கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டாகலாம் என்று முடிவு கூறினர். மும்மொழிப் புலவராய மறைமலையடிகள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என முடிவு கட்டினார். சங்க காலச் சேரர் வரலாற்றை எழுதிய கே.ஜி. சேஷையர் என்பார் கி.பி. நான்காம் நூற்றாண்டின் இடைப் பகுதி என்று குறித்தனர். திருவாளர் திருச்சிற்றம்பலம் பிள்ளை, சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் என்போர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும், ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத் திற்கும் இடைப் பட்ட பகுதியாகலாம் என்றனர். திருவாளர் வில்ஸன், போப் என்னும் மேனாட்டு அறிஞர் கி. பி. 7 அல்லது 8ஆம் நூற்றாண்டாகலாம் என்று கூறினார். மணிவாசகர் சங்கரர்க்குப் பிற்பட்டவர் ஆதலால், அவர் காலம் கி. பி. 9ஆம் நூற்றாண்டாதல் வேண்டும் என்று திருவாளர் இன்னெஸ் என்பவர் குறித்துள்ளர். தமிழ் வரலாறு எழுதிய சீநிவாச பிள்ளை, பூரணலிங்கம் பிள்ளை, சீனிவாச ஐயங்கார், அநவரதவிநாயகம் பிள்ளை முதலியோர் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்றனர். கல்வெட்டறிஞரான கோபிநாத ராயர் கி. பி. 10ஆம் நூற்றாண்டின் இறுதி என்று கூறிப் போந்தார். ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் கி. பி. 13 அல்லது 14ஆம் நூற்றைண்டு என்று டாக்டர் ரோஸ்ட் என்பவர் குறித்துள்ளார். திவான்பகதூர் கே. எஸ் இராமசாமி சாஸ்திரிகள் கி. பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டு என்று கூறியுள்ளனர்.

இங்ஙனம் திருவாசகமும், திருக்கோவையாரும் பாடிய மாணிக்கவாசகர் காலம் பலரால் பலவாறு சொல்லப்பட்டு வருகின்றது. இவற்றுள், மாணிக்கவாசகர் மூவர்க்கும் முற்பட்டவர் என்பவர் கூற்றுக்களைத் தக்க காரணங்கள் காட்டி மறுத்துக் கி.பி. 9ஆம் நூற்றாண்டே மணிவாசகர் காலமாக இருத்தல்வேண்டும் என்று எழுதியவருள் தஞ்சை சீநிவாசப் பிள்ளை, பூரணலிங்கம் பிள்ளை, M. சீநிவாச ஐயங்கார் என்போர் சிறப்பிடம் பெறத்தக்கவர்.

தடை விடைகள்

(1) கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பாடிய தேவாரத்தில்,

"குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டாய்"

என்று கூறியிருத்தல் மணிவாசகரைக் குறிப்பது என்று ஒரு சாரார் கூறுவர். மணிவாசகர் வரலாற்றைக் கூறும் இரண்டு திருவிளையாடற் புராணங்கள், வாதவூரர் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், உத்தரகோச மங்கைப் புராணம் என்னும் நூல்களுள் மணிவாசகர் பிறப்பு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஆயின், ஒன்றிலேனும் அவர் குடமுழாவை வாசிக்கும் நந்தி என்பது குறிக்கப்படவில்லை. எனவே, இக்காரணம் பொருந்தாது என்று சீநிவாசப் பிள்ளை முதலியோர் மறுத்துள்ளனர்.

(2) அப்பர் திருவாரூர்ப் பதிகத்தில், "நரியைக் குதிரை செய்வானும்" என்று குறித்திருத்தல், மணிவாசகர்க்காகச் சிவபிரான் நரியைப் பரியாக்கிய கதையைக் குறிக்கிறது. ஆதலால் மணிவாசகர் அப்பருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்று ஒரு சாரார் குறித்தனர்.

"இத்தேவாரத்தில் 'நரியைக் குதிரை செய்வானும்' என்பது மணிவாசகர் கதையைக் குறிக்கிறதென்றால், அதே செய்யுளில் வரும் 'நரகரைத் தேவு செய்வானும்' என்பதும், 'விரதம் கொண்டு ஆடவல்லானும்' என்பதும் எந்தக் கதைகளைக் குறிக்கின்றன? 'நரியைக் குதிரை செய்தான்', 'நரகரைத் தேவு செய்தான்' என்று சொல்லாது 'செய்வான்' எனச் சொல்லியிருப்பதனால் இவ்வரிகள், குறிப்பிட்ட கதைகளைக் குறிப்பன அல்ல என்பதும், சிவபிரானது பேராற்றலைக் குறிப்பதே அப்பர் கருத்து என்பதும் அறியத் தகுவன. 'நரியைக் குதிரை செய்வானும்' என்னும் தொடர் மணிவாசகர் கதையைக் குறிப்பதென்று கொண்டால் மணிவாசகர் பாடிய திருவாசகத்தில் வரும், 'கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்'

என்பதைச் சம்பந்தர்க்குக் கடவுள் காட்சி கொடுத்ததைக் குறிக்கிறது என்று ஏன் கொள்ளக்கூடாது? மணிவாசகர், 'செந்நாவலர் பரசும்' என்றும், 'பண்சுமந்த பாடல்' என்றும் திருவாசகத்தில் சொல்லியிருப்பவற்றைத் தேவாரம் பாடிய மூவரைக் குறிப்பன என்று ஏன் கொள்ளக்கூடாது?" என்று சீநிவாசப் பிள்ளை போன்றார் கூறி மறுத்துள்ளனர்.

"மாணிக்கவாசகர் நரி பரியாக்கியதையும், மண் சுமந்ததையும், தம்மொடு புணர்த்துக் கூறினாரல்லர். அவை மாணிக்கவாசகர்க்கு மிக முற்பட்ட காலத்து நிகழ்ச்சிகளாய் இருத்தல் வேண்டும்" என்று திருவாளர் அநவரத விநாயகம் பிள்ளை[1], திரு. பொ. பழநியப்ப பிள்ளை[2] என்ற அறிஞர்கள் குறித்துள்ளமை கூர்ந்து நோக்கத் தக்கது.

இவ்வாறு ஒரு சாரார் கூற்றுக்கு மற்றொரு சாரார் தக்கவாறு விடையளித்து, மணிவாசகர் மூவர்க்கும் முற்பட்டவர் அல்லர் என்று தெளிய வைத்துள்ளனர்.

**'பிற்பட்டவர்' – காரணங்கள்**

(1) அகநானூற்றுச் செய்யுள் ஒன்றில் (4), திருச்சிராப்பள்ளியில் உள்ள குன்றம், "விழாக்கள் மலிந்த உறையூர்க்குக் கிழக்கில் உள்ள நெடும்பெருங்குன்றம்" என்னும் பொருள்பட,

கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும் பெருங் குன்றம்,

எனப்படுகின்றது. இவ்வடிகளில் அக்குன்றத்தின் பெயரோ அதனைச் சார்ந்த ஊரின் பெயரோ குறிக்கப்படவில்லை.

அறுபான் மும்மை நாயன்மாருள் ஐயடிகள் காடவர் கோன் என்பவர் ஒருவர். இவர் சிறந்த வடமொழிப் புலவர்; தமிழ்ப் புலவர்; மகனிடம் அரசை ஒப்பித்து, சிவத்தளி யாத்திரை செய்து, தலத்துக்கொரு வெண்பாப் பாடினவர்.[3] இவர் வடமொழிப் புராணத்தில் **சிம்ஹாங்க, பாதசிம்ஹா, பஞ்சபாதசிம்ஹா** (Simhanka Padasimha, Panchapadasimha) என்ற பெயர்களை உடையவராக்கக் காண்கிறார். மேலும் இவர் மகன் **பீமவர்மன்** என்று அந்நூல் கூறுகின்றது. பல்லவர் பட்டியலிற் பீமவர்மன், சிம்ம விஷ்ணு இவர்தம் தந்தை மூன்றாம் சிம்மவர்மன் என்பது காண்கிறது. எனவே, இவர் மூன்றாம் சிம்மவர்மனாகலாம் என்பது அறிஞர் கருத்து.[4] அது பொருத்தமாயின், சிம்ம விஷ்ணுவின் (கி.பி.

575–615) தந்தையாரான இவர் காலம் ஏறத்தாழக் கி. பி. 550–575 என்னலாம்.

இவர் தமது **சிவத்தல வெண்பா** என்ற நூலில் சிராமலையைப் பற்றி ஒரு வெண்பாப் பாடியுள்ளார்.[5]

சிராமலையான் பாதமே சேர்

என்பது அவ்வெண்பாவின் கடைசி அடி. எனவே இவர் காலத்தில் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு) **சிராமலை** என்பது மலையின் பெயராக வழங்கப்பட்டது என்பது தெளிவு.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாம் மகேந்திரவர்மன் (கி. பி. 615–630) காலத்தவரான **திருநாவுக்கரசர்,**

சிராப்பள்ளி மேவிய நாயனார்[6]

என்று பாடியுள்ளார்.

அதே நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர்,

சிராப்பள்ளி மேய செல்வனார்[7]

என்று பாடியுள்ளார்.

இன்றுள்ள (திருச்சிராப்பள்ளி என்னும் ஊரில் உள்ள) குன்றின் மீது உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறத்தில் ஒரு குகையுள்ளது. அதனில் நான்கடி நீளமும் ஒன்றரையடி அகலமும் உள்ள கற்படுக்கைகள் உள்ளன. அவற்றில் உள்ள கல் தலையணைகள்மீது அவற்றைப் பயன்படுத்திய சமண முனிவர் பெயர்கள் பொறிக்கப்பட்டுள. அவற்றுள் ஒன்று சிரா என்பது. அப்பெயர் கொண்ட துறவியாரது சிறப்பினால் அங்கிருந்த சமணப்பள்ளி அல்லது அவரது தவப்பள்ளி சிராப்பள்ளி எனப்பட்டது போலும்! அக்கல்லெழுத்துக்களின் காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு என்பது கல்வெட்டறிஞர் கருத்து.[8]

கி. பி. ஏழாம் நூற்றாண்டினரான அப்பரும் சம்பந்தரும் 'சிராப்பள்ளி'யைச் சிவன் கோவிலாகப் பாடியுள்ளதை நோக்க, அஃது அவர்கள் காலத்தில் சிவன் கோவிலாக மாறிவிட்டது அல்லது தவப் பள்ளியின் பெயர் சமணர் செல்வாக்குக் குறைந்த காலத்தில் சிவன் கோவிலைக் குறிக்கலாயிற்று எனக் கருதலாம். அப்பர் காலத்தவனான முதலாம் மகேந்திரவர்மன் வேறு சமயத்திலிருந்து சைவனாக மாறிச் சிவலிங்கத்தை அக்குன்றின் மீது எழுந்தருளச் செய்தான் என்பதை அக்குன்றில் உள்ள கல்வெட்டுக்கள்[9] உணர்த்துகின்றன. எனவே, அந்நிகழ்ச்சி

நடைபெற்றது முதல் **சிராப்பள்ளி** என்பது சிவன் கோயிலைக் குறிக்கலாயிற்றெனக் கொள்ளலாம்.

சிராப்பள்ளி என்னும் கோவிலைத் தன்னகத்தே கொண்ட ஊர் கி. பி. ஒன்பது, பத்து முதலிய நூற்றாண்டுகளில் சிற்றம்பர் எனப் பெயர் பெற்றது என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது.[10] "உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரில் உள்ள **சிராப்பள்ளிக் கோயில்**",[11] என்பது கல்வெட்டால் தெரிகிறது.

எனவே, சிராப்பள்ளி என்ற பெயர் ஏறத்தாழக் கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டதென்பது தெளிவு. மாணிக்கவாசகர் தமது போற்றித் திருவகலில் (வரி 154),

சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

என்று கூறியுள்ளார். இதனால் அவர் கி. பி. 5 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு.

(2) சைவர்க்குள் சமயாசாரியர் முறைவைப்பு உண்டு. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்பதே அம்முறை வைப்பு. இம்முறை வைப்பு முதன் முதலில் கி. பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தடிகள் கூற்றால் அறியலாம்.

வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்.[12]

பெருந்துறைப் பிள்ளை என்பது மணிவாசகரைக் குறிப்பது. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவம் இயற்றிய கோயிற் புராணத்திலும் மாணிக்கவாசகர் நான்காம வராக வைக்கப்பட்டுள்ளனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டிலும் 16ஆம் நூற்றாண்டிலும் செய்யப்பட்டனவாகக் கருதப்படும் இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும் மாணிக்கவாசகர் ஈற்றில் வைக்கப்பட்டுள்ளனர். மாணிக்கவாசகரைப் பெரிதும் கொண்டாடும் வீரசைவச் சான்றோராகிய சிவப்பிரகாச சுவாமிகளும் (கி.பி. 17ஆம் நூற்றாண்டு) தாம் இயற்றிய நால்வர் நான்மணிமாலையில் மாணிக்கவாசகர் துதியை நான்காம் துதியாகவே வைத்துள்ளார். அதே நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரரும் தாம் பாடிய நால்வர் நான்மணி மாலையில் மணிவாசகரை நான்காம் ஆசாரியராகவே வைத்துப் பாடியுள்ளனர். இவ்வாறே சிதம்பர புராணம், சேது புராணம் முதலிய புராண நூல்களில் மாணிக்கவாசகர்துதி நான்காவதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்ச் சான்றோர் அனைவரும் சமயாசாரியர் நால்வரில் மணிவாசகரை ஈற்றில் வைக்க காரணம் என்ன?

(3) *மாணிக்கவாசகர்,*

வரகுணனாந் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்

மயலோம்பி இருங்களியானை வரகுணன்

என்று தம் திருக்கோவையில் வரகுண பாண்டியனைக் குறித்திருத்தலால், அப்பாண்டியன் காலத்தவர் என்று கருத இடமுண்டு. பாண்டியர் பட்டியலில் வரகுணன் என்ற பெயருடன் இருவர் காணப்படுகின்றனர். முன்னவன் பின்னவனுக்குப் பாட்டன். முதல் வரகுணன் காலம் கி. பி. 765–815. இரண்டாம் வரகுணன் காலம் 862–880.[13] முதல் வரகுணன் காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோவில் எடுப்பித்தான். இவன் பரம வைஷ்ணவன் என்று சென்னைப் பொருட் காட்சிச் சாலைப் பட்டயங்கள் குறிக்கின்றன. இவன் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவருக்கும் வணக்கம் கூறியுள்ளான். திருச்சிராப்பள்ளி, அம்பா சமுத்திரம் கல்வெட்டுக்கள் இவனது சிவப்பணியைக் குறிக்கின்றன. இவன் திருச்செந்தூர் முருகப்பெருமான் கோவிலுக்கும் தருமம் செய்துள்ளான். இவனது ஆட்சி பாண்டிய நாட்டுக்கப்பால் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் என்னும் மாவட்டங்களிலும் பரவியிருந்தது.

மாணிக்கவாசகரால் பாராட்டப்பட்ட வரகுணன் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தடிகளால்.

வெள்ளை நீறு மெய்யிற் கண்டு.......
பெரிய அன்பின் வரகுண தேவரும்,

என்று பாராட்டப்பட்டனன். அப்பாண்டியனைக் கி. பி . 10ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி கோவில் திருப்பண்ணியர் விருத்தத்தில் பாராட்டியுள்ளார். ஆனால், இப்பாண்டியன் செயல் அப்பர், சம்பந்தர், சுந்தரரால் குறிக்கப்படவில்லை. இவற்றை நோக்க, **வரகுணன் தேவார ஆசிரியர் மூவர்க்கும்** பிற்பட்டவன் என்பது தெளிவு. இவனைப் பிற்பட்ட கல்லாடர், திருவிளையாடற் புராண ஆசிரியன்மார், திருவிடைமருதூர்ப் புராண ஆசிரியர் தத்தம் நூல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளனர் என்பதும் இங்கு அறியத்தகும்.

(4) அத்துவைதம் என்று வழங்கும் ஏகாத்தும வாதம் அல்லது மாயாவாதம் தேவார ஆசிரியர்களால் குறிக்கப்படவில்லை. சங்கரர் காலத்தில்தான் மாயாவாதம் ஓங்கியது. சங்கரர் காலம் கி. பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டு என்று சொல்லலாம். இம்மாயாவாதத்தைக்

கி. பி. 12, 13ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சந்தான ஆச்சாரியர்கள் கண்டித்து உள்ளனர். மாணிக்கவாசகர் போற்றித் திருஅகவலில்,

மிண்டிய மாயா வாதம் என்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தார்த்து

என்று கூறியுள்ளனர். எனவே, இவர் கி.பி. 9ஆம் நூற்றாண்டினர் என்பதை இது வற்புறுத்தும்.[14]

(5) மூவர் பாடல்களில் ஆகமங்களைக் குறிக்கும் இடங்கள் மிகச் சிலவே. ஆயின், மாணிக்கவாசகர் பல இடங்களில் ஆகமங்களைக் குறிப்பிட்டுள்ளார்:

"ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க"

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்"

"சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்"

"மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்"

என்று இங்ஙனம் சொல்லியிருத்தல், மணிவாசகர் காலத்தில் ஆகமம் சிறப்படையத் தொடங்கியதைக் காட்டும். தேவார காலத்தில் சிவபக்தர்கள் அடியார்கள் என்றும், தொண்டர்கள் என்றும் சொல்லப்பட்டனர். விஷ்ணு பக்தர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். சைவம், வைணவம் ஆகிய இரண்டிலும் பிற்காலத்தில் ஆசாரியர் தோன்றினர். சைவத் திருமுறைகள் வகுக்கப்பட்ட பின்பு முன்பிருந்த சிவனடியாருட் சிலர் சமயாசாரியார் ஆக்கப்பட்டனர். மெய்கண்ட தேவர் முதலிய சந்தான ஆசாரியர் 12, 13, 14ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவராவர். ஆகமம் பரவிய பிறகு தீட்சை தேவைப்பட்டது. தீட்சை செய்விக்க ஆசாரியன் தேவைப்பட்டான். பின்தோன்றிய சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஆசாரியன் இன்றியமையாமை வற்புறுத்தப்பட்டது. தேவார ஆசிரியர் தீட்சை பெற்றவர் அல்லர். மணிவாசகர் தீட்சை பெற்றார்; ஆசாரியரையும் பெற்றார். எனினும், ஆசாரியப் பின்வந்த சாத்திரப்படி ஞானத்தை ஆசாரியர் உபதேசிக்கவில்லை; பத்தி மார்க்கத்தையே உபதேசித்தார். பத்தியால் மலம் கெடும்; ஞானம் வரும்; சிவமாகலாம்.

"பக்தி நெறி அறிவித்து"

"சிவமாக்கி எனையாண்ட"

என்னும் திருவாசகத் தொடர்களால் இதனையறியலாம். எனவே, "ஆகம நெறி சிறிது பரவியும், முற்றும் பரவாமலும் இருந்த காலம் மணிவாசகர் காலம் என்னலாம்".[15]

(6) மூவர் பாடல்களில் மலங்கள் மூன்று என்று சொல்லவில்லை. ஆணவமலம் என்பது காணப்படவில்லை. மாயை, கர்மம் என்ற இரண்டையே மலம் என அக்காலத்தார் கொண்டனர். ஆகமம் பரவிய பிறகு ஆணவமலத்தைக் கூட்டி மலம் மூன்றெனப்பட்டது. மணிவாசகர்,

"மும்மலம் அறுக்கும்"
"உள்ள மலம் மூன்றும்"
"மும்மலப் பழவினை"
"மும்மை மலம் அறிவித்து"

என்று கூறியுள்ளது காண்க.

(7) 'வினை ஒப்பு' என்பது ஆகம நூல்களில் கூறப்படுவது. இது மூவர் பாடல்களில் காணப்படவில்லை. திருவாசகத்தில் ' என்வினை ஒத்தபின்' என்று கூறப்பட்டுள்ளதைக் காண்க.

(8) தேவார ஆசிரியர் மூவரும் சிவபிராமன் தம்மைச் சிவமாக்கியதாய்க் கூறவில்லை. சிவபெருமான் எப்பொழுதும் இடையறாது அவர்தம் உள்ளத்தில் நிறைந்து இருந்ததனால், "சித்தம் சிவமாக்கி" என்றனர். தாம் சிவத்தோடு ஒன்றப் போவதாய் அம்மூவரும் சொல்லவில்லை. இறைவன் திருவடிகளில் தம்மைச் சேர்க்கும்படியே வேண்டினர். அம்மூவருக்குப் பின்னே ஏகாத்தும வாடை வீசியது. சைவர்களும் சிவத்தோடு ஐக்கியமாவதை ஒருவகையில் ஒப்புக் கொண்டனர். மணிவாசகர்,

"சிவமாக்கி எனையாண்ட"
"பேதமில்லதோர் கற்பளித்த"
"தந்ததென் றன்னைக் கொண்டதுன் றன்னை"
"தன்னைத் தந்த வென்னா ரமுதை"

எனவும் கூறுவன இங்குக் கவனிக்கத் தக்கவை. மேற் சொல்லியவற்றால் தேவார காலத்திற்குப் பின்னர் ஆகமம் சிறிது பரவிய காலத்து மணிவாசகர் இருந்தாரெனக் கொள்ளலாம்.[16]

(9) "தாழிசை துறை விருத்தம் என்னும் இனங்களைச் சங்க காலத்துச் சான்றோர் கொள்ளவில்லை. மூவர் பாடல்களில் விருத்தங்கள் காணப்படுகின்றன. திருவாசகம், திருக்கோவையார் இவற்றில் விருத்தம், துறை இரண்டும் காணப்படுகின்றன. காலம் செல்லச் செல்லப் பாவினங்கள் பெருகுவதை அறியலாம்".[17]

(10) "தேவாரம் பாடிய காலத்துப் பாட்டியலில் சொல்லப்படும் பிரபந்த பேதங்கள் சிலவே. மணிவாசகர் கோவை இயற்றியவர். அவர் பாடிய பாவினங்களின் வகைகளும் கவனிக்கத் தக்கன. அவை திருச்சதகம், திருவெம்பாவை, திரு அம்மானை,

திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருப்பொன்னூசல், குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி முதலிய இவ்வகைகளைப் பிற்காலத்துப் பெருகியன எனக் கொள்ளலாம்".[18]

(11) மூவர் பாடல்களில் சிலபெருமான் திருவிளையாடல்கள் மிகச் சிலவாகவே குறிக்கப்பட்டுள்ளன. ஆயின், மாணிக்கவாசகர், கல்லாடர் பாடல்களில் அவை மிகப் பலவாகக் குறிக்கப்பட்டுள்ளன. எனவே, திருவிளையாடற் கதைகள் மிகப்பலவாக வழங்கிய பிற்பட்ட காலத்தில் மணிவாசகர் இருந்தனராதல் வேண்டும்.[19]

(12) ஒரு நூலுக்கு உரை வகுக்கும் உரையாசிரியன் அந்நூலாசிரியன் காலத்து நூல்களிலிருந்தும், அவனுக்கு முற்பட்ட கால நூல்களிலிருந்தும் விளக்கம் தருதலே ஏற்றது. அம்முறை பற்றியே திருக்கோவையாருக்கு உரைவகுத்த பேராசிரியர் தொல்காப்பியம், குறள், கலித்தொகை, நாலடியார், அப்பர் தேவாரம், இறையனார் அகப்பொருள் இவற்றிலிருந்து விளக்கம் தந்துள்ளார். இவற்றை நோக்க, அப்பர் மணிவாசகர்க்கு முற்பட்டவர் என்பது தெளிவன்றொ?[20]

(13) மணிவாசகர் ஈழத்துப் புத்தரை வாதில் வென்ற செய்தி வாதவூர்த் தல புராணத்தும் ஈழநாட்டு ராஜரத்னகரி என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி கி.பி. 869இல் நடந்ததாதல் வேண்டும்.[21]

(14) பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மாணிக்கவாசகர் இந்நால்வர் பாடல்களும் கருத்திலும் மொழியிலும், நடையிலும், அமைப்பிலும் ஏறத்தாழ ஒத்திருத்தலால், ஏறத்தாழ இந்நால்வரும் சமகாலத்தவராகக் கூறலாம். முதல் மூன்று ஆழ்வார்களும் ஏறத்தாழக் கி.பி. 850–க்கும் 925–க்கும் இடைப்பட்டவர்.

எனவே, சுருங்கக்கூறின், மணிவாசகர் பெரியாழ்வாரும் ஆண்டாளும் வாழ்ந்த காலத்தவராகவும், இரண்டாம் வரகுணன் காலத்தவராகவும் இருந்தவர் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

(15) மணிவாசகர் தமது போற்றித் திரு அகவலில்,

கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
**கலையார் அரிகே சரியாய் போற்றி**
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி

என்று பல தலங்களில் கோயில்கொண்டுள்ள சிவபெருமானைக் குறித்துள்ளார். இப்பல இடங்கள் கவைத்தலை, குவைப்பதி, மலைநாடு, அரிகேசரி, திருக்கழுக்குன்றம், திருப்பூவணம் என்பன. இவ்விடங்களில் உள்ள கோவில்களில் உள்ள சிவபெருமானை விளித்துப் போற்றி, 'போற்றி, போற்றி' என்று மணிவாசகர் பாடியுள்ளார். இவ்விடப் பெயர்களுள் 'அரிகேசரி' என்பது எது? அஃது எங்குள்ளது?

மணிவாசகர் காலத்தில் 'அரிகேசரி' என்பது அரிகேசரி நல்லூர் என்ற ஊரின் பெயராகும். இந்நீண்ட முழுப் பெயர் நாளடைவில் பேச்சு வழக்கில் குறைந்து அரிகேசரி என வழங்கலாயிற்று. இவ்வூர் பிற்காலத்தில் 'சின்னமனூர்' என வழங்குகிறது. இது மதுரை மாவட்டத்துப் பெரிய குளம் வட்டத்தைச் சேர்ந்தது. இவ்வுண்மையைக் கீழ்வரும் கல்வெட்டு உணர்த்தும் :

"பாண்டி மண்டலத்து அளநாட்டுப் பிரம்ம தேயமான அரிகேசரி நல்லூர் ராஜசிம்மேசுவரம் உடைய நாயனார்".[22]

கி.பி. 670 முதல் 710 வரையில் பாண்டிய நாட்டை **அரிகேசரி** மாறவர்மன் என்ற பாண்டியன் ஆண்டு வந்தான். அவன் பெயரால் அரிகேசரி நல்லூர் ஏற்பட்டிருத்தல் வேண்டும். பூதப்பாண்டிய நல்லூர், வீர பாண்டிய நல்லூர், கங்கைகொண்ட சோழபுரம், ஜயங்கொண்ட சோழபுரம், வீரசோழ நல்லூர், விக்கிரம பாண்டிய நல்லூர், சோழமாதேவி நல்லூர், சேரமாதேவிச் சதுர்வேதிமங்கலம், முடிகொண்ட சோழபுரம், உய்யக்கொண்டான் திருமலை என்ற நீளமான ஊர்ப்பெயர்கள் முறையே பூதபாண்டி, வீரபாண்டி, கங்கை கொண்டான், ஜயங்கொண்டம், வீரசோழன், விக்கிரபாண்டி, சோழமாதேவி, சேரமாதேவி, முடிகொண்டான், உய்யக்கொண்டான் எனக் குறைந்து இன்று வழங்குகின்றன. இவைபோலவே அரிகேசரிநல்லூர் நாளடைவில் **அரிகேசரி** என வழங்கலாயிற்று. இவ்வழக்கு மணிவாசகர் காலத்தில் இருந்தமையாற்றான் அவர் **'அரிகேசரி நல்லூராய்'** என்று அழைப்பதற்குப் பதிலாக 'அரிகேசரியாய்' என அழைத்தனர்.

"கலைமார் அரிகேசரியாய்" என்ற தொடருக்குக் 'கலைகள் பொருந்திய அரிகேசரி நல்லூரிலுள்ள பெருமானே' என்பது பொருள். அரிகேசரிநல்லூர் வேதங்களில் வல்ல பிராமணர்க்குத் தானமாக விடப்பட்டது என்று கல்வெட்டுக் கூறுகிறது. எனவே, பல கலைகளிலும் வல்ல பிராமணர் வாழ்ந்த அரிகேசரிநல்லூரைக் 'கலையார் அரிகேசரி' என அழைத்தது பொருத்தமன்றோ?

அரிகேசரிநல்லூரில் உள்ள சிவன் கோவில் இராஜசிம்மேசுவரம் எனப் பெயர் பெற்றிருந்தது என்று கல்வெட்டுக் கூறுகின்றது. எனவே, இராஜசிம்மன் என்ற பாண்டியனால் அது கட்டப்பட்டது என்பது தெளிவு. பாண்டியர் பட்டியலில் இராஜசிம்மன் என்ற பெயருடன் இருவர் காண் கின்றனர். முதலாம் இராஜசிம்மன் காலம் கி.பி. 740-765. இரண்டாம் இராஜசிம்மன் காலம் கி.பி. 900-925. ஊர்ப்பெயருக்குக் காரணமான அரிகேசரி என்பவன் ஞானசம்பந்தரால் சைவனாக்கப்பட்ட நின்றசீர் நெடுமாறன். அவன் பெயரனே முதலாம் இராஜசிம்மன். தன் பாட்டனான நெடுமாறனும் பாட்டியான மங்கையர்க்கரசியும் சிறந்த சிவபக்தர்கள் ஆதலால், அவர் வழியில் வந்த முதலாம் இராஜசிம்மன் தன் பாட்டன் பெயர் கொண்ட ஊரில் ஒரு சிவன் கோவிலைக் கட்டியிருத்தல் இயல்பே. இரண்டாம் இராஜசிம்மன் நெடுமாறனுக்கு ஏழு தலைமுறை கழித்து வந்தவன். முதற்பாண்டியப் பேரரசின் கடைசி அரசன். மேலும் அவன் ஓயாத போர்களில் ஈடுபட்டுப் பராந்தக சோழனிடம் தோற்று இலங்கைக்கு ஓடியவன். மேலும் மணிவாசகரால் குறிக்கப்பட்ட வரகுண பாண்டியன் காலத்துக்குப் (இரண்டு வரகுணர் காலத்துக்கும் கி.பி. 792-835, கி.பி. 862-880) பிற்பட்டவன் ஆகின்றான். இவ்விரு காரணங்களாலும் இரண்டாம் இராஜசிம்மன் அரிகேசரி நல்லூரில் மணிவாசகரால் சுட்டப்பட்ட சிவன் கோவிலைக் கட்டியிருத்தல் இயலாது. எனவே, மணிவாசகரால் சுட்டப்பட்ட சிவன் கோவிலைக் கட்டியவன் **முதல் இராஜசிம்மனாகத்தான்** இருத்தல் வேண்டும் என்பது எளிதில் புலனாகும்.)

அரிகேசரிநல்லூர் என்ற ஊர்ப் பெயர் ஏற்பட்ட காலம் கி.பி. 640-670. அப்பிரமதேய ஊரில் இராஜசிம்மேசுரம் கட்டப்பட்ட காலம் கி.பி. 710-765. 'அரிகேசரிநல்லூர்' என்ற பெயர் நீண்டகால வழக்கிற்குப் பின்பே 'அரிகேசரி' என்று சுருங்குதல் இயல்பு. அங்ஙனம் சுருங்கி வழங்கப்பட்ட காலத்தில் வாழ்ந்தமையாற்றான் மணிவாசகர் அரிகேசரிநல்லூரை 'அரிகேசரி' என வழங்கினராதல் வேண்டும். மேலும், அவர் தமது திருக்கோவையாரில் இரண்டு இடங்களில்[24] பாண்டியன் வரகுணனை நிகழ்காலத்தில் வைத்துப் பாடியிருத்தலால், வரகுணன் காலத்தவராகக் கருத இடமுண்டு. பாண்டியர் பட்டியலில் வரும் வரகுணன் இருவரில் இரண்டாம் வரகுணன் காலத்தவராகவே மணிவாசகர் இருந்தனராதல் வேண்டும் என்று பலர் கருதுகின்றனர்.

மணிவாசகர் திருக்கோவையாரைப் பாடவில்லை என்றும், 'திருவாதவூர்ச் சிவபாத்தியன் திருக்கோவை செய்தான்' என்றும் நம்பியாண்டார்நம்பி கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் கூறியிருத்தலால், திருக்கோவையார் பாடியவர் சிவபாத்தியன் என்பவரே என்றும் சிலர் கருதுகின்றனர்.

கொழும்புப் பொருட்காட்சிச் சாலையில் உள்ள மாணிக்கவாசகர் செப்புப்படிமம் பனையோலையைக் கையில் ஏந்தியிருப்பதாகக் காணப்படுகிறது. அப்பனையோலைமீது "நமசிவாய" என்பது எழுதப்பட்டுள்ளது. அப்படிமம் கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று அறிஞர் கருதுகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் மதுக்கூர் கிராமத்தில் 1933 இல் கண்டெடுக்கப்பெற்ற மணிவாசகர் செப்புப் படிமத்தின் இட உள்ளங்கையில் "ஓம் திருவளர் தாமரை சி" என்பது பொறிக்கப்பட்டுள்ளது. இப்படிமத்தின் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்று அறிஞர் கருதுகின்றனர். திருவாசகத்தின் தொடக்கம் "நமசிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க" என்பது. அதுவே கொழும்புப் பொருட்காட்சிச் சாலையில் உள்ள மணிவாசகர் படிமத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. திருக்கோவையாரின் தொடக்கம்,

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லை

என்பது. இத்தொடக்கமே மதுக்கூரில் கண்டெடுக்கப்பட்ட மணிவாசகர் படிமத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே, திருவாசகமும் திருக்கோவையாரும் மணிவாசகரால் செய்யப்பட்டவையே என்பது தெளிவாதல் காண்க.[25]

வரகுணவர்மர் இருவருள் மணிவாசகர் எவர் காலத்தைச் சேர்ந்தவர்? முதல் வரகுணன் வேணாட்டுத் தலைவனுடனும் கொங்கு நாட்டை ஆண்ட அதிகனுடனும் மிகுதியாகப் போரிட்டவன். இரண்டாம் வரகுணன் சோழ நாட்டிலுள்ள இடவை, திருப்புறம்பியம், வேம்பில் இவ்விடங்களில் போர் நடத்தியவன்; திருப்புறம்பியப் போரில் சோழன், பல்லவன், மேலைக்கங்க அரசன் ஆகிய மூவருடனும் போரிட்டவன். இங்ஙனம் பாண்டிய நாட்டை விட்டுச் சோழநாடு சென்ற இவன் சிதம்பரம் சென்று மணிவாசகர் குறிப்பிட்டபடி சிற்றம்பலத்துப் பெருமானை வழிபட்டிருத்தல் கூடியதே. கீழ்வரும் உண்மைகளாலும் இது பொருந்துதல் காண்க.

திருவிளையாடற் புராணங்கள் இரண்டும், திருவிடைமருதூர்ப் புராணமும் வரகுண பாண்டியன் வரலாற்றைக் குறிக்கின்றன. அவ்வரலாற்றுச் செய்திகள் இவ்விரண்டாம் வரகுணனைப் பற்றிய கல்வெட்டுச் செய்திகளோடும் பல இடங்களில் மணிவாசகர் குறிக்கும் செய்திகளோடும் ஒன்றுபடல் காணத்தக்கது.

வரகுணன் வேட்டையாடித் திரும்பும்பொழுது அவனது குதிரையின் கால்களில் சிக்குண்டு பிராமணன் ஒருவன் இறந்தான். அதனால் பிரம்மஹத்திதோஷம் அவனைப் பற்றிக்கொண்டது. பாண்டியன் அதனைத் தொலைக்க மதுரைச் சோமசுந்தரக் கடவுளை வேண்டினான். அவ்வமயம் சோழ மன்னன் பாண்டியன்மேல் படையெடுத்தான். பாண்டியன் தனக்கு வெற்றி தருமாறு இறைவனை வேண்டினான். சோழன் படையை விரட்டிக் கொண்டு திருவிடைமருதூர் வரையில் சென்றால் வெற்றி கிடைக்குமென்று திருவருள் உணர்த்தியது. சிவபெருமான் தன்னையே சிவலிங்க வடிவில் வழிபட்ட இடம் திருவிடைமருதூர். ஆதலால், அஃது ஏனைய சிவத்தலங்களைவிடச் சிறந்ததாகும்; அவ்விடத்தில் அவனது பிரம்மஹத்திதோஷம் நீங்கிவிடுமென்றும் திருவருள் உணர்த்தியது. வரகுணன் திருவருள் உணர்த்தியபடி சோழன் படையைத் துரத்திக் கொண்டு சோழநாட்டில் நுழைந்தான்; திருவிடைமருதூரில் தங்கி இறைவனைத் தொழுதான். அவ்னைப் பற்றியிருந்த பிரம்மஹத்திதோஷம் அத்தலத்தில் நீங்கிவிட்டது. "அவனிடம் தோல்வியுற்ற சோழவேந்தன் அவனுடன் உறவு கொள்ள விரும்பித் தன் மகளை அவனுக்கு மணம் செய்வித்தான். பாண்டியன் சிறந்த சிவபக்தனாதலால் அன்று இரவே மணமகளுடன் கோவிலுக்குச் சென்று அவளை ஏற்றுக்கொள்ளும்படி சிவபெருமானை வேண்டினான். இறைவன் தனது லிங்க வடிவில் அப்பெண்ணை ஏற்றுக் கொண்டார். வளையல் அணிந்த அவளது வலக்கை மட்டும் லிங்கத்திற்கு வெளியே காணப்பட்டது. அடுத்த நாள் அடியவர் பலரும் காண அவ்வலக்கையும் லிங்கத்தினுள் மறைந்துவிட்டது" என்று திருவிடைமருதூர்ப் புராணம் செப்புகின்றது. இவ்வாறு இப்பாண்டியன் சிவபெருமானுக்கு மனைவியைக் கொடுத்ததை,

விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

என்று கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தடிகள் தமது திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் வியந்து

பாராட்டியுள்ளார் பட்டினத்தடிகளுக்குப் பின்னர் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி இதே செயலை,

நேசமார் தேவிதன்னை நின்னுடை யடிமைக் காமென்
றாசைகூர்ந் தளித்தவ் வேந்தன்

என்று பாராட்டியுள்ளார்.

பின்பு பாண்டியன் மதுரைக்குத் திரும்பினான் என்றும, இறைவன் திருவருளால் சிவலோகக் காட்சி அவனுக்குக் கிடைத்தது என்றும் இரண்டு திருவிளையாடல்களும் இயம்புகின்றன. சோழன் படையை வரகுணன் வென்றான் என்று புராணங்கள் கூறுதலை, வரகுணன் இடவையில் போரிட்டான் (சோழநாட்டு ஊர்), வேம்பில் அழித்தான், திருப்புறம்பியத்தில் போரிட்டான் என வரும் கல்வெட்டுச் செய்திகள் உறுதிப்படுத்தலைக் காணலாம்.

திருவிடைமருதூர்ச் சிவன் வரகுணனிடம் காட்டிய பேரருளைக் கண்டு உள்ளம் உருகியதனாற் போலும் மணிவாசகர்,

இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்

என்று கூறியுள்ளார். மேலும், அப்பெரியார் திருவாசகத்தில் பல இடங்களில் திருவிடைமருதூரையும் அதில் கோவில் கொண்டுள்ள சிவபெருமானையும் பலபடப் பாடியுள்ளார்; மேலும் வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய திறத்தினை,

நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியர்க் கருளினை போற்றி

என்று பாராட்டியுள்ளார். அப் பெரியாரே பிறிதோரிடத்தில் பாண்டியன் மனைவியைச் சிவபெருமான் ஆட்கொண்ட திறத்தைக் குறித்துள்ளார்.[26]

புராணங்கள் வரகுணனோடு தொடர்புபடுத்தும் திருவிடைமருதூரின் சுருங்கிய பெயரே 'இடைவை' என்பது. வரகுணன் சோழனோடு போரிட்டதாகக் கூறப்படும் இடைவை என்பது காவிரிக்கரையில் கும்பகோணம் தாலுகாவிலேயே இருப்பது. அவன் அழித்ததாகக் கூறப்படும் வேம்பில் என்பதும் திருவிடைமருதூரும் அதே தாலுகாவிலுள்ளன. இடவைப் போரும் வேம்பில் போரும் திருப்புறம்பியப் போருக்குக் காரணமாக இருந்தன என்னல் தவறாகாது. இடவை அப்பர் தேவாரத்தில் வைப்புத் தலமாகக் காண்கிறது.[27]

மூவர் தேவாரத்திலும், சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத்து அந்தாதியிலும் தில்லைக் கோவிலுள் திருமால் கோவில் இருந்தமைக்குரிய சான்றுகள் இல்லை. ஆழ்வார் பாடல்களுள் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் பாக்களிலேயே இக்குறிப்புக் காணப்படுகின்றது. இது பற்றிய திருமங்கையாழ்வார் பாசுரம் இங்குக் கவனிக்கத் தகும்:

பைம்பொன்னு முத்தும் மணியும் கொணர்ந்து
படைமன்ன வன்பல் லவர்கோன் பணிந்த
செம்பொன் மணிமாடங்கள் சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திர கூடம் சென்று சேர்மின்களே.

திருமங்கையாழ்வார் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்தவர். பல்லவ மன்னர் புதிய கோவில்களைக் கட்டினர்; பழைய கோவில்களைப் புதுப்பித்தனர். அந்நிலையில் மேற்கூறப்பெற்ற செய்யுள் பல்லவன் தில்லையில் புதிதாய்த் திருமால் கோவிலை அமைத்தான் என்பதையே குறிக்கின்றது எனலாம். புதிய கோவிலை அமைக்கும் அரசன் முதலியோர் கருவறையின் அடியில் விலையுயர்ந்த கற்களையும், முத்துக்களையும், பொன்னையும் தக்க மந்திரங்களைச் சொல்லிப் புதைக்க வேண்டும்; அவற்றின்மீது மூர்த்தத்தை எழுந்தருளுவித்தல் வேண்டும் என்று வைணவ வைகாநச ஆகமம் கூறுகின்றது. அத்திரி சம்ஹிதையில் 34ஆம் அத்தியாயமாக உள்ள ரத்ன நியாச விதி என்னும் பகுதியும் இதனை வற்புறுத்தும். இக்குறிப்புக்களைக் கொண்டு, மேற்கூறப் பெற்ற செய்யுளின் முதல் இரண்டு அடிகளையும் கவனிக்கவும். பொன், முத்து, மணிகள் இவற்றைப் பல்லவன் கொணர்ந்து திருமாலை வழிபட்டான் என்று செய்யுளில் கூறப்படுதல், பல்லவன் புதிதாகவே கோவில் கட்டிக் கருவறையில் பெருமாளை எழுந்தருளுவித்துப் பூசித்ததையே குறிக்கின்றது என்பது தெளிவாதல் காண்க. இங்ஙனம் செய்த பல்லவன் திருமங்கையாழ்வார் காலத்தவனான இரண்டாம் நந்திவர்மன் எனப்பட்ட பரமேசுவரனே யாவன். இப்பல்லவனே காஞ்சியில் பரமேசுவர விண்ணகரத்தையும், கும்பகோணத்திற்கு அருகில் நந்திபுர விண்ணகரத்தையும், புதியனவாக அமைத்தவன்.[28]

திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வாருக்கு முற்பட்டவர். அவர் சிறிது காலம் தில்லையில் தங்கியிருந்ததாகக் குரு பரம்பரை என்னும் வைணவ நூல் கூறுகிறது. அவர் காலத்தில் தில்லைக் கோவிலுள் பெருமாள் கோவில் இருந்திருப்பின், அவர் பாடாதிரார்

அல்லவா? அங்ஙனம் அவர் பாடியதாகப் பாடல் இன்மையாலும், பாடியதாகக் குருபரம்பரை கூறாமையாலும், திருமழிசையாழ்வார் காலத்தில் தில்லைச் சிவன் கோவிலுள் பெருமாள் கோவில் அமைந்திலது என்பது தேற்றம்.

ஏறத்தாழத் திருமங்கையாழ்வார் காலத்தில் வாழ்ந்தவராகக் கூறப்படும் குலசேகர ஆழ்வார் தில்லைநகர்த் திருச்சித்திரக்கூடத்தின் மீது பத்துப் பாக்கள் பாடியுள்ளார். அவற்றுள்,

தொத்தலர்பூஞ் சுரிகுழல்கை கேசி சொல்லால்
தொன்னகரந் துறந்துதுறைக் கங்கை தன்னைப்
.......................................................
............... ........................................
சித்திரகூடத் திருந்தான் தன்னை இன்று
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற
இருநிலத்தார்க் கிமையவர்நேர் ஒவ்வார் தாமே

என்னும் செய்யுள், திருச்சித்திரகூடம் புதிதாக அமைக்கப்பட்டது என்பதை ஐயத்துக்கிடமின்றிக் குறித்திருத்தல் காண்க. எனவே, திருமங்கையாழ்வார் பாடியதாக மேலே காட்டப் பெற்ற செய்யுள் கருத்தும் குலசேகர ஆழ்வார் பாடல் கருத்தும் ஒன்றுபடல் காண்க.

இரண்டாம் நந்திவர்மன் காலம் கி.பி. 710-775. முதலாம் இராஜசிம்ம பாண்டியன் காலம் கி.பி. 740-765. எனவே, இவ்விரு பல்லவ பாண்டிய மன்னர்கள் சமகாலத்தவராவர். அரிகேசரி நல்லூர் இராஜ சிம்மேசுவரத்தில் உள்ள சிவபெருமானை 'அரிகேசரியாய்' எனப் பாடிய மணிவாசகர், நந்திவர்ம பல்லவனால் கட்டப்பட்ட தில்லைநகர்த் திருச்சித்ரகூடத்தில் எழுந்தருளியுள்ள திருமாலைத் தம் திருக்கோவையாரில் குறித்துள்ளமை காணத்தக்கது.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந்தா னொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே.

எனவே, மணிவாசகர் நந்திவர்ம பல்லவனுக்கும் முதலாம் இராஜ சிம்மனுக்கும் காலத்தாற் பிற்பட்டவர் என்பது ஐயமற விளங்குமன்றோ?

ஏறத்தாழ முதலாம் இராசராசன் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பூந்துருத்தி நம்பிகாடநம்பி என்பவர் தாம் பாடிய திருவிசைப்பாவில் திருநாவுக்கரசரை முதலிலும் திருஞானசம்பந்தரை

அடுத்தும் சேரமான் பெருமாள், சுந்தரர் ஆகிய இருவரையும் அதன் பின்னும் வைத்துக் கூறியிருத் தலும், அப் பாவில் மணிவாசகரைக் குறியாமையும் கவனிக்கத் தகும். ஆனால், அதே இராஜராஜன் காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவரான நம்பியாண்டார் நம்பி மணிவாசகர் செய்த திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தெளிவாகக் குறித்தலால் நம்பியாண்டார் நம்பி காலமுதல் மணிவாசகர் பெருமையும் நூல்களின் சிறப்பும் சைவர்க்குப் புலனாகத் தொடங்கின என்பது தெரிகிறது. மேலும் காடநம்பி குறித்த முறைவைப்பு நம்பியாண்டார் நம்பியால் மாற்றப்பட்டுவிட்டது. அஃதாவது, அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்று காட நம்பி முறைப்படுத்தியதை நம்பியாண்டார் நம்பி சம்பந்தர், அப்பர், சுந்தரர் என முறைமாற்றி வைத்துவிட்டார். சைவத் திருமுறைகளுள் முதல் மூன்றும் சம்பந்தருடையன; அடுத்த மூன்றும் அப்பருடையன; ஏழாம் திருமுறை சுந்தரருடையது. இவை மூன்றும் முறையே 384 பதிகங்களையும், 307 பதிகங்களையும், 100 பதிகங்களையும் உடையவை. பதிகங்களின் தொகை நோக்கி இவ்வாறு நம்பியால் முறைப்படுத்தப்பட்டன போலும்! அங்ஙனமாயின் 51 பதிகங்களையுடைய திருவாசகம் எட்டாம் திருமுறையாக வைக்கப்பட்டதில் வியப்பில்லை அன்றோ? இம்முறை வைப்பைப் பின்பற்றியே போலும் பின்வந்த (கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட) திருக்களிற்றுப்படியாரிலும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்றே முறை வைப்புக் காணப்படுகிறது. (செய்யுள் 70-73). 18 ஆம் நூற்றாண்டினரான தாயுமானவரும் 'எந்நாட் கண்ணி'யில் இதே முறை வைப்பு வைத்துள்ளமை காணத்தக்கது. இவையனைத்தும் மணிவாசகரை மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவராகப் பல நூற்றாண்டுகளிலும் வாழ்ந்த சைவப் பெருமக்கள் கருதினர் என்பதை உறுதிப்படுத்துதல் காணலாம்.[29]

### மாணிக்கவாசகரும் கல்வெட்டுக்களும்

"தேவாரம் பாடிய மூவரின் பெயர்களை அவர்களின் சமீப காலத்துப் புலவர்கள் குறித்துள்ளார்கள். திருவிசைப்பா ஆசிரியர்களும், நம்பியாண்டார் நம்பியும் மூவருடைய பெயர்களைக் குறித்துள்ளார்கள்". ஆனால் மாணிக்கவாசகர் பெயரை அவ்விதம் குறிக்கவில்லை. கி.பி. 10 ஆம் நூற்றாண்டினர் என்று கருதப்படும் பட்டினத்தடிகளே அவரை முதன்முதலில்,

திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்

எனக் குறித்தவராவர்.

"சோழர் ஆட்சிக்காலத்தில் இராசராச சோழனும், அவன் மகன் இராசேந்திர சோழனும் மூவர் உருவங்களைத் தாங்கள் கட்டிய தஞ்சைக் கோவிலில் வைத்து வழிபட்டனர். ஆனால் மாணிக்கவாசகர் உருவம் வைக்கப் படவில்லை. அக்காலத்தில் வேறு கோவில்களிலும் அவர் சிலை வைக்கப்படவில்லை. முதன் முதலாக இரண்டாம் இராசேந்திரன் காலத்தில்தான் இவர் செய்த திருவெம்பாவையின் பெயர் கல்வெட்டில் புகுந்தது. கி.பி. 1056 இல் திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோவிலில் திருவெம்பாவை ஓதுதற்கு நிவந்தம் விட்ட செய்தி ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.[30] இதற்குப் பின்புதான் திருச்சாழல் ஓதல், திருப்பள்ளிஎழுச்சி பாடுதல் முதலியவற்றிற்காக நிலதானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் தேவாரம் அருளிய மூவர் பாடல்களும் சோழப் பேரரசை ஏற்படுத்திய ஆதித்த சோழன் காலம் முதலே பல கோவில்களில் ஓதப்பட்டு வந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன".[31]

இவற்றை நோக்க, மணிவாசகர் மூவர்க்கும் பிற்பட்டவராக இருக்கலாம். இதனால் அவர் பாடிய திருவாசகத்தின் சிறப்புச் சிறிது காலம் கழித்துத்தான் நாட்டில் பரவத் தொடங்கியது. அங்ஙனம் பரவத் தொடங்கிய காலம் முதலே (கி.பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பாதி முதலே) அவர் பாடல்களும் பெயர்களும் அவர் பற்றிய விழாக்களும் கல்வெட்டுக்களில் இடம் பெறலாயின என்று கருதுதல் பொருத்தமாகும்.

(1) சுந்தரரது திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள "பொய்யடிமை இல்லாத புலவர்" என்னும் தொடர், கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரைக் குறிப்பதாக நம்பியாண்டார் நம்பியே தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் முதன் முதலில் குறிப்பிட்டார். அவரைப் பின்பற்றியே பின்வந்த புலவர்களும் குறிப்பிட்டனர். கடைச் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரும் சைவரே என்பதற்குச் சான்று யாது? அங்ஙனம் கூறச் சான்று இன்மையின் மேற்குறிப்பிடப்பட்ட தொடர் சங்கப்புலவரைக் குறியாது என்பது திண்ணம். கடைச் சங்கப் புலவருள் சமணரும், பௌத்தரும், பிற சமயத்தாரும் இருந்தனர் என்பதற்கு தொகை நூல்களே சான்று பகரும்.

(2) சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் பதினொரு செய்யுட்களே உள்ளன. அவற்றுள் பத்தாம் செய்யுள் முழுமையும் தொகை அடியார்களையே குறிப்பதாகும். முதற் செய்யுளின் தொடக்கம் தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரைக் குறிக்கின்றது.

தில்லையின் சிறப்பையும், தில்லைவாழ் அந்தணர் சிறப்பையும் உளங்கொண்டே சுந்தரர் தில்லைவாழ் அந்தணரை முதலில் வைத்துத் தொகை பாடத் தொடங்கினர். பின்வந்த எல்லா அடிகளிலும், பாக்களிலும் தனி அடியார்களே சுட்டப்பட்டுள்ளனர். ஏழாம் செய்யுளிலும் தனி அடியார்களே சுட்டப்படும் செய்யுளில் திடீரென்று தொகை அடியாராய சங்கப்புலவரைக் குறிக்கப் "பொய்யடிமை இல்லாத புலவர்" என்னும் தொடரைக் குறிக்க வேண்டிய காரணம் யாது? இதற்குரிய காரணம் எவராலும் இதுகாறும் விளக்கப்படவில்லை. எனவே, அத்தொடர் தனி அடியாரைக் குறிப்பதேயன்றித் தொகை அடியாரைக் குறிப்பது அன்று என்று கோடலே, வைப்பு முறையை நோக்கத் தெளிவாகின்றது.

(3) நம்பி தமது அந்தாதியின் 87ஆம் செய்யுளில், சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில், 63 தனி அடியாரையும், 9 தொகை அடியாரையும் குறித்திருப்பதாகக் கூறியுள்ளார். பாடிய சுந்தரரை நீக்கியும், பொய்யடிமை இல்லாத புலவர் என்பது சங்கப்புலவரைக் குறிப்பதென்று கொண்டும் கணக்கிட்டால், திருத் தொண்டத் தொகையில் வரும் தனி அடியார் எண்ணிக்கை அறுபத்திரண்டே ஆகின்றது. பொய்யடிமை இல்லாத புலவர் ஒருவரே என்று கொண்டு கணக்கிடின், தனி அடியார் எண்ணிக்கை 63 ஆகின்றது. தொகை அடியார் தொகை எட்டு ஆகின்றது. சுந்தரரால் பாடப்பட்டவர் அறுபத்துமூவரே தவிர, சுந்தரரையும் சேர்த்து நாயன்மார் அறுபத்துமூவரல்லர் என்பது இங்கு அறியத்தகும். நம்பி திருவிளையாடற் புராணம், மணிவாசகரை "மெய்யடியான்" (பொய்யடிமை இல்லாதவன்), "பாடல் மாமுனிவன்" என்று பாராட்டியிருத்தல், பொய்யடிமையில்லாத புலவர் என்று சுந்தரர் குறித்தது மாணிக்கவாசகரையே என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துதல் காண்க.

இதுகாறும் கூறப்பெற்ற சான்றுகளால், "பொய்யடிமை இல்லாத புலவர்" என்று சுந்தரர், மணிவாசகரையே குறித்தனராதல் வேண்டும் என்று கருதுதல் பொருத்தமாகும்.[32]

**முடிவுரை**

இதுகாறும் கூறப்பெற்ற அறிஞர் பலருடைய ஆராய்ச்சி முடிவுகளிலிருந்து **மாணிக்கவாசகர் மூவர்க்கும் பிற்பட்டவர்** என்பது தெளிவாகின்றது. ஆனால் இறுதியில் கூறப்பெற்ற திரு.கே.ஜி. சேஷ ஐயர் அவர்களது ஆராய்ச்சியின்படி, மாணிக்கவாசகர் சுந்தரரது திருத்தொண்டத் தொகையில் இடம்

பெற்றுள்ளார் என்று ஊகிக்க இடமுண்டு. சுந்தரர் மூன்றாம் நந்திவர்மன் காலத்தவர் (கி.பி. 840-865) என்பது பலர் கருத்து.

**மாணிக்கவாசகர் காலத்து வரகுணன்**

மாணிக்கவாசகர், முதலாம் வரகுணன் (கி.பி. 792- 835) காலத்தவர் என்றும்[33] இரண்டாம் வரகுணன் காலத்தவர் கி.பி. 862-880) என்றும்[34] அறிஞர் கூறுவர். பொய்யடிமை இல்லாத புலவர் என்பது மணிவாசகரைக் குறித்ததே எனக் கொள்ளின், மணிவாசகர் சுந்தரர்க்கு (கி.பி. 840-865) முற்பட்டவராதல் தெளிவு. இங்ஙனம் கொள்ளின், அவர் முதல் வரகுணன் காலத்தவராகக் கோடலே பொருந்தும். இக்கருத்தே தென்னிந்திய வரலாற்றறிஞராய T.V.S. பண்டாரத்தார் கருத்தாதலும் காண்க.[35] அறிஞர் சிலர் கருதுவதுபோல, மணிவாசகரை இரண்டாம் வரகுணன் காலத்தவராகக் (கி.பி. 862-880) கொள்ளின், அவரைச் சுந்தரர்க்குப் பிற்பட்டவராகக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் கொள்ளின், அவரால் குறிக்கப்பட்ட 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்பது மணிவாசகரைக் குறியாது.

ஆயின், K.G. சேஷ ஐயர் கூறுதல்போல, பொய்யடிமை இல்லாத புலவர் என்பது சங்கப் புலவரைக் குறியாமல், மாணிக்கவாசகரையே குறிப்பதாகக் கொள்வதே பொருத்தமாகக் காணப்படுகிறது. எனவே, மூன்றாம் நந்திவர்மன் காலத்தவராகக் (கி.பி. 840-865) கருதப்படும் சுந்தரரால் பாடப் பெற்ற மணிவாசகர் முதல் வரகுணன் காலத்தில் (கி.பி. 792-835) வாழ்ந்தவராகக் கோடலே ஏற்புடையது.

முதல் வரகுணன் சோழநாட்டினின்றும் தொண்டை நாட்டின் தென் பகுதியையும் கைக்கொண்டவன். அவனுடைய கல்வெட்டுக்கள் தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பரவி இருந்தன. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு முடிய வாழ்ந்த பாண்டிய மன்னருள் பெருவீரனாக விளங்கியவன் இவன் ஒருவனே என்று கூறுதல் தவறாகாது. இவன் தொண்டை நாட்டில் பெண்ணையாற்றங் கரையிலுள்ள அரசூரில் தங்கியிருந்தான் என்பதை இவனது அம்பாசமுத்திரக் கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது. எனவே, இவன் தான் வென்ற நாட்டில் இருந்த தில்லையை வழிபட்டிருத்தல் இயல்பேயாகும். இந்த வாய்ப்பு இரண்டாம் வரகுணனுக்கு இல்லை என்பது இங்கு அறியத்தகும்.

இதனால் சோழ நாட்டிலுள்ள திருவிடைமருதூரும் தில்லையும் இவன் ஆட்சிக்கு உட்பட்டன என்பது தெளிவு.

இப்பெருவீரன் தோல்வியையே அறியாதவன்; சிவபக்தியிலும் சிறந்தவன். இவன் அம்பாசமுத்திரம் கோவிலுக்கும் திருச்சிராப்பள்ளி கோவிலுக்கும் நிவந்தங்கள் விட்டிருப்பதிலிருந்து இவன் பரம சிவபத்தன் என்பதை நன்கறியலாம்.

இவன் மகனான ஸ்ரீமாறன் காலத்தில் வரகுணன் வென்ற தொண்டை நாட்டின் வட பகுதியும் சோழ நாடும் முறையே பல்லவர் கைக்கும் சோழர் கைக்கும் மாறிவிட்டன. குடமூக்கு, அரிசில் கரை, தெள்ளாறு இவற்றில் நடைபெற்ற போர்களில் பல்லவரும் சோழரும் வெற்றி பெற்றனர்; எனவே, இவனுக்குப் பின்பு வந்த இரண்டாம் வரகுணன் தனக்கு உரிமையாக இருந்த பாண்டிய நாட்டை மட்டுமே ஆளவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவன் காலம் கி.பி. 862-880. அவனது ஆட்சி முடிவிற்றான் அவனுக்குப் படுதோல்வி அளித்த திருப்புறம்பியப் போர் நடைபெற்றது. திருப்புறம்பியத்திலும் இடவை என்னும் இடத்திலும் போர்கள் நடந்தன. இவை இரண்டும் கும்பகோணம் தாலுகாவிலேயே உள்ள இடங்கள். இப்போர்கள் கி.பி. 880இல் நடைபெற்றன என்று அறிஞர் கூறுகின்றனர்.[36] எனவே, இவன் தனது 18 ஆண்டு ஆட்சிக் காலத்தில் இடவை, திருப்புறம்பியம் ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே சண்டை செய்தவன், இறுதியிற்றோற்று அழிந்தவன் என்பனவே நமக்குக் கிடைக்கும் செய்திகள். எனவே, இவன் தில்லையை அடைந்து கூத்தப் பெருமானை வழிபட்டான் என்பதற்குச் சான்றில்லை.

மாணிக்கவாசகர் தமது திருக்கோவையாரில் பாராட்டிய வரகுணன் "மால் அரியேறு அன்னவன்; தெம்முனைமேற் சென்றவன், அவனது தேர் போரில் பின்னடையாதது. அவன் இருங்களியானை வரகுணன்", "வரகுணனாந் தென்னவன் ஏத்தும் சிற்றம்பலத்தான்", "சிற்றம்பலம் புகழும் வரகுணன்" என்னும் தொடர்களால் மாணிக்கவாசகர், தம் காலத்து வாழ்ந்த வரகுணன், சிற்றம்பலப் பெருமானிடம் கொண்ட ஈடுபாட்டினை நன்கு தெரிவிக்கின்றார். இங்ஙனம் போர்த்திறனும், வீரமும், சைவப்பற்றும் ஒருங்கே கொண்ட பாண்டியன், தில்லையையும் அதற்கப்பாலுள்ள தொண்டை நாட்டையும் வென்று அடிப்படுத்திய பெருவீரனான வரகுணனே ஆவன் என்று கொள்ளுதல் ஏற்புடையது. இம்மூன்று தகுதிகளும் இரண்டாம் வரகுணனுக்கு அமையவில்லை என்பது அவன் வரலாற்றால் துணியப்படும்.

முற்றும் துறந்த மாணிக்கவாசகர், எத்தகைய போரிலும் வெற்றிபெறாத இரண்டாம் வரகுணனை, "மால் அரியேறு அன்னவன்"

என்றெல்லாம் பாராட்டினார் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாமை உணரப்படும். எனவே, அவரால் பாராட்டப்பெறும் தகுதியுடையவன் முதல் வரகுணனே என்று சொல்வது முற்றிலும் பொருத்தமாகும். ஆகவே, **மணிவாசகர் காலம் முதல் வரகுணன் காலம்** (கி.பி.800-830) என்று சொல்லுதல் பொருந்தும்.

ஏகான்ம வாதம் என்னும் மாயவாதத்தைத் தென்னாடெங்கும் தமது வாக்குவன்மையால் பரவச்செய்த பெருமை ஆதி சங்கரர்க்கே உரியது. அப்பெரியார் தமது நான்கு சீடர்களைக் கொண்டு காஞ்சி, பூரி, சிருங்கேரி, துவாரகை என்னும் நான்கு இடங்களில் அத்துவைத மடங்களைத் தோற்றுவித்துத் தமது பிரசாரம் இந்தியா முழுமையும் நடைபெற ஏற்பாடு செய்தார். அவரது காலம் ஏறத்தாழக் கி.பி. 788-820 என்று அறிஞர் கூறுவர்.[37] அவரது சமயப் பிரசாரம் நாடு முழுமையும் பெருங்காற்றுப் போலப் பரவிய நிலைமையை மணிவாசகர்,

> மிண்டிய மாயா வாதம் என்னும்
> சண்ட மாருதம் சுழித்துஅடித்து ஆர்த்தும்

என்று குறித்துள்ளார். இவ்வடிகள் மாயவாதப் பிரசாரம் நாடெங்கும் செய்யப் பெற்ற நிலையினை நன்கு விளக்குகின்றன அல்லவா? இத்தகைய வன்மை வாய்ந்த பிரசாரம் சங்கரர்க்குப் பிற்பட்ட காலங்களில் நாடெங்கும் நடைபெற்றதென்று கூறுதற்குத் தக்க சான்றின்மையால், சங்கரர் காலத்தில் நடைபெற்ற வன்மை வாய்ந்த பிரசாரத்தையே இவ்வடிகள் குறிக்கின்றன என்று கோடல் தவறாகாது.

எங்ஙனங் கொள்ளினும், மணிவாசகர் சங்கரர் காலத்தவர் அல்லது சங்கரர்க்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு. இப்புதிய சான்றாலும் மாணிக்கவாசகர் **கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்** வாழ்ந்தவர் என்னும் கருத்து வன்மை பெறுதல் காண்க.

## குறிப்புகள்

1. 'தமிழ்ப் பெருமக்கள் வரலாறு' பக். 83-84.
2. The Age of Manikkavachagar - Journal of Sri Venkateswara oriental institute. Vol. 4, Part I, pp. 176- 182.
3. பெரிய புராணம், ஐயடிகள் புராணம், செய்யுள் 2-6
4. Mysore Annual Archaeological Report, 1925, pp.9-12
5. செய்யுள் 17.
6. 5. 85. 10. சமாசப் பதிப்பு.
7. செ. 6. (சிராப்பள்ளிப் பதிகம்).
8. A.R.E. 1937-38, P. 78.

9. S. I. I. I. 33, 34.
10. A. R. E. 414 and 412 of 1904.
11. 412 of 1904.
12. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.
13. K. A. N. Sastry – Pandyan Kingdom, p. 41.
14. சீநிவாசபிள்ளை, தமிழ் வரலாறு, ப, 134.
15. சீநிவாசபிள்ளை, தமிழ் வரலாறு, ப. 137.
16. ஷை ப. 138 -139.
17. ஷை ப. 140.
18. ஷை ப 140.
19. M. சீனிவாச அய்யங்கார், Tamil Studies, p. 402.
20. E. சீநிவாச அய்யங்கார், 'Tamil Studies', p. 402.
21. ஷை ப. 405.
22. ஷை ப.409.
23. Ins. 428, 431, 432, 438, 439, 441-443 of 1908.
24. (1) மன்னவன் தெம்முனை மேற்செல்லு மாயினு மாலரியே
றன்னவன் தேர்புறத் தல்கல் செல்லாது **வரகுணனாந்**
தென்னவ னேத்துசிற் றம்பலத்தான் மற்றைத் தேவர்க்கெல்லா
முன்னவன் மூவலன்னாளு மற்றோர் தெய்வ முன்னலளே.

(2) புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம்பலம் புகழும்
மயலோங் கிருங்களி யானை **வரகுணன்** வெற்பின் வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமும் காட்டிவருஞ்
செயலோங் கெயிலெரி செய்தபி ரின்றோர் திருமுகமே.
25. The Age of Manikkavachagar, J. O. S. V. O. I., Vol. 4, part I, P. 165.
26. திருவார்த்தை, செ. 2.
27. The Age of Manikkavachagar, J.O.V.O.I. Vol. 4 Part 1 pp. 167-170.
28. The age of Manikkavachagar, J.O.S.V.O.I. Vol. 4, Part I, pp. 171-172.
29. The Age of Manikkavachagar, J.O.S.V.O.I., Vol. 4 part I, pp. 175-176.-
30. M.E.R. 1905, No. 12.
31. சி.எம். இராமசந்திரச் செட்டியார், செந்தமிழ், சிலம்பு 9, பக். 317, 354.
32. திரு. கே. ஜி. சேஷையர், Tamilian Antiquary.
33. பண்டாரத்தார் - பாண்டியர் வரலாறு.
34. பழநியப்ப பிள்ளை - மணிவாசகர் காலம்.
35. பண்டாரத்தார் - பாண்டியர் வரலாறு.
36. K.A.N. சாஸ்திரி, சோழர் வரலாறு.
37. Sir S. Radhakrishnan, Indian Philosophy, Vol. II. p. 447.

# 11. சேக்கிழார் காலம்

*சேக்கிழார் புராணம்*

சேக்கிழார் வரலாறு, இப்பொழுதுள்ள பெரிய புராணப்பதிப்புக்களின் முதலில் அல்லது ஈற்றில் சேர்க்கப்பட்டுள்ள 'திருத்தொண்டர் புராண வரலாறு' அல்லது 'சேக்கிழார் புராணம்' என்பதில் காணப்படுகின்றது. இதுவே சேக்கிழார் வரலாற்றைக் கூறவந்த முதல் நூலாகும். இதனிற் கூறப்படும் சேக்கிழார் வரலாறு இதுவாகும்:

"தொண்டை நாட்டு 24 கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க்கோட்டத்தில் குன்றை வளநாட்டுக் குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் அருள்மொழித்தேவர் என்பவர் பிறந்தார். அவர் தம்பி பெயர் பாலறாவாயர் என்பது. அருள்மொழித் தேவரது புலமைச் சிறப்பு மிகுதிப்பட, அவர் குடிப்பெயரானே, 'சேக்கிழார்' என்று குறிக்கப்பட்டார். அவரது பெரும் புலமையைக் கேள்வியுற்ற 'அநபாய சோழ வேந்தன்'[1] அவரைத் தனது முதல் அமைச்சராகக் கொண்டான்; அவருக்கு 'உத்தம சோழப் பல்லவராயன்' என்ற பட்டம் கொடுத்தான்."

"சேக்கிழார் சோழநாட்டுத் திருநாகேச்சரத்தில் உள்ள சிவபிரானை வழிபட்டு, அக்கோவிலைப் போன்றதொரு கோவிலைத் தமது குன்றத்தூரில் கட்டி, அதற்குத் 'திருநாகேச்சரம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார்."

அக்காலத்தில் அரசன் சமணப் பெருங்காவியமாகிய சீவகசிந்தாமணியைப் படிக்கக்கேட்டு மகிழ்ந்தான்; அதனைப் பலபடப் பாராட்டினான். அதுகண்ட சேக்கிழார், இளவரசனை நோக்கி, 'சமணர் செய்த அப்பொய்ந்நூல் இம்மைக்கும் பயனில்லை; மறுமைக்கும் பயன் இல்லை. சிவகதை ஒன்றே இம்மை மறுமைகட்குப் பயனிக்க வல்லது', என்றார். அதுகேட்ட

அரசன், 'அங்ஙனமாயின், அச்சிவகதை எது? அது கற்றவர் யார்? அது சீவகசிந்தா மணியைப்போல் இடையில் வந்த சிவகதையோ? புராணமோ? முன்னூல் உண்டோ? அதனை இவ்வுலகிற் சொன்னவர் யார்? கேட்டவர் யார்? முறையாகக் கூறுக', என்றான். உடனே சேக்கிழார், 'தில்லைப்பிரான் அடியெடுத்துத் தரச் சுந்தரர் பதினொரு திருப்பாட்டாக அடியவரைப் பற்றித் தொகை பாடினார். அதனைத் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் விளக்கிக் கூற, அவர் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி, 'திருத்தொண்டர் திருஅந்தாதி' என்றொரு நூல் பாடினார். அந்நூலைத் திருமுறைகண்ட இராசராச தேவர்[2] முதலியோர் பாராட்டினர்', என்றார். அது கேட்ட சோழன் மகிழ்ந்து, 'அவ்வடியார் வரலாற்றைக் கூறுக', என்றான். சேக்கிழார் அடியார் வரலாறுகளைத் தொகைவகைகளைக் கொண்டு விளங்கவுரைத்தார். கேட்டு மகிழ்ந்த மன்னன், 'இவ்வரலாறுகளைப் பெரியதோர் காவியமாக நீரே பாடியருள்க' என்று, அவருக்கு வேண்டிய ஆள் உதவி, பொருள் உதவி தந்துதில்லைக்கு அனுப்பினான்.

"தில்லையை அடைந்த சேக்கிழார் கூத்தப்பெருமான் திருமுன் நின்று, 'அடியேன், புகழ் பெற்ற உம் அடியார் சிறப்பை எங்ஙனம் உரைப்பேன்? எனக்கு அடி எடுத்து உதவி அருள்க', என்று வேண்டினார். அவ்வமயம் 'உலகெலாம்' என்ற சொல் சேக்கிழார் செவியிற்பட்டது. அவர் அதனையே முதலாகக் கொண்டு பாடிப் புராணத்தை முடித்தார். அரசன் தில்லையை அடைந்தான். தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் பெருஞ்சைவர் கூட்டத்தில் சேக்கிழார் தமது புராணத்தை அரங்கேற்றம் செய்தார்; இறுதியில் அரசனால் பெருஞ்சிறப்புப் பெற்றார்; 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பெயரும் பெற்றார்.

"அரசன் சிறந்த பக்திமானாகிய சேக்கிழாரைத் தன்கீழ் வேலையில் வைக்க விரும்பாமல், அவர் தம்பி பாலறாவாயரைத் "தொண்டைமான்" என்ற பட்டத்துடன் தொண்டைநாட்டை ஆளும்படி விடுத்தான். அவர் 'தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமாள்'[3] என்னும் பெயர் பெற்றார்.

"பின்னர்ச் சேக்கிழார் தில்லையில் தங்கிக் கூத்தப்பெருமானைச் சேவித்துக்கொண்டிருந்து முத்தி பெற்றார். சேக்கிழார் மரபினர் இன்றுவரை அரசியல் உயர் அலுவலராக இருந்து வருகின்றனர். இனியும் இருப்பர்".

இவ்வரலாறு பற்றிய ஆராய்ச்சி

இவ்வரலாற்றில் பெரும்பாலும் நம்பத்தக்க செய்திகளே கூறப்பட்டுள்ளன. ஆயின் சில, ஆராய்ச்சிக்கு உரியனவாகவும் உள்ளன. ஆதலின், அவற்றை முறையே ஆராய்தல் நமது கடமையாகும்.

1. சிந்தாமணியைச் சோழன் படித்துச் சுவைத்ததைக் காணப்பொறாத சேக்கிழார் அதனைத் 'திருட்டுச் சமணர் பொய்ந்நூல்' எனக் கூறியதற்கும், சிந்தாமணிக்கு மாறாக அவர் பெரிய புராணம் செய்தார் என்று கூறியிருந்ததற்கும் இப்பாடல் தவிர வேறு சான்றில்லை. சேக்கிழார் பாடிய பெரிய புராணத்திலும் இதற்கு அகச் சான்று இல்லை. ஆயின், இதற்கு மாறாகச் சேக்கிழார் சிந்தாமணியை நன்றாய்ப் படித்தவர் என்பதற்குப் பெரிய புராணத்திலிருந்து பல சான்றுகள் காட்டலாம். இங்ஙனம் அந்நூலை நன்றாய்ப் படித்து அநுபவித்த பெரும் புலவராய சேக்கிழார் அதனை வெறுத்தனர் என்றோ-அதற்கு மாறாக அரசனைத் தூண்டிப் பெரிய புராணம் செய்தார் என்றோ கோடல் பொருத்தமன்று. எனவே, சேக்கிழார் புராணக்கூற்று அதனைப் பாடிய ஆசிரியரது மனப்போக்கையே-சமணத்தில் வெறுப்பும் சைவத்தில் அளவு கடந்த பற்றும் கொண்ட மனப்பண்மையே உணர்த்துவதாகும்,[4] எனக் கோடலே பொருத்தமாகும்.

2. இப்புராண ஆசிரியர் பெரிய புராணத்தை நன்றாகப் படித்தவராகத் தெரியவில்லை. 'நாயன்மாருள் முடிமன்னர் அறுவர்' எனக் கூறி, 'அவருள் இடங்கழியார்' ஒருவர் எனவும், 'குறுநில மன்னர் ஐவர்' எனக் கூறி, 'அவருள் காடவர்கோன் கழற்சிங்கன், ஐயடிகள் காடவர் கோன் என்பவர் இருவர்' எனவும் கூறியிருத்தல் **பெருந்தவறு.**[5] என்னை? இடங்கழியார் கொடும்பாளூரை ஆண்ட சிற்றரசர்[6] என்றும், பின்னவர் இருவரும் பல்லவப் பேரரசர் என்றும் சேக்கிழார் தமது புராணத்தில் தெளிவாகக் கூறியுள்ளார் ஆதலின் என்க. சுந்தரர், தமது காலத்தவனான கழற்சிங்கனைத் தாம் பாடிய திருத்தொண்டத்தொகையில்,

> கடல்சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்
> காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கு அடியேன்

என்று தெளிவாகக் கூறியுள்ளார்.[7] இதனையேனும் இத்திருத்தொண்டர் புராண ஆசிரியர் கவனித்தவராகத் தெரியவில்லை.

3. நாயன்மாருள், இயல், இசைத்தமிழ் வல்லோர் - அப்பர், சம்பந்தர், பேயார்; இசைத்தமிழ் வல்லோர் - நந்தனார், ஆனாயர், பாணர்; இயற்றமிழ் வல்லோர் - ஐயடிகள், திருமூலர், காரியார்,

சேரமான் பெருமாள் என்று வகுத்துக் கூறும் இந்த ஆசிரியர், சுந்தரரை இப்பிரிவுகளில் சேர்த்துக் கூறத் தவறிவிட்டார்.[8] சுந்தரர், இயல், இசைத்தமிழ் வல்லோர் அல்லரா? நந்தனார் இசைத்தமிழில் வல்லார் என்பதற்குச் சான்று என்னை?

4. இங்ஙனமே, இந்த ஆசிரியர் பாடிய 'திருமுறை கண்ட புராணம்' என்ற நூலிலும் சில தவறுகள் உண்டு. அவற்றுள் குறிக்கத்தக்க **பெருந்தவறு** ஒன்றுண்டு. அஃதாவது, இராசராசன் (கி.பி. 985- 1014) காலத்துத் திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பி, அவன் மகனான இராசேந்திரன் (கி.பி. 1012-1044) புதிதாக உண்டாக்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழீச்சுரம் பற்றிக் கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாவை ஒன்பதாம் திருமுறையில் (இராசராசற்கு எதிரில்) சேர்த்தார் என்பது. மகன் தனது ஆட்சிக் காலத்திற் கட்டிய கோவிலைப் பற்றிய பாடல் ஒன்றை, அம்மகனது தந்தை காலத்துப் புலவர் அத் தந்தை முன்னிலையிலேயே, மற்றத் திருமுறைகளை வகுத்த பொழுதே, தொகுத்தார் என்னல் எங்ஙனம் பொருந்தும்?[9]

இங்ஙனம் இராசராசன் காலத்தவரும் பிற்பட்டவருமான புலவர் பாக்களையெல்லாம் இராசராசன் காலத்திலேயே நம்பி தொகுத்து முடித்தார் என்று திருமுறை கண்ட புராண ஆசிரியர் தவறாகக் கூறிவிட்டதால்,[10] ஆராய்ச்சியாளர், திருமுறைகள் முதற் குலோத்துங்கன் காலத்தில் தொகுக்கப்பட்டனவாதல் வேண்டும்[11] என்றும் நம்பி திருவிசைப் பாவையும் தொகுத்தார் என்று புராணம் கூறலால், அவர் இராசராசற்குப் பிற்பட்டவர்[12] என்றும் கருதலாயினர்.

இவற்றின் ஆசிரியர் உமாபதி சிவமா?

திருத்தொண்டர் புராண வரலாறும் திருமுறை கண்ட புராணமும் இயற்றியவர் சந்தான ஆசாரியருள் ஒருவரும் சைவசித்தாந்த நூல்கள் பலவற்றின் ஆசிரியருமான கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் என்று சில பதிப்புக்களிற் காண்கின்றன.[13] அவர் பாடியனவாகத் திருத்தொண்டர் புராண சாரம், திருப்பதிகக்கோவை, திருப்பதிக்கோவை என்பனவும் காணப்படுகின்றன. இவற்றுள் முன்னது பெரிய புராணத்தைத் தழுவிச் செய்யப்பட்டதாகும். அதனில், (1) 'இடங்கழியார் கொடும்பாளூர் வேளிர் குலத்தரசர்' என்றும், (2) கழற்சிங்கனும் ஐயடிகள் காடவர்கோனும் பேரரசர் என்றும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.[14] இதனைப் பாடிய

உமாபதி சிவமே இச்செய்திகளையே தவறாகக் கூறும் சேக்கிழார் புராண வரலாற்றையும் பாடினார் என்பது எங்ஙனம் பொருந்தும்?

'திருத்தொண்டர் புராண வரலாறும் திருமுறை கண்ட புராணமும் உமாபதி சிவம் பாடினார் எனக் கூறுதல் மரபு' என்று சமாஜப் பதிப்புக் குறித்துள்ளது.[15] இவற்றை உமாபதி சிவம் பாடினார் என்று கூறும் தனிப்பாட்டுச் சில பிரதிகளில் இல்லை என்று திரு.வி. கலியாணசுந்தர முதலியார் பதிப்புக் குறித்துள்ளது.[16]

இவற்றை நோக்க, உமாபதி சிவாசாரியார் திருத்தொண்டர் புராண சாரம் முதலிய மூன்று நூல்களைச் செய்தவராகலாம் எனக் கோடல் தவறாகாது. உமாபதி சிவனார் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.[17] ஆயின், திருத்தொண்டர் புராண வரலாறும், திருமுறைகண்ட புராணமும் செய்த ஆசிரியர் இன்னவர் என்பதோ, அவர் காலம் இன்னது என்பதோ திட்டமாகக் கூறுவதற்கில்லை. ஆயினும் அவற்றுள் இராசராசன், அநபாயன் என்ற அரசர் பெயர்களும் கல்வெட்டுக்களோடு ஒன்றுபடும் சேக்கிழார் பற்றிய குறிப்புக்கள் சிலவும் தவறின்றிக் கூறப்படலால், அவை, சேக்கிழார்க்குப் பிற்பட்ட ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் செய்யப்பட்டன ஆகலாம் எனக் கோடல் தவறாகாது. மேலும், புகழ் பெற்ற உமாபதி சிவனார் தவறின்றிப் பாடிய திருத்தொண்டர் புராண சாரத்திற்குப் பிறகு, பல தவறுகள் கொண்ட திருத்தொண்டர் புராண வரலாறு பெயர் தெரியாத ஒருவரால் பாடப்பட்டது என்பது பொருத்தமுடையதன்று. ஆதலால், திருத்தொண்டர் புராண வரலாறு, மிகுந்த சைவப்பற்றும், சமணசமய வெறுப்பும் கொண்ட ஒருவரால் உமாபதி சிவாசாரியர்க்கு முன்பே பாடப்பெற்றது; அவராலேயே திருமுறைகண்ட புராணமும் பாடப்பெற்றது எனக் கோடல் பொருத்தமாகும். எனவே, இப்பெயர் தெரியாத ஆசிரியர் கி.பி. 13ஆம் நூற்றாண்டினர் எனக் கொள்ளலாம். இங்ஙனம் கொள்ளின், சிறந்த புலவரும் சைவ சித்தாந்த ஆசிரியருமாகிய உமாபதி சிவனார்க்கு நிறைவு உண்டாகுமே அன்றிக் குறைவு உண்டாகாமை காண்க.

உமாபதி சிவத்தின் மூன்று சிறு நூல்களையும் அவற்றின் தொடர்பான சேக்கிழார் புராண வரலாற்றையும் திருமுறைகண்ட புராணத்தையும் கண்ட பிற்காலத்தார், பின்னவற்றையும் உமாபதி சிவமே பாடினார் எனக் கொண்டிருத்தல் இயல்பே.[18]

பொருந்தும் செய்திகள்

இவ்வாறு பொருந்தாச் செய்திகள் சில இருப்பினும், சேக்கிழார் புராணம் சேக்கிழார் வரலாற்றை அறிய உறுகருவி என்பதை மறுத்தற்கில்லை. ஆதலின், அதன்கண் காணப்படும் பெரும்பாலும் **நம்பத்தக்க செய்திகளாவன:**

1. சேக்கிழார் குன்றைநாட்டுக் குன்றத்தூரினர்; வேளாளர் மரபினர்; அவர் தம்பி பாலறாவாயர்.

குன்றத்தூரில் சேக்கிழார் கோவில் இன்றும் இருக்கின்றது. அதற்கு அண்மையில் பாலறாவாயர் குளம் இருக்கின்றது. சேக்கிழார் மரபினர் அங்கு வாழ்கின்றனர்.

2. சேக்கிழாரை ஆதரித்த அரசன், 'அநபாயன்' என்பதைச் சிறப்புப் பெயராகக் கொண்டவன்.

3. சேக்கிழார் சோழ அரசியலில் தலைமை அமைச்சராய் இருந்தவர்; அங்ஙனம் இருந்து, 'உத்தம சோழப் பல்லவராயன்' என்ற பட்டம் பெற்றவர். அங்ஙனம் அரசற்கு அடுத்த அலுவலில் இருந்தமையாற்றான் அவருடைய சைவப்பற்றும், அவர் அறிந்த நாயன்மார் வரலாற்றுச் செய்திகளும், நிறைந்த தமிழ்ப் புலமையும், அரசனும் இளவரசனும் அறிய வாய்ப்புண்டானது எனக் கோடல் பெரிதும் பொருத்தமே ஆகும்.

4. அவர் சோணாட்டுத் திருநாகேச்சரத்தில் ஈடுபட்டவர். அந்நினைவுகொண்டு தமதூரில் அப்பெயரால் கோவில் கட்டினவராகலாம். குன்றத்தூரில் இப்பெயரால் ஒரு கோவில் இருக்கின்றது.

5. சேக்கிழார் பெரிய புராணம் பாடியவர்.

இனி, 'அநபாயன்' யாவன் என்பதைக் காண்போம். பின்னர்க் கல்வெட்டுச் செய்திகளையும் மேற்சொன்ன சேக்கிழார் வரலாற்றுச் செய்திகளையும் ஆராய்ந்து பொருந்துவன காண்போம்.

*அநபாயன் யாவன்?*

சேக்கிழார் காலத்தைத் தத்தமக்குக் கிடைத்த சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்து முடிபுகட்டிக் கூறினோர் பலராவர். அவர் முடிபுகளைக் கீழே காண்க:

1. சேக்கிழார் - இராசேந்திரன் I (கி.பி. 1012-1044) காலத்தவர்.[19]

2. சேக்கிழார் - முதற் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) காலத்தவர்.[20]

3. சேக்கிழார் - இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1113-1150) காலத்தவர்.[21]

4. சேக்கிழார் - மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218) காலத்தவர்.[22]

இவற்றுள் முன் இரண்டு முடிபுகளும் பொருந்துவன அல்லவென்று முன்பே அறிஞர் விளக்கிவிட்டனர்.[23] ஆதலின், அவைபற்றி நாம் பேசவேண்டுவதில்லை. சேக்கிழார் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவர் என்பார் கூற்றுப் புதியது. ஆதலின், அவர் கூறும் காரணங்களை ஆராய்ந்து முடிவு காணல் நமது கடமையாகும். அவர் கூறும் காரணங்களாவன:

1. "இரண்டாம் குலோத்துங்கனை உலாவிற் பாடிய அவனது ஆசிரியரான ஒட்டக்கூத்தர், அவ்வுலாவில் (வரிகள் 75-116) அவன் பேரம்பலம் பொன்வேய்ந்ததைக் குறிக்கவில்லை. ஆதலின், அவன் பேரம்பலம் போன்வேய்ந்தவன் ஆகான்.

2. "இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் பெரிய புராணம் பாடியிருப்பின், ஒட்டக்கூத்தர் அதனை உலாவிற் கூறாதிரார்.

3. "இரண்டாம் குலோத்துங்கற்கு ஆசிரியர் ஒட்டக்கூத்தர்". அவர் சிறந்த சிவபக்தர். அரசன் அவரைக் கொண்டு பெரிய புராணம் பாடச் செய்யாது, சேக்கிழாரைக் கொண்டு பாடச் செய்தான் என்பது பொருத்தமற்றது.

4. "திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்களில் 'பேரம்பலம் பொன்வேய்ந்த சோழன்' என்பதைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கு மேல் உள்ள கல்வெட்டு மூன்றாம் இராசராசனுடையது எனக் கல்வெட்டாளர் கொண்டனர். இரண்டாங் குலோத்துங்கற்கு மூன்று தலைமுறைக்குப் பிந்தியவன் மூன்றாம் இராசராசன். எனவே, மூன்றாம் தலைமுறைக்குப் பிந்தியவன் கல்வெட்டு மேலும், முந்தியவன் கல்வெட்டுக்கீழும் அமையுமாறு எங்ஙனம்? முந்தியவனது மேலும், பிந்தியவனது கீழும் அமைவதன்றோ இயலும்! ஆகவே, கல்வெட்டுத் துறையாளர் கொண்ட கருத்துத் தவறுடையதாகும். உண்மை யாதெனில், மேற்கூறிய கல்வெட்டுக்களிற் கண்ட இராசராசன், இரண்டாம் இராசராசனே, குலோத்துங்கன் மூன்றாம் குலோத்துங்கனே. இவ்வாறு கொள்ளின், யாம் மேலே கிளப்பிய ஐயத்திற்கு இடமிராது".

இக்காரணங்கள் பொருந்துவனவா?

1. இரண்டாம் குலோத்துங்கன் உலாவில் (வரிகள் 75-116) 'பேரம்பலம்' என்ற சொல் காணப்படுகிறது. ஆனால், அதற்கடுத்த இராசராசன் உலாவில், இராசராசன் இன்னவன் மகன் என்று குறிப்பிடும் இடத்தில் அவன் பேரம்பலம் முதலியவற்றைத் தூய செம்பொன்னிற் குயிற்றினாற்கு மகன் என்பது தெளிவாக உள்ளது.[24] ஆதலின், 'இரண்டாம் குலோத்துங்கன் பேரம்பலம் பொன்வேய்ந்ததைக் கூத்தர் குறிக்கவில்லை' என்ற முதற்காரணம் பொருந்தாமை காண்க.

2. இஃது ஒரு சிறந்த காரணமாகாது. முதல் இராசராசன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறைகளை வகுத்தான் என்பதும், உலகம் போற்றும் இராசராசேச்சரத்தைக் கட்டினான் என்பதும், சைவத்தைப் பெரிதும் வளர்த்தான் என்பதும் பாராட்டத்தக்க - குறிக்கத்தக்க செயல்கள் அல்லவா? அவன் மகன் புதிதாக நியமித்த கங்கைகொண்ட சோழபுரம், அதன்கண் எடுப்பித்த பெரிய கற்றளி, அவன் செய்த சைவ சமயத் தொண்டு இவை குறிக்கத்தக்க செயல்கள் அல்லவா? இவற்றுள் ஒன்றையேனும் அவர்களைப்பற்றிக் கூறிய இடங்களிற் கூத்தர் குறித்தாரில்லை. கூத்தர் விக்கிரம சோழன் காலத்தவர்; அவன் செய்த திருப்பணிகள் யாவற்றையும் நேரிற் கண்டவர். அவன் சிதம்பரம் கோவிலிற் பல திருப்பணிகள் செய்தான் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[25] இவற்றுள் ஒன்றை யேனும் கூத்தர் குறிப்பிட்டார் இல்லை. ஏன் குறிக்கவில்லை என்று யார்தாம் காரணம் கூறக்கூடும்? இவற்றையெல்லாம் நோக்க, இவ்விரண்டாம் காரணம் வலியுடைத்தாகாமை கண்டு கொள்க.

3. ஒட்டக்கூத்தர் குலோத்துங்கன் ஆசிரியர் என்பதும் அவர் சிறந்த சிவபக்தர் என்பதும் உண்மையே ஆயின், அவர் சேக்கிழாரைப் போலத் திருத்தொண்டர் புராணச் செய்திகளில் நிறைந்த புலமையுடையவர் என்பதற்குச் சான்றென்னை? சான்றின்மையின், திருத்தொண்டர் புராணச் செய்திகளை முற்றவுணர்ந்த சேக்கிழாருடைய உணர்ச்சியையும் தகுதியையும் நன்குணர்ந்த அரசன் அவரைப் பெரிய புராணம் பாடச் செய்தான் என்று கோடலில் எவ்விதத் தவறும் இல்லை. அரசன் சேக்கிழாரைக் கொண்டு பெரிய புராணம் பாடுவித்தமையால் ஒட்டக்கூத்தர் பெருமை குறைந்துவிடாதன்றோ?

4. இக்காரணமும் பொருத்தமுடையதாகாது. என்ன? எல்லாக் கோவில்களிலும் அரசர் கால முறைப்படி அவரவர் காலத்துக்

கல்வெட்டுக்களை மேலிருந்து கீழ்நோக்கி வெட்டிவந்தனர் என்பது கூறக்கூடவில்லை. அங்ஙனம் வெட்டவும் முடியாது; கல்வெட்டுச் செய்தியின் அளவு, அது வெட்டத்தக்க வசதியான இடம் இவற்றை நோக்கி வெட்டலே இயல்பாதலின் என்க. மேலும், திருப்புறம்பியத்துக் கோவில் சோழர் காலமுதல் இன்று வரை புதுப்பிக்கப்படவில்லை என்று திட்டமாகக் கூறத் தக்க சான்றில்லை. திருவொற்றியூர், எண்கண், திருக்கடம்பூர், கானாட்டுமுள்ளூர் முதலாய கோவிற் கல்வெட்டுக்களில், முறைபிறழ்ந்தும் தலைதடுமாறியும் உள்ள கல்வெட்டுக்கள் பலவுண்டு. சிறப்பாக எண்கண் என்ற இடத்தில் உள்ள பழுதுபட்ட சிவன் கோவிற் கல்வெட்டுக்களும் கானாட்டு முள்ளூர்ச் சிவன் கோவிற் கல்வெட்டுக்களும் காணத்தக்கவை.[26]

மூன்றாம் குலோத்துங்கன்:
பேரம்பலம் பொன்வேய்ந்தவன் அல்லன்

மூன்றாம் குலோத்துங்கன் கட்டிய திரிபுவன வீரேச்சரம் என்ற சிறப்புடைக் கோவிலில் உள்ள வடமொழிச் சுலோகங்கள் அம்மன்னன் செய்தனவாகக் கூறுவன காண்க:

(1) அவனுடைய சோழ-ஈழ-சேர நாட்டு வெற்றிகள்.

(2) அவன் தில்லையில் முகமண்டபம், கோபுரம், அம்மன் திருச்சுற்று இவற்றைப் பொன்மயமாக்கினான்.

(3) ஈடும் எடுப்பும் அற்ற சிவபக்தன்.

(4) காஞ்சி ஏகாம்பரர் கோவில், மதுரைச் சிவன் கோவில், திருவிடைமருதூர்க் கோவில், தாராபுரத்தில் உள்ள இராசராசேச்சரம், திருஆரூர்ப் பெருங்கோவில் இவற்றைப் பொன்மயமாக்கினான்.[27]

இக்கல்வெட்டில் மூன்றாம் குலோத்துங்கனான திரிபுவன வீரதேவன் பேரம்பலம் பொன்வேய்ந்தான் என்பது குறிக்கப்படாமை காண்க. அவன் தில்லையில் முகமண்டபம், கோபுரம், அம்மன் திருச்சுற்று இவற்றையே சிறப்புறச் செய்தான் என்று இக்கல்வெட்டுக் கூறுகின்றது. கூறவே, மூன்றாம் குலோத்துங்கன் பேரம்பலம் பொன்வேய்ந்தவன் அல்லன் என்பது பெறப்பட்டதன்றோ?

மேலும் சேக்கிழார் காலத்தரசன் 'அநபாயன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அச்சிறப்புப் பெயர் மூன்றாம் குலோத்துங்கற்கு உண்டு என்று கூறச் சான்றின்மை காண்க.

இன்ன பிற காரணங்களால் மூன்றாம் குலோத்துங்கன் சேக்கிழார் காலத்தவன் ஆகான் என்பது அறியப்படும்.

'அநபாயன்' இரண்டாம் குலோத்துங்கனே

சேக்கிழார் புராண ஆசிரியர், சேக்கிழார் காலத்து அரசனை 'அபயன்'[28] எனவும், 'அநபாயன்'[29] எனவும் குறித்துள்ளார் என்பன முன்பே கூறினோம் அல்லவா? சேக்கிழார் பத்து இடங்களில் தம் காலத்து அரசனைக் குறித்துள்ளார்; அப்பத்து இடங்களிலும் 'அநபாயன்' என்பதையே சிறப்பாகக் குறிக்கின்றார்; இரண்டு இடங்களில் 'அபயன்' என்பதைக் குறித்துள்ளார். இனி, இம்மன்னனைப் பற்றிப் பெரிய புராணம் கூறுவனவும்; கூத்தர் பாடிய உலா, பிள்ளைத்தமிழ், தக்கயாகப் பரணி ஆகிய மூன்றும் கூறுவனவும் முறையே காண்போம்:

| | பெரிய புராணம் கூறுவன | உலாவும் பிள்ளைத் தமிழும் தக்கயாகப் பரணியும் கூறுவன: |
|---|---|---|
| 1. | பேரம்பலம் பொன் வேய்ந்தமை[1] | பேரம்பலம் பொன்வேய்ந்தமை[1] |
| 2. | சிறந்த சிவபக்தன்[2] | சிறந்த சிவபக்தன்[2] |
| 3. | செங்கோல் அரசன்[3] | பட்டம் பெற்றவுடன் பகை வேந்தரை விடுதலை செய்தான்; செங்கோல் அரசன்[3] |
| 4. | தில்லைத் திரு எல்லை பொன்னின் மயமாக்கினான்[4] | சிற்றம்பலம், பல மண்டபம், அம்மன் கோவில், எழுநிலைக் கோபுரம், திருச்சுற்று மாளிகை, தெரு இவற்றைப் பொன் மயம் ஆக்கினான்[4] |
| 5. | தில்லைநகர் மணிவீதி அணி விளக்கும் சென்னிநீடு அநபாயன்[5] | நான்கு திருவீதிகளையும் அமராவதியில் உள்ள பெருவீதிகள் நாணப் பெருக்கினான்[5] |
| 6. | அம்புயமலராள் மார்பன்[6] | இலக்குமியை மார்பில் தரித்தவன்[6] |
| 7. | சிறந்த கொடையாளி[7] | மறையவர்க்குத் தானம் செய்தான்[7] |

| | பெரிய புராணம் கூறுவன | உலாவும் பிள்ளைத் தமிழும் தக்கயாகப் பரணியும் கூறுவன: |
|---|---|---|
| | **இவனைக் குறிக்கும் சொற்கள்:** | **இவனைக் குறிக்கும் சொற்கள்:** |
| (1) | அநபாயன் –10 இடங்களில் வருகின்றன[8] | அநபாயன்–3 இடங்களில் வருகின்றன[8] |
| (2) | அபயன் –2 இடங்களில்[9] | அபயன்–2 இடங்களில் வருகின்றன[9] |
| (3) | சென்னி –3 இடங்களில்[10] | சென்னி –2 இடங்களில் வருகின்றன[10] |
| (4) | செம்பியன்–1 இடத்தில்[11] | |
| (5) | குலோத்துங்கன்–1 இடத்தில்[12] | குலோத்துங்கன்– 4 இடங்களில் வருகின்றன[11] |

இங்ஙனம் சேக்கிழாரும் ஒட்டக்கூத்தரும் குறிப்பிட்ட கருத்துக்கள் ஒன்றுபடுதலைக் காணின், சேக்கிழார் குறித்த அநபாயன் குலோத்துங்கனே என்பது ஐயமற விளங்குகிறதன்றோ? தண்டியலங்கார மேற்கோள் பாக்களில் எட்டுப் பாடல்கள் அநபாயனைப் பற்றியே வருகின்றன.[30] அவை அவனுடைய வள்ளற்றன்மை, செங்கோன்மை, பேரரசுத்தன்மை ஆகிய மூன்றையும் பெரிய புராணத்தைப் போலவும் உலா, பிள்ளைத்தமிழ், பரணி போலவும் விளக்கமாகக் கூறுகின்றன. அப்பாடல்களுள் இறுதிப் பாடல் அநபாயனை வாழ்த்துவதாக முடிவதால், தண்டியலங்கார மூலமும் உரையுமோ அல்லது உரை மட்டுமோ இவ்விரண்டாம் குலோத்துங்கன் காலத்தது எனக் கூறலாம். இங்குப் பெரிய புராணம் குறிக்கும் பத்து இடங்களிலும் சிறப்புச் சொல்லாக 'அநபாயன்' என்பதே ஆளப்பட்டிருத்தலும், தண்டியலங்காரம் குறிக்கும் மேற்கோட் செய்யுட்கள் எட்டிலும் 'அநபாயன்' என்ற சொல் ஒன்றே ஆளப் பட்டிருத்தலும் காணச் 'சேக்கிழார் காலத்தரசன் அநபாயன்' என்ற பெயர் ஒன்றையே தனது சிறப்புப் பெயராகக் கொண்டவன் என்பது நன்கு தெரிகின்றது. இங்ஙனம் கொண்டவன் கூத்தரால் புகழ்ப் பெற்ற இரண்டாங் குலோத்துங்கனே என்பது மேற்காட்டிய ஒற்றுமையால் நன்கு விளக்கமாதல் காண்க.

இனி, இவ்விரு புலவரும் குறித்த செய்திகள் அனைத்திற்கும் இக்குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் சான்று பகர்ந்து நிற்கும் அருமைப்பாட்டைக் கீழே காண்க:

| | அநபாயனைப பற்றிய இலக்கியச் செய்திகள் | அநபாயனைப் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் |
|---|---|---|
| 1. | பேரம்பலம் பொன் வேய்ந்தமை | திருமாணிக்குழி, திருப்புறம்பியம், திருக்கோர்கணம் கல்வெட்டுக்கள் இதனைக் குறிக்கின்றன[1] |
| 2. | இவன் ஆட்சியில் போரைப் பற்றிய குறிப்பே இல்லை | இவன் கல்வெட்டுக்களி லும் இப்பேச்சில்லை; அமைதியான அரசாட்சி நடந்தது[2] |
| 3. | இவனது கோப்பெருந்தேவி புவனமுழுதுடையாள்[3] | இவளையே திருமழபாடிக் கல்வெட்டும் கூறுகின்றது[4] |
| 4. | இவன் சிறந்த சிவபக்தன் | 'அநபாயன் தில்லை, நடராசர் திருவடித் தாமரையில் ஈப்போன்றவன்' என்று திருவாரூர் வடமொழிக் கல்வெட்டுக் கூறுகிறது[5] |
| 5. | இவன் தில்லைக் கோவிந்தராசர் சிலையை அப்புறப்படுத்தியவன்[6] | இதனையே திருவாவடு துறைக் கல்வெட்டுக் கூறுகின்றது[7] |
| 6. | இவனது சிறப்புப் பெயர் 'அநபாயன்'[3] | இவனை 'அநபாயன்' என்றே திருவாரூர் வடமொழிக் கல்வெட்டுக் கூறுகிறது[3], (1) இவனது அரசியல் செயலாளன், 'அநபாய மூவேந்த வேளான்' எனப்பட்டான்.[10] (2) இவன் காலத்தில் கோவில்கட்கு விடப்பட்ட நிலங்கள் அநபாயநல்லூர்[11] அநபாயமங்கலம்[12] எனப் பெயர் பெற்றன. (3) சிற்றரசன் ஒருவன் **'அநபாய காடவராயன்'** எனப்பட்டான்.[15] |

*பிற சான்றுகள்: திருஆனைக்காக் கல்வெட்டு*

இதுகாறும் கூறிப்போந்த இலக்கியச் சான்றுகளாலும் கல்வெட்டுச் சான்றுகளாலும் அநபாயன் இரண்டாம் குலோத்துங்கனே என்பது ஐயமற விளங்கும். அம்முடிபை நன்கு வலியுறுத்தும் மற்றொரு கல்வெட்டுச் செய்தியை இங்குக் காண்க: இரண்டாம் இராசராசன் காலத்துத் திருவானைக்காக் கல்வெட்டில், விக்கிரம சோழநல்லூரிலும் **அநபாயமங்கலத்தி**லும் இருந்த சில நிலங்கள் ஆனைக்காவுடைய மகாதேவர்க்கு விற்கப்பட்டன என்ற செய்தி காணப்படுகிறது.[31] விக்கிரம சோழற்கு மகன் இரண்டாம் இராசராசன். எனவே, கல்வெட்டுக் குறித்த 'விக்கிரம சோழநல்லூர்' என்பது விக்கிரம சோழன் பெயர் கொண்டது; அதற்குப் பிற்கூறப்பட்ட 'அநபாய மங்கலம்' என்பது அவ்விக்கிரமற்குப்பின் பட்டம் பெற்ற இரண்டாம் குலோத்துங்கன் பெயர் கொண்டது என்பன மிகவும் தெளிவாகத் தெரிகின்றன. தெரியவே, 'அநபாயன்' என்பது இரண்டாம் குலோத்துங்கனது சிறப்புப் பெயரே என்பது அங்கைக்கனியென விளங்குதல் காண்க.

## இராசராசேசுவரத்துச் சிற்பங்கள்

மேற்சொன்ன இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146–1173) இராசராசபுரத்தில் (தாராசுரத்தில்) சிவன் கோவில் ஒன்றைக் கட்டினான். அங்கு அவன், அவனது கோப்பெருந்தேவி ஆகிய இருவர் உருவச் சிலைகளும் இருக்கின்றன.[32] அக்கோவிலில் சிவனார் இறை அகத்தைச் சுற்றியுள்ள வெளிப்புறப் பட்டியற் பகுதிகளில் பெரிய புராண நாயன்மார் வாழ்க்கையில் சிறப்புடைய ஒவ்வொரு நிகழ்ச்சி குறித்த உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன; அவற்றின்மேல் அந்நிகழ்ச்சியை விளக்கும் சொற்கள் காண்கின்றன.[33] நாயன்மார் அனைவர் வரலாற்றுக் குறிப்புக்களும் இவ்வளவு தெளிவாக இவ்வரசற்கு முன் காட்டப்பட்டன என்று கொள்ள எவ்விதச்சான்றும் இல்லை. ஆதலின், இவன் காலத்தில் நாயன்மார் வரலாற்று விவரங்கள் மக்கள் எல்லோர்க்கும் விளங்கக்கூடிய முறையில் வெளிப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. அங்ஙனம் வெளியாவதற்கு உறுதுணையாக இருந்திருக்கக்கூடிய நூல், இவனது தந்தை காலத்தில் பாடப்பெற்ற – சேக்கிழார் பாடிய – திருத்தொண்டர் புராணமே ஆதல் வேண்டும் என்பது பொருத்தமன்றோ!

சேக்கிழார் பெரிய புராணம் பாடுவதற்கு முன் இவனிடமே நாயன்மார் வரலாற்றைக் கூறியுள்ளார்; அதன் பிறகே அரசன் அதனையறிந்து அவரைப் புராணம் பாடச் செய்தான் என்று திருத்தொண்டர் புராண வரலாறு கூறல் முன்னரே கண்டோம்

அன்றோ? அது கொள்ளத் தக்கதாயின், இரண்டாம் இராசராசன் தன் இளவரசுக் காலத்திலிருந்தே, சேக்கிழாரை நன்கு அறிந்தவன்; நெருங்கிப் பழகியவன்; நாயன்மார் வரலாறுகளை அவர் வாயிலாகவும் பின்னர் அவர் செய்த பெரிய புராண வாயிலாகவும் தெளிவாக அறிந்தவன் என்பன உணரலாம். அவன் அரசனான பின்னர், தன் பெயர் கொண்டு கட்டிய பெருங்கோவிலில் சிவபிரான் இறையிடத்துப் புறச்சுவரில், அவ்விறைவனையே பாடித்தொழுது முத்தி அடைந்த நாயன்மார் வரலாற்றுக் குறிப்புகளைச் சிற்பங்கள் வாயிலாக உலகத்திற்கு உணர்த்தினான் என்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். இச்சிறப்புடைய செயலை நோக்கப் பெரிய புராணம் இரண்டாம் இராசராசன் காலத்திற்றானே மக்களிடம் பரவத் தொடங்கியதென ஒருவாறு நம்பலாம்.[34]

## ஒற்றியூர்க் கல்வெட்டு

மேற்சொன்ன முடிபை அரண் செய்வது போலத் திருவொற்றியூர்க் கல்வெட்டு ஒன்று காண்கிறது. அஃது இரண்டாம் இராசராசற்குப் பின் வந்த இரண்டாம் இராசாதிராசனது (கி.பி. 1166-1182) ஒன்பதாம் ஆட்சியாண்டில் (ஏறத்தாழக் கி.பி. 1174-இல் வெளியிடப் பெற்றதாகும். அதனில், "திருப்பங்குனி உத்தரத்து ஆறாந் திருநாளான புதன்கிழமையும் ஏகாதசியும் கூடிய ஆயில்யத்தினன்று, மடத்துத் தலைவரான சதுரானன பண்டிதர் காபாலிகரது சோமசித்தாந்தத்தை விரித்த வாகீச பண்டிதர், இரண்டாம் இராசாதிராசன் முதலியவர்கட்கு முன் படம்பக்க நாயக தேவர் திருமகிழின்கீழ்த் திருவோலக்கம் செய்து எழுந்தருளியிருந்து **ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் கேட்டருளா நிற்க .....**"[35] என்னும் அரிய செய்தி காணப்படுகிறது.

'ஆளுடைய நம்பி' என்பது சுந்தரர் பெயர். எனவே, அவரைப் பற்றிய புராணமே கோவிலில் படிக்கப்பட்டது என்பது தெரிகிறது. மக்கள் கேட்கத்தக்க நிலையிலும் கோவிலில் விளக்கமாக வாசிக்கத்தக்க முறையிலும் சுந்தரர் வரலாற்றைக் கூறுவது பெரிய புராணம் ஒன்றேயாகும். மேலும், சுந்தரர் வரலாறு கூறும் வடமொழி நூலோ வேறு தமிழ் நூலோ சேக்கிழார்க்கு முன் இருந்தது என்று கூறச் சான்றில்லையாதலின், திருவொற்றியூர்க் கோவிலில் படிக்கப்பட்டது, சேக்கிழார் செய்த பெரிய புராணமாகவே இருத்தல் வேண்டுமெனக் கோடல் பொருத்தமாகும்.

## கல்வெட்டுக்களில் கண்ட 'சேக்கிழார்' என்போர்:

இனிப் பெரிய புராணம் பாடிய சேக்கிழார் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளனரா என்பதைக் காண்போம்:

இதுகாறும் கிடைத்துள்ளது கல்வெட்டுக்களை ஆராயின் 'சேக்கிழார்' என்ற குடிப் பெயருடன் பலர் இருந்தமை வெளியாகும். அவர்களைப் பற்றிய விவரங்களைக் காலமுறைப்படி கீழே காண்க:

| எண் | அரசன் பெயரும் ஆட்சிக் காலமும் | கல் வெட்டுள்ள இடம் | கல் வெட்டின் காலம் | செயல் |
|---|---|---|---|---|
| 1. | கண்டராதித்தர் (கி.பி.949-957) | உடையார் குடி | கி.பி.9 54 | சேக்கிழான் அரையன் சங்கர நாராயணன் என்ற மணவிற் கோட்டத்து மேலப் பழுவூர்ச் சோழ முத்தரையன் நில தானம் செய்தான். 585 of 1920. |
| 2. | பரகேசரிவர்மன் | திருச்சோற் றுத்துறை | மூன்றாம் ஆண்டு | சேக்கிழான் சத்தி மலையன் என்ற மேலூர்க் கோட்டத்துக் காவனூர்-சோழ முத்தரையன் விளக்குத் தானம் செய்தான். 1830 of 1931. |
| 3. | குலோத்துங்கன்-I (கி.பி.1070-1220) | திருக்கழுக் குன்றம் | கி.பி.1092 | புரவுவரித் திணைக் களம் சேக்கிழார் ஆணைப்படி திருக் கழுக் குன்றத்திற்கு எல்லைகள் வகுக் கப்பட்டன. 180 of 1894 |
| 4. | இராசராசன்-II (கி.பி.1146-1173) | திருமழபாடி | கி.பி.1162 | சயங்கொண்ட சோழ மண்டலத்துக் குலோத்துங்கச் சோழவள நாடான புலியூர்க் கோட் டத்துக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவ டிகள் ராம தேவ னான உத்தமசோழப் பல்லவராயன் திருமழபாடி மகா தேவர்க்கு விளக்கு வைக்க 90 ஆடுகள் தந்தான். 95 of 1920. |
| 5. | குலோத்துங்கன்-III | திரு அரத்துறை | கி.பி.1164 | திருவரத்துறையிலிருந்து மாசி, வைகாசி விழாக் காலங்களில் ஆளுடைய பிள்ளையார் திருமேனியைத் திருமாறன் பாடிக்கு எடுத்துச் செல்கையில் பூசை முதலிய வற்றுக்காகச் **சேக் கிழான் பாலறா வாயன்** களப்பாள ராயன் வரியிலியாக நில தானம் செய் தான். [221 of 1929] |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | குலோத்துங்கன்-III (கி.பி.1178-1218) | கோட்டூர் | கி.பி.1179 | **குன்றத்தூர்ச் சேக் கிழான் பாலறா வாயன்** களப் பாளராயன் விளக்கு எரிக்கப் பணம் தந்தான். [445 of 1912] |
| 7. | குலோத்துங்கன்-III (கி.பி. 1178-1218) | திருக்கடவூர் | கி.பி.1181 | **குன்றத்தூர்ச் சேக்கிழான் அம்மையப்பன்** பராந்தக தேவனான கரிகாலச் சோழப் பல்லவராயன் நிலதானம் செய்தான் [39 of 1906] |
| 8. | குலோத்துங்கன்-III (கி.பி.1178-1218) | குன்றத்தூர் | கி.பி.1181 | **சேக்கிழார்** புவனப் பெருமாள் என்ற துண்டக நாடு உடையான் மனைவி திரு நாகேச்சரம் கோவில் சபையோரிடம் விளக்கு எரிக்கப் பணம் தந்தாள். [230 of 1930] |
| 9. | இராசராசன்-III (கி.பி.1216-1246) | திருப்பாலை வனம் | கி.பி.1225 | **குன்றத்தூர்ச் சேக்கிழான்** பட்டிய தேவன் ஆட் கொண்டான் விளக்கு எரிக்க ஆடுகள் தானம் செய்தான். [314 of 1929] |
| 10. | இராசராசன்-III | திருப்பாசூர் | கி.பி.1226 | **குன்றத்தூர்ச் சேக்கிழான்** அரையன் ஆட்கொண்ட தேவன் என்ற முனையதரையன் விளக்கு எரிக்கப் பசுக்கள் அளித்தான். [136 of 1930] |
| 11. | இராசராசன்-III | குன்றத்தூர் | கி.பி.1226 | **குன்றத்தூர்ச் சேக்கிழான்** வரந்தரு பெருமாள் என்ற திருவூரகப் பெருமாள் திரு நாகேச்சரம் கோவிலில் விளக்கு வைக்கப் பணம் அளித்தான். [218 of 1930] |
| 12. | மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி.1270-1305) | குன்றத்தூர் | கி.பி.1300 | **குன்றத்தூர்ச் சேக்கிழான்** ஆட வல்லான் என்பவன் திருநாகேச்சரர்க்கு நிலதானம் செய்தான். [258 of 1930] |

அந்தந்த அரசரையே சிறப்பாகக் குறிக்கும் தொடக்கத் தொடர்கள் மேற்காட்டிய கல்வெட்டுக்கள் பலவற்றில் இன்மை வருந்தற்குரியது. குலோத்துங்கர் சூதிரிபுவன சக்கரவர்த்திகள்' என்ற விருதுடன் மூவர் இருந்தனர்; இன்ன கல்வெட்டு இன்ன குலோத்துங்கரைத்தான் குறிக்கின்றது என்று சிறப்புத் தொடர்கள் இல்லாத கல்வெட்டுக்கள் கொண்டு திட்டமாகக் கூறற்கில்லை. ஆதலின், ஐயப்படத்தக்கவற்றுள்,

1, 2, 3 இராவ்சாகிப் மு. இராகவையங்கார் கொண்ட முடிபை ஏற்றுக் குறிக்கப்பெற்றன.

— Vide his Sasana Tamil Kavi Charitram pp. 71-77.

மற்றவை பேராசிரியர் க. அ. நீலகண்ட சாத்திரியார் கொண்ட முடிபின்படி குறிக்கப்பெற்றன. — Vide his 'Cholas' Vol. II, Part II.

### சேக்கிழார் மரபினர்

இக்கல்வெட்டுச் செய்திகளால் அறியப்படுவன:

1. சேக்கிழார் குடியினர் தொண்டை மண்டலத்து மண்ணிற்கோட்டம், மேலூர்க்கோட்டம், புலியூர்க் கோட்டங்களில் வாழ்ந்து வந்தனர்.

2. அக்குடியினர் 'சோழ முத்தரையன்', 'உத்தமசோழப் பல்லவராயன்', 'களப்பாளராயன்', 'கரிகாலசோழப் பல்லவராயன்', 'முனையதரையன்' என்ற பட்டங்கள் பெற்றுச் சோழர் அரசியலில் சிறந்த பங்கு கொண்டிருந்தனர்.

3. அங்ஙனம் அரசியலிற் பங்கு கொண்டவருள் குன்றத்தூர்ச் சேக்கிழார் மரபினரே பலராவர்.

4. இம்மரபினர், திருத்தொண்டர் புராண வரலாறுடையார் குறித்தபடி, சோழராட்சி முடியுமளவும் அதற்குப் பிறகும் அரசியற் பதவிகள் தாங்கியிருந்தனர்.

5. இம்மரபினர் சைவப் பற்றுடையவராய்ப் பல தளிகட்குத் தானம் செய்த பெருமக்களாவர்.

### இவருட் பெரியபுராணம் பாடியவர் யாவர்?

மேற்காட்டிய பட்டியலில் குன்றத்தூர்ச் சேக்கிழார் மரபினர் இரண்டாம் குலோத்துங்கன் கால முதற்றான் சோழர் அரசியலில் சிறப்புப் பெறலாயினர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இரண்டாம் இராசாதிராசனது 19 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டிற் காணப்பெறும் சேக்கிழார் பாலறாவாயரும் மூன்றாம் குலோத்துங்கனது 2ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டிற் காணப்பெறும் சேக்கிழார் பாலறா வாயரும், ஒருவரே எனக் கோடல் தவறாகாது. இரண்டாம் இராசராசனது 17ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிற் காணப்பெறும் **சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனான உத்தம சோழப் பல்லவராயன்*** என்பவர் மேற்சொன்ன பாலறாவாயர் தமையனாரும் பெரிய புராணம் பாடியவருமாகிய சேக்கிழாராக இருக்கலாம் என்று கோடலும் தவறாகாது. என்னை? சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவரே என்பது மேலே பல

சான்றுகள் கொண்டு விளக்கப்பட்டதாலும், இப்பட்டியற்படி இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் அவன் மகனான இரண்டாம் இராசராசன் காலத்திலும் வெளிப்பட்ட கல்வெட்டுக்களில் சேக்கிழார் புராண ஆசிரியர் குறித்த 'சேக்கிழார் உத்தம சோழப் பல்லவராயர்', 'சேக்கிழார் பாலறாவாயர்' என்பவர் பெயர்கள் காணப்படலாலும் என்க.

## சேக்கிழார் மாதேவடிகள்

'மாதேவடிகள்' என்பது சேக்கிழாரது பத்திச் சிறப்பு நோக்கி வந்த பெயராகலாம். இதற்கேற்பச் சேக்கிழார் புராண ஆசிரியர் அவரைக் 'குன்றைமுனி சேக்கிழார்'[36] எனவும், 'அண்டவாணர் அடியார்கள் தம்முடன் அருந்தவந்தனில் இருந்தவர்'[37] எனவும் கூறியிருத்தல் கருதற்பாலது. ஆதலின், சேக்கிழார்க்கு 'மாதேவடிகள்' என்ற பெயர் அவர் பெரிய புராணம் பாடிய பிறகு உண்டான தென்று கோடல் பொருத்தமாகும்.[38]

## இராமதேவன்

இப்பெயர் சேக்கிழார் புராண ஆசிரியர் கூறாததாகும். இது சேக்கிழாரது இயற்பெயர் என்னலாம். சிறந்த சைவ மரபிலே பிறந்த சேக்கிழார்க்கு 'இராமதேவன்' என்ற வைணவப் பெயர் அமையுமோ? எனின், அமையும் என்னலாம். 63 நாயன்மாருள் ஒருவராகிய முனையதரையர் '**நரசிங்கர்**' என்ற வைணவப் பெயரையும், ஒன்பதாம் திருமுறையில் இரண்டு பதிகங்கள் பாடியுற்ற சிவனடியார் ஒருவர் **புருடோத்தம நம்பி** என்ற வைணவப் பெயரையும் கொண்டிருந்தனர் என்பதையறிய சிறந்த சிவபத்தனான முதற் குலோத்துங்கன் மனைவியருள் ஒருத்தி பெயர் 'நம் பிராட்டியார் சீராமன் அருமொழி நங்கை என்ற ஏழுலகம் உடையார்',[39] என்பதையும் நோக்க, பெரிய புராண ஆசிரியரும் சிறந்த சிவனடியாரும் ஆகிய சேக்கிழார் 'இராமதேவன்' என்ற பெயர் பெற்றிருந்ததில் வியப்பில்லை என்க. மேலும், இச்சேக்கிழார் மரபில் வந்த ஒருவன் குன்றத்தூர்ச் சேக்கிழான் வரந்தரு பெருமாள் என்ற திருவூரகப் பெருமாள்'40' என்ற பெயர் கொண்டு மூன்றாம் இராசராசன் காலத்தில் இருந்தான் என்பது நோக்கத் தக்கது. 'திருவூரகப் பெருமாள்' என்ற பெயர் குன்றத்தூரில் கோவில் கொண்டுள்ள விஷ்ணுவின் பெயராகும்[41] என்பது இங்கு அறியத்தக்கது. இத்துடன் குன்றத்தூர்ச் சேக்கிழார் மரபினருள் சிலர் இன்றும் வைணவராக இருப்பதும் கவனிக்கத்தக்கது.[42]

**அருண்மொழித்தேவர்**

இப்பெயர் சேக்கிழார் இயற்பெயர் என்று கொள்ளத்தக்க முறையில் சேக்கிழார் புராண ஆசிரியர் குறித்துள்ளார். இப்பெயர் சோழர் காலத்தில் பெரு வழக்குடையது. முதல் இராசராச சோழனுக்கு இப்பெயர் இருந்தது.[43] அருள் மொழி நங்கை என்று சோழமாதேவியர்க்குப் பெயர் இருந்தது.[44] குடிமக்களும் இப்பெயர் பெற்றிருந்தனர்[45] என்பது பல கல்வெட்டுக்களைக் கொண்டு அறியலாம்.

ஆதலின், இப்பெயர் சேக்கிழாரது இயற்பெயராகக் கொள்ளலாம்; இன்றேல் பெரியபுராணப் பாடற் சிறப்பு நோக்கி இவரை இங்ஙனம் அறிஞர் அழைப்பராயினர் எனக் கோடலும் பொருந்தும்.

**உத்தம சோழப் பல்லவராயர்**

இப்பட்டம் சேக்கிழார்க்கு அரசன் தந்தான் என்று சேக்கிழார் புராண ஆசிரியர் குறித்தனர்.

சோழர் அரசியலில் பலவகைத் துறைகளிலும் தலைவர்களாக இருந்தவர் - படைத்தலைவர், நாட்டுத் தலைவர், நாட்டை அளக்குந் தலைவர், திருமந்திரவோலை நாயகம், உடன்கூட்டத்து அதிகாரிகள் முதலியோர் 'மூவேந்தவேளான், காலிங்கராயன், கேரளராசன், தொண்டையன், வாணகோவரையன், பல்லவராயன், இருங்கோவேள், காடவராயன், கச்சிராயன், சேதிராயன், விழுப்பரையன்' முதலிய பட்டங்கள் அரசரால் வழங்கப்பெற்றனர்.[46] பெறவே, சேக்கிழார் அமைச்சுத் துறையில் முதன்மையாக இருந்தமையால் 'உத்தம சோழப் பல்லவராயர்' என்ற பட்டத்தைப் பெற்றனர் எனக் கோடல் பெரிதும் பொருத்தமேயாகும்.

**சோணாட்டுத் திருநாகேச்சரம்**

சோழ நாட்டுத் திருநாகேச்சரத்தில் சேக்கிழார், அவர் தம்பி பாலறாவாயர், அவர் தாயார் ஆகிய மூவர் உருவச் சிலைகள் இன்றும் இருக்கின்றன. அவை, சேக்கிழார் அமைச்சராக இருந்தபொழுது அத்திருநாகேச்சரத்திற் பேரன்பு கொண்டிருந்தார் என்று சேக்கிழார் புராணம் செப்புகின்றதை உறுதிப்படுத்துகின்றன என்று கோடல் தவறாகாது.

**குன்றத்தூர்த் திருநாகேச்சரம்**

சேக்கிழார், சோழ நாட்டுத் திருநாகேச்சரத்தைப் போன்றதொரு கோவிலைத் தம் குன்றத்தூரில் கட்டி, அதற்கு அப்பெயரிட்டார் என்று சேக்கிழார் புராணம் கூறுகின்றது. குன்றத்தூர்த் திருநாகேச்சரம் என்ற

கோவிலில் உள்ள 44 கல்வெட்டுக்களைக் காணின்,[47] அவற்றில் பழமையானவை இரண்டாம் குலோத்துங்கன் காலத்தனவேயாகும் என்பதை அறியலாம். அக்கோவிலில் சேக்கிழார்க்குத் தனிக் கோவில் இருக்கின்றது; சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. அக்கோவிலுக்குச் சிறப்பாகச் சேக்கிழார் மரபினரே தானங்கள் செய்தனர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[48] இவை அனைத்தையும் நோக்கச் சேக்கிழார், சோணாட்டுத் திருநாகேச்சரத்தை நினைவிற் கொண்டு தம் ஊரில் இக்கோவிலைக் கட்டியிருக்கலாம் என்று கோடல் பொருத்தமே ஆகும்.

### சேக்கிழார் மரபினர்

சேக்கிழார் புராண ஆசிரியர், 'சேக்கிழார் கால முதல் இன்றுவரை அம்மரபினர் அரசர்பால் சிறப்புற்று வருகின்றனர்' என்று கூறியுள்ளார்.[49] அவர் கூற்று மெய் என்பதை நாம் முன்புகாட்டிய சேக்கிழார் பெயர்ப்பட்டியல் உறுதிப்படுத்தலைக் காணலாம். (1) இதுகாறும் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் குன்றத்தூர்ச் சேக்கிழார் மரபினரைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் சேக்கிழார் காலத்தவனான இரண்டாம் குலோத்துங்கன் கால முதலே காணக்கிடைக்கின்றன. (2) அவருக்குப் பின்னும் அம்மரபினர் சோழப் பேரரசில் சிறப்புற்றிருந்தனர் என்பது மேற்சொன்ன பட்டியலைக் கொண்டே பாங்குற உணரலாம்.

### முடிவுரை

இதுகாறும் நடத்திய ஆராய்ச்சியாற் போந்த செய்திகளாவன:

(1) சேக்கிழார் தொண்டைமண்டலம் - புலியூர்க் கோட்டம் - குன்றத்தூர் வளநாட்டுக் குன்றத்தூரினர்; வேளாளர்; சேக்கிழார் குடியினர். அவரது இயற்பெயர் 'இராமதேவன்' என்பதாகலாம். அவர் தம்பி பாலறாவாயர்.

(2) சேக்கிழார் காலத்து அரசன் 'அநபாயன்' என்ற சிறப்புப் பெயர்கொண்ட இரண்டாம் குலோத்துங்கன். சேக்கிழார் அவனுடைய முதலமைச்சர் ஆதலால் அவர் 'உத்தம சோழப் பல்லவராயர்' என்ற பட்டம் பெற்றவர்; இளவரசனான இரண்டாம் இராசராசனிடம் நெருங்கிப் பழகிய வராகலாம்.

(3) சேக்கிழார் சோழநாட்டுத் திருநாகேச்சரத்தில் மிகுந்த பத்தியுடையவர். ஆதலால் அதற்கு அறிகுறியாக அவர் தமது ஊரில் 'திருநாகேச்சரம்' என்ற பெயரால் கோவில் எடுப்பித்திருக்கலாம்.

(4) சேக்கிழாருடைய சைவ சமயப் பற்றும் நாயன்மார் வரலாற்று அறிவும் சிறந்த தமிழ்ப் புலமையும் கண்ட அநபாயன்

அவரைப் பெரியபுராணம் பாடச் செய்திருக்கலாம்; அல்லது, இவற்றை இளவரசனான இராசராசன் வாயிலாக உணர்ந்து அநபாயன் சேக்கிழாரைப் பெரிய புராணம் பாடச் செய்து சிறப்பளித்திருக்கலாம். சீவகசிந்தாமணி பற்றிப் பெரிய புராணம் எழுந்தது என்னும் கூற்றுப் பொருத்தம் அற்றது.

(5) சேக்கிழாருக்குப்பின் அவர் தம்பி பாலறாவாயர் சோழர் அரசியலில் உயர்வடைந்திருக்கலாம். சேக்கிழார் இரண்டாம் இராசராசன் காலத்திலும் (கி.பி. 1162) உயிருடன் இருந்தவராவர்.

(6) பெரிய புராணத்தில் பற்றுக்கொண்ட இரண்டாம் இராசராசன் தான் கட்டிய இராசராசேச்சரம் மூலத்தான புறச் சுவர்களில் நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சிற்பங்களாகச் செதுக்குவித்தான் போலும்!

(7) சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணமே இரண்டாம் இராசதிராசன் காலத்தில் (ஏறத்தாழக் கி.பி. 1174 இல்) திருவொற்றியூர்க் கோவிலில் நடந்த பங்குனி உத்தர விழாவில் படிக்கப்பட்டதாகலாம்.

(8) சேக்கிழார் புராண ஆசிரியர் சைவ சமய ஆசாரியராகிய புகழ் பெற்ற உமாபதி சிவாச்சாரியர் என்னல் பொருந்தாது. அதனை எழுதியவர் இவரினும் வேறாவர்; ஆயினும், அவர் கூறும் சேக்கிழார் பற்றிய செய்திகள் பெரும்பாலும் கல்வெட்டு ஆராய்ச்சிக்குப் பொருந்துவனவாக இருத்தலால், அவர், சேக்கிழார் வரலாறு நாட்டில் நன்றாய்ப் பரவியிருந்த காலத்தவர், உமாபதி சிவத்திற்கு முற்பட்டவர் என்னலாம்.

குறிப்புகள்

1. திருத்தொண்டர் புராண வரலாறு, செ. 98.
2. திருத்தொண்டர் புராண வரலாறு, செ. 24.
3. திருத்தொண்டர் புராண வரலாறு, செ. 99.
4. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் பதிப்பு, முகவுரை, பக்கம் 6.
5. செ. 39; தமிழ்ப் பொழில், துணர் 3, பக்கம் 209.
6. இடங்கழியார் புராணம், செ. 2. 3.
7. கழற்சிங்கர் புராணம், செ. 1, 2; ஐயடிகள் புராணம், செ. 1, 2. 7.
8. செ. 46.
9. பெரிய புராண ஆராய்ச்சி, அதிகாரம் 2.
10. செ. 26. 28.
11. A. R. E. 1918. II. 34.
12. S. I. I. II. P. 20.
13. நாவலர் பதிப்பு; C.K.S. முதலியார் பதிப்பு, Vol. I.
14. செய்யுள் 59. 58, 52.

15. பக்கம் 644, 661.
16. பக்கம் 6, 37.
17. செந்தமிழ், vol. 27, p. 27.
18. Prof. K. A. N. Sastry, in a similar Context observes: "In view of the tendency, common in Indian literature of fathering minor works of unknown origin upon celeberated authors and in view of the mediocre and commonplace character of these two works, we have to receive with great suspicion legends on their authorship and the occassions for their composition" – Vide his 'cholas' vol. II, Part I, pp. 527- 528.
19. செந்தமிழ், Vol. II, pp. 273, 386.
20. R. கோபிநாதராவ் - 'சோழ வம்ச சரித்திரச் சுருக்கம்'.
21. C.M. இராமச்சந்திரச் செட்டியார் கட்டுரை -'செந்தமிழ்ச்செல்வி', Vol. 10, pp. 132-141; M. இராகவ ஐயங்கார் 'சாசன தமிழ்க்கவி சரிதம்', pp 70-78; A. R. E. 1912, II. 27; A. R. E. 1918; p. 150, K. A. N., Sastry's - Cholas Vol. II, Part I, p. 76.
22. V.S. வாண்டையார் கட்டுரை-தமிழ்ப் பொழில், துணர் 13, PP. 462-467; எனது மதிப்பிற்குரிய நண்பர் உயர்திரு. T.V.S. பண்டாரத்தார் அவர்களும் இக்கருத்துடைவரே.
23. C.M. இராமச்சந்திரச் செட்டியார் கட்டுரை 'செந்தமிழ்ச் செல்வி' Vol. 10, pp, 132-141 ; M. இராகவ ஐயங்கார்–"சாசன தமிழ்ச் சரிதம்", pp. 70, 78.
24. Vide – இராசராசன் உலா, வரிகள் 59 - 65.
25. S.I.I.III, p. 185; Ep. Ind. Vol. 7, p. 5; K.A.N. Sastry's 'Cholas' Vol. II, Part I, pp. 65-66.
26. 1943–ஏப்ரலில் யான் இவ்விடங்களை எல்லாம் பார்த்து வந்தேன்.
27. 190 of 1907; Prof K. A. N. Satyr's article in the 'Acharya Pushpanjaly', pp. 5-7.
28. செ. 59.
29. செ. 98.

1. பெரியபுராணம், ப.2, செ. 8.
2. Ibid, p.5, S.12.
3. Ibid, p.13, S.35, p.409, S.847
4. Ibid, p.182, S.8.
5. Ibid, p.589, S.8.
6. Ibid, p.409, S.847.
7. Ibid, p.631, S.14.
8. Ibid, pp.2, 5, I. 15, 62, 84, 182, 409, 587, 631.
9. Ibid, pp.5, 182.
10. Ibid, pp.62, 182, 589.
11., Ibid, p.409.
12., Ibid, p.182.

1. மூவர் உலா pp.31, 158.
2. Ibid
3. Ibid, p.30; குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் (தமிழ்ப் பொழில்) vol.4, pp.365- S-2 and 366, S.10.
4. Ibid, p.58,, தக்கயாகப் பரணி vv.777 808-310.
5. Ibid, p.32 and Ibid.
6. Ibid, p.51, Lines 661-664.
7. Ibid, p.33.
8. Ibid, pp.39, 50, 55.
9. Ibid, pp.39, 46.
10. Ibid, pp.52, 58.
11., Ibid, pp.30, 37, 40, 42.

30. குமாரசாமிப் புலவர் பதிப்பு (1926), pp.1, 28, 81, 93, 115, 152, 184.

1. 157 of 1902, S.I.I. Vol.7 No.782; 350 of 1927, A.R.E. 1927-II 24; 411 of 1902, S.I.I. Vol.7, No.1044.
4. 85 of 1895.

2. K.A.N. Sastry's 'Cholas' Vol.II. Part I, p.75.
3. K. Ula, pp.30-32, lines 70-74.
5. 73 of 1890; S.I.I. IV.397.
6. K. Ula. p.31, Lines 77-78.
7. 363 of 1907, K.A.N. Sastry's 'Cholas', Vol.II, Part I, p.74 (Foot-note) and p.75.
8. பெரிய புராணம்; தண்டியலங்காரம்.
9. 73 of 1890; S.I.I. IV 397.
10. 346 of 1911.
11. 271 of 1915, 533 of 1921, 157 of 1918, S.I.I. VII, 485; 64 of 1925.
12. 108 of 1937.
13. 181 of 1906.

31. 108 of 1937.

32. J.M. சோமசுந்தரம் பிள்ளை, 'சோழர் கோயிற் பணிகள்' ப.50.
இக்கோவில் 'இராசராசேச்சரம்' என்ற பெயர்கொண்டு இருப்பதும், இங்குள்ள கல்வெட்டுகளிற் பழையன இரண்டாம் இராசராசனுடையனவாக இருப்பதும் காண, இக்கோவில் இரண்டாம் இராசராசன் கட்டினான் எனல் பொருந்தும். இங்ஙனம் இருப்பக் கல்வெட்டறிஞர், 'இது மூன்றாம் குலோத்துங்கனாற் கட்டப்பட்டது' என்று குறிப்பிட்டது பொருந்தாது. —A.R.E. 1908, II, 65 and 66.
இக்கூற்றை உண்மை எனக் கொண்டு மற்றொரு கல்வெட்டறிஞரும் அங்ஙனமே குறித்திருத்தல் வியப்புக்குரியதே. —A.R.E. 1920, p.102.

33. A.R.E. 1090, II, Plates I to VI.

34. "The Periyapuranam has influenced the lives and thought of the Tamil Saiva population almost Incessantly from the date of the composition".
–K.A.N. Sastry's 'Cholas' Vol.II; Part I, p.533.

35. S.I.I.V. 1358.
* இப்பெயர் 'மாதேவடிகளார் மாதேவனான உத்தம சோழப் பல்லவராயன்' என்று கருதவும் இடமுண்டு (?)

36. செ. 84.

37. செ. 109.

38. இதே முடிவினை இராவ்சாகிப் மு. இராகவையங்கார் அவர்களும் கொண்டுள்ளனர்.
– சாஸன தமிழ்க்கவி சரிதம் ப. 71–77.

39. 304 of 1907.

40. 218 of 1930.

41. Vide Ins. 177 to 170 of 1930.

42. நான் குன்றத்தூரைப் பார்வையிட்டேன்.

43. K.A.N. Sastry's 'Cholas', Vol.I, p.224; Vol.II, Part I, p.459.

44. 482 of 1925, 304 of 1907.

45. 96 of 1911, 81 of 1900, 671 of 1919.

46. T.V.S. Pandarattar's 'Kulottunga I'.

47. Ins. 187 to 230 of 1929–1930.

48. 194, 198, 199, 222 of 1929–1930.

49. செ. 102.

# 12. கம்பர் காலம்

கம்பர் காலம் யாது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேற்றுமைகள் உள்ளன. சிலர், "எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின் மேல்" என்னும் பாடலை ஆதாரமாகக் கொண்டு, கி.பி. 885 இல் இவ்வுத்தம காவியம் அரங்கேற்றப்பட்டது என்பர். வேறு அறிஞர்கள் சிலர் இக்காவியம் அரங்கேறிய காலம் 12ஆம் நூற்றாண்டின் இறுதி என்பர். இவ்விரு கொள்கைகளில் வன்மையுடையது எது என நாம் துணிதல் வேண்டும்.

"சகாப்தம் எண்ணூற்றேழின் மேல்..... அரங்கேற்றினானே"[1] என்ற செய்யுளைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். இதனை ஒப்புக்கொள்வதாயின், ஆழ்வார்கள் பலருடைய காலத்திற்கும் கம்பன் காலம் முற்பட்டதென்று ஏற்படும். கம்பன் சடகோபர் அந்தாதி பாடிய வரலாறு உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். சடகோபரது (நம்மாழ்வார்) காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டாகுமெனத் தக்க ஆதாரங்களால் நிறுவப்பட்டுள்ளது. ஆழ்வார்களில் கடைசியாகத் தோன்றியவர் இவரே. நாலாயிரத்தையும் முதல் ஆச்சாரியராகிய நாதமுனிகளுக்கு இவர் உபதேசித்தவர் என்று ஐதிகம் கூறுகிறது. 9 ஆம் நூற்றாண்டினராகிய திருமங்கையாழ்வாரது அருளிச் செயலினின்றும் ஒரு பாசுரத்தைக் கம்பன் அப்படியே அமைத்திருக்கிறான்.

ஏழை யேதலன் கீழ்மக னென்னா
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கியுன் தோழி
உம்பி யெம்பியென் றொழிந்திலை, உகந்து
தோழ னீயெனக் கிங்கொழி யென்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ணநின் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத் தம்மானே.

என்ற பாடலின் கருத்தும் சொல்லும்,

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
ஆழி நண்பினை உன்னி மயங்குவாள்.

**(சுந்தர., காட்சி. 29)**

என்னும் பாடலில் அமைந்திருத்தலைக் காணலாம்.

"இச்செய்தி முதல் நூலாகிய வான்மீகத்தில் இல்லை. இதனால் கம்பன் திருமங்கையாழ்வார் பாசுரத்திலிருந்தே இக்கருத்தை எடுத்திருக்கிறான் என்பது விளக்கமாகிறது. இங்ஙனமே கூனியின் முதுகில் உண்டை தெறித்த கதை வான்மீகத்தில் இல்லை". இச்செய்தி,

கூனிகூன் உண்டை கொண்டரங்க வோட்டி (800)
உளமகிழ்ந்த நாதன்

எனத் திருமழிசையாழ்வார் பாசுரத்திலும்,

கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெரித்தாய்

என நம்மாழ்வார் பாசுரத்திலும் வந்துள்ளது. கம்பன் இதனை,

பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் உள்ளத்து உள்ளுவான்

**(மந்தரை சூழ்ச்சி., 41)**

எனத் தன் நூலில் குறிப்பிடுகிறான். எனவே, ஆழ்வார்களுக்குக் கம்பன் பிற்பட்டவன் என்பது மலையிலக்கு. இங்ஙனமே சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய காவியங்களுக்கும் கம்பனது காவியம் கடப்பட்டுள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இக்காவியங்களும் 10 ஆம் நூற்றாண்டளவில் தோன்றியவையே. பண்டை நூல்களிலிருந்து கம்பன் ஒவ்வோர் அகப்பை அள்ளித் தனது நூலில் அமைத்துக்கொண்டான் என்ற பரம்பரைச் செய்தியும் இவற்றால் வலியுறுகிறது. இந்த அகச் சான்றுகளுக்கு முற்றும் மாறாக, 'எண்ணிய சகாப்தம்' என்ற செய்யுள் கம்பனை ஆழ்வார்களுக்கு முற்பட்டவனாக்குகிறது. இது முற்றும் அபத்தமாகும். வைணவ சமய வரலாறும் இதற்கு மாறாக உள்ளது.

மேலும், சகாப்தம் தமிழ் நாட்டிலே எட்டாம் நூற்றாண்டளவிலே தான் வழங்கத் தொடங்கியது எனச் சாசன வாயிலாக அறிகிறோம். இவ்வாறு வழங்கத் தொடங்கிச் சில நூற்றாண்டுகள் சென்ற பின்னரே அது பொதுமக்களால் வழங்கப்பட்டு, காவியங்களில் குறிக்கப்பட்டிருத்தல் கூடும். இங்ஙனம் கொள்வது பெரும்பாலும் உண்மை ஆதல் சாலும். எனவே, சகாப்த வழக்கு கி.பி. 885-இல்

தமிழ் நூல்களில் காணப்படுதல் பெரிதும் அசம்பாவிதமாம். வேறொரு முக்கியமான செய்தியும் இங்கே சிந்தித்தற்குரியது. 'அரங்கேற்றுதல்' என்பது அறிஞர்கள் கூடிய அவையில் நூல்கள் படிக்கக் கேட்டு அங்கீகரிக்கப்படுவதைக் குறிப்பதற்கு, முன்னாளில் வழங்கப்படவில்லை.

தொல்காப்பியத்தில்,

நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி

என்றே வந்துள்ளது. சிலப்பதிகார, மணிமேகலைப் பாயிரங்களில் கூட,

உரைசா லடிகள் அருள மதுரைக்
கூல வாணிகள் சாத்தன் கேட்டனன்

(**சிலப்., பதி.,** 88-89)

இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
..........................
..................அறிய வைத்தனன்

(**மணிமேகலை, பதி.,** 95-98)

என்றேதான் வந்துள்ளன.

சிந்தாமணியில் 'தேனூற நின்று தெருண்டாரவை **செப்பலுற்றேன்**' என வருகிறது. சூளாமணியில், 'தேமாண் அலங்கல் திருமால் நெடுஞ்சேந்தன் என்னுங் கோமான் அவையுள் தெருண்டார் கொளப்பட்டதன்றோ' என்று உள்ளன. பெரிய புராணம் முதலியவற்றிலும் இங்ஙனமே.

'அரங்கேற்றம்' என்ற தொடர் வழக்கு நாட்டியக் கலை ஒன்றினுக்கே முதலில் உரித்தாக வழங்கி வந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் 'அரங்கேற்று காதை' என வருமிடத்தை நோக்குக. 'ஐய நுண்ணிடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார்' என்றனன் கம்பனும். கற்றறிந்தார் அவையில் நூலைக் கேட்பித்தற்கு இத்தொடரை மிகப் பிற்பட்ட காலத்தேதான் வழங்கலாயினர். இப்பிற்பட்ட வழக்கு இப்பாடலில் வந்துள்ளதால் இதன் காலமும் மிகப் பிற்பட்டதே எனத் துணியலாம். எவ்வளவு பிற்பட்டதென நாம் துணிய அவசியமில்லை. இக்காரணங்களால் இச்செய்யுள்

கம்பன் காலத்தது அன்று. இப்போது கிடைக்கும் இராமாயணப் பிரதியில் மிகப் பழையதாகிய தென் திருப்பேரைப் பிரதியில் இச்செய்யுள் காணப்படவில்லை. இதுவும் மிக முக்கியமான செய்தி. இப்பிரதி கொல்லம் 753 இல், அதாவது கி.பி. 1578 இல் எழுதப்பெற்றதாகும். எனவே, பிற்பட்ட காலத்தொருவரால் இச்செய்யுள் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறே மக்கள் அபிமானித்துப் பாராட்டும் ஒரு நூலை மிகப் பழமையானதென்று காட்டுதற்கு ஆதாரமாகச் சில செய்யுட்களைப் புதிதாகப் புனைந்து புகுத்தியுள்ளமை இலக்கிய ஆராய்ச்சியாளர் அறியாததல்ல. கம்பனுக்கு மிகப் பிற்பட்டுத் தோன்றிய கச்சியப்ப சிவாசாரியார் (இவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார் காலத்தவர்) இயற்றிய கந்தபுராணத்தை இராமாயணத்திற்கும் ஒரு நூறு ஆண்டு முற்பட்டதெனத் தொன்மை காட்டும் பொருட்டுத் தோன்றிய செய்யுள் ஒன்றை இங்கே ஞாபகமூட்டலாம். அச்செய்யுள் வருமாறு:

வேதமொடு வேதாங்கம் பயின்ற வல்லோன்
　　விரிந்தசிவா கமம்உணர்ந்து மேன்மை பூண்டோன்
போதம்நிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
　　புனிதமிகு கச்சியப்ப குரவ னானோன்
வாதமுறு புலவர்குழாம் மகிழ்ந்து போற்ற
　　மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டத்து
ஏதமறு **சகாத்தம் எழுநூற்றின் மேலாய்**
　　இலகுகந்த புராணமரங் கேற்றி னானே.

இங்குக் கூறியவற்றால், கம்பன் காலம் 9ஆம் நூற்றாண்டு என்னும் கொள்கை சிறிதும் வலியற்றதாயொழிகின்றது. அவனது காவியத்திலுள்ள பல குறிப்புக்களினால் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இராமாயணத்தைப் பாடி முடித்தான் என்பது விளங்குகிறது. சோழ அரசர்களின் புகழ் உச்ச நிலையிலிருந்தபோது தான் கம்பன் வாழ்ந்திருந்தான்.

புவிபுகழ் சென்னிபேர் அமலன் தோள்புகழ்
கவிகள்தம் மனையெனக் கனக ராசியும்

என வந்துள்ளமை இதற்குச் சான்று. முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட அரசருள் ஒருவரையேனும் இங்ஙனம் கூறுதல் கூடாது.

"சென்னிநாள் தெரியல் வீரன்
　　தியாக விநோதன் தெய்வப்
பொன்னி நாட்டுவமை வைப்பைப்
　　புலன்கொள நோக்கிப் போனான்"

என ஒரு செய்யுள், மருத்து மலைப் படலத்தில் (58) வருகிறது. இதில் குறித்த "தியாகவிநோதன்" மூன்றாம் குலோத்துங்கனுக்கு உரிய பட்டப்பெயராகும். சாசனங்களும் இதனை வலியுறுத்துகின்றன. இவ்வரசன் கி.பி. 1178 முதல் 1216 வரை ஆட்சி புரிந்தவன். இவன்கீழ்ச் சிற்றரசர் ஆகவும் அதிகாரி முதலியோராகவும் அமர்ந்தவர்கள் தங்கள் பட்டப் பெயரில் இவ்விநோதன் என்றதனைச் சேர்த்து வழங்கியிருக்கிறார்கள். **தியாக விநோதன்** மூவேந்த வேளான், **தியாக விநோத** பட்டன், **அருங்கலை விநோதன்** முதலிய சாசனத் தொடர்களை நோக்குக. இவற்றால் கம்பன் 12ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் தனது பெருங் காப்பியத்தை இயற்றியுள்ளான் என்பது புலப்படும். மிகப் பழைய ஏட்டுப் பிரதி ஒன்றில்,

> ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறொழித்துத்
> தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு-மூவலூர்ச்
> சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்
> காரார்கா குத்தன் கதை

என்ற செய்யுள் காணப்படுகின்றது. இதுவும் இம்முடி வினையே வற்புறுத்துகிறது. சிலர் 'சகரயாண்டு' என்று கூறுவது அபத்தம் என்று கொண்டு, இச்செய்யுள் மரபறியாதார் ஒருவரது பிற்கூற்று என்று சொல்லுவர். ஆனால், அக்காலத்து வழங்கிய சாசனங்கள் பலவற்றிலும் இத்தொடர் காணப்படுகிறது. சகாப்தம் புதிதாக வந்த வழக்கு ஆதலால், வரலாற்றினை உணராது, தவறாகச் 'சகரயாண்டு' எனப் பெயர் வழங்கியதுபோலும்!

மேற்குறித்த கால நிர்ணயத்திற்கேற்பவே கம்பனைக் குறித்த வரலாற்றுச் செய்திகள் பலவும் அமைந்துள்ளன. ஒட்டக்கூத்தரைப் பற்றியும் பிரதாபருத்திரனைப் பற்றியும் வரும் செய்திகள் இத்துணிவினையே முற்றும் ஆதரிக்கின்றன. எனவே, 'எண்ணிய சகாப்தம்' என்ற செய்யுள் கொள்ளத்தக்கதன்று. 'ஆவின் கொடைச்சகரர்' என்ற செய்யுளே கொள்ளத்தக்கது. "கம்பன் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவன் என்பதே தேற்றம்".[2]

"கி.பி. 1376இல் பொறிக்கப்பட்ட ஒரு கன்னடக் கல்வெட்டு (எபிகிராபியா கர்நாடிகா, வால்யூம் 5, ஹாஸ்ஸான் 77) இவ்வாண்டிற்கு முன் இரண்டு தலைமுறைக் காலமாகக் கம்ப ராமாயணம் கன்னட தேசத்தில் வழங்கி வந்ததென்று தெரிவிக்கின்றது. எனவே, கி.பி. 1325இல் கம்பனது பெருங்காவியம் கன்னட தேசத்திலும் பெரும் புகழ் பெற்றுப் பரவியிருந்ததென்பது புலனாகும்.

பெரிய திருமொழியில் 'மஞ்சுலாஞ்சோலை' என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே, 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' (பால., ஆற்றுப்., 10) என்ற இராமாயண அடியை மேற்கோள் காட்டி, 'என்று ஆற்று வரவுகளிலே சொல்லுவர்களாய்த்துத் தமிழர்' என எழுதினர் பெரியவாச்சான் பிள்ளை. இவர் பிறந்தது கி.பி. 1228இல். எனவே, சுமார் கி.பி. 1200இல் கம்பனது பெரு நூல் மிக்க பிரசாரம் எய்தியிருந்ததென்பது விளங்கும்.

தெலுங்குப் பிரதேசமாகிய ஓரங்கல் நாட்டில் பிரதாபருத்திரன் ஆஸ்தானத்திற்குக் கம்பன் சென்றதாகவும், அவனது வள்ளன்மையைப் புகழ்ந்து,

அவனிமுழு துண்டும் அயிரா பதத்துன்
பவனி தொருவார் படுத்தும்-புவனி
உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குழாம்

என்ற செய்யுளைப் பாடியதாகவும் ஒரு வரலாறு தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது. இவ்வரலாறு உண்மையென்றே கொள்ளுதற்குரியது. ஏனெனின், கம்பன் தெலுங்கு முதலிய பிறமொழிச் சொற்கள் பலவற்றை எடுத்தாளுகின்றான்:

மசரதம் அனையவர் வரமும் வாழ்வும்

**(திருவவதாரம், 22)**

தாள்மிடைந்தன தம்மி மிடைந்தென **(எழுச்சி, 30)**

கிச்சிடை யிடுமெனக் கிளக்கின் றார்சிலர்

**(பிணிவீட்டு, 3)**

அக்கட இராவணற் கமைந்த ஆற்றலே

**(யுத்த, மந்திரப்., 32)**

அந்து செய் குவனென அறிந்த மாதலி

**(இராவணன் வதை, 61)**

என்பன உதாரணங்கள். இவற்றுள் 'மசரதம்' கானல் நீர் என்றும், 'தம்மி' தாமரை என்றும், 'கிச்சு' நெருப்பு என்றும் தெலுங்கிற் பொருள்படுவன, 'அந்து' அப்படி என்று கன்னடத்திற் பொருளாம். 'அக்கட' என்பது தெலுங்கில் ஒரு வியப்பிடைச் சொல். மேலை வரலாற்றில் குறிக்கப்பட்ட அரசன் முதலாம் பிரதாபருத்திரனாவான். இவனது கல்வெட்டுக்கள் கி.பி. 1162, 1179 முதலிய 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவனென இவ்வரலாறு உணர்த்தும்".[3]

"சிவபெருமானை நிறத்தில் ஒத்த வெண்மேகம் கடல் நீரைக் குடித்துத் திருமாலின் கரிய நிறத்தோடு திரும்பியது" என "நீறணிந்த" என்று தொடங்கும் செய்யுளில் கம்பன் கூறியுள்ளான்.

"இறைவனிடத்திலிருந்து தோன்றி உலகில் பரவியுள்ள பல சமயப் பொருள்போல மழை நீர் மலையிலிருந்து இழிந்து பல கிளைகளாகப் பிரிந்து வருகிறது" என்று மற்றோரிடத்தில் கம்பன் மொழிந்துள்ளான். "பரம் பொருளைக் காணப் போந்த ஒவ்வொரு சமயமும் இறைவனது ஒரு சக்தியைக் கண்டு மயங்கி நிற்பதுபோல இராமனது தோள் கண்டார் தோளே கண்டார்" என்று கம்பன் உலாவியற் படலத்தில் உரைத்திருக்கிறான். இவற்றால் கம்பன் நமக்குக் கூறும் அறிவுரை யாது?

"இறைவன் ஒருவன் உண்டு. அவனை அடையப் பல சமயங்கள் உண்டு. அவை அனைத்தும் அவனை அடையவே துணை செய்கின்றன. ஆதலால் சமய வேறுபாடு மக்களிடைத் தலைகாட்டலாகாது" என்பதே கம்பன் நமக்குக் கூறும் அறிவுரையாகும். இவ்வறிவுரைக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்தால் கம்பன் காலம் தெற்றென விளங்கும்.

இவ்வறிவுரைக்குக் காரணம்

கம்பன் சோழப் பெரு நாட்டில் பிறந்தவன். ஏறத்தாழக் கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் 12ஆம் நூற்றாண்டு வரையில் சோழப் பேரரசு தென்னிந்தியா முழுதும் பரவியிருந்தது. சோழப் பேரரசர் கடல் கடந்த நாடுகளை வென்றனர். ஏறத்தாழ இந்த 400 வருட காலம் சோழப் பெருநாடு செல்வச் சிறப்புடன் விளங்கி வந்தது. செல்வப் பெருக்குப் பல தீமைகளையும் விளைத்தது. குடியும் ஒழுக்கக்கேடும் இருந்தன; போக பாக்கியங்கள் மிகுதிப்பட்டன; சமய வெறி தலைதூக்கியது; சாதிச் செருக்கு மிகுந்தது; சமுதாயத்தில் உயர்வு—தாழ்வுகள்; மேடு—பள்ளங்கள் காணப்பட்டன.

பல்லவர் காலத்தில் சைவமும் வைணவமும், சமண-பௌத்தங்களுடன் போராடி அவற்றின் செல்வாக்கை ஒழித்தன. அதனால் பிற்காலச் சோழர் காலத்தில் சைவமும் வைணவமுமே தமிழகத்தில் செல்வாக்குற்றன. எனினும், சோழ மன்னர் அனைவரும் சிறந்த சிவனடியார்கள். ஆதலின், சைவமே நாட்டில் தனியாட்சி புரிந்ததென்னல் தவறாகாது. சோழ அரசருள் இரண்டொருவர் வைணவத்தை மிகுதியாக வெறுத்தனர். அவருள் ஒருவன் அதிராசேந்திரன் அல்லது வீரராசேந்திரன் ஆவன். இவருள்

ஒருவன் காலத்திற்றான் இராமாநுசர் சோழ நாட்டை விட்டு ஹொய்சள நாட்டிற்கு ஓடும் துன்ப நிலைமை உண்டானது.

மற்றொருவன் சேக்கிழார் காலத்தவனான இரண்டாம் குலோத்துங்கன். இவன் தில்லைக் கோவிந்தராசரைப் பெயர்த்து அப்புறப்படுத்திவிட்டான்.

இரண்டாம் இராசராசன் 14ஆம் ஆட்சி ஆண்டில் திருக்கடவூர்க் கோவில் அதிகாரிகள், "இக்கோவிலைக் கண்காணிக்கும் மாகேசுவரர்கள் வைணவரோடு தாராளமாகக் கலந்து பழகினால், அவர்தம் சொத்துக்கள் கோவிலுக்குப் பறிமுதல் செய்யப்படும்", எனத் தீர்மானித்தனர் என்று அக்கோவில் கல்வெட்டு உணர்த்துகின்றது.

கம்பன் காலத்தில் சோழப் பேரரசனாக இருந்த மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் குகைகள் எனப்பட்ட ஒருவகை மடங்கள் இருந்தன. அவை திருமுறைகளில் வல்ல சைவத் துறவிகளைத் தலைவர்களாகப் பெற்றவை. திருமுறைகளைப் பாதுகாப்பதும் பிறர்க்குக் கற்பிப்பதும் சிவனடியார்களை உண்பிப்பதும் அக்குகைகளின் திருப்பணிகளாக இருந்தன.

எவர் தூண்டுதலாலோ சோழ நாட்டில் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் குகையிடி கலகம் ஏற்பட்டது.

சைவத்தின்மீதோ அல்லது குகை அதிகாரிகள் மீதோ வெறுப்புக்கொண்ட சைவரல்லாதார் இக்கலகத்தில் ஈடுபட்டனராதல் வேண்டும்.[4]

இதுகாறும் கூறப்பெற்ற சான்றுகளால், **கம்பரது காலம் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலம்** என்பதை உறுதியாகக் கூறலாம்.

குறிப்புகள்

1. எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல் சடையன்வாழ்வு
   நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
   பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
   கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே.
2. எஸ். வையாபுரிப் பிள்ளை, கம்பன் காவியம், பக்.80–86.
3. எஸ். வையாபுரிப் பிள்ளை, கம்பன் காவியம், பக்.3–5.
4. டாக்டர் மா. இராசமாணிக்கனார், கம்பன் யார்? பக். 14, 28–36.

## அறிஞர்கள் பார்வையில் மா.ரா.

- வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள் எது பேசினாலும் எது எழுதினாலும் அது ஆணித்தரமாகவும் அசைக்க முடியாததாகவும் இருக்கும் என்பது வெளிப்படை.

  தமிழர் திருமண மாநாட்டை நடத்தப் பெரும் பங்கெடுத்துக் கொண்டு, தன்னலம் கருதாது இராப்பகலாய் உழைத்துவரும் திருவாளர் வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்களை வாழ்த்துகிறோம்.

  திருவிளக்கு - திங்கள் இதழ் -
  சென்னை (1939)

- மா. இராசமாணிக்கம் எழுதிய நூல்கள் அனைத்தும் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடும் சென்னையிலுள்ள முன்னணித் தமிழ் நூலாசிரியர்களுள் அவருக்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன.

  ஈராஸ் பாதிரியார் (1947)

- டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களைப் பல ஆண்டுகளாக நான் அறிவேன். அவர் பழுத்த சைவர்; ஆனால், சமய ஊழல்களைக் கண்டிக்கும் மன உறுதி உடையவர். சைவ சமயக் கூட்டங்களிலேயே சமய ஊழல்களைக் கண்டிக்கும் மன உரம் படைத்தவர்.

  குன்றக்குடி அடிகளார் (1956)